வெளியீடு 19-8-2002 Issued 19-8-2002

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

வியாழக்கிழமை, செப்டம்பர் 13, 2001 – தொகுதி 13 – எண் 1

**Thursday the 13th September, 2001 – Volume 13 – No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை - 600 009*

**..lative Assembly Secretariat, Fort St. George,**
**Chennai - 600 009**

[Price Rs. 3.00

13-9-2001

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | ix-xiii |
| Governor and Council of Ministers | xv-xviii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xix-xxii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xxiii-xxx |
| **1. வினாக்கள்-விடைகள்—** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-7<br>10-12 |
| (ஆ) குறுகிய கால வினாக்கள் | 7-10<br>12-15 |
| **2. சிறப்புக் கவன ஈர்ப்பு—** | |
| (அ) வால்பாறை மஹாவீர் ஹை ஃபாரெஸ்ட் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது | 15-18 |
| 1. திரு. கோவை தங்கம் | 15-16 |
| 2. மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா | 16-18 |
| (ஆ) அந்தியூர் கருப்பசாமி கோயில் வளாகத்தில் மன நோயாளிகள் இரும்புச் சங்கிலியால் கட்டி வைக்கப்பட்டுள்ளது | 19-22 |
| 1. திரு. சி. ஞானசேகரன் | 19-20 |
| 2. மாண்புமிகு திரு. செ. செம்மலை | 20-22 |

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223754
சென்னை 600 008



பக்கங்கள்

**கவன ஈர்ப்பு**

மதுரையில் உயர் நீதிமன்றக் கிளையை தொடங்காதது — 22-24

1. திரு. சி. ஞானசேகரன் — 22-24

2. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 22,24

**4. அறிக்கைகள் அளித்தல்—**

பொதுக் கணக்குக் குழு — 24-25

**5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)**

(அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 — 25

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 — 26-27

(இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 — 27-28

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2001 — 146

**6. அறிவிப்புகள்—**

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 (ஆஇ) — 26

(ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 (ஆஇ) — 27

(இ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்கல் — 64

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2001 (ஆஇ) — 145

(உ) சட்டப்பேரவை உறுப்பினர்களுக்குத் தேநீர் வழங்க ஏற்பாடு — 146

(ஊ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 (ஆஇ) — 147



பக்கங்கள்

**7. 2001-2002 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல்—**

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 28-30

**8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி**

(அ) கோரிக்கை எண் 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.
(ஆ) கோரிக்கை எண் 11-மாவட்ட நிருவாகம்
(இ) கோரிக்கை எண் 7-மாநிலச் சட்டமன்றம்
(ஈ) கோரிக்கை எண் 8-தேர்தல்கள்
(உ) கோரிக்கை எண் 41-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்
(ஊ) கோரிக்கை எண் 42-பல்வகை
(எ) கோரிக்கை எண் 60-பல்வகை மூலதனச் செலவு
(ஏ) கோரிக்கை எண் 61-மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்
— 31-145

1. மாண்புமிகு திரு. சி. பொன்னையன் — 31,33,36,40, 44,48,50,52, 54-55, 57-58, 59, 61-62, 113-114, 119-125-131

2. திரு. பா. பரணிகுமார் — 55-57, 62-63

3. * திரு. எஸ். மகாலிங்கம் — 64-68

4. * திரு. க. பாரமலை — 68-74

D V21,31,P01 P61.13.1

பக்கங்கள்

8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

5. * திரு. கு. ஜெயக்குமார் 74-80
6. திரு. ஐ. கணேசன் 32,34,37,42, 46,49,51,53, 81-92, 132, 133, 135, 138, 140, 141, 143, 145
7. திரு. கே.சி. கருணாகரன் 39, 92-97, 136
8. திரு. எம். சுப்பையா பாண்டியன் 98-101
9. திரு. ஜி. பழனிசாமி 38,41,45,49,51, 53,102-108, 116-117, 139, 141, 143, 144
10. * திரு. ப.வெ. தாமோதிரன் 108-112

9. விதி 110-ன் கீழ் அறிக்கை-

வட்ட கூட்டுறவு வீட்டு வசதி கடனுக்கான வட்டி, அபராத வட்டி, சேவைக் கட்டணம் தள்ளுபடி குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை. 101-102

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—

(அ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 147-170

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 147,159-168,170
திரு. ஜே. ஹேமச்சந்திரன் 148-149
திரு. சி. ஞானசேகரன் 149-151
டாக்டர் க. பொன்முடி 152-154, 167
* மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன் 154-155
* திரு. எச்.எம். ராஜு 155**
திரு. ஜி. பழனிசாமி 156-157
திரு. ஜி.கே. மணி 158-159



பக்கங்கள்

10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)—தொடர்ச்சி

(அ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001—தொடர்ச்சி

(ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 171-184

* மாண்புமிகு திரு. சி. துரைராஜ் 171,180-182

(இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 180-184

மாண்புமிகு திரு. சி. துரைராஜ் 182-184
திரு. கா. சுந்தசாமி 171-173
திரு. டி. மணி 173-175
டாக்டர் க. பொன்முடி 176
திரு. வை. சிவபுண்ணியம் 176-177
திரு. லா. சந்தானம் 177-178
திரு. ஜி.கே. மணி 178-180

(ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2001 184-212

மாண்புமிகு திரு. ப. தனபால் 184,206-212

(உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

மாண்புமிகு திரு. ப. தனபால் 212,213
திரு. வை. சிவபுண்ணியம் 185
திரு. கு. பிச்சாண்டி 185-187
திரு. சி. ஞானசேகரன் 187-192
* திரு. எச்.எம். ராஜு 192-193
திரு. ஜே. ஹேமச்சந்திரன் 193-196

பக்கங்கள்

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

(உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001—தொடர்ச்சி

திரு. லா. சந்தானம் 196-197

திரு. ம. அப்துல் லத்தீப் 198-201

திரு. ஜி.கே. மணி 202-204, 205-206

(ஊ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டமுன்வடிவு, 2001 214-236

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 214,232-233,235

திரு. சி. ஞானசேகரன் 214,222-226

திரு. இ. புகழேந்தி 214-220, 221

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் 220,221, 228-229

டாக்டர் க. பொன்முடி 221

திரு. கே.சி. கருணாகரன் 226-228

திரு. வை. சிவபுண்ணியம் 229-230

திரு. ஜி.கே. மணி 230-232

திரு. ம. அப்துல் லத்தீப் 232

(எ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 236-244

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 236, 241-244

(ஏ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 244-246

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் 245,246

திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன் 236-238



பக்கங்கள்

**10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)**—தொடர்ச்சி

(ஏ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001—தொடர்ச்சி

திரு. சி. ஞானசேகரன் 239-240

திரு. என். நன்மாறன் 240

திரு. ஜி.கே. மணி 240-241

(ஐ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 246-254

மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ் 246-247, 251-254

திரு. சி. ஞானசேகரன் 247-248

திரு. கே. ஆறுமுகம் 249-250

திரு. கே. மகேந்திரன் 250-251

**11. அரசினர் தீர்மானம்—**

விதி 30 (3)-ன் கீழ் நிகழ்ச்சி நிரலில் மாற்றம் 170, 171

**12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்—** 254-257

# ஆளுநரும் அமைச்சரவையும்

## ஆளுநர்-டாக்டர் சி. ரங்கராஜன்

## அமைச்சரவையின் உறுப்பினர்கள்

| | |
|---|---|
| 1. முதலமைச்சர் | .. **மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா:** பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்திய காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல் துறை, இலஞ்ச ஒழிப்பு, சிறுபான்மையினர் நலன் மற்றும் தகவல் தொழில்நுட்பவியல். |
| 2. நிதி மற்றும் சட்ட அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** நிதி, திட்டமிடல், தேர்தல், சட்டமன்றம், சட்டம், நீதிமன்றங்கள், சிறைகள், சட்டமியற்றல், எடைகள் மற்றும் அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்பட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல். |
| 3. கல்வி அமைச்சர் | .. **மாண்புமிகு டாக்டர் மு. தம்பிதுரை:** கல்வி, தொழில்நுட்பக் கல்வி, அறிவியல் மற்றும் தொழில்நுட்பவியல், விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், தொல்பொருளியல், தமிழ் வளர்ச்சி மற்றும் தமிழ்ப் பண்பாட்டுத் துறை, வெளிநாட்டில் வாழும் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டோர். |
| 4. மின் துறை அமைச்சர் | .. **மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மின்சாரம் மற்றும் மரபுசாரா எரிசக்தி மேம்பாடு. |

5. **இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பி.சி. இராமசாமி:**
இந்து சமய மற்றும் அறநிலையங்கள்.

6. **மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. செ. செம்மலை:**
மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்.

7. **உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:**
நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப்பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்.

8. **தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:**
தொழிலாளர்கள், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்புத் திட்டங்கள், மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் வக்ஃப்பு

9. **ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:**
குடிசைத் தொழில்கள் உள்பட ஊரகத் தொழில்கள், சிறு தொழில்கள் மற்றும் கதர்-கிராமத் தொழில் வாரியம்.

10. **கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ப. தனபால்:**
கூட்டுறவு, உணவு, நுகர் பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் புள்ளியியல்.



11. **வருவாய்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஓ. பன்னீர் செல்வம்:**
வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், பத்திரப் பதிவு, முத்திரைத் தாள் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை, அரசு அச்சகம், பூமிதானம், கிராமதானம், கடவுச் சீட்டு, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை மற்றும் கருப்பஞ்சாற்றுக் கசண்டு.

12. **பொதுப் பணித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:**
பொதுப் பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு பாசனம் உள்பட பாசனம்.

13. **செய்தி-விளம்பரம் வனம் மற்றும் சுற்றுச் சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எஸ்.எஸ். திருநாவுக்கரசு:**
செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில் நுட்பவியல், திரைப்படச் சட்டம், செய்தித்தாள் கட்டுப்பாடு, வனம், சுற்றுச் சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு.

14. **வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இரா. ஜீவானந்தம்:**
வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக்கலை, கரும்புத் தீர்வை மற்றும் கரும்பு மேம்பாடு.

15. **சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி இரா. சரோஜா:**
சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்.

16. சமூக நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:**
மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்பட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், இரவலர் மறுவாழ்வு, அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம்.

17. ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. வீ. சுப்பிரமணியன்:**
ஆதிதிராவிடர் நலன், பழங்குடியினர் கொத்தடிமைத் தொழிலாளர்கள் மற்றும் முன்னாள் படைவீரர் நலன்.

18. கைத்தறி மற்றும் துணித் தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. எஸ்.பி. சண்முகநாதன்:**
கைத்தறி மற்றும் துணித தொழில்.

19. மீன் வளத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. கே.பி. இராஜேந்திர பிரசாத்:**
மீன் வளம் மற்றும் கால்நடை பராமரிப்பு

20. தொழில் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆர். வைத்திலிங்கம்:**
தொழிற்சாலைகள், இரும்பு உருக்குக் கட்டுப்பாடு, சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.

21. பால் வளம் மற்றும் பால் பண்ணை வளர்ச்சித் துறை அமைச்சர். .. **மாண்புமிகு திரு. சி. சண்முகவேலு:**
பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி.

22. வணிக வரித் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:**
வணிக வரிகள்.



23. வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித்துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:**
வீட்டுவசதி, வீட்டு வசதி மேம்பாடு, நகரமைப்பு திட்டமிடல். குடிசை மாற்று வாரியம், இடவசதிக் கட்டுப்பாடு, நகர்ப்பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்.

24. போக்குவரத்துத் துறை துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:**
போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து, மோட்டார் வண்டிகள் சட்டம் மற்றும் துறைமுகங்கள்.

25. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திருமதி வளர்மதி ஜெபராஜ்:**
பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர்.

# GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR - DR. C. RANGARAJAN

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

| | |
|---|---|
| 1. Chief Minister | .. **The Hon. Selvi J Jayalalithaa:** Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, District Revenue Officers, Home, Police, Prevention of Corruption, Minorities Welfare and Information Technology. |
| 2. Minister for Finance and Law | .. **The Hon. Thiru C. Ponnaiyyan:** Finance, Planning Elections and Legislature, Law, Courts, Prisons, Legislation on Weights and Measures, Debt Relief including Legislation on money lending, Chits and Registration of Companies. |
| 3. Minister for Education | .. **The Hon. Dr. M. Thambidurai:** Education, Technical Education, Science and Technology, Sports and Youth Welfare, Archaeology, Tamil Development and Tamil Culture, Indians overseas, Refugees and Evacuees. |
| 4. Minister for Electricity | .. **The Hon. Thiru D. Jayakumar:** Electricity, Non-conventional Energy Development. |
| 5. Minister for Hindu Religious and Charitable Endowments | .. **The Hon. Thiru P.C. Ramasamy:** HIndu Religious and Charitable Endowments. |

| | | |
|---|---|---|
| 6. **Minister for Health** | .. | **The Hon. Thiru S. Semmalai:** Health, medical Education and Family Welfare. |
| 7. **Minister for Local Administration** | .. | **The Hon. Thiru C. Durairaj:** Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply. |
| 8. **Minister for Labour** | .. | **The Hon. Thiru A. Anwer Rhazza:** Labour, Employment and Training, Urban and Rural Employment Programmes, Census and Wakfs. |
| 9. **Minister for Rural Industries** | .. | **The Hon. Thiru K. Pandurangan:** Rural Industries including Cottage Industries, Small Scale Industries, Khadi and Village Industries Board. |
| 10. **Minister for Co-operation Food Civil Supplies and Consumer Protection** | .. | **The Hon. Thiru P. Dhanabal:** Co-operation, Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Statistics. |
| 11. **Minister for Revenue** | .. | **The Hon. Thiru O. Panneerselvam:** Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Registration, Stamp Act, Stationery and Printing, Government Press, Bhoodhan and Gramdhan, Passport, Prohibition and Excise, Molasses |
| 12. **Minister for Public Works** | .. | **The Hon. Thiru N. Thalavai Sundaram:** Public Works, Highways, Irrigation including Minor Irrigation. |



| | | |
|---|---|---|
| 13. **Minister for Information and Publicity and Forests and Environment** | .. | **The Hon. Thiru S.S. Thirunavukkarasu:** Information and Publicity, Film Technology, Cinematograph Act, Newsprint Control, Forests, Environment and Pollution Control. |
| 14. **Minister for Agriculture** | .. | **The Hon. Thiru R. Jeevanandhan:** Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operative, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development. |
| 15. **Minister for Tourism** | .. | **The Hon. Tmt. R. Saroja:** Tourism and Tourism Development Corporation. |
| 16. **Minister for Social Welfare** | .. | **The Hon. Tmt. B. Valarmathi:** Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Beggar Homes, Orphanages and Correctional Administration. |
| 17. **Minister for Adi-Dravidar Welfare** | .. | **The Hon. Thiru V. Subramanian:** Adi-Dravidar Welfare, Hill Tribes, Bonded Labour and Welfare of Ex-Servicemen. |
| 18. **Minister for Handlooms and Textiles** | .. | **The Hon. Thiru S.P. Shanmuganathan:** Handlooms and Textiles. |
| 19. **Minister for Fisheries** | .. | **The Hon. Thiru K.P. Rajendra Prasad:** Fisheries and Animal Husbandry. |
| 20. **Minister for Industries** | .. | **The Hon. Thiru R. Vaithilingam:** Industries, Iron and Steel Control, Mines and Minerals. |

| | | |
|---|---|---|
| **21. Minister for Milk and Dairy Development** | .. | **The Hon. Thiru C. Shanmugavelu:** Milk and Dairy Development. |
| **22. Minister for Commercial Taxes** | .. | **The Hon. Thiru C.Ve. Shanmugam:** Commercial Taxes. |
| **23. Minister for Housing and Urban Development** | .. | **The Hon. Thiru A.K. Selvaraj:** Housing, Housing Development Town Planning, Slum Clearance, Accommodation Control, Urban Development and Chennai Metropolitan Development Authority. |
| **24. Minister for Transport** | .. | **The Hon. Thiru Nainar Nagendran:** Transport, Nationalised-Transport, Motor Vehicles Act and Ports. |
| **25. Minister for Backward Classes** | .. | **The Hon. Tmt. Valarmathi Jabaraj:** Backward Classes Most Backward Classes and Denotified Communities. |



# பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

*பேரவைத் தலைவர்*

**மாண்புமிகு டாக்டர் கா. காளிமுத்து**

*பேரவைத் துணைத் தலைவர்*

**மாண்புமிகு திரு. அ. அருணாசலம்**

*மாற்றுத் தலைவர்கள்**

**திரு. பி.ஆர். சுந்தரம்**

**திரு. அ. பாப்பா சுந்தரம்**

**திரு. ப. இராஜரெத்தினம்**

**திரு. சோ. பாலகிருஷ்ணன்**

**திருமதி டி. யசோதா**

**திரு. லா. சந்தானம்**

*முதன்மைச் செயலாளர்*

**திரு. செ.சு. ஜானகிராமன்**

*செயலாளர்*

**திரு. வெ. இராசாராமன்**

---

*20-8-2001 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திருமதி பானுமதி ஆனந்தராஜன், பி.எஸ்.சி., பி.ஜி.எல். | .. கூடுதல் செயலாளர் |
| திரு. செ.ஏ. துரைபாண்டியன், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி பவானி சுப்பையா, பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. மு. ஆறுமுகப் பெருமாள், பி.ஏ., பி.லிட். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சா. கணேசன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் |
| திருமதி வீ.நா. உமா, பி.ஏ. | .. குழு அலுவலர் |
| திரு. தி. திருமாவளவன், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.எல். | .. பேரவைத் தலைவரின் சிறப்புத் தனிச் செயலர் |
| திரு. சி. சடகோபி, எம்.ஏ., எம்.பி.ஏ. | .. பேரவைத் தலைவரின் சிறப்பு நேர்முக உதவியாளர் |
| திரு. சு. ராஜகுரு | .. குழு அலுவலர் |
| திரு. க. சம்பத்ராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. செ. சந்திரகுமார், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஸ்ரீராமன், பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. எம். ஜோபாய், பி.காம்., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. இரா. முருகானந்தம், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |



| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ. | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. ஞானப்பிரகாசம், எம்.ஏ.,பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. ஜி. அனீஸ் அகமத், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மா. செல்வராஜ், பி.எஸ்.சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. வெ.சி. சுப்பிரமணியன், எம்.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி சீ. கனகவல்லி, டி.சி.பி. | .. தலைமை நிருபர் |
| திரு. ஊ.கு. சுப்பிரமணியன், எம்.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. டி. கோவிந்தராஜு, எம்.ஏ.,பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ஏ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. வெ. வெங்கடேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. ச. பாலகிருஷ்ணன், பி.எஸ்.சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி என். மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. பொன்னுரங்கம், எம்.ஏ., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திருமதி ப. சரஸ்வதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. தேவராஜன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ச.இரா. சுகுணா, பி.ஏ. | .. தலைமை நிருபர் |

| | | |
|---|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. | சார்புச் செயலாளர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. த. ருத்ரமணி, எம்.ஏ. | .. | சார்புச் செயலாளர் |
| திரு. க. கிருஷ்ணன், பி.ஏ., | .. | சார்புச் செயலாளர் |
| செல்வி தா. இந்திரா பாய், பி.ஏ. | .. | சார்புச் செயலாளர் |



## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள்

### (அகர வரிசைப்படி)

### பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. அசோகன், திரு. அ. | .. | திருவாரூர் (செ.வ.) |
| 2. அண்ணாதுரை, திரு. செ. | .. | ஜெயங்கொண்டம் |
| 3. அண்ணாமலை, திரு. கு. | .. | தென்காசி |
| 4. அண்ணாவி, திரு. ப. | .. | தொட்டியம் |
| 5. அப்துல் லத்தீப், திரு. ம. | .. | வாணியம்பாடி |
| 6. அப்பாவு, திரு. மு. | .. | ராதாபுரம் |
| 7. அய்யாறு வாண்டையார், திரு. கே. | .. | திருவையாறு |
| 8. அரசன், திரு. ப. | .. | அறந்தாங்கி |
| 9. அருணாசலம், திரு. அ. | .. | வரகூர் (செ.வ.) |
| 10. அருள், திரு. பி.எஸ் | .. | புவனகிரி |
| 11. அழகம்மாள், திருமதி. வி. | .. | தலைவாசல் (செ.வ.) |
| 12. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. | திருச்செந்தூர் |
| 13. அன்பழகன், திரு. ஆகு.சீ. | .. | பெரணமல்லூர் |
| 14. அன்பழகன், திரு. கு. | .. | நிலக்கோட்டை (செ.வ.) |
| 15. அன்பழகன், திரு. கே.பி. | .. | பாலக்கோடு |
| 16. அன்பழகன், திரு. ஜெ. | .. | தியாகராய நகர் |
| 17. அன்பழகன், பேராசிரியர் க. | .. | துறைமுகம் |
| 18. அன்பில் பெரியசாமி, திரு. | .. | திருச்சிராப்பள்ளி-2 |
| 19. அன்வர் ராஜா, திரு. அ. | .. | இராமநாதபுரம் |
| 20. ஆண்டிவேல், திரு. ப. | .. | வேடசந்தூர் |
| 21. ஆறுமுகம், திரு. கே. | .. | செங்கல்பட்டு |
| 22. ஆறுமுகம், திரு. த. | .. | திருவொற்றியூர் |
| 23. ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. | அண்ணா நகர் |
| 24. ஆஸ்டின், திரு. | .. | நாகர்கோவில் |
| 25. இரவிராஜ், திரு. கோ. | .. | திருத்தணி |
| 26. இராசேந்திரன், திரு. சி. | .. | திருவோணம் |
| 27. இராசேந்திரன், திரு. சோ. | .. | கோவில்பட்டி |
| 28. இராமசாமி, திரு. கே.ஆர். | .. | திருவாடனை |
| 29. இராமசாமி, திரு. பி.சி. | .. | மொடக்குறிச்சி |

30. இராமச்சந்திரன், திரு. எஸ். .. கலசப்பாக்கம்
31. இராமச்சந்திரன், திரு. ஓ.ஆர். .. கம்பம்
32. இராமச்சந்திரன், திரு. கே.கே. எஸ்.எஸ்.ஆர். .. சாத்தூர்
33. இராமு, திரு. ந. .. உளுந்தூர்பேட்டை (செ.வ.)
34. இராம் பிரபு, திரு. இரா. .. பரமக்குடி (செ.வ.)
35. இராஜசேகர், திரு. மா. .. ராஜபாளையம் (செ.வ.)
36. இராஜரெத்தினம், திரு. ப. .. பெரம்பலூர் (செ.வ.)
37. இராஜா, திரு. டி.கே. .. திருப்பத்தூர்
38. இராஜேந்திர பிரசாத், திரு. கே.பி. .. பத்மநாபபுரம்
39. இராஜேந்திரன், திரு. பி.ஜி. .. ஆலங்குளம்
40. இலட்சுமணன், திரு. கே.என். .. மயிலாப்பூர்
41. இளவழகன், திரு. ப. .. அரியலூர்
42. இளையகண்ணு, திரு. கா.தி. .. ஏற்காடு (ஆவா.)
43. இன்பத் தமிழன், திரு. இரா.தா. .. ஸ்ரீவில்லிபுத்தூர்
44. ஈஸ்வரன், திரு. ரா. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)
45. உசேன், திரு. எஸ்.ஏ.எம். .. திருவல்லிக்கேணி
46. உபயதுல்லா, திரு. எஸ்.என்.எம். .. தஞ்சாவூர்
47. உமாதேவன், திரு. கே.கே. .. திருப்பத்தூர்
48. உலகரட்சகன், திரு. பி.எஸ். .. செய்யாறு
49. ஏழுமலை, திரு. வெ. .. செஞ்சி
50. கணபதி, திரு. ந. .. வானூர் (செ.வ.)
51. கணேசன், திரு. ஐ. .. எடப்பாடி
52. கணேசன், திரு. ஆர்.டி. .. தேனி
53. கண்ணன், திரு. ஏ.எஸ். .. பொன்னேரி (செ.வ.)
54. கந்தசாமி, திரு. க.ரா. .. சத்தியமங்கலம்
55. கந்தசாமி, திரு. கா. .. குன்னூர் (செ.வ.)
56. கருணாகரன், திரு. கே.சி. .. சிங்காநல்லூர்
57. கருணாநிதி, திரு. மு. .. சேப்பாக்கம்
58. கருப்பசாமி, திரு. சொ. .. சங்கரநயினார்கோவில் (செவ)
59. கருப்பணன், திரு. கே.சி. .. பவானி
60. கருப்பாயி, டாக்டர் திருமதி ஆ .. குளத்தூர் (செ.வ.)
61. கலாவதி, திருமதி கு. .. சேந்தமங்கலம் (ஆவா.)



62. கனகதாரா, செல்வி சி. .. பேரணாம்பட்டு (செ.வ.)
63. கனிதா சம்பத், திருமதி எஸ். .. திருப்போரூர் (செ.வ.)
64. காசாம்பு பூமாலை, திருமதி .. சங்கராபுரம்
65. காமராஜ், திரு. மே.ப. .. தாராமங்கலம்
66. கார்த்தி, திரு. மு. .. சேலம்-2
67. காளிமுத்து, டாக்டர் கா. .. திருமங்கலம்
68. கிருஷ்ணமூர்த்தி, திரு. வே. .. அரூர் (செ.வ.)
69. கிருஷ்ணன், திரு. ஆர். .. அந்தியூர் (செ.வ.)
70. குமாரதாஸ், டாக்டர் தே. .. கிள்ளியூர்
71. குரு என்கிற குருநாதன், திரு. ஜெ. .. ஆண்டிமடம்
72. கோதண்டராமன், திரு. ஜி. .. முகையூர்
73. கோபிநாத், திரு. கே. .. ஒசூர்
74. கோவிந்தசாமி, டாக்டர் ஆர். .. விருத்தாசலம்
75. கோவிந்தராஜ், திரு. வெ. .. கிருஷ்ணகிரி
76. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)
77. சக்திவேல் முருகன், திரு. எம். .. அம்பாசமுத்திரம்
78. சக்ரபாணி, திரு. ஆர் .. ஒட்டன்சத்திரம்
79. சசிகலா, திருமதி ஆர். .. கிருஷ்ணராயபுரம் (செ.வ.)
80. சண்முகநாதன், திரு. எஸ்.பி. .. ஸ்ரீவைகுண்டம்
81. சண்முகம், திரு. சி. .. பூந்தமல்லி
82. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்
83. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை
84. சந்தானம், திரு. லா. .. உசிலம்பட்டி
85. சந்திரசேகரன், திரு. எம்.எஸ். .. இராணிப்பேட்டை
86. சந்திரமோகன், திரு. நா. .. சீர்காழி (செ.வ.)
87. சந்திரன், திரு. வீ. .. சிவகங்கை
88. சம்பத், திரு. எம்.சி. .. நெல்லிக்குப்பம்
89. சரவணன், திரு. துரை. கி. .. சிதம்பரம்
90. சரோஜா, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆவா.)
91. சாமி, திரு. ஆர். .. மேலூர்
92. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்
93. சிதம்பரம், திரு. ப. .. பவானிசாகர்

| | | |
|---|---|---|
| 94. சிவகாமி, திருமதி வி. | .. | தாராபுரம் (செ.வ.) |
| 95. சிவசாமி, திரு. கே.கே. | .. | அருப்புக்கோட்டை |
| 96. சிவசாமி, திரு. செ. | .. | திருப்பூர் |
| 97. சிவசுப்பிரமணியன், திரு. டி.என். | .. | கரூர் |
| 98. சிவபுண்ணியம், திரு. வை. | .. | மன்னார்குடி |
| 99. சிவபெருமாள், திரு. அ. | .. | ஒட்டப்பிடாரம் (செ.வ.) |
| 100. சிவராஜ், திரு. சு. | .. | ரிஷிவந்தியம் |
| 101. சின்னசாமி, திரு. மா. | .. | பழனி (செ.வ.) |
| 102. சீனிவேல், திரு. எஸ்.எம். | .. | திருப்பரங்குன்றம் |
| 103. சுதர்சனம், திரு. கே. | .. | கும்மிடிப்பூண்டி |
| 104. சுதர்சனம், திரு. டி. | .. | திருவள்ளூர் |
| 105. சுந்தரம், திரு. பி.ஆர். | .. | ராசிபுரம் |
| 106. சுந்தரம்பாள், திருமதி செ. | .. | மேட்டூர் |
| 107. சுப்பிரமணியன், திரு. வீ. | .. | கண்டமங்கலம் (செ.வ.) |
| 108. சுப்பையா பாண்டியன், திரு. எம். | .. | கடையநல்லூர் |
| 109. சூரியகலா, திருமதி சி.எம். | .. | குடியாத்தம் |
| 110. செம்மலை, திரு. செ. | .. | ஓமலூர் |
| 111. செல்லையா, திரு. வி.ஏ. | .. | மருங்காபுரி |
| 112. செல்வம், திரு. எஸ்.கே. | .. | வீரபாண்டி |
| 113. செல்வராஜ், திரு. ஆ. | .. | அச்சரப்பாக்கம் (செ.வ.) |
| 114. செல்வராஜ், திரு. ஏ.கே. | .. | மேட்டுப்பாளையம் |
| 115. செல்வி முருகேசன், திருமதி | .. | காங்கேயம் |
| 116. சேகரன், திரு. கே.என். | .. | திருவெறும்பூர் |
| 117. சேகர்பாபு, திரு. பி.கே. | .. | டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் |
| 118. சோமசுந்தரம், திரு. வி. | .. | உத்திரமேரூர் |
| 119. ஞானசேகரன், திரு. சி. | .. | வேலூர் |
| 120. ஞானமூர்த்தி, திரு. கே.ஜி.பி. | .. | திருநாவலூர் |
| 121. தமிழரசன், திரு. செ.கு. | .. | நன்னிலம் (செ.வ.) |
| 122. தமிழ்ச்செல்வன், திரு. தங்க | .. | ஆண்டிப்பட்டி |
| 123. தமிழ்மொழி ராஜதத்தன், திருமதி | .. | மேல்மலையனூர் |
| 124. தம்பிதுரை, டாக்டர் மு. | .. | பர்கூர் |
| 125. தவமணி, திரு. க. | .. | திருவிடைமருதூர் |



| | | |
|---|---|---|
| 126. தளவாய் சுந்தரம், திரு. ந. | .. | கன்னியாகுமரி |
| 127. தனபால், திரு. ப. | .. | சங்கரி (செ.வ.) |
| 128. தாமோதரன், திரு. எஸ். | .. | விருதுநகர் |
| 129. தாமோதரன், திரு. செ. | .. | கிணத்துக்கடவு |
| 130. தாமோதிரன், திரு. ப.வெ. | .. | பொங்கலூர் |
| 131. திருஞானசம்பந்தம், திரு. எஸ்.வி. | .. | பேராவூரணி |
| 132. திருநாவுக்கரசு, திரு. எஸ்.எஸ். | .. | காஞ்சிபுரம் |
| 133. திருமாவளவன், திரு. இரா. | .. | மங்களூர் (செ.வ.) |
| 134. துரைமுருகன், திரு. | .. | காட்பாடி |
| 135. துரைராஜ், திரு. சி. | .. | சேடப்பட்டி |
| 136. தென்னரசு, திரு. கே.எஸ். | .. | ஈரோடு |
| 137. நடராஜன், திரு. அ. | .. | குத்தாலம் |
| 138. நடராஜன், திரு. எஸ். | .. | நாட்ராம்பள்ளி |
| 139. நடராஜன், திரு. பி.கே.டி. | .. | ஆத்தூர் |
| 140. நடராஜன், திரு. வது. | .. | இளையான்குடி |
| 141. நயினார் நாகேந்திரன், திரு. | .. | திருநெல்வேலி |
| 142. நரசிம்மன், திரு. பி.எம். | .. | பள்ளிப்பட்டு |
| 143. நளினி மனோகரன், திருமதி | .. | போளூர் |
| 144. நன்மாறன், திரு. என். | .. | மதுரை கிழக்கு |
| 145. நீலகண்டன், திரு. ப. | .. | ஆற்காடு |
| 146. நெப்போலியன், திரு. து. | .. | வில்லிவாக்கம் |
| 147. பச்சைமால், திரு. தா. | .. | குளச்சல் |
| 148. பதினெட்டாம்படியான், திரு. க. | .. | முதுகுளத்தூர் |
| 149. பரணிகுமார், திரு. பா. | .. | திருச்சிராப்பள்ளி-1 |
| 150. பரிதி இளம்வழுதி, திரு. | .. | எழும்பூர் (செ.வ.) |
| 151. பவானி கருணாகரன், திருமதி கே. | .. | அரக்கோணம் (செ.வ.) |
| 152. பழனிசாமி, திரு. கே.எஸ். | .. | பெருந்துறை |
| 153. பழனிசாமி, திரு. ஜி. | .. | திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 154. பழனியப்பன், திரு. பெ. | .. | மொரப்பூர் |
| 155. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. | .. | குறிஞ்சிப்பாடி |
| 156. பன்னீர்செல்வம், திரு. ஓ. | .. | பெரியகுளம் |
| 157. பாண்டுரங்கன், திரு. கே. | .. | அணைக்கட்டு |

158. பாப்பா சுந்தரம், திரு. அ. .. குளித்தலை
159. பாரமலை, திரு. க. .. மானாமதுரை (செ.வ.)
160. பாரிமோகன், திரு. கி. .. தருமபுரி
161. பாலகிருஷ்ணன், திரு. சோ. .. கடலாடி
162. பாலசுப்பிரமணியன், திரு. எஸ்.ஆர். .. தொண்டாமுத்தூர்
163. பாலசுப்பிரமணியன், திரு. கே.கே. .. ஸ்ரீரங்கம்
164. பாலபாரதி, செல்வி க. .. திண்டுக்கல்
165. பாலன், திரு. எஸ்.எம். .. லால்குடி
166. பால் மனோஜ் பாண்டியன், திரு. பி.எச். .. சேரன்மகாதேவி
167. பிச்சாண்டி, திரு. கு. .. திருவண்ணாமலை
168. புகழேந்தி, திரு. இ. .. கடலூர்
169. பூபதி மாரியப்பன், திருமதி .. வலங்கைமான் (செ.வ.)
170. பெருமாள், திரு. என்.கே. .. விளாத்திக்குளம்
171. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்
172. பொன்னம்பலம், திரு. ப. .. சமயநல்லூர் (செ.வ.)
173. பொன்னையன், திரு. சி. .. திருச்செங்கோடு
174. போளூர் வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)
175. மகாலிங்கம், திரு. எஸ். .. அவினாசி (செ.வ.)
176. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)
177. மகேஸ்வரி, திருமதி எஸ். .. கோயம்புத்தூர் மேற்கு
178. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்
179. மணி, திரு. டி. .. விளவங்கோடு
180. மணி, திரு. ஜி.கே. .. பெண்ணாகரம்
181. மணி நாடார், திரு. எஸ்.எஸ். .. சாத்தான்குளம்
182. மலையப்பசாமி, திரு. அ.இரா. .. கபிலர்மலை
183. மல்லிகா, திருமதி சி. .. முசிறி
184. மாணிக்கராஜ், திரு. எஸ். .. நாங்குநேரி
185. மில்லர், திரு. அ. .. கூடலூர்
186. முரளிதரன், திரு. கே.வி. .. தளி
187. முருகவேல் ராஜன், திரு. க. .. வந்தவாசி (செ.வ.)
188. முருகேசன், திரு. ஆகு. .. ஆத்தூர்
189. முனுசாமி, திரு. கா.பூ. .. காவேரிப்பட்டினம்



190. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை
191. மோகன், திரு. ப. .. சின்னசேலம்
192. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)
193. ரங்கநாதன், திரு. ப. .. புரசைவாக்கம்
194. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை
195. ரமணீதரன், திரு. எஸ்.எஸ். .. கோபிசெட்டிப்பாளையம்
196. ராதாகிருஷ்ணன், திரு. எம். .. திருமயம்
197. ராமராஜ், திரு. ச. .. போடிநாயக்கனூர்
198. ராம்குமார், திரு. எம். .. பாபநாசம்
199. ராஜகோபால், திரு. ஆ .. சிவகாசி
200. ராஜம்மாள், திருமதி எஸ். .. தூத்துக்குடி
201. ராஜா, திரு. எச். .. காரைக்குடி
202. ராஜாங்கம், திரு. வி.ஆர். .. சோழவந்தான்
203. ராஜு, திரு. எச்.எம். .. உதகமண்டலம்
204. ரெங்கநாதன், திரு. என். .. பூம்புகார்
205. ரோகிணி என்கிற கிருஷ்ணகுமார், திரு. மா.ப. .. பேரூர்
206. லட்சுமணன், திரு. வி.கே. .. கோயம்புத்தூர் கிழக்கு
207. லியாவுதீன் சேட், திரு. இ.ஏ. .. அரவக்குறிச்சி
208. வளர்மதி, திருமதி பா. .. ஆலந்தூர்
209. வளர்மதி ஜெபராஜ், திருமதி .. மதுரை மேற்கு
210. வள்ளல் பெருமான், டாக்டர் பி. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)
211. வாசுதேவன், திரு. பெ. .. மதுராந்தகம்
212. விசுவநாதன், திரு. இரா. .. நத்தம்
213. வில்வநாதன், திரு. இரா. .. சோளிங்கர்
214. விநாயகமூர்த்தி, திரு. எஸ்.ஜி. .. பூங்கா நகர்
215. விஜயபாஸ்கர், டாக்டர் சி. .. புதுக்கோட்டை
216. விஜயலட்சுமி பழனிச்சாமி, திருமதி ப. .. பனமரத்துப்பட்டி
217. வீரபாண்டியன், திரு. ஜெ.க. .. மயி[illegible]டுதுறை
218. வெங்கடாசலம், திரு. அ. .. ஆ[illegible]குடி
219. வெங்கடாஜலம், திரு. செ. .. சே[illegible]ம்-I

| | | |
|---|---|---|
| 220. வேதரத்தினம், திரு. எஸ்.கே. | .. | வேதாரண்யம் |
| 221. வேலுசாமி, திரு. செ.ம. | .. | பல்லடம் |
| 222. வேலு, திரு. எ.வ. | .. | தண்டராம்பட்டு |
| 223. வேல் முருகன், திரு. தி. | .. | பண்ருட்டி |
| 224. வைதியலிங்கம், திரு. மீஅ. | .. | தாம்பரம் |
| 225. வைத்திலிங்கம், திரு. ஆர். | .. | ஒரத்தநாடு |
| 226. ஜீவானந்தம், திரு. இரா. | .. | நாகப்பட்டினம் |
| 227. ஜெமினி கே. ராமச்சந்திரன், திரு. | .. | ஆரணி |
| 228. ஜெயக்குமார், திரு. கு. | .. | நாமக்கல் (செ.வ.) |
| 229. ஜெயக்குமார், திரு. டி. | .. | இராயபுரம் |
| 230. ஜெயராமன், திரு. வி. | .. | பொள்ளாச்சி |
| 231. ஸ்டாலின், திரு. மு.க. | .. | ஆயிரம் விளக்கு |
| 232. ஹக்கீம், திரு. எம்.ஏ. | .. | மதுரை மத்தி |
| 233. ஹேமசந்திரன், திரு. ஜே. | .. | திருவட்டாறு |
| 234. சான்ட்ரா டான் க்ரவல், திருமதி | .. | (நியமனம்) |
| 235. (வெற்றிடம்) | .. | சைதாப்பேட்டை |

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

| | | |
|---|---|---|
| திரு. என்.ஆர். சந்திரன் | .. | தலைமை வழக்கறிஞர் |

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை
## ஆவணி 28, விசு - திருவள்ளுவர் ஆண்டு 2032
## 2001, செப்டம்பர் 13, வியாழக்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **டாக்டர் கா. காளிமுத்து** அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"சூழாமல் தானே முடிவெய்தும் தம்குடியைத்

தாழாது உஞற்று பவர்க்கு"

தம் குடி உயர்வதற்கான செயலை விரைந்து முயன்று செய்பவர்க்கு அச்செயல் தாமாகவே நிறைவேறிவிடும்.

### 1. வினாக்கள் - விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள். வினா எண் 85, திருமதி கே. பவானி கருணாகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**85—**

**உபகரணங்கள்**

***961—திருமதி கே. பவானி கருணாகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரக்கோணம் அரசினர் மருத்துவமனையில் ரோட்டரி சங்கம் சார்பில் கட்டித்தரப்பட்டுள்ள இரத்த சேமிப்பு வங்கிக்குத் தேவையான உபகரணங்கள் வழங்க விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* அரக்கோணம் அரசு மருத்துவமனையிலுள்ள இரத்த வங்கிக்குத் தேவையான உபகரணங்கள் வழங்கப்பட்டுவிட்டன.

*(ஆ)* இக்கேள்விக்குப் பதில் எழவில்லை.

**திருமதி கே. பவானி கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழங்கப்பட்டுவிட்டன என்று மாண்புமிகு அமைச்சர் கூறியவுடனே எனக்கு மிகவும் சந்தோஷம். மிக்க நன்றி என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 86, திரு. இரா.தா. இன்பத் தமிழன், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**86—**

### குடிநீர்

***1158—திரு. இரா.தா. இன்பத் தமிழன்:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவில்லிப்புத்தூர் கிராமப்புறங்களிலுள்ள குடிதண்ணீர்ப் பிரச்சினையைக் களைய அடிபம்புகள் அமைக்கவும், குடிநீர் சீரிய முறையில் கிடைக்கவும் அரசு உடனே ஏற்பாடு செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இன்பத் தமிழன் இருக்கையில் இல்லை. வினா எண் 87, திரு. ஜி.கே. மணி, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.



**87—**

### குடிநீர் வசதி

***1266—திரு. ஜி.கே. மணி:**

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி நாகமரை ஊராட்சி, நெருப்பூர் முத்தான் தெரு, அதைச் சுற்றியுள்ள தெருக்களில் போதுமான குடிநீர் வசதியில்லாமல் இருப்பது அரசுக்குத் தெரியுமா?

*(ஆ)* ஆம் எனில், நடப்பாண்டில் இங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ், உள்ளாட்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*(அ)* மற்றும் *(ஆ)* தருமபுரி மாவட்டம் பெண்ணாகரம் தொகுதி நாகமரை ஊராட்சியைச் சேர்ந்த நெருப்பூர் முத்தான் தெரு மற்றும் அதனைச் சுற்றியுள்ள தெருக்கள் நெருப்பூர் குடியிருப்பின் ஒரு பகுதியாகும். இக்குடியிருப்பில் தற்போது ஒரு லட்சம் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியின்மூலம் சராசரியாக நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 55 லிட்டர் வீதம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. சீரான குடிநீர் விநியோகம் மூலம் குடியிருப்பின் அனைத்து பகுதிகளுக்கும் போதுமான அளவு குடிநீர் கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மேலும் இக்குடியிருப்பில் 8 கையிறைப்பான்களும் அதில் ஒரு கையிறைப்பான் முத்தான் தெரு பகுதியிலும் உள்ளது. எனவே இப்பகுதிகளுக்கு தனியாக புதிய மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியுடன் கூடிய விசையிறைப்பான் திட்டம் மேற்கொள்ளும் கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் தொகுதிக்குட்பட்ட நெருப்பூரிலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இருப்பது என்பது உண்மை. ஆனால் அந்த நெருப்பூரை அடுத்துள்ள முத்தான் தெரு என்பது அந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினுடைய உயரத்தைவிட மேடான பகுதியிலே இருக்கின்ற காரணத்தினாலே அங்கே நீர் ஏறுவது கிடையாது. பொதுமக்கள் எல்லாம் மிகவும் சிரமத்துக்கு ஆளாகிறார்கள். அந்த மேட்டுப்பகுதியிலே காலனி

பகுதியும் இருக்கிறது. அங்கே குடிநீர் கஷ்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பகுதிக்கு தனியாக ஒரு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டினாலொழிய அங்கே குடிநீர் வசதி பெற இயலாத நிலையிலே இருக்கிற காரணத்தினாலே அந்தப் பகுதிக்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று அமைத்துக் கொடுப்பீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேநேரத்திலே இந்தக் கேள்வி என்பது ஆரம்ப காலத்திலே கொடுக்கப்பட்டது. இப்போது என்னுடைய தொகுதி முழுவதும் கடுமையான வறட்சியினாலே மழையில்லாத காரணத்தினாலே குடிநீர் பஞ்சம் அதிகமாக நிலவுகிறது. அது கரடுமுரடான பகுதி, எல்லோருக்கும் தெரிந்த ஒன்று. நேற்றுகூட நான் அமைச்சர் அவர்களிடத்திலே பேசுகிற நேரத்திலே குடிநீர் கஷ்டத்தைப்பற்றி தெளிவாக எடுத்துச் சொன்னேன். ஆகவே வறட்சிப் பகுதியான அந்தப் பகுதிக்கு சிறப்பு முன்னுரிமை அடிப்படையிலே குடிநீர் கஷ்டத்தைப் போக்குவதற்கு நம்முடைய அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கோரிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது நெருப்பூர், தருமபுரி மாவட்டம் பற்றியது. வினா எண் 88, திரு. பெ. பழனியப்பன், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்.

**88—**

**மேம்பாலம்**

***2596—திரு. பெ. பழனியப்பன்:**

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) மொரப்பூர் தொகுதி, ஆலாபுரம் ஊராட்சிக்குட்பட்ட அம்மாபாளையம் வாணியாறு ஆற்றின் குறுக்கே இருக்கும் தரைப்பாலத்தை மேம்பாலமாக மாற்றியமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) இல்லை.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வாணியாறு அணைக்கட்டிலிருந்து திறந்துவிடப்படும் உபரி நீரானது அம்மாபாளையம் அருகிலுள்ள தரைமட்டப் பாலத்தின் வழியாக அரூர் பெரிய ஏரியைச் சென்றடையும். அக்டோபர் மற்றும் நவம்பர் மாதங்களில் பெய்யும் வடகிழக்குப் பருவ மழை காலங்களில் இவ்வாறு திறந்துவிடப்படும் உபரி நீரால் பாப்பிரெட்டிபட்டி, பள்ளிப்பட்டி வழியாக மொரப்பூர் மற்றும் சர்க்கரை ஆலை போக்குவரத்து பெருமளவு பாதிக்கப்படுகிறது. எனவே இதை எப்படியாவது நிறைவேற்றிக் கொடுப்பார்களா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-05*

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மேம்பாலம் கட்ட வேண்டும் என்று ஒரு கேள்வியை இங்கே கேட்டிருக்கிறார்கள். அவர் கேட்ட வினாவிற்கு இங்கே என்னுடைய பதில் இல்லை என்று இருக்கிறது. இருந்தாலும் இந்த சேலம், திருப்பத்தூர், வாணியம்பாடி சாலை கி.மீ. 35/8-ல் பிரிந்து செல்லும் ஏ. பள்ளிப்பட்டு பெரம்பூர் என்பது இதர மாவட்டச் சாலை—O.D.R. ஆகும். இச்சாலையின் மொத்த நீளம் 24.60 கிலோமீட்டர் உள்ளது. இங்கே பயணிகள் போக்குவரத்து மிகவும் குறைவாக இருப்பதாலும், வெள்ள நேரத்திலே அதிகமான பாதிப்பு ஏற்படாத காரணத்தாலும் இந்தத் திட்டத்திற்கு ஏற்கெனவே அங்கே ரோடு சரி செய்வதற்காக நபார்டு மூலமாக Project 16-ன்கீழ் ரூபாய் 158 இலட்சத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டு தற்சமயம் பணி நடைபெற்று வருகிறது. மேற்கண்ட காரணத்தினாலும், இங்கே சிறு, சிறு பணிகள் நடைபெறுகின்ற காரணத்தினாலும் Passenger Car Unit என்ற வகையில் அங்கே வரும் போக்குவரத்து மிகவும் குறைவான சூழ்நிலையில் உள்ளதாலும் அங்கே பாலம் தேவையில்லை என்று கருதுகிறோம். அங்கே பாலம் அவசியம் தேவையென்றால் அங்கே போக்குவரத்து அதிகமாக

[2001 செப்டம்பர் 13

இருக்க வேண்டும். அது மட்டும் அல்லாமல் அங்கே மழை நேரத்திலும் தண்ணீர் வடிந்து போவதற்கு ஏதுவாக வசதிகள் உள்ளதால் இந்த வினாவிற்கு நான் இல்லை என்ற பதிலை அளித்தாலும் மாண்புமிகு மாமன்ற உறுப்பினர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். இதுசம்பந்தமாக பரிசீலனை செய்வதற்கு நான் ஏற்கெனவே அதிகாரிகளுக்கு உத்தரவிட்டிருக்கிறேன்.

**திரு. பெ. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் கூறியதைப் போல அந்தச் சாலைகள் இப்போது செப்பனிடப்பட்டு வருகின்றன. சாலைகள் செப்பனிடப்பட்டிருந்தாலும்கூட பஸ்கள் அந்த வழியே செல்வதற்கு அந்தப் பாலத்தை சரிசெய்தே ஆக வேண்டும். அம்மாபாளையத்திலிருந்து 3 கிலோ மீட்டர் தொலைவில் சர்க்கரை ஆலை உள்ளது. 3 கோட்டங்களைச் சார்ந்த அயோத்தியாபட்டினம், காடையாம்பட்டி, பாப்பிரெட்டிப்பட்டி பகுதி கரும்பு முழுவதும் அரவைக் காலமான செப்டம்பர், அக்டோபர், நவம்பர் மாதங்களில் சுமார் 18 கிலோமீட்டர் வரை சுற்றிச் செல்ல வேண்டியுள்ளது. அதேபோல சர்க்கரை ஆலைக்குத் தேவையான உபபொருட்கள், சர்க்கரை ஆலையிலிருந்து உற்பத்தியாகும் சர்க்கரை, கழிவு மற்றும் மொலாசஸ் போன்ற பொருட்களும் சரியான பால வசதி இல்லாததால் மழைக் காலங்களில் சுற்றிச் செல்ல வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆகவே பள்ளிக் குழந்தைகள், விவசாயிகள் நலன்கள், எரிபொருள் சிக்கனம், கால விரையம், போக்குவரத்துப் பிரச்சினை இவற்றைத் தீர்க்க விரைவில் அம்மாபாளையம் அருகே இருக்கக்கூடிய தரைமட்ட பாலத்தை மேம்பாலமாக மாற்றிக் கொடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்; நடவடிக்கை எடுக்கப்படுமா என்பதைத் தங்கள் மூலமாக நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ந. தளவாய் சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இது சம்பந்தமாக பரிசீலிக்கப்படும் என்று கூறியிருக்கிறேன்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சிவபுண்ணியம், இது மொரப்பூர் பகுதி பற்றியது.

வினா எண் 89, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.



2001 செப்டம்பர் 13]

போக்குவரத்துத் துறை அமைச்சருடைய கேள்வி தள்ளி வைக்கப்படுகிறது.

## (ஆ) குறுகிய கால வினா

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா எண் 5, திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

**5—**

### மருத்துவமனை

**12863—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனையின் தரம் உயர்த்தி, புதிய இடத்தில் 500 படுக்கை வசதியுடன் அனைத்து வசதிகளையும் கொண்ட மருத்துவமனை கட்டும் திட்டம் நிலுவையிலுள்ளதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், இவ்வாண்டு திட்டத்தில் சேர்த்து நிறைவேற்றித் தர அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. செ. செம்மலை, மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி அரசு தலைமை மருத்துவமனைக்கு, புதிய இடத்தில் 500 படுக்கை வசதியுடன் அனைத்து வசதிகளையும் கொண்ட மருத்துவமனை கட்டும் திட்டத்திற்கு பதிலாக தற்போதுள்ள அரசு மருத்துவமனை வளாகத்திலேயே ரூ.2.90 கோடி உத்தேச மதிப்பீட்டில் கூடுதலாக 150 படுக்கை வசதி கொண்ட பிரிவு ஒன்றைக் கட்டித் தருவது பற்றிய செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளது. அரசின் நிதி நிலையைக் கருத்திற்கொண்டு இத்திட்டம் செயல்படுத்துவது பற்றி பரிசீலிக்கப்படும்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி 1991-96 ஆம் ஆண்டு பொறுப்பிலே இருந்த காலத்தில் மன்னார்குடி அரசு

மருத்துவமனைக்கு 500 படுக்கை வசதியுடன்கூடிய மருத்துவமனையைக் கட்டுவதற்காக சுமார் 7½ கோடி செலவிலே திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அது தொடர்ந்து அப்படியே கிடப்பிலே போடப்பட்டுவிட்டது. நான் சென்ற முறை சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோது அதைப் பற்றி இந்தச் சட்டமன்றத்திலே பலமுறை பேசி அதற்குரிய ஆய்வும் நடத்தப்பட்டு அதுவும் நிலுவையிலே இருந்தது. இப்போது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்கான பரிசீலனையில் இருப்பதாகச் சொல்கிறார்கள். பரிசீலனை என்ற வார்த்தை நம்முடைய அரசாங்கத்திற்கு வேறுவிதமான அர்த்தத்தைக் கொடுக்கும் என்ற காரணத்தினாலே பரிசீலனையை விரைவாக முடித்து இந்த ஆண்டே நிதியுதவியை செய்து 150 படுக்கை வசதிகளுடன்கூடிய நவீன மருத்துவமனையைக் கட்டுவதற்கான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா, அமைச்சர் அவர்கள் தனித்த முயற்சியை மேற்கொள்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி அரசு மருத்துவமனையைப் பொறுத்தவரையில் இப்போது இருக்கின்ற படுக்கை வசதி வெறும் 140 தான். ஆனால் இன்றைக்கு கிட்டத்தட்ட 240-க்கும் மேலான உள்நோயாளிகள் அங்கே தங்கி சிகிச்சை பெற்று வருகிறார்கள். அதைப்போல, 800-க்கும் மேற்பட்ட வெளிநோயாளிகள் தினந்தோறும் அங்கே வந்து சிகிச்சை பெறுகிறார்கள். இவற்றையெல்லாம் கருத்தில்கொண்டுதான் அங்கே கூடுதலாக படுக்கை வசதிகள் கொண்ட மருத்துவமனை கட்டடத்தை கட்டுவதற்காக, இந்த அரசு நடவடிக்கை எடுத்து, அந்த அடிப்படையிலே 2.90 கோடி மதிப்பீட்டில் 150 படுக்கைகள் கொண்ட பிரிவு ஒன்றை கட்டுவதற்கு திட்டம் தயாரிக்கப்பட்டு, இப்போது அது நடைமுறைப் படுத்தப்படவிருக்கிறது. அந்த வகையிலே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல, இந்தத் திட்டம் பற்றிய கட்டுமானப் பணிகளுக்கான வரைவுப் படங்களை பொதுப் பணித் துறையிடமிருந்து பெற்றவுடன், உடனடியாக அதற்குண்டான ஏற்பாட்டை இந்த அரசு செய்யும் என்பதை உறுதியாகச் சொல்லிக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுக்கு, அதற்குள்ளாக ஒரு போனஸ் செய்தி, இந்த ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் மன்னார்குடி அரசு மருத்துவமனைக்கு வெளி நோயாளிகள் பிரிவு Out Patient Ward கட்டுவதற்கு நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் 7.50 இலட்சத்தை அளித்துள்ளார்கள் என்ற நல்ல செய்தியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியமா? அல்லது திரு. ஜி. பழனிசாமியா?

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்ல பதிலைத் தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு என் சார்பிலும், மன்னார்குடி தொகுதி மக்களின் சார்பிலும் நான் நன்றியைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இதற்கு உரிய முறையில் அனுமதியளித்த இந்த திட்டத்தை நிறைவேற்றச் செய்திருக்கிற தமிழகத்தினுடைய மாண்புமிகு முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும், எனது சார்பிலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குறிப்பாக, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, பொதுப் பணித் துறையின் மூலம் மதிப்பீடுகளை தயாரிப்பதாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, இது மிகுந்த மகிழ்ச்சி அளிக்கிறது. அந்தப் பகுதி மக்களுக்கு குறிப்பாக அந்த மாவட்ட மக்களுக்கு ஒரு நல்ல செய்தியாக அறிவித்திருக்கிறீர்கள். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்களையும், அமைச்சர் அவர்களையும், இந்த அரசையும் என்னுடைய தொகுதி மக்களின் சார்பிலும், என் சார்பிலும் மீண்டும் பாராட்டி வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி மருத்துவமனையை விரிவாக்கம் செய்வதுபோன்று, பக்கத்திலே இருக்கிற தொகுதியான திருத்துறைப்பூண்டியினுடைய மருத்துவமனை மிகவும் சீர்கேடான நிலையிலே உள்ளது. அதுகூட சென்ற அரசிலே ஒரு கடுமையான போராட்டத்தை நடத்தி 67 இலட்சம் ரூபாய்க்கு ஒரு Out Patient building மட்டுமே கட்டப்பட்டிருக்கிறது. அப்படி மருத்துவ மனைக்காக கட்டப்பட்ட இடத்திற்கு இன்னும் பணம் வழங்கப்படவில்லை. ஆகவே, இரண்டு இடங்களில் இயங்கிக்கொண்டிருக்கிற அந்த மருத்துவமனை அதற்கும் கட்டடப் பணிகளுக்கான திட்டம் அரசு வரைவுகள் வந்திருக்கிறது. அதைக் கட்டுவதற்கு அரசிடத்திலே திட்டம் இருக்கிறதா என்பதை தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

[2001 செப்டம்பர் 13

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டியைப் பொறுத்தவரையில் இப்போது அந்த மருத்துவமனையில், உள்நோயாளிகளுடைய எண்ணிக்கையும், வெளிநோயாளிகளுடைய எண்ணிக்கையும் கூடியிருக்கிறது என்பது உண்மைதான். எப்போதும் இருக்கிற ஒரு மருத்துவமனைக்கு கூடுதலான படுக்கை வசதியை அதிகரிக்க வேண்டுமென்று சொன்னால், அங்கே வருகிற நோயாளிகளின் எண்ணிக்கைக்கு ஏற்பதான் படுக்கை வசதிகள், கூடுதல் கட்டடங்கள் எல்லாம் கட்ட அரசு திட்டமிடுகிறது. எனவே, அந்த வகையில் முதல் கட்டமாக, திருத்துறைப்பூண்டிக்கு இப்போது வெளிநோயாளிகளுக்கான பிரிவு ஒன்று கட்டப்பட்டிருக்கிறது. எனவே, உள்நோயாளிகளுடைய எண்ணிக்கையும் கூடியிருப்பதால், அங்கே கூடுதல் படுக்கை வசதி கொண்ட ஒரு பகுதியை கட்டுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு உள்ளது. அதையும் விரைவுபடுத்தி அங்கேயுள்ள நோயாளிகளுக்கான, புதிய படுக்கை வசதிகளைக் கொண்ட கட்டடத்தை கட்டுவதற்கு இந்த அரசு விரைந்து நடவடிக்கை எடுக்கும்.

## (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 89, திருமதி சி.எம். சூரியகலா, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**89-**

### பேருந்து வசதி

***641—திருமதி சி.எம். சூரியகலா:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்கண்ட வினாவிற்கு விடையளிப்பாரா—

குடியாத்தம் தொகுதி, முதலியார் ஏரி, கதிர்குளம், கே. வலசை, அருகவாய்ப்பள்ளி, பூரகமானபள்ளி, கொச்சாலூர், புட்டவாரிபள்ளி, ஆர். வெங்கடாபுரம் போன்ற கிராமங்களுக்கு பேருந்து வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன், போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வினாவில் குறிப்பிடப்பட்டுள்ள ஊர்கள் அனைத்திற்கும் தற்போது பேருந்துகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. ஆகவே, தற்போது அந்தப்



2001 செப்டம்பர் 13]

பகுதிகளுக்கு கூடுதல் பேருந்து வசதி தேவையில்லை என்று அரசு கருதுகிறது.

**திருமதி சி.எம். சூரியகலா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடியாத்தம் தொகுதியில் உள்ள மூல வினாவில் நான் குறிப்பிட்ட அந்த கிராமங்களுக்கு இதுவரை பேருந்து வசதிகளே கிடையாது. ஜனத்தொகை 2000 பேர் இருந்தும், சாலை வசதி இருந்தும், நகரப் பேருந்து இதுநாள் வரை இல்லை. பள்ளி மாணவர்களும், விவசாயிகளும் நீண்ட தூரம் நடந்து செல்லவேண்டிய அவல நிலையுள்ளது. அங்கு வசிக்கும் மக்கள் குடியாத்தம் வரவேண்டுமானால், சுமார் 5 கிலோமீட்டர் தூரம் நடந்து வரவேண்டியுள்ளது. ஆகையால், பள்ளி மாணவர்களும், விவசாயிகளும் பெரும் பாதிப்புக்கு உள்ளாகிறார்கள். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஒரு மினி பஸ் வசதியை ஏற்படுத்தி தருவார்களா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு திரு. நயினார் நாகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல் இல்லாமல், குடியாத்தம் தொகுதி முதலியார் ஏரி, கதிர்குளம், கே. வலசை, அருகவாய்பள்ளி, கொச்சலூர், முட்டவாரிப்பள்ளி, ஆர். வெங்கடாபுரம் போன்ற கிராமங்கள் அனைத்தும் குடியாத்தம் to சித்தூர் செல்லும் வழியில் இருக்கின்ற காரணத்தாலும், பிரதானச் சாலையிலிருந்து 1 கிலோமீட்டர், 1.9 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ள கிராமங்களாக உள்ளதாலும், வேலூர், தமிழ்நாடு போக்குவரத்துக் கழகத்தால் இயக்கப்படும் நகரப் பேருந்து தடங்களான ஜி.2, ஜி.2-ஏ, ஜி.25, புறநகரப் பேருந்து தடங்களான 186, 189 மூலமாக அக்கிராமங்களுக்குப் பேருந்து வசதி செய்யப்பட்டுள்ளது. மேலும், அதே வழித்தடத்தில் தனியார் மற்றும் ஆந்திர மாநில போக்குவரத்துக் கழகப் பேருந்துகளும் இயக்கப்பட்டு வருகின்றன. இந்தக் கிராமங்கள் கிருஷ்ணாபுரம்-குடியாத்தம் வழித்தடத்தில் பூர்வமானப்பள்ளிக்கட்டு ரோடிலேயிருந்து 1 கிலோமீட்டர் தொலைவில் அமைந்துள்ளது. வேலூர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் இயக்கும் ஜி.4 நகரப் பேருந்து வழித்தடத்தின் மூலம் கூட்டு ரோடு பகுதிலேயிருந்து பேருந்துகள் தினசரி ஆறு நடைகள் இயக்கப்படுகின்றன. கூட்டு ரோடிலேயிருந்து 1 கிலோமீட்டர் தொலைவிற்குள் உள்ள பூர்வமானப்பள்ளிக்கட்டு கிராமம் பேருந்து வசதி பெற்ற கிராமமாகக் கருதப்படுகிறது. எனவே, மேற்கூறப்பட்ட

கிராமங்களுக்குத் தனியாகப் பேருந்து வசதி செய்யத் தேவையில்லை. அவ்வாறு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கருதுவார்களேயானால் அவருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

## (ஆ) குறுகிய கால வினாக்கள்—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினா எண் 6, திரு. பி.கே. சேகர்பாபு, மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**6—**

### குடியிருப்புகள்

**13988—திரு. பி.கே. சேகர்பாபு:**

மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சென்னை, டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டம், தண்டையார்பேட்டை பாரதி நகரில் 552 குடியிருப்புகள் கட்ட திட்டமிடப்பட்டு, கைவிடப்பட்ட இடத்தில் சாலையோரங்களில் வசிக்கும் மக்களுக்காக அக்குடியிருப்புகளைக் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ், வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதி, 11-வது வட்டத்தில் பாரதி நகர் என்ற பகுதியில் சாலையோரங்களில் வசிக்கின்ற மக்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கலாம் என 1995 ஆம் ஆண்டு ஏழைகளின் காவலராக விளங்கும் மாண்புமிகு மனிதப் புனிதவதி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சியில் சுமார் 552 பேர்களுக்கு வீடுகள் கட்டிக் கொடுக்க பரிந்துரை செய்யப்பட்டது. டாக்டர் ராதாகிருஷ்ணன் நகர் தொகுதியில் 2000-க்கும் மேற்பட்ட மக்கள் தற்போது சாலையோரங்களில் குடியிருந்து வருகின்றார்கள். அந்தச் சாலையோர மக்களுக்குக் குடியிருப்புகள் கட்டிக் கொடுத்தால், மாண்புமிகு மனிதப் புனிதவதி டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுக்குப் பெருமை கிடைத்துவிடும் எனக் கருதி அந்தத் திட்டத்தைக் கிடப்பிலே போட்டுவிட்டனர். எனவே, அந்தத் திட்டத்தை நிறைவேற்ற மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாரதி நகர், தண்டையார்பேட்டை கிராமம், புலன் எண் 1844/2-ல் 4.57 ஹெக்டேர் நிலம் இருக்கிறது. இப்பகுதியில், தெற்கே இரயில்வே இருப்புப் பாதையும், மேற்கில் பக்கிங்காம் கால்வாயும், வடக்கு மற்றும் கிழக்கில் சென்னை பெருநகர மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்படுத்தப்பட்ட குடிசைகளும் அமைந்துள்ளன. தண்டையார்பேட்டை பாரதி நகர்ப் பகுதியில் 528 மாடிக் குடியிருப்புகள் கட்ட வரைபடம் வாரியத்தால் தயாரிக்கப்பட்டது. அத்திட்டத்திற்கான வரைபடம் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்தின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் கடித எண் ஏ4/16820/98, நாள் 10-2-1999-ல் இப்பகுதி பக்கிங்காம் கால்வாயிலேயிருந்து 100 மீட்டர் இடைவெளிக்குள் அமைந்துள்ளதால், கடல் ஓரப் பகுதியினுடைய ஒழுங்குமுறை விதிகளின்கீழ் பாதிக்கப்படுகிறது எனத் தெரிவித்து, வரைபடத்திற்கு ஒப்புதல் அளிக்கவில்லை. மேலே கூறப்பட்ட காரணத்தால் இத்திட்டம் கைவிடப்பட்டது. இப்போது நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே கடந்தகால ஆட்சியிலே இந்தத் திட்டம் நிறுத்திவைக்கப்பட்டிருந்ததா? என்ற வினாவை இங்கே எழுப்பியிருக்கிறார்கள். பக்கத்திலே இருக்கிற அணுகுச் சாலை 30 அடி அளவிலே இல்லாமல் இருக்கிற காரணத்தினாலே அந்த நிலத்திலே ஒரு பக்கத்திலே வீடுகள் கட்டிக்கொள்ள முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. பக்கத்திலே சென்னை நகர்ப்புற வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக மேம்படுத்தப்பட்டிருக்கிற குடிசைவாழ் மக்களிடத்திலே சென்று பேச்சுவார்த்தை நடத்தி அந்தச் சாலையை அகலப்படுத்தி இந்த ஆண்டு, அந்த திட்டத்தை எடுத்துக்கொள்வதற்குப் பரிசீலனை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2001 செப்டம்பர் 13

*முற்பகல் 10-20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பி.கே. சேகர்பாபு.

**திரு. பி.கே. சேகர்பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் 4.57 ஹெக்டேர் பரப்பளவுள்ள இடம் என்று கூறினார்கள். அதாவது 11.25 ஏக்கர் பெறுமானமுள்ள இடம் என்றார். அந்த இடத்தில் இரயில்வே இருப்புப் பாதையும், பக்கிங்காம் கால்வாயும், C.M.D.A. சட்டதிட்ட விதிகளுக்குட்பட்டு அந்த இடத்திலே வீடு கட்டுவதற்குப் போதுமான இடம் இருப்பதாக நான் அறிகிறேன். டாக்டர் இராதாகிருஷ்ணன் தொகுதியிலுள்ள அந்த இடத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய துறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்து அந்த இடம் குடியிருப்பு கட்ட சாத்தியமான இடம் என்பதை அறிந்து கொள்ளலாம். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த இடத்தைப் பார்வையிட, நேரிலே வந்து ஆய்வு செய்ய வருவாரா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கூட்டிக்கொண்டு செல்ல வேண்டியது தானே? இதிலே ஒன்றும் இல்லையே? (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த வினாவை இந்த மாமன்றத்திலே எழுப்புவதற்கு முன்னாலேயே என்னிடத்திலே இந்தக் கோரிக்கையை வைத்திருந்தால் நான் அவரோடு நேரடியாக சம்பந்தபட்ட அனைத்துத் துறைகளினுடைய அதிகாரிகளையும் அழைத்துச் சென்று பார்வையிட்டு இதற்கான ஏற்பாடுகளை செய்திருக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, அவர் எப்போது அழைத்தாலும் அவருடைய தொகுதியிலுள்ள அந்த இடத்தைப் பார்வையிடுவதற்கு நானும் சம்பந்தப்பட்ட துறையினுடைய அதிகாரிகளும் வரவிருக்கிறோம் என்பதைப் பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சேகர்பாபு, அமைச்சர் வருகிறேன் என்று சொல்லிவிட்டார், அப்புறம் என்ன விடுங்களேன்.

**திரு. பி.கே. சேகர்பாபு:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய தொகுதிக்கு வருகை தந்து அந்தக் குடியிருப்புகளை உருவாக்குகின்ற முயற்சியில் தன்னை



2001 செப்டம்பர் 13]

ஈடுபடுத்திக்கொள்ள உள்ளார் என்ற செய்தியை அறிந்து மெத்த மகிழ்ச்சியடைகிறேன் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினருக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாறி மாறி நீங்களே பேசிக் கொண்டிருந்தால் எப்படி?

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. உசேன், இது குறுகிய கால வினா.

**திரு. எஸ்.ஏ.எம். உசேன்:** தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதி..

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குறுகிய கால வினாவில் மற்றவர்களுக்கு இடம் கொடுப்பதில்லை. அவருடைய தொகுதி ஆர்.கே. நகர். அவர் ஆர்.கே. நகர் தொகுதிக்குக் கேட்டிருக்கிறார். ஆயிரம் விளக்குக்கு நீங்கள் தனியாகக் கேள்வி போடுங்கள். குறுகிய கால வினா இது. வினாக்கள் விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு: ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.)

## 2. சிறப்புக் கவன ஈர்ப்பு

### வால்பாறை மஹாவீர் ஹை ஃபாரெஸ்ட் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோவை மாவட்டம், வால்பாறை மஹாவீர் ஹை ஃபாரெஸ்ட் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து கவன ஈர்ப்பாக திரு. கோவை தங்கம் அவர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு நான் அனுமதியளிக்கிறேன். அறிவிப்பை சுருக்கமாக எடுத்துக்கூறுமாறு அழைக்கிறேன், திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை ஹைஃபாரெஸ்ட் எஸ்டேட் நிர்வாகத்தால் கடந்த 10 மாதமாக அங்கே பணிபுரிந்து வருகின்ற தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படவில்லை. சம்பள உயர்வும் வழங்கப்படவில்லை, ஓய்வூதியமும்

வழங்கப்படவில்லை, போனசும் வழங்கப்படவில்லை. நிர்வாகத்தை அணுகி இதைப்பற்றிப் பேசினால் அவர்கள் யாரும் ஒழுங்காகப் பதில் சொல்வதற்கு, முதலாளிகள் உட்பட 3 ஆண்டுகாலமாக அங்கே வருவதில்லை. மேலும், கடந்த இரண்டு மாதமாக நிர்வாகம் மூடப்பட்டுவிட்டது. தொழிலாளர்கள் பணியிழந்திருக்கின்றார்கள். ஆகவே, தோட்டத் தொழிலாளர்கள் மிகவும் வறுமையில் வாடிக் கொண்டிருக்கின்றார்கள். வால்பாறையை பொறுத்தவரையில் அங்கே வேறு பணி செய்வதற்கு வழியில்லை. சிறு வியாபாரம் செய்வதற்கும் வழியில்லை. தோட்டத் தொழிலாளர்கள் இந்தப் பணியை நம்பியே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு தாயுள்ளம் கொண்ட முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள், அந்த ஹை ஃபாரெஸ்ட் எஸ்டேட்டை அரசே எடுத்து நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இடைக்காலமாக அந்தத் தோட்டத் தொழிலாளர்களுக்கு உதவித் தொகை வழங்குவதற்கு மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. அ. அன்வர் ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை, மஹாவீர் பிளான்டேஷன் லிமிடெட் என்ற நிறுவனத்தைச் சேர்ந்த ஹை ஃபாரெஸ்ட் எஸ்டேட் என்ற தோட்ட நிறுவனம் கோவை மாவட்டம் வால்பாறையில் 250 ஹெக்டேர் பரப்பளவில் தேயிலை சாகுபடி செய்து வருகிறது. இந்த நிறுவனத்தில் 281 ஆண்கள் மற்றும் 324 பெண்கள் ஆக மொத்தம் 605 தொழிலாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். இந்த நிறுவனத்தில் சட்டப்படி குறிப்பிட்ட தேதியில் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்கப்படுவதில்லை. காலதாமதமாக சம்பளம் வழங்கப்பட்டமைக்காக 1996, 1997, 1998, 1999 மற்றும் 2001 ஆம் ஆண்டுகளில் ஹை ஃபாரெஸ்ட் எஸ்டேட்டுக்கு எதிராக 14 வழக்குகள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

சம்பளம், போனஸ் மற்றும் இதர சட்டப்படியான சலுகைகள் வழங்கப்படாதது குறித்து கோவை தொழிலாளர் உதவி ஆணையாளர், கோவை தொழிலாளர் துணை ஆணையாளர், கோவை தொழிலாளர்





இணை ஆணையாளர் மற்றும் தொழிலாளர் ஆணையாளர் முன்பு பலமுறை பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டு அறிவுரை வழங்கப்பட்டும், அறிவுரைகளில் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் நிர்வாகம் தொழிலாளர்களுக்குச் சம்பளம் வழங்காமல் தொடர்ந்து காலதாமதமாகவே வழங்கி வந்திருக்கிறது. தாமதமாக சம்பளம் வழங்கப்பட்டமைக்கு குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடரும்போது, நீதிமன்றம் அபராதக் கட்டணமாக ரூபாய் 1000-லிருந்து ரூபாய் 2000 வரைதான் அபராதம் விதிப்பதற்குச் சட்டத்தில் வகை செய்யப்பட்டுள்ளதால், நிர்வாகம் மேற்படி அபராதத் தொகையைச் செலுத்திவிட்டு தொடர்ந்து சட்டத்தை மீறி வருகிறது.

மஹாவீர் பிளான்டேஷன் நிர்வாகம், வால்பாறை ஹை ஃபாரெஸ்ட் எஸ்டேட் தொழிலாளர்களுக்குக் காலதாமதமாக சம்பளம் வழங்கும் வழக்கத்தினைக் கொண்டுள்ளதால், வழக்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டும், கேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டும், தொழிலாளர் துறை அலுவலர்களாக கோவை அலுவலகத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கிற உதவி ஆணையாளர் சமரசம் மற்றும் கோவை தொழிலாளர் துணை ஆணையாளர் மற்றும் இணை ஆணையாளர் ஆகியோரால் பலமுறை பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு அறிவுரைகள் அளிக்கப்பட்டன. இருப்பினும், நிர்வாகம், அந்த அறிவுரைகளைப் பின்பற்றவில்லை. சம்பளத்தை உரிய காலத்தில் வழங்கவில்லை. எனினும், துறை அலுவலர்களால் இந்தப் பிரச்சினை தொடர்பாக தொடர்ந்து பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்தப் பிரச்சினை தொடர்பாக டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் தலைமையில் அமைந்திருக்கின்ற தொழிலாளர்கள் நலனில் மிகுந்த அக்கறை காட்டிக் கொண்டிருக்கிற நம்முடைய அரசு பதவியேற்றுக் கொண்டதற்குப் பிறகு 16-7-2001 அன்று முற்பகல் கோவை தொழிலாளர் துணை ஆணையாளர் முன்னிலையில் நடைபெற்ற கூட்டத்தில் வால்பாறை சட்டமன்ற உறுப்பினர் மற்றும் தொழிற்சங்க பிரதிநிதிகளுடன் மேற்படி எஸ்டேட் தொழிலாளர்களுக்கு சம்பளம் வழங்க நடவடிக்கை எடுப்பது தொடர்பாக விவாதிக்கப்பட்டது. 31-7-2001 அன்று பிற்பகல் கோவை தொழிலாளர் துணை ஆணையாளரால் மேற்கொள்ளப்பட்ட பேச்சுவார்த்தையில் நிர்வாகம் நவம்பர் 2000 ஆண்டு முதல் ஜூன் மாதம் 2001 வரையிலான 8 மாதச் சம்பள பாக்கியில் ஒரு மாதச் சம்பளத்தை 10-8-2001 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ வழங்க ஒப்புக் கொண்டது. ஆனால், நிர்வாகத்தினர் ஒப்புக் கொண்டவாறு 10-8-2001-குள் ஒரு மாத சம்பளத்தினை தொழிலாளர்களுக்கு

வழங்கவில்லை. இதைத் தொடர்ந்து, இது குறித்து விவரம் அறிய கோவை தொழிலாளர் துணை ஆணையாளர் முன்பு 28-1-2001 அன்று நடந்த பேச்சுவார்த்தையில் நிர்வாகத்தின் தரப்பில் எவரும் கலந்துகொள்ளவில்லை. தொழிற்சங்கங்கள் மட்டுமே கலந்து கொண்டன. வால்பாறை, ஹை ஃபாரெஸ்ட் எஸ்டேட் தொழிலாளர்களுக்கு கடந்த 9 மாதங்களாக சம்பளம் வழங்கப்படாதது குறித்து 31-8-2001 அன்று தொழிலாளர் ஆணையாளர் முன்பு மீண்டும் பேச்சுவார்த்தை மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. 16-8-2001 அன்று கோவை மாவட்ட ஆட்சித் தலைவர் முன்பு வால்பாறை ஹை ஃபாரஸ்ட் எஸ்டேட் சம்பந்தமாக வருவாய்த் துறை அதிகாரிகளுடன் நடைபெற்ற கலந்துரையாடலில் வால்பாறை ஹை ஃபாரெஸ்ட் எஸ்டேட்டின் நிலம் தற்போதைய நிர்வாகத்திற்கு Conditional Assignment-ஆக வழங்கப்பட்டுள்ளதாகவும், தற்போதைய சூழ்நிலையில் நிர்வாகத்தின் இந்த நிலங்களை அரசு ஏன் திரும்பப் பெற்றுக்கொள்ளக் கூடாது என்றும் மாவட்ட ஆட்சித் தலைவரால் 4-8-2001 அன்று நிர்வாகத்தினருக்கு அறிவிப்பு வழங்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர்களுக்கு மாதாந்திர சம்பளம் கூட சரியாக வழங்கப்படாததற்கும், இதர வசதிகள் நிறுத்தப்படுவதற்கும் நிர்வாகத்தினர் மீது தொழிலாளர் நலத் துறை அலுவலர்கள் பல்வேறு வழக்குகளைத் தொடர்ந்தும், நிர்வாகத்தின் போக்கில் மாறுதல் இல்லாததாலும், நிர்வாகம் அமலாக்க அதிகாரிகளின் செயல்பாடுகளை மதிக்காத நிலையிலும், இந்த நிர்வாகத்தின் செயல்பாடுகளை அமலாக்கச் சட்டத்தால் சீர் செய்ய இயலாத நிலை எழுந்துள்ளதாலும் இத்தொழிலாளர்களுக்கு அரசாங்கம் தான் சரியான தீர்வு தர இயலும் என்பதாலும், தொழிலாளர் இணை ஆணையாளரின் பரிந்துரையின்படி கோவை மாவட்டத்திலுள்ள ஹை ஃபாரெஸ்ட் உள்ளிட்ட மஹாவீர் பிளான்டேஷன் நிர்வாகத்தின்கீழ் உள்ள 4 மலைத்தோட்ட நிறுவனங்களை அரசு கையகப்படுத்தி அதன் நிர்வாகத்தினை அரசு தேயிலைத் தோட்டக் கழகத்திடம் ஒப்படைக்கலாம் என அரசுக்கு தொழிலாளர் ஆணையாளரின் கடிதம் எண் டி1/28433/99, நாள் 29-4-1999 மூலம் முன்மொழிவு அனுப்பப்பட்டுள்ளது. எனவே, இந்நிறுவனத்தை சுற்றுச்சூழல் மற்றும் வனத் துறையின் கட்டுப்பாட்டில் இயங்கும் தமிழ்நாடு தேயிலைத் தோட்டக் கழகத்துடன (டேன்டீ) இணைத்து நடத்த சாத்தியக்கூறுகள் உள்ளனவா என்பது குறித்து அரசு தீவிரமாகப் பரிசீலித்து வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





*முற்பகல் 10-30*

## (ஆ) அந்தியூர் கருப்பசாமி கோயில் வளாகத்தில் மன நோயாளிகள் இரும்புச் சங்கிலியால் கட்டி வைக்கப்பட்டுள்ளது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஈரோடு மாவட்டம், அந்தியூர் கருப்பசாமி கோயில் வளாகத்தில் 14 மன நோயாளிகள் இரும்புச் சங்கிலியால் கட்டி வைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து ஒத்திவைப்பாக திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அறிவிப்புக் கொடுத்துள்ளார்கள். இதனை சிறப்புக் கவன ஈர்ப்பாக எடுத்துக்கொள்வதற்கு அனுமதி அளிக்கிறேன். அறிவிப்பிலுள்ளதை மட்டும் சுருக்கமாக எடுத்துக் கூறுமாறு அழைக்கிறேன், திரு. சி. ஞானசேகரன்.

**திரு. ஐ. கணேசன்:** தலைவர் அவர்களே, அதைப் பற்றிய ஒத்திவைப்பு அறிவிப்பை நானும், அந்தியூர் சட்டமன்ற உறுப்பினரும் கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** ஆரம்பத்திலேயே கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை, இல்லை, நாங்கள் இரண்டு பேரும் கையெழுத்து போட்டு அலுவலகத்திலே கொடுத்திருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்கு அப்படி வரவில்லை. நீங்கள் எழுப்புவதாக இருந்தால் நான் அனுமதி அளிக்கிறேன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற மாதம் ஏர்வாடியில் மனிதாபிமானமற்ற முறையில் மன நோயாளிகளைக் கட்டி வைத்து அங்கே திடீர் தீச்சம்பவம் ஏற்பட்டதாலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அந்தியூருக்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ வந்துவிட்டேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஏர்வாடி பிரச்சினையெல்லாம் முடிந்துவிட்டது.

**திரு. சி. ஞானசேகரன்:** 28 பேர் மாண்டு போனதற்குப் பின்னால் அரசாங்கம் கடுமையான நடவடிக்கை எல்லாம் எடுத்து மன நோயாளிகளை எல்லாம் இப்போது சென்னையில் இருக்கக்கூடிய மன நோயாளிகள் மருத்துவமனைக்குக் கொண்டு வந்து அவர்கள் ஒரு சிறப்பு ஏற்பாட்டைச் செய்தார்கள். அதே நேரத்தில் அரசாங்கம் எல்லோருக்கும் கடுமையான ஒரு எச்சரிக்கையும் விடுத்தது. அப்படி இருந்தும்கூட, ஈரோடு மாவட்டத்திலே, அந்தியூரில் இருக்கக்கூடிய கருப்பசாமி கோயில், அதாவது காட்டுக்குள்ளே இருக்கக்கூடிய அந்தக் கோயிலிலே, 14 மன நோயாளிகளை சங்கிலியால் கட்டி வைத்து. இன்னும் அதேபோன்ற மனிதாபிமானமற்ற அந்தச் செயல் தமிழகத்தில் தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டு வருகிறது. அரசாங்கம் என்ன செய்து கொண்டிருக்கிறது? இதற்காக ஒரு தீவிர நடவடிக்கை ஏற்கெனவே எடுத்தோம் என்று சொன்ன அரசு ஏன் இவற்றையெல்லாம் கண்காணிக்கத் தவறிவிட்டது. இதுபோன்ற நிலைகள் நீடிக்குமேயானால் இன்னும் இதுபோன்ற ஏர்வாடி கொடூரச் சம்பவங்கள் நாட்டிலே சங்கிலித் தொடர் போல நடக்கக்கூடிய ஒரு நிலை நிச்சயமாக உருவாகும் இல்லையா? ஆகவே, நம்முடைய மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இதை நான் கொண்டு வந்து, இந்த மாதிரி மன நோயாளிகள் எங்கெங்கு இருக்கிறார்கள் என்ற ஒரு பட்டியலை உடனடியாக தயார் செய்து அவர்களையெல்லாம் மருத்துவமனைகளிலே சேர்த்து மனித நேயத்தோடு நடத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் விளக்கம் சொல்வார். திரு. ஐ. கணேசன், இதுகுறித்து ஆளுநர் உரையின்போது அறிவிப்பு கொடுத்திருப்பீர்கள் என்று நினைக்கிறேன். மறுபடியும் அது புதுப்பிக்கப்பட்டிருக்க வேண்டும். அதனால் அது அவைக்கு வரவில்லை. திரு. கணேசன் அவர்கள் கொடுத்திருக்கிறார்கள். அந்தியூர் சட்டமன்ற உறுப்பினரும் அறிவிப்பு கொடுத்திருக்கிறார்கள். அதுபற்றி அமைச்சர் அவர்கள் இப்போது விளக்கம் சொல்வார்கள்.

**மாண்புமிகு திரு. செ. செம்மலை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஈரோடு மாவட்டம், அந்தியூர் காட்டுப் பகுதியில் உள்ள மலை கருப்பசாமி கோயிலில் சில மனநோயாளிகள் இரும்புச் சங்கிலியால் பிணைக்கப்பட்டுள்ளார்கள் என்ற செய்தி 7-9-2001 காலை பத்திரிகையிலே வந்தவுடன் இந்த அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் மூலம் உடனடியாக நடவடிக்கை எடுக்கச்





சொன்னதின்பேரில், அந்த இடத்திற்கு வருவாய்த் துறை, காவல் துறை அதிகாரிகளும், மருத்துவர் குழுவும் சென்று பார்த்ததில் அங்கே 14 மன நோயாளிகள் சங்கிலியால் பிணைக்கப்பட்டிருந்தனர். இதிலே ஒரு விசேஷம் என்னவென்று சொன்னால், அங்கே தனிப்பட்ட நபர் யாரும் அப்படிப்பட்ட மன நலக் காப்பகத்தை நடத்தவில்லை. அந்தக் கோயிலிலே தங்கி சிகிச்சை பெற்றால் மன நோயாளிகளினுடைய அந்த நோய் குணமாகும் என்ற அந்த ஒரு நம்பிக்கையில் உறவினர்களே அங்கே அவர்களை விட்டுச் சென்றிருக்கிறார்கள். அது மலைப் பகுதி, காட்டுப் பகுதி என்ற வகையில் தற்காப்புக்காக உறவினர்களே அவர்களை சங்கிலியால் பிணைத்து அங்கே வைத்திருக்கிறார்கள். அந்த வகையிலே அந்த கோயிலினுடைய நிருவாகி, வாரத்திற்கு மூன்று நாட்கள் மூலிகைச் சாறு கொடுத்து, அதைக் குணப்படுத்துவதாக சொன்னதின்பேரில் அந்த நம்பிக்கையிலே அவர்கள் இருந்திருக்கிறார்கள். இருந்தாலும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதைப்போல அதுவும் ஒரு சட்டவிரோதமான காரியம் என்கிற அந்த அடிப்படையில் அந்த 14 நோயாளிகளையும், சென்ற அதிகாரிகள் மீட்டு, ஈரோடு அரசு மருத்துவமனைக்கு அவர்களை அழைத்துச் சென்றனர். அவர்களிலே 7 பேர் நல்ல நிலைமையிலே இருப்பதாகச் சொல்லி, அவர்கள் உறவினர்களிடம ஒப்படைக்கப்பட்டு விட்டார்கள். மீதி 7 பேரிலே 5 பேர் உள்நோயாளிகளாக ஈரோடு மருத்துவமனையிலே சிகிச்சை பெற்று வருகிறார்கள். அதிலே கொஞ்சம் நோய் முற்றிய நிலையிலே இருந்தவர்கள் இரண்டு நோயாளிகள் சென்னை மனநல காப்பகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளனர்.

*முற்பகல் 10-35*

ஈரோடு மருத்துவமனையிலே தங்கி உள்நோயாளிகளாக சிகிச்சை பெறுகின்ற அந்த 5 மனநோயாளிகளையும் அங்கே மனநல மருத்துவர்கள் நல்ல முறையிலே கவனித்து அவர்களுக்குச் சிகிச்சை அளித்து வருகிறார்கள். எனவே தற்போது அந்தக் கோயிலில் எந்த மனநோயாளியும் இல்லை. இதுபோன்ற நிகழ்வுகள் மேற்கொண்டு நிகழாமல் இருப்பதற்கு அதிகாரிகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. எனவே, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு இதிலே உடனடியாக நடவடிக்கை எடுத்ததன் மூலம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல இந்த அரசு எடுத்துள்ள இந்த நடவடிக்கை மனநோயாளிகளுக்கு ஒரு பாதுகாப்பான நிலையே தவிர, பதட்டமான நிலை இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திரு. செ. செம்மலை] [2001 செப்டம்பர் 13

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்கூட இந்த கவன ஈர்ப்பு அறிவிப்பை 10 ஆம் தேதிதான் அலுவலகத்திலே கொடுத்திருக்கிறார்கள். ஆனால் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அரசு செய்தி வந்த, தெரிந்த 7 ஆம் தேதியே நடவடிக்கை எடுத்து, 7 ஆம் தேதியே, இந்தப் பிரச்சினைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைத்துவிட்டது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 3. கவன ஈர்ப்பு

### மதுரையில் உயர் நீதிமன்றக் கிளையை தொடங்காதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 55-ன்கீழ் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வு குறித்த கவன ஈர்ப்பு. திரு. சி. ஞானசேகரன் அவர்கள் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவருவார்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரையில் உயர் நீதிமன்ற கிளையை தொடங்காததால் ஏற்பட்டுள்ள பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் கவனதிற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் அறிக்கை ஒன்று வைக்கப்பட்டுள்ளது.

**அறிக்கை**

மதுரையில் உலகனேரி கிராமத்தில் உயர் நீதிமன்ற ஆயம் அமைக்க 1997-ல் நிலம் கையகப்படுத்தப்பட்டது. இங்கு தேவையான கட்டடங்கள் கட்ட அரசு ஆணை (நிலை) எண் 449, உள் (நீதிமன்றங்கள் 1அ) துறை நாள் 4-5-2000-ல் ரூ.58.45 கோடி மதிப்பீட்டிற்கு நிருவாக அனுமதி வழங்கப்பட்டது.

2. இத்திட்டத்திற்கான ஒப்பந்தம் (Tender) பொதுப் பணித் துறையால் 12-1-2001 ஆம் தேதி கேட்கப்பட்டு, 8-3-2001 ஆம் தேதி ஒப்பந்ததாரர்கள் முடிவு செய்யப்பட்டனர். 2000-2001-ல் இத்திட்டத்திற்கு ரூ.2 கோடி இறுதி திருத்திய மதிப்பீட்டில் ஒதுக்கீடு செய்யப்பட்டு 19-3-2001 முதல் கட்டுமானப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. 2001-2002 திட்ட மதிப்பீட்டில் இப்பணிக்காக ரூ. 12.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. திட்டமிட்டபடி இப்பணிகள் நிறைவேற்றப்படும்.



2001 செப்டம்பர் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மதுரையில் உயர் நீதிமன்றத்தின் கிளை என்ற காரணத்தால் இதுகுறித்து பேரவையில் நம்முடைய உறுப்பினர் திரு. ஹக்கீம் பேசினார். உறுப்பினர் திரு. நன்மாறன் பேசினார். இதில் என்னுடைய உணர்வையும் இணைத்துக்கொள்கிறேன். எங்கள் சார்பாக நீங்கள் கேள்வி கேளுங்கள். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் போதும் மதுரையிலே உயர் நீதிமன்றத்தின் கிளை கட்டப்படும் என்று அப்போதே அறிவிப்பு செய்யப்பட்டது. அதற்கடுத்து திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தபோதும் அவர்களும் மதுரையிலே உயர் நீதிமன்றத்தினுடைய கிளை அமைக்கப்படும் என்று சொன்னார்கள். இரண்டு ஆட்சிகளையும் நாம் பார்த்துவிட்ட பின்னால், இப்போது 3-ஆவதாக அண்ணா திராவிட முன்னேற்றக் கழக ஆட்சி வந்தும்கூட இன்னும் நம்முடைய கனவு நனவாகாமல், இன்னும் மதுரையிலே உயர் நீதிமன்றத்தினுடைய கிளையை அமைக்க முடியாமல் இருப்பது மிகவும் வருந்தத்தக்க ஒரு செய்தியாகும். விவர அறிக்கையில் நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது உலகனேரி என்ற இடத்தில் ஏற்கெனவே இடம் கையகப்படுத்தப்பட்டு, அதற்காக ரூ.12.75 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டிருப்பதாக குறிப்பிட்டிருக்கிறார்கள். நீங்கள் பணத்தை ஒதுக்கி கட்டடத்தைக் கட்டினாலும்கூட, அந்தக் கட்டடத்தைக் கட்டிமுடிக்க இன்னும் ஓராண்டு, இரண்டாண்டு அல்லது 3 ஆண்டுகள்கூட பிடிக்கலாம். நான் பணிவோடு இந்த அவைக்குத் தெரிவித்துக் கொள்வதெல்லாம் ஏற்கெனவே மதுரையிலே விசாலமான நல்ல பெரிய இடத்தில் செஷன்ஸ் நீதிமன்றம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அங்கே இருக்கக்கூடிய செஷன்ஸ் நீதிமன்றத்திலேயே ஒரு கட்டடத்தை தனியாகப் பகுத்து நீங்கள் உயர் நீதிமன்றத்தினுடைய கிளையை கொண்டுபோய் வைக்கலாம். அங்கே இருக்கக்கூடிய இடத்தில், உயர் நீதிமன்ற நீதி அரசர்களுக்கு உடனடியாக நம்மால் வீடுகளைக் கட்டிக்கொடுக்க முடியும். இருக்கக்கூடிய இடத்திலேயே வீடுகளைக் கட்டிக் கொடுத்து அல்லது Guest House உருவாக்கிக்கொள்ளலாம். அப்படி உருவாக்குகின்ற பட்சத்தில், நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் உயர் நீதிமன்றத்தோடு பேச—நேற்றுதான் உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதி பதவி ஏற்றிருக்கிறார்கள்—வேண்டும். இதற்கு முன்னாலே எனக்குக் கிடைத்த தகவல் எல்லாம் நீதி அரசர்கள் யாரும் மதுரைக்குப் போக தயாராக இல்லை என்பதாகும். நீதி அரசர்களின் அந்த நீதி அங்கே இருக்கக்கூடிய, மதுரைவாழ் மக்களுக்கு எளிதில் கிடைக்கக்கூடிய வகையில் தற்போது தலைமை நீதிபதியாக பொறுப்பேற்றிருக்கின்றவருடன் நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள்

[திரு. சி. ஞானசேகரன்] [2001 செப்டம்பர் 13

உடனடியாக பேச்சுவார்த்தை நடத்தி இப்போதைக்கு உயர்நீதிமன்றத்தின் கிளையை அங்கே இருக்கக்கூடிய செஷன்ஸ் நீதிமன்றத்திலேயே அமைப்பதற்கு ஆவன செய்வார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது இருக்கின்ற செஷன்ஸ் நீதிமன்றத்திலே போதிய இடம் இல்லை. உயர் நீதிமன்ற கிளையை உருவாக்குகின்றபோது அதனுடைய தேவைகள், வசதிகள் எல்லாமே மிக அதிகமாக உள்ள காரணத்தால் இதுகுறித்து 10, 15 ஆண்டுகளுக்கு முன்னரே பரிசீலிக்கப்பட்டு உயர் நீதிமன்றம் அதை ஏற்றுக்கொள்ளவில்லை. அந்த அடிப்படையில்தான் ரூ56 கோடியே 45 இலட்சத்தில் ஒரு திட்ட மதிப்பீடு 2000 ஆண்டிலே தீர்மானிக்கப்பட்டு, அதற்கான அறிவிப்பு மேற்கொள்ளப்பட்டு, திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆனால் நிதி ஒதுக்குவதில் தாமதம் ஏற்பட்டது. தற்போது மீண்டும் அதை நாங்கள் ஆய்வு செய்தோம். ஆய்ந்த அடிப்படையில் 56 கோடியே, 45 இலட்சம் ரூபாய் தேவையில்லை. 36 கோடியே, 86 இலட்சம் ரூபாய் மட்டுமே போதும் என்று ஒரு கருத்துருவை தற்போது சம்பந்தப்பட்ட பொறியாளர்கள் தந்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலேதான் 12 கோடியே, 75 இலட்சம் ரூபாய் தற்போது ஒதுக்கப்பட்டிருக்கிறது. முதல் கட்டப் பணிகள் முடிவுற்றவுடனேயே உயர் நீதிமன்றக் கிளை அங்கு தொடங்கப்படலாம் என்ற ஒரு முடிவு உயர் நீதிமன்றத்தோடு கலந்து எடுக்கப்பட்டிருக்கிறது. எனவே, இதுகுறித்து பெரும் பிரச்சினை எதுவும் எழாது என்று நான் நம்புகிறேன். (குறுக்கீடு)

முற்பகல் 10-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், அமைச்சரிடம் பிறகு கேட்டுக்கொள்ளலாம். உட்காருங்கள்.

## 4. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன், பொதுக் கணக்குக் குழுவின் தலைவர்.

**திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை 2001-2002 ஆம் ஆண்டுக்கான



2001 செப்டம்பர் 13] [திரு. எஸ்.ஆர். பாலசுப்பிரமணியன்]

பொதுக் கணக்குக் குழுவின் நான்கு முதல் எட்டு வரையிலான, ஐந்து அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகராட்சியச் சட்டங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

[2001 செப்டம்பர் 13

## 6. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

*2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)- தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.



2001 செப்டம்பர் 13]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு.

*2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.*

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)— தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 7. 2001-2002 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கை அளித்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் துணை நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பேரவைக்கு அளிக்கிறார்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*2001-2002* ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை இம்மாமன்றத்தின் முன் வைக்கிறேன். மானியக் கோரிக்கைகளை விளக்கிக்கூறும் விரிவான தொரு அறிக்கை @ இம்மன்றத்தில் வைக்கப்பட்டுள்ளது. இந்தத் துணை மதிப்பீடுகள், மொத்தம் ரூ.13.08 கோடி நிதி ஒதுக்குவதற்கு வகை செய்கின்றன. இதில், ரூ.11.87 கோடி வருவாய்க் கணக்கிலும் எஞ்சிய தொகையான ரூ.1.21 கோடி மூலதனம் மற்றும் கடன் கணக்கிலும் அடங்கும்.

2. 31-1-2001 அன்று, கடந்த நிதியாண்டிற்கான இறுதித் துணை மதிப்பீடுகளை சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட பின்னர், எதிர்பாரா செலவு நிதியிலிருந்து, முன்பணங்கள் பெற்று, "புதுப்பணிகள்" குறித்து செய்யப்பட்ட செலவுகளுக்குச் சட்டப் பேரவையின் ஒப்புதலைப் பெறவும், எதிர்பாரா செலவு நிதியை ஈடுசெய்யும் பொருட்டும், இந்தத் துணை மதிப்பீடுகள் தாக்கல் செய்யப்படுகின்றன.

3. சட்டப் பேரவைக்கான பொதுத் தேர்தலின்போது பாதுகாப்புப் பணியில் அமர்த்தப்பட்ட காவல் துறைப் பணியாளர்களுக்கும், காவல் துறை சாரா பணியாளர்களுக்கும் உணவுக் கட்டணங்கள் அளிக்கும் வகையில் எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ.3.08 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 15—காவல் துறை" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

@ 29-30 ஆம் பக்கங்களில் அச்சிடப் பெற்றுள்ளன.



4. வேலூர் அரசினர் மருத்துவக் கல்லூரிக்கு அறைகலன்கள், கரும்பலகைகள், ஆய்வுக்கூட சாதனங்கள், ஏனைய பயிற்றுவிப்பு உபகரணங்கள் ஆகியன வாங்கவும், பணியாளர்களை நியமிக்கவும் அரசு ரூ.1.75 கோடி அனுமதித்துள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 18-மருத்துவம்" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. பிரதம மந்திரியின் கிராமோதயா திட்டத்தின்கீழ் மூன்று வயதுக்குக் குறைவான குழந்தைகளுக்குத் துணை சத்துணவு அளிக்கும் திட்டத்தைச் செயற்படுத்தும் வகையிலான தொடக்கச் செலவுக்காக, எதிர்பாரா செலவு நிதியிலிருந்து முன்பணமாக ரூ.4.43 கோடி அளிக்கப்பட்டுள்ளது. இத்தொகை "மானியக் கோரிக்கை எண் 29-சமூக நலன்" என்பதன்கீழ் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. இந்தத் துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள பல்வேறு செலவினங்களின் முக்கிய அம்சங்கள் பற்றி நான் இங்கு மிகச் சுருக்கமாக தற்போது கோடிட்டுக் காட்டியுள்ளேன். இவை குறித்தும் ஏனைய இனங்கள் குறித்தும் முழுமையான விவரங்கள், பேரவைமுன் வைக்கப்பட்டுள்ள அறிக்கையில் இடம் பெற்றுள்ளன.

7. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2001-2002 ஆம் ஆண்டிற்கான முதல் துணை மதிப்பீடுகளை, இம் மாமன்றம் ஏற்று, இசைவளிக்க வேண்டுகிறேன்.

வணக்கம்.

முற்பகல் 10-45

### 2001-2002 ஆம் ஆண்டு "கூடுதல் செலவுக்கான" மானியக் கோரிக்கைகள்

(ரூபாய் ஆயிரத்தில்)

| கோரிக்கை | |
|---|---|
| **அ. வருவாய்க் கணக்கில் செலவு** | |
| 9 மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் | 79,18 |
| 10 பால் வழங்கு செயல் திட்டங்கள் | 8,10 |
| 15 காவல் துறை | 3,20,60 |

*(ரூபாய் ஆயிரத்தில்)*

| | |
|---|---|
| 17 கல்வி | 3 |
| 18 மருத்துவம் | 1,75,00 |
| 19 மக்கள் நல்வாழ்வு | 63,93 |
| 23 கூட்டுறவு | 1 |
| 27 ஊரக வளர்ச்சி | 27,35 |
| 29 சமூக நலன் | 4,43,12 |
| 32 வீட்டுவசதி | 50,00 |
| 35 பாசனம் | 5 |
| 38 சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து | 2 |
| 42 பல்வகை | 1 |
| 50 சுற்றுலா | 17,10 |
| மொத்தம்-அ. வருவாய்க் கணக்கில் செலவு | **11,84,50** |
| ஆ. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு | |
| 52 வேளாண்மை குறித்த மூலதனச் செலவு | 82,82 |
| 54 பாசனம் குறித்த மூலதனச் செலவு | 20 |
| 56 சாலைகள், பாலங்கள் மற்றும் கப்பல் போக்குவரத்து குறித்த மூலதனச் செலவு | 2 |
| மொத்தம்-ஆ. வருவாய்க் கணக்கின் கீழ் வராத மூலதனச் செலவு | **83,04** |
| இ. கடன்கள், முன்பணங்கள் வழங்குதலும் கடனைத் திருப்பிக் கொடுத்தலும் | |
| 61 மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும் | 37,55 |
| பெருமொத்தம் | **13,05,09** |



## 8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்

**(அ) கோரிக்கை எண்.9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்**

**(ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்**

**(இ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்**

**(ஈ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்**

**(உ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

**(ஊ) கோரிக்கை எண் 42—பல்வகை**

**(எ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு**

**(ஏ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்**

### (அ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001-2002 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும், வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 9, மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1,85,78,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 115, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னையில் தலைமைச் செயலகத்திற்கு எதிரில் தலைமைச் செயலகத்திற்குக் கூடுதல் கட்டடம் கட்டி அனைத்துத் தலைமைச் செயலக அலுவலர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்கள் சார்ந்த கட்சிகளுக்கும் அலுவலகங்கள் ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,85,78,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2787, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,85,78,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1819, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3184, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,85,78,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 867, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3081, திரு. வை. சிவபுண்ணியம்.



**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,85,78,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2624, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட ஆட்சியாளர்கள், அமைச்சர்கள் ஆகியோர்கள் அனுப்பும் மனுக்களின் மீது நடவடிக்கை எடுத்து உறுப்பினர்களுக்கு உடனடியாக தகவல் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,85,78,00,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

### (ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 11, மாவட்ட நிருவாகம், மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.5,70,78,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 140, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் பொதுமக்களைச் சந்திக்க அலுவலக அறை ஒன்று ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,70,78,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2403, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,70,78,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3031, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,70,78,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2747, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,70,78,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3087, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,70,78,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2622, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,70,78,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 869, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1820, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3067, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,70,78,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1672, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட பஞ்சாயத்துக் கூட்டத்திற்குப் பொருட் பட்டியல் கொடுக்கும் அதிகாரத்தை சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,70,78,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1448, திரு. கே.என். சேகரன்.

**திரு. கே.என். சேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவெறும்பூரைப் புதிய தாலுகாவாக அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.5,70,78,58,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**(இ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம். மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.12,30,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 120, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மராட்டிய மாநிலத்தில் ரூ. 35,000 சம்பளம் வழங்குவதுபோன்று, தமிழ்நாட்டிலும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வழக்கமாக வெட்டுத் தீர்மானம் மொழிகிறேன் என்றுதான் சொல்வீர்கள். இதை முழுவதும் சொல்வதிலே ஏதோ உள்நோக்கம் இருப்பதைப்போலத் தெரிகிறது.

வெட்டுத் தீர்மானம் எண் 2203, திரு. ஜி. கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3287, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1817, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3497, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3182, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2626, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு பிற மாநிலங்களில் வழங்குவது போன்று சம்பளத்தை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 865, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 771, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2953, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3086, திரு. வை. சிவபுண்ணியம்.



முற்பகல் 10-50

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3041, திரு. கே. சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 600, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குன்னூர் தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் உடனடியாக கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3034, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.12,30,41,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**(ஈ) கோரிக்கை எண் 8-தேர்தல்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 8 - தேர்தல்கள், மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.87,84,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள், வெட்டுத் தீர்மானம் எண் 736, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வாக்காளர் பட்டியலைப் புதிதாகக் கணக்கெடுத்து விடுபட்டுப்போன வாக்காளர்கள் பெயர்களை வாக்காளர்கள் பட்டியல் பெயரில் சேர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 118, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேர்தல் செலவை அரசே ஏற்று, வீடு வீடாக, தெரு தெருவாக நேரடியாக வாக்கு கேட்கும் முறையை மாற்றி, தொலைக்காட்சியில் நேரம் ஒதுக்கி வாக்கு கேட்டால் போதும் என்ற முறையைப் புகுத்தி தேர்தல் நடத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்.

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2193, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2954, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 599, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வரும் ஊராட்சிமன்றத் தேர்தலிலும் எலக்ட்ரானிக் இயந்திரங்களைப் பயன்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1721, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1993, திரு. மு.பெ. சாமிநாதன்,

**திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் நடக்கவிருக்கும் உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக வீடு வீடாக அதிகாரிகள் சென்று வாக்காளர் பட்டியலை சரிபார்க்கும் பணி மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

[திரு. மு.பெ. சாமிநாதன்] [2001 செப்டம்பர் 13

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3433, திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ். வி. திருஞானசம்பந்தம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், பேராவூரணி தொகுதி புதுப்பட்டினத்தில், வெளிவயல் கிராமத்தில் வாக்குச் சாவடி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்"

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1818, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3029, திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகினே:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3507, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3183, திரு. மு. கார்த்தி.



2001 செப்டம்பர் 13]

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2625, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 866, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3084, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 164., திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ரிஷிவந்தியம் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த லாகூடலூர் ஊராட்சிக்கு உட்பட்ட கீழத்தேனூர், மேலத்தேனூர் மற்றும் மூங்கிலாந்தாங்கலுக்குத் தனி வாக்குச் சாவடிகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.87,84,50,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**(உ) கோரிக்கை எண் 41-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 41-ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ.30,29,17,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெறவேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 751, திரு. மீ.அ. வைதியலிங்கம்.

**திரு. மீ.அ. வைதியலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இரண்டாம் உலகப் போரில் ஈடுபட்டவர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியத்தை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6740, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் விண்ணப்பித்த சுதந்திரப் போராட்ட வீரர்களில் தகுதிபெற்றவர்க்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2413, திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2533, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் ஓய்வூதியம் பெறும் அனைவருக்கும் ஓய்வூதியக் கடன் வசதியை அதிகரிக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2963, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 608, திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திரப் போராட்ட தியாகிகள் பென்ஷனை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3276, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1834, திரு. மு. அப்பாவு, இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 3567. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3243, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2602, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு வழங்கும் ஓய்வூதியத்தை (பென்ஷன்) உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 889, திரு. ரா. ஈஸ்வரன், இருக்கையில் இல்லை. வெட்டுத் தீர்மானம் எண் 1858, திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மைய அரசு உதவி பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு தன் பங்காக வழங்கி வரும் ரூ.500-ஐ ரூ.2000-ஆக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3118, திரு. துரை, கி. சரவணன்.

**திரு. துரை, கி. சரவணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் இறந்தால், அவர்களுடைய குடும்பத்தாருக்கு உடனடியாக குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.30,29,17,37,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-55

### (ஊ) கோரிக்கை எண் 42-பல்வகை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42-பல்வகை மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.396,26,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 673, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், சத்துவாச்சாரியில் கோளரங்கம் ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,26,25,000-ல், ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2353, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,26,25,000-ல், ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2535, திரு. எச். எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு மின்சார வாரியத்தில் 110/11 கே.வி. துணை மின் நிலையங்களில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு, அவ்விடங்களிலேயே குடியிருப்புகள் கட்டித் தரும் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,26,25,000-ல், ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2962, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,26,25,000-ல், ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3547, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,26,25,000-ல், ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3277, திரு. மே.ப. காமராஜ்.

**திரு. மே.ப. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,26,25,000-ல், ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3244, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,26,25,000-ல், ரூ.100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2001, டாக்டர் தே. குமாரதாஸ்.

**டாக்டர் தே. குமாரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.396,26,25,000-ல், ரூ.100 குறைக்க வேண்டும்."

**(எ) கோரிக்கை எண் 60-பல்வகை மூலதனச் செலவு**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 60 - பல்வகை மூலதனச் செலவு. மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ், ரூ.991,17,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1550, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் நவீன வசதி கொண்ட விளையாட்டு அரங்கம் ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.991,17,98,000-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்:

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2292, திரு. ஜி.கே. மணி.



**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.991,17,98,000-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2595, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.991,17,98,000-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2976, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.991,17,98,000-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3477, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.991,17,98,000-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3138, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.991,17,98,000-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்."

**(ஏ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும். மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ், ரூ.643,12,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள். வெட்டுத் தீர்மானம் எண் 1549, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறு விவசாயிகளுக்கு வட்டியில்லா கடன் வழங்கி விவசாயத்தை ஊக்குவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.643,12,70,000-ல், ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2450, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.643,12,70,000-ல், ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2597, திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.643,12,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2975, திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.643,12,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3487, திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.643,12,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3139, திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 643,12,70,000-ல் ரூ.100 குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளும் மற்றும் மானியக் கோரிக்கை எண் 9-மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ஆகியோரின் கோரிக்கை பற்றியதும், மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித்தலைவி அவர்களுடைய பெயரிலே இருக்கின்றன. இதில் மாவட்ட நிருவாகம் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாண்புமிகு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. அவற்றிலே, தமிழிலே உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்த அவையிலே படித்ததாகக் கருதி, சட்டமன்றப் பேரவைக் குறிப்பேட்டில் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன். மானியக் கோரிக்கை எண் 9 - மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் ஆகியோரின் செலவினம் கொண்ட ஒரு கூட்டுக். கோரிக்கையாகும். இதில் மாநில ஆளுநர் அவர்களின் செலவின வருவாயும், மாநில ஆளுநர் அவர்களின் செலவினமும் சாட்டிய செலவினத்தின்கீழ் வருவதால், இத்தலைப்பின்கீழ், கொள்கை விளக்கக் குறிப்புகள் எதுவும் சட்டமன்றத்தில் வைக்கப்படுவதில்லை. மாண்புமிகு உறுப்பினர்கள், மாவட்ட நிருவாகம் குறித்த மானியக் கோரிக்கையின்மீது தங்களுடைய அரிய கருத்துக்களைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றிற்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதைப்போலவே தேர்தல்கள், ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், பல்வகை, பல்வகை குறித்த மூலதனச் செலவு மற்றும் மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும் ஆகிய மானியக் கோரிக்கைகள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும் ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. மாநிலச்

---

@259 முதல் 268 வரையிலான பக்கங்களில் இணைப்பு-I ஆக அச்சிடப்பட்டுள்ளது.



சட்டமன்றம் குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகளை அச்சிட்டு வழங்குவது நடைமுறையில் இல்லை. மற்றவற்றில் தமிழில் உள்ள கொள்கை விளக்கக் குறிப்புகளை @ நான் இந்தப் பேரவையில் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பேரவையின் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொண்டு மாண்புமிகு உறுப்பினர்களுடைய கருத்துக்களை அறிந்த பின் அதற்கு நான் விளக்கம் தருகிறேன்.

*முற்பகல் 11-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று மானியக் கோரிக்கைகள் மீதான விவாதம் கடைசி நாள். பேரவை விதி 185 (3)-ன்படி விவாதமும், பதிலுரையும் பிற்பகல் 1½ மணிக்கு முடிந்து மானியக் கோரிக்கைகள் வாக்கெடுப்பிற்கு எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே இந்த விவாதத்தில் கலந்துகொள்ளும் உறுப்பினர்கள் மிகவும் சுருக்கமாகப் பேசுமாறு கேட்டுக்கொள்கிறேன். மானியக் கோரிக்கைகள்மீது விவாதம். திரு. பா. பரணிகுமார்.

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டாவது முறையாக இந்த மாமன்றத்தில் பேசிடும் வாய்ப்பினை ஏற்படுத்திய எங்களது தலைவர் அய்யன் கலைஞர் அவர்களுக்கும், எதிர்க் கட்சித் தலைவர் இனமான பேராசிரியர் அவர்களுக்கும் எனது தலைவர் சென்னை மாநகர மேயர் அவர்களுக்கும் எனது தந்தையார் திருச்சி பாலகிருஷ்ணன் அவர்களுக்கும் என்மீது பாசமும், அன்பும் கொண்டு என்னை மீண்டும் பணியாற்ற அனுப்பிய திருச்சி ஒன்றாவது தொகுதி மக்களுக்கும் நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, நீங்கள் மதுரையைச் சார்ந்தவர்; நல்ல இலக்கியவாதி; நல்ல பேச்சாளர். எங்களைப் போன்ற இளைஞர்களை, புதியவர்களை ஊக்கப்படுத்தும் முறையில் நாங்கள் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்கு முதலில் உங்களுக்கு நன்றி கூற விரும்புகிறேன்.

---

@ பக் 269 முதல் 290 வரையிலான பக்கங்களில் இணைப்பு-II ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@ பக் 291 முதல் 308 வரையிலான பக்கங்களில் இணைப்பு-III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@ பக் 309 முதல் 320 வரையிலான பக்கங்களில் இணைப்பு-IV ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@ பக் 321 முதல் 324 வரையிலான பக்கங்களில் இணைப்பு-V ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

@ பக் 325 முதல் 328 வரையிலான பக்கங்களில் இணைப்பு-VI ஆக அச்சிடப்பெற்றுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரணிகுமார், என்னைப் பற்றி உங்களைவிட உங்கள் தந்தையாருக்கு ரொம்ப நன்றாகத் தெரியும். அவர் என்னை மிக உற்சாகப்படுத்தியவர். நீங்கள் பேசுங்கள். இன்றைக்குச் சுருக்கமாகப் பேச வேண்டும். 1½ மணிக்கு விவாதத்தை முடிக்க வேண்டிய காரணத்தால் சுருக்கமாகப் பேச வேண்டும். இன்னொரு நாள் வாய்ப்பு வருகிறபோது உங்களுக்கு வாய்ப்பு தருகிறேன். அப்பொழுது கீழே நின்றே பேசுவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன். (சிரிப்பு) ஏனென்றால் பரணிகுமார் என்பது பரண்குமார் என்பதைப்போல மேலே ஏறி நிற்கக்கூடிய அளவுக்கு வந்துவிடக் கூடாது. சுருக்கமாக 8 மணித்துளிகளிலே எந்த குறுக்கீடுக்கும் இடம் அளிக்காமல் பேசுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** கண்டிப்பாக நீங்கள் நினைத்ததைப் போல பேசுவேன் என்று உறுதி அளிக்கிறேன். முதலில் நான் இந்த அவையில் ஏற்பட்ட தவறுக்கு உங்களிடம் வருத்தம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். 1996-2001-ல் இதே மன்றத்தில் நாங்கள் வெற்றி பெற்றவுடன் எங்களது தலைவர் கலைஞர் அவர்கள் எங்களைக் அழைத்து பதவி வரும்போது அடக்கம் வேண்டும் என்று எங்களைக் கட்டுப்பாட்டுக்குள் வைத்து இருந்தார்கள். நாங்களும் கடமை, கண்ணியம், கட்டுப்பாடு காத்து கடந்த 5 ஆண்டுகள் சட்டமன்றத்தில் அமைதியாகவும் அடக்கத்துடனும் இருந்தோம். அதுபோல் இப்பொழுது இந்த அவையில் நடைபெறும் என்று எதிர்பார்த்துத்தான் நாங்கள் இந்த மன்றத்திற்கு வந்தோம். அதுபோல இல்லை என்பதால்தான் உங்களிடம் நான் வருத்தத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று கூற விரும்புகிறேன்.

எங்களது தலைவர் கலைஞர் ஆட்சியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அனைத்தும் computer மயமாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதை நான் துரிதப்படுத்த வேண்டுகிறேன். அதுமட்டுமல்லாமல் விழுப்புரம், திருவாரூர் போன்ற பெரிய மாவட்டங்களில் புதிய அலுவலகக் கட்டடங்கள் நாங்கள் கட்டியிருக்கிறோம். அதைப்போல் தாங்களும் கட்டுவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கடந்த ஆட்சியில் அலுவலகக் கட்டடம் கட்டப்பட்டது. அதில் மின்சார பில்லும், தொலைபேசி பில்லும் கட்ட வசதி செய்ய வேண்டும்.

அதேபோல எங்களது திருச்சி மாவட்டத்தில் என்னுடைய தொகுதியிலும், இரண்டாவது தொகுதியிலும் இன்னும் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டுவதற்கு இடமே அளிக்காமல் இருக்கிறார்கள். அதை தாங்கள் விரைவாக எங்களுக்கு அளித்து அதைக் கட்டுவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று தாழ்மையுடன் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.



2002 ஜனவரி முதல் வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு தேர்தல் ஆணையம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டுள்ளது. அந்த வாக்காளர் பட்டியல் தயாரிப்பதற்கு பயனுள்ள ஒரு கருத்தை நான் இங்கு கூற விரும்புகிறேன். வாக்காளர்களைச் சேர்ப்பதற்கு என்று பொதுவாக குறிப்பிட்ட ஒரு நாளை குறித்து அதுவும் அலுவலக நாட்களில் வாரத்தில் புதன்கிழமையோ வியாழக்கிழமையோ என்று அந்த மாதிரி நடுவிலே இருக்கக்கூடிய அலுவலக நாட்களில் விடுமுறையை விட்டு அன்றைக்கு வீடுகளுக்குச் சென்று கணக்கு எடுக்க வேண்டும். அதாவது அன்றைக்கு சினிமா தியேட்டர்கள், கேளிக்கை நிகழ்ச்சிகள் எதுவுமே இருக்கக் கூடாது. அப்படிப்பட்ட ஒரு விடுமுறையை விட்டு அன்றைக்கு எல்லோரையும் வீட்டிலே இருக்கவேண்டும் என்கிற ஒரு வழியைச் சொல்லி ஆசிரியர்கள், பட்டதாரிகள் போன்றோர் வீடுவீடாகச் சென்று வாக்காளர் பட்டியலைத் தயாரித்தால் கண்டிப்பாக அது வெற்றி பெற வாய்ப்பு உள்ளது என்பதை இந்த அவையிலே கூற விரும்புகிறேன்.

முற்பகல் 11-05

வாக்காளர் பட்டியல் என்றதும் எனக்கு ஒன்று ஞாபகம் வருகிறது. கடந்த சட்டமன்றத் தேர்தலில் நாம் அனைவரும் வாக்களித்தது எலக்ட்ரானிக் இயந்திரத்தில்தான். அதில் வாக்களித்து வெற்றிபெற்றவர்கள்தான் நாம் எல்லோரும். ஆனால் இன்றைய முதல்வர் அவர்கள் அன்றைக்கு எலக்ட்ரானிக் இயந்திரத்தை நம்பக் கூடாது என்றும், அதில் தவறு நடப்பதற்கு வாய்ப்பு உள்ளது என்றும் திமு.க.வினர்தான் செய்தார்கள் என்றும் நீதிமன்றத்திற்குச் சென்றவர்தான். அன்று அப்படிச் சொன்னவர்கள் இன்று வெற்றி பெற்று இருக்கிறார்கள். அப்படியானால் இந்த வெற்றி பெற்றது செல்லாது என்கிறீர்களா? செல்லாது என்றால் ராஜிநாமா செய்யத் தயாரா? ராஜிநாமா செய்து விட்டு அவர்கள் நம்பிக்கையுள்ள வாக்குச்சீட்டு முறையில் வெற்றிபெற விருப்பமா? (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரணிகுமார் அவர்கள் ஆரம்பத்திலே அமைதிக்கு வித்திடுவேன் என்று சொல்லிவிட்டு, சொல்வது ஒன்று; செய்வது ஒன்று என்பதுதான் தி.மு.க.வின் கொள்கை (மேசையைத் தட்டும் ஒலி) என்பதனை நிலைநாட்டுகிறமுகத்தான் நடந்துகொள்கிறார். எலக்ட்ரானிக் முறையை அன்றும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை; இன்றும் இந்த அரசு ஏற்றுக்கொள்ளவில்லை. அப்படி எலக்ட்ரானிக்

முறை ஒரு குறைவுடைய முறை என்பதற்குப் பொருள்தான், உதாரணமாகத்தான் எதிர்க்கட்சித் தலைவர் மாண்புமிகு பேராசிரியர் அவர்கள் பேசுகிறபோதுகூட சொன்னார். அவருடைய தொகுதியிலேயே பல்லாயிரக்கணக்கான ஓட்டுகள் விடுபட்டுப் போயின என்று சொன்னார். போட்டோ எடுக்கப்பட்டு அவை நீக்கப்பட்டதும், போட்டோ எடுக்கப்பட்டவர்களுடைய பெயரை, உயிரோடு இருப்பவர்களை செத்து விட்டோர் என்றும்( கணவன் உயிரோடு இருக்கின்றபோதே, அவரை இறந்து விட்டவர் என்றும் ஸ்கேலை வைத்துக் கொண்டு ஒரேயடியாக அடி அடி என்று அடித்து, இப்படிப்பட்ட முறைகேடுகள் எல்லாம் வருவதற்கு அது வழிவகுத்ததை நாடு அறியும். உங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தப் பாதிப்புக்கு உள்ளாகி இருக்கிறீர்கள். பேராசிரியர் கூட எடுத்துச் சொன்னார். எலக்ட்ரானிக் முறையிலே பல குறைகள் இருக்கின்றன. இன்னும் நாங்கள் அதைத்தான் வலியுறுத்துகிறோம். எலக்ட்ரானிக் முறையில் இருக்கிற குறைகளை மீறி ஒவ்வொரு சட்டமன்ற தொகுதிக்கும் 20 ஆயிரம், 30 ஆயிரம் என்று திட்டமிட்டு நீங்கள் அடித்துவிட்ட போதிலும்கூட, புரட்சித் தலைவி செல்வாக்கினால் வெற்றி பெற்றார். (மேசையைத் தட்டும் ஒலி) அதுதான் உண்மை.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய உறுப்பினர் திரு. பரணிகுமார் அவர்கள் அடையாள அட்டையைப் பற்றிக் குறிப்பிடவில்லை. வாக்குப் பதிவு செய்கின்ற முறையைப் பற்றித்தான் குறிப்பிட்டார். அதற்குச் சரியான விளக்கத்தை நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் தெரிவிக்கவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி, அவர் அதைத்தான் சொன்னார், உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த electronic system was introduced right from the Identity Card. அதிலிருந்து இறுதிவரை எல்லா இடத்திலுமே ஊழல்தான். அந்த ஊழலை மீறி நாங்கள் வெற்றி பெற்று இருக்கிறோம். மகத்தான மக்கள் சக்தி புரட்சித் தலைவி பின்னாலே இருந்த காரணத்தால் electronic voting முறையில், ஊழல் நடைபெற்றும் வெற்றி பெற்று இருக்கிறோம் என்றால், தமிழகமே புரட்சித் தலைவியைத் தமிழகத்தைக் காக்கின்ற காவல் தெய்வம் என்று ஏற்றுக்கொண்ட காரணத்தால் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த வெற்றி ஏற்பட்டது என்பதனை மாண்புமிகு உறுப்பினர் திரு. பரணிகுமார் அவர்கள் அதை ஏற்றுக் கொண்டு, மற்ற பிரச்சினைக்குச் சென்றால் 1½ மணிக்குள் முடித்து விடலாம். இல்லையென்றால்...



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரணிகுமார், இன்னும் 5 நிமிடங்களுக்குள் முடித்து விடுங்கள். (குறுக்கீடு) அவருடைய நேரத்தை எடுக்காதீர்கள். (குறுக்கீடு) திரு. பரணிகுமார் என்றைக்காவது அரிதாகப் பேசுகிறவர். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் அவர் நேரத்தை எடுத்துக் கொள்ளாதீர்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் ஒரு விளக்கத்தைத் தந்தார்கள். அப்படி தருகின்றபொழுது, எலக்ட்ரானிக் இயந்திர பதிவு முறையைப் பற்றி அவா சொல்லுகின்றபொழுது, வாக்குப் பதிவு, வாக்காளர்கள் சேகரிப்பு குறித்தெல்லாம் இங்கே அவர்கள் குறிப்பிட்டார்கள். அதிலே ஏதோ நாங்கள், திராவிட முன்னேற்றக் கழக அரசு தலையிட்டு அடித்ததன் மூலமாக என்று சொன்னார்கள். இப்போது வர இருக்கின்ற உள்ளாட்சித் தேர்தலில் அதையே இப்போது இந்த அரசு வாக்காளர்களையெல்லாம், எங்களுக்குத் தேவையான அளவிலே இருக்கிற வாக்காளர்களை அடித்து, அ.தி.மு.க. வாக்காளர்களை மட்டும் சேர்க்கின்ற பணியில் இறங்கி இருக்கிறதோ என்ற சந்தேகத்தை இன்றைக்கு உருவாக்குகிறது. ஆகவே, தேர்தல் ஆணையத்தின் மூலமாகக் கொண்டு வருகின்ற அந்த வாக்காளர் பட்டியலை நிதியமைச்சர் ஏதோ மாநில அரசு தலையிட்டு அடிப்பதற்கான வாய்ப்பு இருப்பதாகச் சொல்வது என்பது இந்த அரசு அந்தப் பணியிலே இறங்கி இருக்கிறது என்கின்ற ஒரு ஐயத்தையும் உருவாக்குகிறது என்பதை நான் குறிப்பிட விரும்புகிறேன்.

முற்பகல் 1-10

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவா் அவர்களே, ஏற்கெனவே அடித்தும் திருத்தியும், உயிரோடு உள்ளவர்களைக்கூட செத்துவிட்டார்கள் என்றும் நீங்கள் தலையிட்டு மேற்கொண்ட அந்தப் பட்டியலை வைத்துத்தான் இந்த தேர்தலை நடத்துகிறோம் (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....(குறுக்கீடுகள்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ....(குறுக்கீடுகள்) ஒரே ஒரு விஷயம். (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பொன்முடி, திரு. பரணிகுமாரை பேச விடுங்கள். (குறுக்கீடுகள்) முடியட்டும் இந்த விவாதம். (குறுக்கீடுகள்) திரு. சுந்தரம் ஏதோ சொல்ல வேண்டுமென்று கேட்கிறார். சொல்லுங்கள்.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் அடையாள அட்டையைப்பற்றி கூறினார்கள். அடையாள அட்டையைப் பொறுத்தவரையில் முன்னாள் முதல்வராக இருந்தவருக்கு 2 அடையாள அட்டைகள் இருந்தன; அதில் ஒன்று ஒரிஜினல்; இரண்டாவது போலி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நடந்த அந்தத் தவறுகள் எல்லாம் தெரியும். பத்திரிகைகளில் வந்து இருக்கிறது. (குறுக்கீடுகள்)

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த கார்டுகள் போலியாகத் தயார் பண்ணியது என்று இவரே பேசி இருக்கிறார். (குறுக்கீடுகள்)

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே .... (குறுக்கீடுகள்)

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே... (குறுக்கீடுகள்)

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. புகழேந்தி உட்காருங்கள். திரு. பொன்முடி என்ன என்று சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த முறை வாக்காளர் பட்டியலிலே குழப்பங்கள் இருந்தன என்பது அனைவருக்கும் தெரிந்த உண்மைதான். அது தேர்தல் ஆணையத்தின் மூலமாக நடைபெற்றிருக்கிற குழப்பங்கள். முன்னாள் அமைச்சராக இருந்த திரு. ஆற்காடு வீராசாமி அவர்களுடைய பெயரே விடுபட்டு இருந்து, பின் அவர் பெயரைச் சேர்த்தார்கள். திரு. என்.கே.கே. பெரியசாமி அவர்கள் தொகுதியில் 10 ஆயிரம் ஓட்டுகளுக்கு மேல் இல்லை என்று சொல்லி, அதற்காகவும் நாங்கள் தேர்தல் ஆணையத்திலே அதைச் சேர்க்க வேண்டும் என்று சொல்லி மனு கொடுத்து இருந்தோம். குழப்பங்கள் இருந்தது உண்மை. ஆனால், அதிலே அரசு தலையீடு என்பது தவறான செய்தி. (குறுக்கீடுகள்) தேர்தல் ஆணையத்தின் மீது குற்றம் சொல்வதாக இருந்தால், ..... (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி விடுங்கள். (குறுக்கீடுகள்) திரு. பரணிகுமார் பேசுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு திரு. பொன்முடி அவர்கள் கூறியது முற்றிலும் உண்மை. மாண்புமிகு திரு. ஆற்காடு வீராசாமி, திரு. என்.கே.கே. பெரியசாமி போன்றவர்களுடைய பெயர்கள் விடுபட்டபோது, நீங்கள் அதை சேர்த்துக்கொள்ளுங்கள் என்று தலையிட்டீர்கள்; சேர்த்துக் கொண்டார்கள். ஆனால், பல்லாயிரக்கணக்கான வாக்காளர்கள், எங்களுடைய வாக்காளர்கள் பெயர்கள் விடுபட்டபோது, சேர்த்துக் கொள்ளுங்கள் என்று நாங்கள் கேட்டோம்; மேலே இருந்து உத்தரவு; சேர்த்துக்கொள்ளப்படவில்லை; இதற்குத்தான் தலையீடு என்று பெயர். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வாக்காளர் பட்டியலில் குழப்பங்கள் இருந்தன என்பதை அவை முன்னவர் அவர்கள் ஏற்றுக்கொண்டு இருக்கிறார். அதில் தலையீடு என்ன என்பதற்கு அவர் விளக்கம் சொல்லி இருக்கிறார். ( குறுக்கீடுகள்) திரு. பொன்முடி, சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திரு. என்.கே.கே. பெரியசாமி அவர்களுடைய பெயர் மட்டும் விடுபடவில்லை. அவர்களுடைய தொகுதியில் 10 ஆயிரம் பெயர்கள், 45 ஆயிரம் பெயர்கள் விடுபட்டிருந்தன. தேர்தல் ஆணையத்தின் குளறுபடி காரணமாக, மனு கொடுத்து இருந்தோம்; அரசு தலையீடு என்று சொல்வது தவறான செய்தி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுபற்றி ஏற்கெனவே பேசப்பட்டு இருக்கிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்துதான் நான் தெளிவாக பல முறை இந்த அவையிலே விளக்கி இருக்கிறேன். தேர்தல் ஆணையம் என்பது, ஏதோ லண்டனிலே, அமெரிக்காவிலே இருப்பது அல்ல; இங்கே இருக்கின்ற Chief Electoral Officer அந்தப் பணியை மேற்கொள்கிறார். அவர் இடுகின்ற ஆணையை நிறைவேற்றுவது மாவட்ட ஆட்சித் தலைவர்கள். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இடுகின்ற ஆணையை நிறைவேற்றுவது Returning Officer

என்று அழைக்கப்படும் R.D.O.-க்கள் முனிசிபாலிட்டி என்றால், Assistant Returning Officer என்று சொல்லக் கூடிய Municipal Commissioner. Municipal Commissioner R.D.O.—க்கள் எல்லாம் உங்கள் ஆட்சிக்காலத்திலே உங்களுடைய Control-ல் இல்லை என்று சொல்வீர்கள் என்றால், முழுப் பூசணிக்காயை சோற்றிலே மறைப்பதுபோன்ற ஒன்றே அன்றி வேறு அல்ல. (மேசையைத் தட்டும் ஒலி) என்றாலும்கூட, நான் ஏற்கெனவே பலமுறை சொல்லி இருக்கிறேன். தற்போது உள்ளாட்சித் தேர்தலுக்கு கால அவகாசம் இல்லாத காரணத்தால், குளறுபடிகளோடு, தவறுகளோடு தயாரிக்கப்பட்டு இருக்கின்ற முந்தைய அந்த வாக்காளர் பட்டியலை வைத்துத்தான் இந்தத் தேர்தலை நடத்துகிறோம். புதிதாக வாக்காளர் பட்டியல், உள்ளாட்சித் தேர்தலுக்கு என சேர்க்கின்ற பணி தற்போது மேற்கொள்ளப்படவில்லை. புதிதாக நடைமுறைக்கு வந்து இருக்கின்ற அந்த பணியைப் பொறுத்தவரைக்கும், அடுத்த பொது தேர்தலுக்காக தேர்தல் ஆணையம் அதை நடைமுறைப்படுத்திக் கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரணிகுமார். (குறுக்கீடுகள்) அவர் பேசவா? வேண்டாமா? திரு. பரணிகுமார் இன்னும் 4 நிமிடத்தில் முடித்துவிடுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நடைபெற இருக்கக்கூடிய உள்ளாட்சித் தேர்தலிலே Electronics machines தான் வருமா அல்லது வாக்குச்சீட்டு முறை வருமா என்பதை நான் அமைச்சர் அவர்களிடம் விளக்கம் தரும்படி கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைய முதல்வர் அவர்கள் 1-6-1994-ல் திருச்சியை மாநகராட்சி என்று அறிவித்தார்கள். அந்தப் பெருமை அவரைத்தான் சேரும். அந்த அறிவிப்போடு விட்டுவிட்டு, ஒரு பைசாகூட ஒதுக்காத அந்தக் கட்டத்தில்தான் அவர் 2 ஆண்டுகள் ஆட்சி செய்தார்கள். ஆனால், எங்கள் தலைவர் அவர்கள் 1996-ல் ஆட்சி அமைத்தவுடன் அந்த ஆண்டே எங்களுடைய வேண்டுகோளுக்கிணங்க 25 கோடி ரூபாய் ஒதுக்கி, அந்த 5 ஆண்டு காலத்தில் மொத்தம் ரூ.357 கோடி ஒதுக்கி, இன்று திருச்சியைப் புதுப் பொலிவுடன் விளங்குகிற அளவிற்கு உருவாக்கி இருக்கிறார்கள். அந்த அளவிற்கு இல்லாவிட்டாலும், ஏதாவது கொஞ்சமாவது திருச்சிக்கு நீங்கள் ஒதுக்குவீர்கள் என்று நம்பி இந்த அவையில் நான் கூற விரும்புகிறேன்.

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று இந்தச் சட்டமன்றத்தில் மேல்சபை வேண்டும் என்ற விவாதம்



நடைபெற்றுக்கொண்டிருக்கும்போது, திரு. எஸ்.ஆர்.பி. அவர்கள டேபிள் டென்னிஸ் ஆட்டத்தை "பிங் பாங் என்று கூறுவார்கள்" என்று கூறினார். அதற்கு முதல்வர் அவர்கள் ஒரு விளக்கத்தை இங்கே கூறினார்கள். ஏதோ அவர்கள் பிங் என்றும் பந்தை அடித்ததாகவும், பாங் என்று அடிக்க தி.மு.க. ஆட்சிக்கு வரமுடியாது என்றும் கூறினார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரணிகுமார், நேற்று அதெல்லாம் முடிந்துவிட்டது. நேற்று பெய்த மழைக்கு இன்றைக்குப்போய் குடை பிடிக்காதீர்கள். இப்போது புதுப் பிரச்சினை ஏதாவது இருந்தால் பேசுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** நாங்கள் சட்டமன்றத்தில் கொஞ்சம் ஏதாவது பேசவேண்டும். ஒன்றும் controversy வராது. நான் அவர்களுக்கு பணிவாகத் தெரிவித்துக்கொள்வது, அந்த ஆட்டத்தின் பெயரே "பிங் பாங்" தான். ஆக பிங் என்று சொன்னால் அந்த ஆட்டம் முழுமை அடையாது. அதனால் பிங் பாங் என்றால்தான் அந்த ஆட்டம் முழுமை அடையும். ஆகவே, நாங்கள் பாங் அடித்துவிடுகிறோம், அதற்குப் பிறகு வேண்டுமானால் பிங் அடிக்க முடியாது என்பதை நான் தெரிவித்துக்கொண்டு, அதற்கு முதல்படியாக வர இருக்கிற.....

(மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் முடிந்துவிட்டது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா பாண்டியன். (குறுக்கீடுகள்) அவர் உரையை முடிக்க மாட்டேன் என்கிறார். [illegible]ஏறைக்கு 1½ மணிக்கு முடிக்க வேண்டும். 8 நிமிடங்கள்தான். குறுக்கீடு இல்லாமல் பேசுகிறேன் என்று சொன்னார். இன்னும் 2 மணித்துளிகள். 2 மணித்துளிகளில் முடித்துவிடுங்கள்.

**திரு. பா. பரணிகுமார்:** நன்றி சொல்லி முடித்துவிடுகிறேன். அதற்கு முதல்படியாக, வர இருக்கிற உள்ளாட்சித் தேர்தல் அமையும் என்பதை உறுதி கூறி, எனக்கு இந்த மாமன்றத்தில் பேச வாய்ப்பளித்த பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மீண்டும் எங்கள் அய்யன் கலைஞர் அவர்களையும் வேண்டி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மிக்க நன்றி, திரு. பரணிகுமார். திரு. மகாலிங்கம்.

***திரு. எஸ். மகாலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், தமிழகத்தின் விடிவெள்ளி, நம்பிக்கை நட்சத்திரம், கேட்காமலே அள்ளிக் கொடுக்கும் கொடை வள்ளல், தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களுக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) உறுப்பினர்களுக்கு மதிய உணவு வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகாலிங்கம் கொஞ்சம் இருங்கள். இன்று உறுப்பினர்களுக்கு மதிய உணவு பிற்பகல் 1½ மணிக்கு வழங்க சட்டமன்றப் பேரவைச் செயலகம் ஏற்பாடு செய்துள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்-தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்
(ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்
(இ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்
(ஈ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்
(உ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்
(ஊ) கோரிக்கை எண் 42—பல்வகை
(எ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு
(ஏ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மகாலிங்கம், பேசுங்கள்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** மேலும், மாண்புமிகு அமைச்சர் பெருமக்களுக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், ஜனநாயக முற்போக்குக் கூட்டணியின் மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், பத்திரிகை நிருபர்களுக்கும், தொலைக்காட்சி நிருபர்களுக்கும் முதற்கண் எனது நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், எனது வெற்றிக்காக என்னோடு தோளோடுதோள் நின்று உழைத்த கூட்டணிக் கட்சித் தலைவர்களுக்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும் மக்கள் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு என்று மாபெரும் வெற்றியைக் கண்ட மகத்தான தமிழகத் தாய் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு முதற்கண் எனது கோடானுகோடி நன்றியை புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பாதத்தை நோக்கி நான் காணிக்கை ஆக்கிக்கொள்கிறேன். மேலும் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலிலே மீண்டும் கழக ஆட்சியை அமைத்து தமிழக முதல்வராக பொறுப்பேற்றுள்ள



எனது இதய தெய்வம் மாண்புமிகு அம்மா அவர்களுக்கு அவினாசி தொகுதியின் அனைத்து வாக்காளர்களின் சார்பாக எனது நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

கடந்த ஐந்தாண்டுகளில் தி.மு.க. அரசால் பணப்புழக்கம் இன்றி பொதுமக்கள் விலைவாசி ஏற்றம், பசி, பட்டினி, பஞ்சம், கொலை, கொள்ளை என்று இப்படி எடுத்துச்சொன்னால் அது ஏட்டில் அடங்காது. ஆகவே, C.R.P.F. மத்திய காவல் துறையிலே மூன்றாண்டுகளாக பணிபுரிந்துவிட்டு பின்பு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய சாதாரணத் தொண்டனாக ஈடுபட்டுக்கொண்டிருந்த என்னை, அவினாசி தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக்கி, இந்த மாமன்றத்திலே பேச வாய்ப்பளித்து அழகு பார்க்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு மேலும் எனது கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11-20

அவினாசி தொகுதியில் கடந்த 20 ஆண்டுகளாக கிடப்பில் கிடந்த அவினாசி-அத்திக்கடவு திட்டத்தையும் நிறைவேற்றியுள்ளார்கள். அதற்கு எனது கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அவினாசியில் அனைத்து மகளிர் காவல் நிலையம் ஒன்றை அமைத்துத்தர தமிழக முதல்வர் அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதற்கும் முதற்கண் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும் அவினாசி தொகுதியில் பல தலைமுறைகளாக பிரதானமாக விவசாயத்தையே நம்பி வாழ்ந்து வந்தனர். ஆனால் கடந்த சில வருடங்களாக பருவ மழை பொய்த்துப் போனதாலும், நிலத்தடிநீர் சுமார் ஆயிரம் அடிக்குக் கீழ் சென்று விட்டதாலும் இனிமேல் விவசாயத்தையே நம்பி வாழ முடியாது என்ற பரிதாபகரமான நிலைக்கு விவசாயிகள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். மேலும் அரசும் கிராமப் பஞ்சாயத்து நிர்வாகங்களும் குடிநீருக்காக கோடிக்கணக்கில் செலவழித்தும்கூட கோடைக் காலங்களில் அவினாசி தொகுதியில் கடுமையான குடிநீர் பஞ்சம் நிலவியது.

அதைக் கருத்தில் கொண்டுதான் எனது இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் தேர்தலின்போது அவினாசி

சொன்னதைச் செய்யக்கூடிய பரந்தமனம் கொண்டவர்கள். எனவே, புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அவினாசி, மேட்டுப்பாளையம், திருப்பூர், பவானிசாகர், கோபி, பெருந்துறை, காங்கேயம் ஆகிய ஏழு சட்டமன்றத் தொகுதிகளிலும் உள்ள பொது மக்கள் அனைவரும் பயன்பெறுகின்ற வகையில், அவினாசி-அத்திக்கடவு குடிநீர்த் திட்டம் நிறைவேற்றித் தருவேன் என்ற மகிழ்ச்சியான செய்தியை அறிவித்தார்கள். 7 சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட 20 இலட்சத்திற்கும் மேற்பட்ட பொது மக்களுக்கு பயன்தரக்கூடிய ஒரு நல்ல திட்டத்தை நிறைவேற்றியுள்ளார்கள். இதனால் 7 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ள அனைத்து பொது மக்களும் மட்டற்ற மகிழ்ச்சியும் மாறாப் பற்றும் உடையவர்களாக என்றும் இருப்பார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

நடப்பு நிதியாண்டில் போர்க்கால அடிப்படையில் அவினாசி-அத்திக்கடவு திட்டத்திற்கு அதிக அளவில் நிதி ஒதுக்கித் தந்து குடிநீர்ப் பஞ்சத்தைத் தீர்க்க வேண்டுமென்று மாண்புமிகு அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் அவினாசி தொகுதியில் ஒரு தீயணைப்பு நிலையம் அமைத்துதர வேண்டும் என்று நீண்ட காலமாக அரசுக்குக் கோரிக்கை வைத்தும்கூட இன்றுவரை தீயணைப்பு நிலையம் அமைக்கப்படாததால் தீ விபத்துக்கள் ஏற்படுகின்ற காலங்களில் மிகப் பெரிய அளவில் சேதங்கள் ஏற்படுகின்றன. எனவே, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் எனது தொகுதிக்கு தீயணைப்பு நிலையம் ஒன்றை அமைத்துத் தரவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

மேலும், அவினாசி தொகுதியில் பத்துக்கும் மேற்பட்ட நடுநிலைப் பள்ளிகளும், உயர்நிலைப் பள்ளிகளும் உள்ளன. இவற்றில் படித்து முடிக்கும் மாணவ, மாணவிகள், கல்லூரிப் படிப்பைத் தொடர வேண்டுமானால் அதிக தொலைவில் உள்ள கோயம்புத்தூருக்கும், திருப்பூருக்கும் செல்ல வேண்டியுள்ளதால் மாணவ, மாணவிகள் தங்கள் குடும்பச் சூழ்நிலை காரணமாக கல்லூரிப் படிப்பை விட்டுவிடுகின்றார்கள். எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் அவினாசியில் அரசு சார்பில் ஒரு கலைக் கல்லூரி ஏற்படுத்திக்கொடுத்தால் ஆயிரக்கணக்கான மாணவ, மாணவிகளின் எதிர்காலம் பிரகாசமாக அமையும் என்பதைப் பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.



மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்கள் 1991 ஆம் ஆண்டு அவினாசி தொகுதியைத் தொழில் துறையில் பின்தங்கிய தொகுதியாக அறிவித்திருந்தார்கள். எனவே, எனது தொகுதியில் ஒருசில தொழில்கள் தொடங்கப்பட்டன. ஆனால் 1996 ஆம் ஆண்டு தி.மு.க. ஆட்சி ஏற்பட்டவுடன் அந்த ஆணையை இரத்து செய்துவிட்டதால் கடந்த 5 ஆண்டுகாலத்தில் ஒரு சிறுதொழிற்சாலைகூட தொடங்கப்படவில்லை. எனவே, மாண்புமிகு அம்மா அவர்கள் அவினாசி தொகுதியை தொழில் துறையில் மிகவும் பிற்பட்ட பகுதி என ஆணையிட்டு உதவுமாறு பணிவன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், அவினாசி தொகுதியில் எந்தவிதமான தொழில்வளமும் இல்லாத காரணத்தால் வறுமைக்கோட்டிற்குக் கீழே உள்ள தாழ்த்தப்பட்ட மக்கள் ஆயிரக்கணக்கானவர்கள் குடியிருக்க வீடு இல்லாமல் அவதிப்படுகின்றனர். எனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள் அரசு, வீட்டு வசதி வாரியம் மற்றும் குடிசை மாற்று வாரியத்தின்மூலமாக ஏழை மக்களுக்கு அதிகமாக வீடுகள் கட்டித் தரவேண்டுமென்று வேண்டுகிறேன்.

அவினாசி மருத்துவமனையில் சுமார் 7 மருத்துவர் பணியிடங்கள் காலியாக உள்ளன. ஏழை எளிய மக்கள் மருத்துவ வசதி பெற முடிவதில்லை. எனவே மாண்புமிகு அம்மா அவர்கள் அவினாசித் தொகுதியில் உள்ள அரசு மருத்துவமனையில், ஆரம்ப சுகாதார நிலையங்களில், காலியாக உள்ள மருத்துவர் பணியிடங்களுக்கு உடனடியாக மருத்துவர்களை நியமிக்க ஆணையிட்டு உதவுமாறு பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*முற்பகல் 11-25*

மேலும், அவினாசி தொகுதியில், திருப்பூர்-கோயம்புத்தூர் நெடுஞ்சாலையில் போக்குவரத்து நெரிசல் காரணமாக அதிகமான அளவில் உயிர்ச் சேதமும், பொருட்சேதமும் ஏற்படுவதால், அங்கு தேசிய நெடுஞ்சாலை ஒன்றை அமைத்துக் கொடுக்க எனது பணிவான வேண்டுகோளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மேலும், அவினாசி மருத்துவமனையில் இதுநாள் வரையில் பிண அறுவைக் கூடம் Postmortem room இல்லாத காரணத்தால், சாலை விபத்துக்கள் மற்றும் சில காரணங்களால் மரணம் அடைந்தவர்களின்

சடலங்களை அதிக தொலைவில் உள்ள திருப்பூர் மருத்துவமனைக்கு எடுத்துச்சென்று Postmortem செய்து முடித்த பின்னர் எடுத்து வந்து அடக்கம் செய்ய வேண்டியுள்ளது. மிகவும் ஏழை மக்களாக இருந்தால் அவர்கள் படுகின்ற துன்பம் வார்த்தைகளால் சொல்ல முடியாது. எனவே, தமிழக முதலமைச்சர் அம்மா அவர்கள், அவினாசி அரசு மருத்துவமனையில் உடனடியாக பிண அறுவைக் கிடங்கு அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாரமலை. ஐந்து நிமிடங்களில் உங்கள் பேச்சினை முடித்தால்தான் எல்லோரும் பேச முடியும். இன்னும் நிறைய பேர் பேச இருக்கிறார்கள். (குறுக்கீடு) திரு. மகாலிங்கம், நீங்கள் நன்றி சொல்லி உங்கள் பேச்சை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. எஸ். மகாலிங்கம்:** ஒரு சிறிய வேண்டுகோள். அனநாசி தொகுதியில் பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர், ஆதிதிராவிடர்கள் அதிக அளவில் வசித்து வருகிறார்கள். அவர்களது வாழ்க்கைத் தரம் மேம்பாடு அடைய தொழிற்பேட்டை ஒன்றை அமைத்துத் தர முதலமைச்சர் அம்மா அவர்களைப் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், போக்குவரத்துத் துறையில்....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மேலும், நன்றிதான். முடித்துக்கொள்ளுங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாரமலை அவர்கள்.

***திரு. க. பாரமலை:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாவட்ட நிருவாகம், மாநிலச் சட்டமன்றம், ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது பேசுகிற வாய்ப்பினை நல்கியதற்காக முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பில் நம்முடைய மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் ஒரு நல்ல செய்தியைச் சொல்லியிருக்கிறார்கள். பொதுவாக, நில ஒப்படைப்பு, வீட்டு மனை ஒப்படைப்பு, ஆக்கிரமிப்புகளை முறைப்படுத்துதல், பல்வேறு சான்றிதழ்கள் மற்றும் உரிமங்கள் வழங்குதல், கடன்கள் மற்றும் ஏனைய நிவாரணங்கள் பெறுதல்



போன்ற தேவைகளுக்காக பல்வேறுபட்ட நிலைகளில் வருவாய்த் துறை அலுவலர்களைப் பொதுமக்கள் அணுகுகிறார்கள். அவர்களுடைய தேவைகளை விரைவாகவும், குறிப்பிட்ட காலத்திற்குள் முடிக்கவும், முடிக்கப்பட்டதை உறுதிசெய்யவும் அவர்கள் நேரடியாக மாவட்ட அளவிலான அதிகாரிகளை, அலுவலர்களைச் சந்திக்கும் வாய்ப்பினை ஏற்படுத்தவும் "மனு நீதி திட்டம்" மற்றும் "குறை தீர்க்கும் நாள்" ஆகிய இரு பெரும் திட்டங்கள் நடைபெற்று வருகின்றன என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி நான் ஒன்றைக் குறிப்பிட விரும்புகிறேன். இது, ஆரம்பத்தில் சிறப்பாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. ஆனால், இன்று அது ஒரு சம்பிரதாயமாக ஆக்கப்பட்டு விட்டதே தவிர, எந்தவிதமான முன்னேற்றமும் அதிலே இல்லை என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். காரணம் என்னவென்றால், மனு நீதி நாள் அல்லது குறை தீர்க்கும் நாள் என்று சொல்லுகிறபோது Grievance Redressal Day என்று சொல்வதற்குப் பதிலாக Grievance Day என்றுதான் சொல்லுகிறார்கள். அந்தக் கூட்டம் நடப்பதே it is a grievance to the public என்று சொல்கிற அளவுக்கு இப்போது அது நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், இன்றைக்கு அந்த குறை தீர்க்கும் நாளில் ஒருவர் வந்து ஒரு மனுக் கொடுக்கிறார். அந்த மனு இன்னாருக்கு அனுப்பப்பட்டிருக்கிறது, அந்த மனுவின் மீது 7 நாட்களுக்குள் ஒரு முடிவான பதில் வரும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால், அந்த மனுமீது 7 மாதங்கள் ஆகியும்கூட சம்பந்தப்பட்டவர்களுக்கு சரியான பதில் போய்ச் சேருவதில்லை என்பது இப்போது இருக்கிற நடைமுறை என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதிலே குறிப்பாகச் சொல்ல வேண்டுமென்றால், ஏழை அரிசன சமுதாயத்தைச் சேர்ந்த ஒரு பெண், தாழ்த்தப்பட்ட சமுதாயத்திலேயே தாழ்ந்த சமுதாயமாக இருக்கிற அருந்ததியர் சமுதாயத்தைச் சேர்ந்த முனியம்மாள் என்ற ஒரு பெண் 20 ஆண்டுகளாக புறம்போக்கு நிலத்திலே வீடு கட்டிக்கொண்டு குடியிருந்திருக்கிறார். அந்த வீட்டுக்குப் பக்கத்தில் இருக்கிற மிகப் பெரிய நிலச்சுவாந்தார் அந்த வீட்டை தீ வைத்துக் கொளுத்திவிட்டு, மீண்டும் வீடு கட்ட விடாமல் தடுத்து, 6, 7 ஆண்டுகளாக அந்தப் பெண்ணுக்கு இன்னும் நியாயம் கிடைக்கவில்லை என்பதை நான் பணிவோடு சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*முற்பகல் 11-30*

அதோடு மட்டுமல்ல, முதலமைச்சர் தனிப் பிரிவு என்று ஒன்று இருக்கிறது. அந்தப் பிரிவுக்கே மனு கொடுத்து மூன்று ஆண்டுகள் ஆகிறது. ஏறக்குறைய 20 தடவை குறை தீர்க்கும் நாளில் தொடர்ந்து விண்ணப்பம் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதுவரை அந்த ஏழைப்பெண்ணுக்கு நியாயம் கிடைக்கவில்லை. காரணம் அந்த நிலத்தை ஆக்கிரமித்துக் கொண்டிருக்கிறவர் மிகப்பெரிய நிலச்சுவாந்தார் என்பதை நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

நம்முடைய அகில இந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய தேர்தல் அறிக்கையில் ஒன்று மிகத் தெளிவாகத் சொல்லப்பட்டிருக்கிறது. அதைச் சொல்வதற்குக் காரணம் அதை நீங்கள் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்வதற்காகத்தான். ``We will pledge to undertake the expeditious movement of files in Government Departments and ensure that all the Government Departments will have a 'File Closing Week' in order to ensure that all files that have been accumulated over the previous quarter are cleared within the date அதுமட்டுமல்ல, "our Government will give an undertaking that no file however unimportant will be kept pending for more than 90 days.". 90 நாட்களுக்குள்ளாக அந்தக் கோப்புகளை முடிக்க வேண்டும். அதற்கான நடவடிக்கை எடுப்போம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நான் மிகப் பணிவோடு தெரிவித்துக்கொள்வது. இதைக் கடுமையாக நீங்கள் அமல்படுத்தினால் சமுதாயத்திலே மிகப் பெரிய நல்ல பெயர் உங்கள் அரசுக்குக் கிடைக்கும் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். அதற்கு நான் ஏற்கெனவே சொன்னதைப்போல பாதிக்கப்பட்ட நபர்களுடைய விவரங்களையும் நான் அமைச்சர் அவர்களுக்குத் தனியாகக் கொடுக்கின்றேன்.

அதோடு, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியைப் பற்றி ஒன்று சொல்ல விரும்புகிறேன். எதிலே awareness இருக்கிறதோ இல்லையோ தெரியாது. ஆனால் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இலட்சக்கணக்கிலே பணம் கொடுக்கிறார்கள் என்ற awareness நாட்டு மக்கள் மத்தியிலே மிக அதிகமாக இருக்கின்றது. எங்கே போனாலும் கொடுக்கிற விண்ணப்பத்திலே தங்கள் நிதியிலேயிருந்து கட்டடம் கட்டிக் கொடுங்கள், ஊரணி கட்டிக் கொடுங்கள் என்றுதான் மக்கள் கேட்கிறார்கள். பொதுவாக ரூ.77 இலட்சத்திலிருந்து ரூ.82 இலட்சமாக உயர்த்திக் கொடுப்பதற்கு என்னுடைய நன்றியை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.



அதோடு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு நான்கு மடங்கு சம்பளம் உயர்த்திக் கொடுத்திருப்பதாக இன்றைக்கு பத்திரிகையிலே பார்த்தோம். ஆனால் அந்த அளவு நான்கு மடங்கு எங்களுக்கு வேண்டாம். இன்னொரு மடங்காவது இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு சம்பளத்தை, மற்ற விகிதங்களை உயர்த்தித் தருமாறு நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் அலுவலகம் கட்டப்பட்டிருக்கிறது. அந்த சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்திலே எல்லாமுமாக சட்டமன்ற உறுப்பினர்தான் இருக்க வேண்டியிருக்கிறது. அதற்கு ஒரு காவலர் கிடையாது. ஆக ஒரு காவலரை அரசு செலவிலே நியமிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அங்கே Phone வசதி வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இங்கே Phone வசதி இருக்கிறது. Rent எல்லாம் நீங்கள் கொடுத்துவிடுகிறீர்கள். அந்த call-க்குத்தான் நாங்கள் கட்ட வேண்டும். அதேபோலவாவது அங்கே ஒரு Phone வசதி ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதோடு மின் கட்டணத்தையும் அரசே செலுத்த வேண்டும் என்பதையும் கேட்டுக்கொள்கிறேன்.

அங்கு எங்களுக்கு ஒரு Computer வழங்கினால் சிறப்பாக இருக்கும். குறைந்தபட்சம் ஒரு electronic typewriter—ஆவது நீங்கள் வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

முன்னாள் சட்டமன்ற உறுப்பினரைப் பொறுத்தவரையில் இப்போது மருத்துவப் படி 2000 ரூபாயாக ஒட்டுமொத்தமாக வழங்கப்படுகிறது. அதை ஒரு மாதத்துக்கு 500 ரூபாய் என்ற வகையில் வருடத்துக்கு 6000 ரூபாயாவது மருத்துவப் படியை உயர்த்தி வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். அதோடு மகாராஷ்டிரா, பீகார் போன்ற சில மாநிலங்களில், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு 15 ஆயிரம் கிலோமீட்டர் தூரம் ரயிலிலே பிரயாணம் செய்வதற்கு இலவசமாக பாஸ் வழங்கப்படுகிறது. அந்த அளவிற்காவது இங்கும் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்க வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

சென்ற சட்டமன்றத் தொடரில் குடும்ப ஊதியமாக முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய குடும்பத்துக்கு 2500 ரூபாய் Pension வழங்கப்படும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. அது நடைமுறைப்படுத்தப்பட்டிருக்கிறதா என்று எனக்குத் தெரியாது. ஆனால் என்னுடைய சக நண்பர்கள் இதுவரை நடைமுறைப்படுத்தப்படவில்லை

என்று சொல்கிறார்கள். தயவுசெய்து அதை உடனடியாக அமல் நடத்துவதற்கு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த மாவட்ட நிருவாகத்துக்காக பல்வேறு அவசியம் கருதி மக்களுடைய நலனைக் கருதி பல மாவட்டங்களை நீங்கள் பிரிக்கின்றீர்கள். என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரையில் என்னுடைய சொந்தத் தொகுதியிலே திருப்புவனம் என்று ஒரு ஊர் இருக்கிறது. அது ஜமீன்தார் காலத்திலேயே ஒரு தாலுகாவாக இருந்தது. அங்கே கஜானாவெல்லாம் இருந்தது. (மணியடிக்கப் பெற்றது) சார், 10 நிமிடம் சொன்னீர்கள், 7 நிமிடம்தான் பேசியிருக்கிறேன் நான்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எட்டு நிமிடங்கள் பேசியிருக்கிறீர்கள்.

*முற்பகல் 11-35*

**திரு. க. பாரமலை:** ஆகையால் அந்தத் திருப்புவனத்தை தனித் தாலுகாவாக மாற்றிக் கொடுக்க வேண்டும் என்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். மாவட்டத்திலே, மாவட்ட வளர்ச்சிக் குழு D.D.C. செயல்படவில்லை. அது மீண்டும் செயல்படுவதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, தியாகிகள் சம்பந்தப்பட்ட பிரச்சினையில் ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். தமிழகத்திலே மாநில ஓய்வூதியம் பெறுகின்ற தியாகிகளுடைய எண்ணிக்கை 1770. அவர்களுடைய வாரிசுகளுக்கு 2168 பேருக்கு வழங்கப்படுகிறது. ஆனால் 1982 ஆம் ஆண்டிற்குப் பின்னால் விண்ணப்பித்தவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க இயலாது என dead line ஒன்றை வைத்திருக்கிறார்கள். அதற்குப் பின்னாலே மனு கொடுத்தவர்கள் அல்லது pending case ஏதாவது இருந்தால் அவர்களுக்கு எல்லாம் ஓய்வூதியம் வழங்கப்படவில்லை. ஒட்டுமொத்த தியாகிகள் சங்கத்திலே கேட்கிறபோது ஓய்வூதியம் பெறாமல் இருப்பவர்கள் சுமார் 1000 பேர் இருக்கும் என்று சொல்கிறார்கள். பணிவோடு, கருணை உள்ளத்தோடு அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்குவதை நிறைவேற்றிட வேண்டும் என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வு கால நன்மைகளும் என்ற தலைப்பில் 30,29,17,37,000/- ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இந்த நிலுவையில் இருக்கிற தியாகிகளுடைய எண்ணிக்கை ஏறக்குறைய 1000 தான் இருக்கும். அதற்கு மாநில அரசு பென்ஷன் என்பது 3000 ரூபாய். ஒட்டுமொத்தமாகப் பார்த்தால் 3 கோடியே 60 இலட்சம் ரூபாய்தான் வருடத்திற்கு வரும். 25 ஆயிரம் கோடி ரூபாய் வருமானமுள்ள இந்த மாநிலம் பொதுவாக ஓய்வூதியத்திற்கு 30,29,17,37,000/- ரூபாய் நிதி வழங்கியுள்ள நமது அரசு கருணையுள்ளத்தோடு தேசத்திற்காக அத்தனையையும் இழந்து தியாகம் செய்த தியாகிகளுக்கு (குறுக்கீடு) இல்லை. அவர்களுக்கு மேலே கூறியபடி ஓய்வூதியம் வழங்க வேண்டும் என்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இந்த ஓய்வூதியம் வழங்குவதில் மாநில அரசு 3 ஆயிரம் ரூபாய் வழங்குகிறது. ஆனால் மத்திய அரசிலிருந்து ஓய்வூதியம் பெற்றிருந்தால் அவர்களுக்கு 500 ரூபாய் தான் கொடுக்கப்படுகிறது. அதை மீண்டும் எந்த அளவிற்கு மத்திய அரசு கொடுக்கிறதோ அதே அளவிற்கு நாமும் கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கேரளாவிலே கொடுப்பதாகச் சொல்கிறார்கள்.

அதோடு மருத்துவ வசதியைப் பொறுத்தவரை தியாகிகளுக்கு 15 ரூபாய் மருத்துவப்படி கொடுக்கிறார்கள். (மணியடிக்கப்பெற்றது) நேற்று மருந்து வாங்கப் போனேன். ஒரு கடையிலே, ஒரு கேப்சூல் 15 ரூபாய் என்று சொல்கிறபோது ஒரு மாதத்திற்கு 15 ரூபாய் மருத்துவப்படி என்பது மிக, மிகக் குறைவானது என்பதை நான் சுட்டிக்காட்டி, நடைமுறைப்படி மிக அதிகமாக வழங்குவதற்கு நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு நம்முடைய சட்டமன்றம் கூடுகின்ற நாளில் காலையிலும் மாலையிலும் கூடுகிறோம். மாலையில் 7 மணி, 8 மணி கூட ஆகிறது. இப்படிப்பட்ட நேரங்களிலே சட்டமுன்வடிவுப் பிரிவு, நிருபர்கள் பிரிவு, வினாக்கள்-விடைகள் பிரிவு, நூலகப் பிரிவு, அலுவல் நடைமுறைப் பிரிவு போன்ற பிரிவுகளைச் சேர்ந்த துணைச் செயலாளர்கள், இணைச் செயலாளர்கள் போன்றவர்களுக்கு இரவில் போவதற்கு, வருவதற்கு, காலையில் சீக்கிரம் வருவதற்கான வாகன வாய்ப்புகள் அதிகம் இல்லை. ஆனால் பொதுத் துறையிலே பணி செய்கிறவர்களுக்கு போவதற்கும், வருவதற்கும் வசதிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. எனவே, இவர்களுக்கும் அதற்குரிய படி வழங்கப்பட வேண்டும் அல்லது வசதிகள் செய்து தரப்பட

வேண்டும் என்பதை நான் பணிவுடன் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாநிலத் தலைமை நிர்வாகத்தைப் பற்றி ஒரே ஒரு வார்த்தை சொல்லி முடித்துவிட விரும்புகிறேன்.

மாண்புமிகு நம்முடைய முன்னாள் முதலமைச்சர் எம்.ஜி.ஆர். அவர்கள் இருக்கிறபோது தலைமைச் செயலகத்தில் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த 9 பேர் செயலாளர்களாக இருந்திருக்கிறார்கள். ஆனால் இன்று 3 அல்லது 4 பேர்தான் இருக்கிறார்கள் என்பதை இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது என்னுடைய கடமை என்று கருதுகின்றேன். அதோடு சில துறைகள் இந்தத் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தினர் நுழையவே முடியாத துறையாக ஆக்கப்பட்டிருக்கின்றன. பொதுவாகச் சொல்ல வேண்டும் என்றால் Home, Finance, Industries போன்ற துறைகளில் எல்லாம் தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் செயலாளர்களாக ஒரு காலத்திலே இருந்தார்கள். ஆனால் அவை சமீப காலமாக அவர்கள் நுழைய முடியாத துறைகளாக ஆக்கப்பட்டிருக்கின்றன என்பதை தங்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து என்னுடைய உரையை நான் முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெயக்குமார்.

*முற்பகல் 11-40*

***திரு. கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, நல்லதொரு வாய்ப்பினை நல்கியமைக்காக உங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இன்றையதினம், நாம் வெவ்வேறு நிர்வாக அமைப்புகள் குறித்து இங்கே விவாதித்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக, மக்கள் தினந்தோறும் சென்று தங்களுக்குரிய நன்மைகளையும், தங்களுக்குத் தேவையானவற்றையும் பெற்றுச் செல்வதற்காக இருக்கின்ற நிருவாகத் துறை குறித்தும், வருவாய்த் துறை குறித்தும் மற்றும் சட்டமன்றம் குறித்தும் நாம் விவாதித்துக்கொண்டிருக்கிறோம். குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியின் மேம்பாட்டிற்காக தினமும் அணுக வேண்டிய ஒரு துறை, வருவாய்த் துறையாகவும், நிருவாகத் துறையாகவும் இருக்கின்றது. ஆக, இந்தத் துறைகளிலே இருக்கின்ற அதிகாரிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவையான, செயல்பட வேண்டிய



வசதி முறைகளைச் செய்து கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியின் மேம்பாட்டிற்காக கலெக்டர் அவர்களிடம் எத்தகைய குறைகளை எடுத்துச் சொன்னாலும் அதை உடனடியாக செய்து முடிக்கின்ற ஒரு நிலை ஏற்பட வேண்டும்.

சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் முன்னுரிமை கொடுத்து செய்து தர வேண்டும். இது தற்போது எல்லா இடத்திலும் இருக்கிறதா என்கிற சந்தேகம் எனக்கு எழுகின்றது. எனவே, இந்த அவைத் துணைத் தலைவர் மூலமாக நான் கேட்டுக்கொள்வதெல்லாம் சட்டமன்ற உறுப்பினர்கள் எந்தவொரு குறையினை மாவட்ட அதிகாரிகளிடம் எடுத்துச் சொன்னாலும் அது சட்டமன்ற தொகுதியின் மேம்பாட்டிற்காகவே என்பதை உணர்ந்து அதை உடனடியாக செய்து கொடுக்கின்ற ஒரு நிலை ஏற்பட வேண்டும்.

தற்போது மனுநீதி நாள் என்று ஒன்று நடந்துகொண்டிருக்கிறது. மக்கள் அந்த இடங்களிலே சென்று அதிகாரிகளைச் சந்தித்து தங்களுக்கு வேண்டிய குறைகளைத் தீர்த்துக்கொள்வதற்காகச் செல்கிறார்கள். இந்த மனுநீதி நாள் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் நடத்தப்படுகின்றபோது பெரும்பாலான நேரங்களில் தாழ்த்தப்பட்ட மக்கள் வசிக்கின்ற பகுதிகளிலே நடப்பது கிடையாது. அதிகப்படியான குறைகளைக் கொண்டவர்கள் இந்தப் பகுதியைச் சார்ந்தவர்கள். எனவே, இனி வருகின்ற நாட்களிலே மாவட்ட அதிகாரிகள், மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தங்களுடைய மனுநீதி நாளை தாழ்த்தப்பட்ட மக்கள் வாழ்கின்ற பகுதிகளிலே நடத்த வேண்டுமென்று நான் வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மக்கள் கொடுக்கின்ற கோரிக்கைகளுக்கு அதிக நாட்கள் எடுத்துக்கொள்ளாமல் முடிந்த அளவில் ஆங்காங்கே அவர்களுக்கு வேண்டிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்பதும் என்னுடைய கோரிக்கையாக இருக்கிறது. "The efficiency of the Government largely depends on the administrative efficiency is represented by the Revenue Department and the Administration Department. Unless the concerned officials in the department rise to the occasion, the very efficiency of the Government will be put on test". எனவே, இந்தத் துறைகளைச் சார்ந்த அதிகாரிகள் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக்கொண்டு இந்த அரசுக்கு நல்ல பெயரை வாங்கிக்கொடுக்கின்ற அளவிலே செயல்பட வேண்டும்.

இனச் சான்றிதழ்கள் கொடுப்பது வருவாய்த் துறையின் செயலாக இருக்கிறது. தற்போது இங்கே கொடுக்கப்பட்டிருக்கிற அறிக்கையிலே சொல்லியிருக்கிறார்கள், இதற்காக பள்ளிகள் மூலமாகவே வழங்குவதற்கு ஒரு புதிய முறை ஏற்படுத்தியிருக்கிறார்கள். இது நல்லதாகத் தோன்றுகிறது. ஏனென்றால், தற்போது சமுதாயத்திலே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட மக்களுக்கு கிடைக்க வேண்டிய அந்த நல்ல பயன்களையெல்லாம் போலி சான்றிதழ்கள் கொடுத்து மற்றவர்கள் எடுத்துச் சென்றுவிடுகிறார்கள். அந்த போலி சான்றிதழ்களை கொடுப்பதும் வருவாய்த் துறையைச் சார்ந்தவர்கள், இந்த போலி சான்றிதழ்களைத் தடுத்து நிறுத்த வேண்டியவர்களும் அந்தத் துறையைச் சார்ந்தவர்கள். இதிலே அவர்கள் மிகவும் கவனமாக இருக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் மற்றும் மக்களோடு தொடர்புகொண்டு இருக்கின்ற துறையைத் சார்ந்த அதிகாரிகளுக்கும் இந்த அரசு நல்ல பயிற்சிகளை அளிக்க வேண்டும். அவ்வாறு பயிற்சி அளிப்பதாக திட்ட அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த அதிகாரிகள் மக்களிடம் கனிவோடும், மனிதநேயத்தோடும் நடந்துகொண்டால்தான் சிறப்பான ஒரு செயல்வடிவம் கொடுக்க முடியும் எந்தவொரு திட்டத்திற்கும். Even if they have to say No, that should be with a smile. எனவே, இதிலும் அரசு கவனம் செலுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்களே, அவரே நான் பேசுவதைக் கேட்கவில்லை. துணைத் தலைவர் அவர்களே, மூன்று முறை தங்களை அழைத்துவிட்டேன். நாம் இங்கே அமர்ந்து கொண்டிருக்கின்ற இந்தச் சட்டமன்றம் நமக்குச் சொந்தமான மன்றம், தமிழக அரசுக்குச் சொந்தமான மன்றம் அல்ல. நாம் ஒரு வாடகை இடத்திலே இன்று அமர்ந்து செயலாற்றிக்கொண்டிருக்கின்றோம். ஒரு சில நேரங்களில் நாம் வாகனங்களை எடுத்துச்செல்லும்போதுகூட பச்சை உடையணிந்த இராணுவ வீரர்கள் அங்கே வழிநடத்தி, இப்படிச் செல்ல வேண்டும், அப்படிச் செல்ல வேண்டுமென்று சொல்கிறார்கள். என்னைப் பொறுத்தவரை இது சரியல்ல.

அதுமட்டுமல்ல, இந்தக் கட்டடங்களைப் போன்ற வயதுடைய கட்டடங்கள் எல்லாம் இன்றைக்கு விழுந்து கொண்டிருக்கின்றன. எனவே, ஜாக்கிரதையாக நாம் இருக்க வேண்டும். இந்த அவையிலே, உள்ளே



பார்ப்பதற்கு அழகாக இருந்தாலும், இந்த வளாகத்திலே இருக்கிற ஒரு அறைகூட இடிந்துவிழுந்து விட்டது என்று கேள்விப்பட்டேன். நம்முடைய பொது மருத்துவமனை இடிந்துவிழுந்து விட்டது. ஆக, இந்த வயதுடைய கட்டடங்கள் எல்லாம் இடிந்துகொண்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்திலே ஞாபகப்படுத்துகிறேன்.

*முற்பகல் 11-45*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ரொம்ப பயமுறுத்தாதீர்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** நான் பயத்துடன் இருக்கின்றேன். எனவே, உடனடியாக நாம் நமக்குரிய நல்லதொரு சட்டமன்ற அவையை ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். குறிப்பாக, சண்டிகார், குஜராத்திலே இருக்கிற காந்தி நகர், இங்கே பக்கத்திலேயிருக்கிற கர்நாடக மாநிலம், மத்தியப் பிரதேசம் ஆகிய இடங்களில் எல்லாம் மிகச் சிறப்பாக சட்டமன்றக் கட்டடங்கள் இருக்கின்றன. வருகின்றபோது நாம் ஏதோ எலி பொந்தின் வழியாக உள்ளே வருவது போன்று தோன்றுகிறது.

சட்டமன்றம் நோக்கி வருகிறோமா அல்லது வேறு எங்கோ செல்கின்றோமா என்ற நிலையிருக்கிறது. நம்முடைய அமைச்சர்கள்கூட, மிகக்குறுகிய, மிக நெருக்கடியான அறைகளிலே அமர்ந்துகொண்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறையிலே 10 பேர் சென்றுவிட்டால், 11-வது ஆள் வெளியே நிற்க வேண்டிய நிலை இருக்கிறது. எனவே, இந்தக் கட்டடம் உடனடியாக மாற்றப்பட வேண்டும். இந்த அரசு உடனடியாக அதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நல்லதொரு சிறப்பான இடத்திலே, இன்னும் இரண்டு, மூன்று ஆண்டுகளுக்குள்ளாக, நாம் சென்று செயல்படுகின்ற நிலையை ஏற்படுத்தித்தர வேண்டும்.

அதுமட்டுமல்ல, இந்த அவையிலே நாம் பேசுகிறபோது நீர்த் தட்டுப்பாட்டைப் பற்றி எல்லோரும் வேகமாகப் பேசினார்கள். இந்த தட்டுப்பாட்டை நீக்க நாம் போடுகின்ற திட்டங்கள் எல்லாம் 10 ஆண்டுகளுக்கு நீர்த் தட்டுப்பாட்டை ஏற்படுத்தாமல் இருக்கலாம். வருகின்ற காலங்களில் இது தொடர்கதையாகத்தான் இருக்கும். எனவே, உங்கள் வாயிலாக இந்த மாமன்றத்திலே நான் கூறிக்கொள்வது இந்த தலைநகரைக்கூட நாம் மாற்றுவதற்கு சிந்திக்க வேண்டும். ஏற்கெனவே புரட்சித் தலைவர் அவர்கள் இந்த மாமன்றத்திலே முதலமைச்சராக இருந்தபோது, இந்த தமிழக தலைநகர் திருச்சிக்கு மாற்றப்படலாம் என்ற ஒரு கருத்து நிலவியது. அது மிகவும் வரவேற்கத்தக்கது. புதிய ஒரு நகரை,

தலைநகரை தமிழகத்திற்கு நாம் நிர்மாணிக்க வேண்டும். அதற்கு வேண்டிய வழிமுறைகளை நாம் ஆராய வேண்டும் என்று நான் இந்த மாமன்றத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, சட்டமன்ற உறுப்பினர்கள் திறமையாக செயல்பட வேண்டுமென்றால், அவர்களுக்கு வசதிகளை செய்துதர வேண்டும். இங்கே நாம் பொதுத் தொண்டுக்காக வந்திருக்கிறோம். பொதுத் தொண்டு செய்ய வந்திருப்பவர்களுக்கு சில வசதிகள் இருந்தால்தான் அவர்களால் திறமையாக செயலபட முடியும். குறிப்பாக, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் Computer with Internet connection இருக்க வேண்டும். எல்லோரும் இதைப் பயன்படுத்துகிற நிலை நிச்சயமாக வரும். சட்டமன்ற உறுப்பினர்களுடைய செயல்திறன் அதிகப்படும். எனவே, தங்கள் வாயிலாக, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம் தயவுசெய்து எங்களுக்கு Internet வசதிகளுடன்கூடிய Computer-ஐ இந்த அவையிலே நீங்கள் அறிவிக்க வேண்டும். இது நாங்கள் சிறப்பாக செயல்படுவதற்கும், எங்களுடைய தொகுதியினுடைய மேம்பாட்டை கவனிப்பதற்கும், following மற்றும் Monitoring வேலைகளை திறமையாக செய்வதற்கும் தேவையாக இருக்கும். ஆக, (மணியடிக்கபபெற்றது) அய்யா, இன்னும் 5 நிமிடங்கள்.

அடுத்ததாக, சம்பள உயர்வைப் பற்றி அண்ணன் திரு. பாரமலை அவர்கள் பேசும்போது, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒன்றைக் குறிப்பிட்டார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சம்பள உயர்வு நிச்சயம் தேவை. இப்போது கொடுக்கின்ற சம்பளம் ரூ.2500; மற்ற allowance எல்லாம் சொல்வதற்கே நன்றாக இல்லை. ஆக, ஒரு சிறப்பான அளவுக்குச் சம்பளம் கொடுத்தால்தான், தங்களுடைய பணத்தைச் செலவு செய்து இவர்களால் வேலை செய்யமுடியுமே தவிர, இல்லாவிட்டால், மாவட்டத்தையும், வட்டத்தையும் எதிர்பார்த்து அவாகள் வண்டி கொண்டு வருவார்களா, இவர்கள் வண்டி கொண்டு வருவார்களா என்று இருக்க வேண்டிய நிலை ஏற்படும். இந்த நிலை இருக்கக்கூடாது. ஆந்திராவிலே 35,000 ரூபாய் சம்பளம் கொடுக்கிறார்கள். மாத allowance என்று 15,000 ரூபாய் கொடுக்கிறார்கள். உத்திரப்பிரதேசத்திலே மாத allowance 25,000 ரூபாய். Monthly allowance is Rs.25,000 for the Members of the Assembly. I humbly request the Hon. Finance Minister to take this into consideration. ஏன் ஆந்திராவிலேகூட 35,000 ரூபாய். முன்பு இருந்த அரசு, ஆந்திராவிலிருந்து எதை எதையோ கொண்டுவந்தது. இந்தச் சம்பள முறையை முந்தைய அரசே செயல்படுத்தியிருக்கலாம். ஆனால், இந்த அரசாவது இதைச்



செயல்படுத்த வேண்டுமென்று நான் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்ததாக, தேர்தல்கள் பற்றி ஒரு சில வார்த்தைகள். உங்களுடைய கவர்னர் உரையிலே நீங்கள் குறிப்பிட்டிருந்தீர்கள், ஒரு கோடி வாக்காளர்கள், வாக்குப் பட்டியலிலே சரியாக இல்லை என்று கூறினீர்கள். இப்போது கொடுக்கப்பட்டிருக்கின்ற அறிக்கையிலே 5-11-2001 முதல் 4-12-2001-க்குள்ளாக இந்த வாக்காளர் பட்டியல் சரி செய்யப்பட வேண்டுமென்றும், 25-3-2002-க்குள்ளாக, இது அமலுக்குக் கொண்டு வரப்படும் என்றும் சொல்லியிருக்கிறீர்கள் இப்போது நடத்தப்போகிற இந்த உள்ளாட்சித் தேர்தலை எந்த வாக்காளர் பட்டியலை வைத்து நடத்தப் போகின்றீர்கள் என்று எனக்குத் தெரியவில்லை. இதற்காக வேண்டிய நடப்புகளை உடனடியாக இந்த அரசு செயல்படுத்த வேண்டும். இந்த வாக்காளர் பட்டியல் சரி இல்லாமல் நாம் வாக்குச் சாவடிகளுக்குச் சென்றால், வருகின்ற முடிவுகளும் சரியாக இருக்காது என்பதை நான் இந்த அரசுக்கு நினைவுகூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

அதுமட்டுமல்லாமல், ஜனத்தொகை அடிப்படையிலே வருகின்ற உள்ளாட்சித் தேர்தல்களிலே இடஒதுக்கீடு கொடுக்கப்பட வேண்டும். ஏதோ அந்தக் காலத்திலே, 10 ஆண்டுகளுக்கு முன்பாக எடுக்கப்பட்ட ஜனத்தொகைக் கணக்கு அடிப்படையை வைத்து இப்போது நாம் இடஒதுக்கீடு கொடுத்துக்கொண்டிருக்கிறோம். வருகின்ற தேர்தலிலே இடஒதுக்கீடு ஜனத்தொகை அடிப்படையிலே செய்யப்பட வேண்டும் என்றும், சென்னை மாநகர மேயர் பதவி தாழ்த்தப்பட்ட இனத்தைச் சேர்ந்த மக்களுக்காக ஒதுக்கப்பட வேண்டும் என்றும் சொல்லிக்கொள்கிறேன்.

கடைசியாக ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகின்றேன், ஓய்வூதியம் பற்றி. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த வருடம் உங்களுடைய ஓய்வூதியம் 3,030 கோடி ரூபாய் என்று குறிப்பிட்டு இருக்கின்றீர்கள்; உங்களுடைய அறிக்கையிலே, அடுத்த ஆண்டு இது 4 ஆயிரம் கோடியாகப் போகின்றது. ஐந்தாவது ஆண்டு, நீங்கள் உங்களுடைய இந்தச் சட்டமன்றத்தில் கடைசி நிதிநிலை அறிக்கையை தாக்கல் செய்யும் போது, 2005-2006-லே 8,650 கோடி ரூபாய் நீங்கள் ஓய்வூதியமாக மட்டும் அளிக்க வேண்டியிருக்கிறது. ஆக, இந்த ஓய்வூதியத்தை அளிப்பது மிக அதிகமாக ஏறிக்கொண்டே இருக்கிறது என்று சொல்கின்ற அதேநேரத்திலே, இந்த ஓய்வூதியத்திலே ஒரு சில மக்கள் புறக்கணிக்கப்பட்டிருக்கின்றார்கள்.

குறிப்பாக, மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள் பேசுகின்றபோது ஒன்றை சொன்னார்கள். சுதந்திரப் போராட்ட வீரர்கள், இதை ஏன் நான் அழுத்திச் சொல்கிறேன் என்றால், சுதந்திரப் போராட்ட வீரர்கள் இந்த நாட்டின் சுதந்திரத்திற்காகப் போராடியது மட்டுமல்லாமல், அவர்கள் இப்போது தங்கள் வாழ்க்கையின் கடைசி கட்டத்திலே இருந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே, அவர்கள் நல்ல விதத்திலே வாழ வேண்டும் என்பதற்காக அவர்களுக்கு (மணியடிக்கப்பெற்றது) கொடுக்கப்படுகின்ற ஓய்வூதியம் உயர்த்தப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன் அவர்கள். (குறுக்கீடு) பேச்சை முடித்துவிடுங்கள்.

**திரு. கு. ஜெயக்குமார்:** வாய்ப்புக்கு நன்றி கூறி முடித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு clarification.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன? (குறுக்கீடு) இன்னும் நிறைய பேர் பேச வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, வணிகவரித் துறை சம்பந்தமாக சில clarification-களை நான் கேட்க விரும்புகிறேன். ஏற்கெனவே இந்த அவையிலே நான் வெண்ணெய்க்கு 12 சதவீதம், கிராமப்புறங்களிலே ஏழை எளியவர்கள் மாட்டிலேயிருந்து பால் கறந்து, அந்தப் பாலிலேயிருந்து எடுத்து, விற்கின்ற அந்த வெண்ணெய்க்கு, வணிக வரிச் சின்னமாக இல்லாமல் இருப்பதற்கு நீங்கள் 12 சதவீதமாக வரியை உயர்த்தியிருக்கிறீர்கள். அதை 4 சதவீதமாகக் குறைக்க வேண்டும் என்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம்கூட ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறேன். இந்த அவையிலேயும் கூறியிருக்கிறேன்.

அதேபோல், இப்போது பிஸ்கட்டிற்கு 12 சதவீதமாக வரி இருக்கிறது. சாதாரணமாக, கிராமப் பகுதிகளிலே இருக்கக்கூடிய பெண்கள் குடிசைத் தொழிலாகச் செய்து, அந்தப் பெண்கள் உருவாக்கக்கூடிய பிஸ்கட்டிற்கு



வணிகவரி சின்னமாக இல்லாத அந்த பிஸ்கட்டிற்கும், பெட்டிக் கடைகளிலே கிராமங்களிலே, பட்டிக்காட்டிலே உள்ள அந்த மக்கள் வாங்கிச் சாப்பிடக்கூடிய—அந்த மக்கள் அந்த பிஸ்கட்டுகளைத்தான் வாங்கிச் சாப்பிடுகிறார்கள்—அதற்குக்கூட 12 சதவீதமாக, பிரிட்டானியா பிஸ்கட்டிற்கு equal-ஆக வரிவிதிப்பு செய்திருக்கிறீர்கள்.

அதுபோலவே, நம்முடைய தமிழகத்திற்கு பயணிகள் யாரும் வரமாட்டேன் என்கிறார்கள். வெளிநாட்டுப் பயணிகள் எல்லாம் கர்நாடகா போன்ற பகுதிகளுக்குச் சென்று அங்குதான் தங்குகிறார்கள். ஸ்டார் ஓட்டல்களிலே தங்குவதற்குப் போடக்கூடிய வரியிலேகூட சில குளறுபடிகள் இருக்கின்றன. இவற்றை எல்லாம் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் மாற்றித் தருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பல்வகை மூலதனச் செலவு, பல்வகை, ஓய்வூதியம் ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது பேச அழைத்த தங்களுக்கு, மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கு, என்னுடைய மனமார்ந்த நன்றி கலந்த வணக்கத்தை நான் முதலிலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்த மானியக் கோரிக்கைகளைப் பற்றி பேசுவதற்கு முன்னால், இந்த நாட்டிலே உலக உத்தமர் மகாத்மா காந்தியடிகள், ஜவஹர்லால் நேரு, சுபாஷ் சந்திரபோஸ் போன்றவர்கள் எத்தனையோ சித்திரவதைகளை அனுபவித்தார்கள், எத்தனையோ சிறைகளுக்கு சென்று, தங்களுடைய இளமைக்காலங்களை எல்லாம் சிறைகளிலேயே கழித்தார்கள். பண்டிதர் ஜவஹர்லால் நேரு போன்ற அந்த உத்தமர்கள் எல்லாம் சிறைகளிலே தங்கள் இளமைக்காலத்தைக் கழித்து, வாங்கிக்கொடுத்த இந்தச் சுதந்திர நாடு, இந்தச் சுதந்திரம் தந்த சுகமான ஜனநாயகம், இந்த ஜனநாயகம் தந்த வாக்குரிமை, பேச்சுரிமை, எழுத்துரிமை, ஆட்சி, அதிகாரங்கள், இத்தனையும் இந்தச் சுதந்திரத்தாலே நமக்குக் கிடைத்திருக்கிறது என்றால், இதற்காக உழைத்த அந்த உத்தமர்களை நாம் எண்ணிப்பார்க்க வேண்டும். அதேபோல் இந்தச் சுதந்திர நாடு பெறுவதற்காக எத்தனையோ தியாகிகள், எத்தனையோ சிறைச்சாலைகளிலே கஷ்டங்களை அனுபவித்து, தங்கள் இளமைப்பருவத்தை எல்லாம் இழந்து, இன்று அவர்கள் ஓய்வூதியத்திற்காக

பல்வேறு அலுவலகங்களிலே நின்று கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு அந்த முதியவர்களுக்கு, இந்த நாட்டைப் பெற்றுக் கொடுத்த, சொந்த மண்ணை நமக்கு அன்னியரிடத்திலேயிருந்து பெற்றுக்கொடுத்த அந்த உத்தமர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டியது நிச்சயமாக நம்முடைய கடமை.

*முற்பகல் 11-55*

அதேபோல, ஓய்வூதியம் பெறக்கூடியவர்களுக்கு, இங்கே பேசியவர்கள் சொன்னதைப்போல இன்னும் கொஞ்சம் அதிகமாக ஓய்வூதியத்தை நாம் வழங்க வேண்டும்.

அதேபோல, நாட்டைக் காத்துக்கொண்டிருக்கக்கூடிய இராணுவ வீரர்கள், முன்னாள் இராணுவ வீரர்கள் ஆகியோருக்குத் தற்போது அளிக்கக்கூடிய சலுகைகள் மிக மிகக் குறைவு. அதை உயர்த்திக் கொடுக்க இந்த அரசாங்கம் முயற்சி எடுக்க வேண்டுமென்று நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சியினுடைய ஆதங்கமெல்லாம் இங்கே நம்முடைய முதலமைச்சர் அவர்களும், எதிர்க்கட்சியைச் சேர்ந்த எதிர்க்கட்சி நண்பர்களெல்லாம் பேசும்போது ஒன்றைச் சொன்னார்கள். தமிழ்நாடு திரைப்படத் துறையின் மூலமாக இங்கே எடுக்கப்படும் டிவி. யிலே ஆளும் கட்சி நண்பர்களையும், எதிர்க்கட்சி நண்பர்களையும் மட்டும் தானே காட்டுகிறார்கள். ஏனிந்த முறைகேடு? அனைவரும் சட்டமன்ற உறுப்பினர்கள்தானே? நாங்கள் பேசக்கூடிய எந்த வார்த்தையுமே ஒளிப்பதிவிலே பதிவு செய்யப்படவில்லை? இது முறையா? இது நியாயமா? இது நீதியா? தர்மமா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகிறார்கள் டி.வி.யில் காட்டப்படவில்லை என்று சொல்கிறார்கள். நாங்கள் எல்லாம் பக்கத்திலேதான் உட்கார்ந்திருக்கிறோம் எங்கள் முகம்கூடத் அதில் தெரிவதில்லை. (குறுக்கீடு) சரி, சொல்லுங்கள், எல்லோரையுமே படம் பிடித்துக் காட்டிக்கொண்டிருக்கிறார்கள்.

**திரு. ஐ. கணேசன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, எத்தனையோ கவன ஈர்ப்புகளிலே நாங்கள் பேசுகிறோம். பாட்டாளி மக்கள் கட்சியினுடைய கொள்கைகளையும், இலட்சியத்தையும் நாங்கள் சொல்லுகிறோம். ஏழை எளிய பாட்டாளி வர்க்கங்கள் நசுக்கப்படும்போது



இந்தச் சட்டமன்றத்திலே குரல் கொடுக்கிறோம். இதைக்கூட இவர்களால் டி.வி.யில் காட்ட முடியவில்லை என்றால் இது தேவையா? உங்களுக்கு மட்டும்தான் டி.வியா? (குறுக்கீடுகள்) நாங்கள் வரியேதும் கட்டவில்லையா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எடுக்கிறார்கள், எடுக்கிறார்கள், எல்லாவற்றையுமே எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். எடுக்கிறார்கள். நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** எங்கே எடுக்கிறார்கள். சும்மா அதெல்லாம் show. அதாவது, கல்யாணத்திலே நாம் பார்த்துக்கொண்டேயிருப்போம். வருகிறவர்களையெல்லாம் எடுத்துக்கொண்டே இருப்பார்கள். எங்கே என்று படத்தைப் போய் பார்த்தால் இல்லை. சும்மா லைட் மட்டும்தான் அடிப்பான். அதேமாதிரி சும்மா அப்படி உட்கார்ந்து கொண்டு show காட்டுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மானியக் கோரிக்கையே மாறிப் போய்விட்டது.

**திரு. ஐ. கணேசன்:** ஒருநாள்கூட என்னை டி.வி.யில் பார்க்கவில்லை. ஒருநாள்கூட டி.வி.யில் காட்டவில்லை. நாங்களும் வாயிலே துணியைக் கட்டிக்கொண்டு வந்தால்தான் டி.வி.யில் காட்டுவீர்களா?

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** இல்லை, இல்லை, நீங்கள் பேசுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லாவிட்டால் வேறு எதனையாவது பண்ணிக்கொண்டு வந்தால்தான் டி.வி.யில் காட்டுவீர்களா? பாட்டாளி மக்கள் கட்சியின் குறை, குரல் வளை நசுக்கப்படுகிறது. இந்த நாட்டிலே எத்தனையோ பிரச்சினைகளைப் பற்றி எடுத்துப் பேசுகிறோம். அதைப் பற்றி நாட்டு மக்கள் அறிந்துகொள்ள வேண்டாமா?

பத்திரிகைக்காரர்கள்கூட மற்றும் பல பா.ம.க.வினர் என்றுதான் போடுகிறார்கள். மற்றும் பல பா.ம.க.வினர் பேசினார்கள் என்று போடுகிறார்களேயொழிய உள்ளே போடவில்லை. இதிலேயாவது நான்கு வரி பாட்டாளி மக்கள் கட்சி என்று வருகிறதே. ஆனால் ஒன்றே ஒன்றை ஒத்துக்கொள்வேன். பேரவைத் தலைவர் அவர்கள் படிக்கும்போது சொல்வதைக் காட்டுகிறார்கள். அதையாவது காட்டுகிறார்களே.

எங்கள் ஊருக்குப் போனேன். இந்த வாரம் ஞாயிற்றுக்கிழமை போனால், என்ன அண்ணே, இவ்வளவு பெரிய உடம்பை வைத்துக்கொண்டு ஒருநாள்கூட சட்டசபையிலே பேசவில்லையா என்று கேட்கிறார்கள். என்றைக்கு நான் பேசவில்லை, சட்டசபையில் ஒருநாள்கூடப் பேசவில்லையே என்கிறார்கள். வருத்தமாக இருக்கிறது. நாட்டு மக்களாகிய நாங்களும் வரி கட்டுகிறோம். எங்கள் மக்களும் வரி கட்டுகிறார்கள். இரண்டு கோடி மக்களும் வரி கட்டுகிறார்கள். ஆறு கோடி மக்களும் வரி கட்டுகிறார்கள். எங்களைக் காட்டாதிருப்பது நியாயமில்லை, தர்மமில்லை. அந்தத் திரைப்படத் துறைக்குச் சொல்லி வையுங்கள். அப்படியில்லை என்றால் எங்களுடைய எதிர்ப்பைக் காட்ட வேண்டியதிருக்கும் என்பதைப் பணிவோடு சொல்லிக்கொண்டு...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தயவுசெய்து நீங்கள் மானியக் கோரிக்கைக்கு வாருங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** துணைத் தலைவர் அவர்களே, வேதனையாக இருக்கிறது. 5 நிமிஷமே உதட்டிலே இருக்கக்கூடிய சுருட்டுக்கு—இங்கே பேசிய காங்கிரஸ் உறுப்பினர் அவர்கள்கூடச் சொன்னார்கள்—காரம், மணம், குணம் நிறைந்தது, சுவையான சுருட்டு என்று காந்திப் படத்தைப் போட்டு விளம்பரம் பண்ணுகிறார்கள், ஐயா, 5 நிமிஷம் இருக்கக்கூடிய சுருட்டு. ஆறறிவு படைத்த இந்த மனித குலத்திற்கு 2001-ல்கூட, தரம், குணம், மணம் இல்லையே என்று நினைக்கும்போது வேதனைப்படுகிறோம். தயவுசெய்து நீங்கள் இந்தச் சபைக்குப் பொதுவானவர்கள். நீதி சொல்ல வேண்டிய நீதிமான். நீங்கள் இந்தச் சபையிலே ஒவ்வொரு கட்சிக்காரர்களும் சொல்லக்கூடிய அந்த ஆணிவேரை, அந்தக் கருவையாவது டி.வி.யிலே காட்ட வேண்டாமா, இதற்கு நீங்கள் வழிவகை செய்ய வேண்டும் என்பதனை அவை முன்னர் அவர்கள் மூலமாக நான் பணிவோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நண்பகல் 12-00

அதேபோல இங்கே சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி பேச வேண்டும். இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள்—நாளை சட்டமன்றம் முடியப்போகிறது—இரயில் டிக்கெட்டிற்கு நானும் சுந்தரமும் அடிதடி போட்டுக்கொண்டிருக்கிறோம். இருக்கிறது இரண்டே டிக்கெட்டுகள்தான். யார் போகிறது? ஏற்காடு டிரெயினிலே 17 பேர் சட்டமன்ற உறுப்பினர்கள் போயாக வேண்டும். அதுவும் இப்பொழுது குடும்பத்தோடு தங்குவதற்கு அலுவலகம் கட்டிக்கொடுத்து இருக்கிறீர்கள். நீங்கள்தான் பணம்



ஒதுக்கினீர்கள். அதிலே கட்டி இருக்கிறார்கள். இதுகுறித்து 5 வருடமாக—நான் போனமுறை வந்தபோது 5 வருடமாக— முன்னாள் அரசாங்கத்திடம் சொல்லிவிட்டேன். இதிலே என்ன உங்களுக்குக் கஷ்டம், சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதியிலே ஒரு அலுவலகம் இருக்கிறது. அதை இரயில்வே துறைக்குக் கொடுத்திருக்கிறோம். அந்த அலுவலகத்திலே பதிவு செய்கிறார்கள். 'இரண்டு டிக்கெட்தான் ஒரு இரயிலுக்கு என்று சொன்னால், நாங்கள் 17 பேர் எப்படி அதிலே போவது? எங்கே போய் நாங்கள் Q-விலே நிற்பது? அந்த டிக்கெட்டு எண்ணிக்கையினை அதிகப்படுத்துவதிலே இந்த அரசாங்கத்திற்கு என்ன செலவு? இதிலே என்ன நஷ்டம்? இதிலே என்ன கஷ்டம்? எப்படி இந்தச் சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் தங்கள் கடமையைச் செய்ய முடியும்? சனிக்கிழமை இராத்திரி 11 மணிக்கு நாங்கள் போய்...

**திரு. பி.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அந்த இரண்டு டிக்கெட்டுகளையும் இவர் எனக்கு முன்னாலேயே போய் reservation பண்ணி, என்னை விடுவதில்லை, அவரேதான் ஒவ்வொரு முறையும் போய்க் கொண்டு இருக்கிறார்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரை தொடங்கி 8 நிமிடங்கள் ஆகிவிட்டன. உங்கள் இரண்டு பேருடைய பிரச்சினை என்ன என்று எங்களுக்குத் தெரியவில்லை.

**திரு. பி.ஆர். சுந்தரம்:** அதிலே 6 டிக்கெட்டுகளாக உயர்த்துவதற்கு, சேரன் போன்ற எல்லா இரயில்களிலும் ஏற்பாடு செய்ய வேண்டும். மாண்புமிகு செயலாளர் அவர்கள் இதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். 6 பேர் இருக்கிறோம். ரிசர்வேஷன் செய்வதற்கு தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

**திரு. ஐ. கணேசன்:** அதை அதிகப்படுத்த வேண்டும். இரயில்வே டிக்கெட் எண்ணிக்கையை அதிகப்படுத்துவதிலே என்ன உங்களுக்கு நஷ்டம் வந்துவிடப் போகிறது என்பது எங்களுக்குத் தெரியவில்லை. அதை அதிகப்படுத்துவதற்கு நீங்கள் முயற்சி எடுக்க வேண்டும்.

அதேபோல, இங்கே இருக்கக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு எல்லாம், முன்னாள் அரசு, அலுவலகங்கள் கட்டிக் கொடுத்திருக்கிறது. அந்த அலுவலகங்கள் வெறும் கட்டடங்கள்தான். அந்த அலுவலகத்திற்கு ஒரு Computer தேவை. இதை இந்த அரசு நிச்சயமாகப் பரிசீலனை செய்து வாங்கிக் கொடுக்க வேண்டும். தொகுதி மக்களுடைய குறைபாடுகள்.

அரசாங்கத்தை அணுக வேண்டிய முறை, அந்தக் கடிதங்கள், என்ன வேலை செய்து இருக்கிறோம் என்பதைப் பற்றி எல்லாம் தெரிந்துகொள்வதற்கு, அரசுக்கு அனுப்புவதற்கு ஒரு Computer மிகத் தேவை. (குறுக்கீடுகள்) அதிலே ஒரு ஆளை அமர்த்த வேண்டும். அவருக்குச் சம்பளம் கொடுக்க வேண்டும். முதலிலே கணினி, அதற்கு ஏற்பாடு செய்து கொடுங்கள். தயவுசெய்து நிதியமைச்சர் அவர்கள் கவனத்திலே கொள்ள வேண்டும். (குறுக்கீடு) Secretary Sir, இதனை நிதியமைச்சர் அவர்கள் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். அரசாங்கத்திற்கு இந்த ஆண்டு கூடுதல் செலவு இருக்கிறது. அதை வாங்கிக் கொடுக்க முடியவில்லை என்றால், எங்களுடைய தொகுதி நிதியிலே இருந்தாவது, அந்த Computer-ஐ வாங்குவதற்கு நீங்கள் அனுமதி அளிக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி).

புரட்சித் தலைவர் உயிரோடு இருந்தால், அவருடைய வயது என்னவோ, அந்தப் பொன்மனச் செம்மலுடைய வயதைக் குறித்து 82 இலட்சம் ரூபாய் எம்.எல்.ஏ. நிதி இந்த அரசாங்கம் கொடுக்கிறது. நாங்கள் பாராட்டுகிறோம். சென்ற முறை கலைஞருடைய வயதிற்கு 77 இலட்சம் ரூபாய், இந்த முறை புரட்சித் தலைவர் பொன்மனச் செம்மல் மக்கள் திலகத்தினுடைய வயதிற்கு 82 இலட்சம் ரூபாய். பாராட்டுகிறோம். அதோடு இன்றைய முதல்வர் அம்மா அவர்களுடைய வயதையும் சேர்த்து 1 கோடியே 40,000 அல்லது 50,000 கொடுத்தீர்கள் என்றால், மனப்பூர்வமாக ஏற்றுக் கொள்வோம். இதில் நாங்கள் ஒன்றும் எம்.எல்.ஏ-க்கள் யாரும் ஒரு பைசாகூட எடுத்துக்கொள்ளவில்லை. தப்பு வந்தால் உடனே பிடித்து அவர்களை suspend பண்ணுங்கள். அடுத்த முறை சீட்டு கொடுக்காதீர்கள். இந்த முறையே எம்.எல்.ஏ. பதவியை நீக்கிவிடுவதாக இருந்தாலும் சட்டம் கொண்டு வாருங்கள். நாங்கள் ஒத்துக்கொள்கிறோம் ஒரு பைசா தப்பு நடந்தால். போகிற பக்கமெல்லாம் திரு. பாரமலை பேசினாரே, போகிற பக்கமெல்லாம் சீட்டு, ஒரு கக்கூஸ் வேண்டுமென்றால் எம்.எல்.ஏ. நிதியிலே கட்டிக் கொடு பள்ளிக்கூடம் வேண்டுமென்றால் எம்.எல்.ஏ. நிதியிலே கட்டிக் கொடு கோயில் வேண்டுமென்றால், கட்டிக் கொடு ரோடு வேண்டுமென்றால் போட்டுக் கொடு, லைட் இல்லையென்றால் எம்.எல்.ஏ. நிதியிலே போட்டுக் கொடு, கொடுக்கிற விண்ணப்பம் 100-லே 99 விண்ணப்பம் எம்.எல்.ஏ. நிதியிலே கட்டிக்கொடுங்கள் என்றுதான் கேட்கிறார்களேயொழிய இந்த அரசாங்கத்திடம் வாங்கிக் கொடு என்று கேட்பதில்லை.



ரோடு போடவில்லை பாருங்கள் ஐயா என்கிறான். எம்.எல்.ஏ். ஒரு கிலோ மீட்டருக்கு ரோடு போட வேண்டும் என்று சொன்னால், அதற்கு 12 இலட்சம். எத்தனை கிலோ மீட்டர் ரோடு இந்த 82 இலட்சம் ரூபாயிலே போட்டுவிட முடியும். சிந்திக்க வேண்டாமா? புதிய உறுப்பினர்கள், ஊரிலே போய் எத்தனை கிலோ மீட்டருக்கு நீங்கள் ரோடு போட்டு விடுவீர்கள்? ஒரு கிலோ மீட்டருக்கு 12 இலட்சம் என்றால், உங்களுக்கு கொடுத்தது 82 இலட்சம் ரூபாய். 8 கிலோ மீட்டர் அதிலே போடமுடியுமா? எவ்வளவு வேதனை, ஒரு ஊருக்கே ரோடு போட முடியாதே? எத்தனை கக்கூஸ், எத்தனை பள்ளிக்கூடம், எத்தனை Computer, எத்தனை பிளஸ் 2 மாணவர்களுக்கு கல்விக் கூட கட்டடங்கள் கட்ட வேண்டி இருக்கிறது. இதையெல்லாம் கணக்கிலே வைத்து, தயவுசெய்து நிதியமைச்சர் அவர்கள் இந்த எம்.எல்.ஏ. அலுவலகத்திற்கு ஒரு Computer, typewriting machine வாங்க எம்.எல்.ஏ. நிதியிலிருந்து எடுத்துக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். எங்கள் நிதியை நாங்கள் கெஞ்சிக் கேட்டு வாங்குகிறோம். இது நாட்டு மக்களுக்குத் தெரிகிறதா? என்னவோ எங்களை இராஜா மாதிரி நினைத்துக் கொண்டு இருக்கிறார்கள். இராஜா இல்லைங்க. கூஜா. ஆகையினாலே, தயவுசெய்து இதனை அரசு அனுமதிக்க வேண்டும்.

பிற்பகல் 12-05

அதேபோல, எம்.எல்.ஏ-க்களுக்கு கார். (மணியடிக்கப்பெற்றது) கூஜா வேண்டாம் என்றால் எடுத்துவிடுங்கள். எம்.எல்.ஏ-க்கள் கார் வாங்குவதற்கு கடன் கொடுங்கள். வட்டியில்லாத கடன் கொடுங்கள். எத்தனையோ கோடி கொடுக்கிறோம், 234 எம்.எல்.ஏ-க்களுக்கும் கார் வாங்க வட்டியில்லாத கடன்—அதிலே அமைச்சர்களை கழித்து விட்டு மீதி—வழங்க துணைத் தலைவர் அவர்கள் எப்படியாவது இதற்கு சிபாரிசு செய்ய வேண்டும். ஏனென்றால் இதிலே உங்களுக்கும் ஒன்று கிடைக்கிறது. (சிரிப்பு) வட்டியில்லாத கடன் கொடுங்கள். நாம் சாகிற வரை நமக்கு pension இருக்கிறது. 5 வருடம் இந்த ஆட்சி இருக்கப்போகிறது. அதனாலே அந்தப் பணத்தையெல்லாம் பிடித்துக்கொள்ளலாம். முதலிலே கொடுங்கள். கடந்த முறை கலைஞர் அவர்கள் நிச்சயமாக கொடுப்பதாக இருந்து, இதற்காக ஒரு திட்டம் எல்லாம் போட்டு, தலைவர் அவர்கள் கடைசி வருடமாக இருக்கிறது; கொடுக்க மாட்டார்கள், அதை எப்படி எடுப்பது? பேங்கிலே ஒத்துக்கொள்ள மாட்டேன் என்றார்கள். தள்ளுபடி பண்ணிவிட்டார்கள். இந்த வருடம் முதன் முதலாக இருக்கிறோம். அதனால் நிச்சயமாக இதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டும்.

அடுத்தது சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கே பேசுகிறோம். பத்திரிகைகாரர்கள் ஒரு நகல் கொடுங்கள் என்று கேட்கிறார்கள். இந்த நகல் எடுக்கிறதுக்கு நான் பட்ட பாடு இருக்கிறதே துணைத் தலைவரே! எத்தனை இடங்களுக்கு ஓடி நின்னுட்டு, Private Secretary அலுவலகத்திலிருந்து அத்தனை அலுவலகத்திற்கும் போய்ப்பார்த்துவிட்டு வந்துவிட்டேன். ஒரு நகல் எடுக்க முடியவில்லை. சட்டமன்ற உறுப்பினர்களுடைய இலட்சணம், ஒரு நகல் எடுக்க முடியவில்லைங்க. இதுதான் பாராளுமன்ற முறை. இதுதான் பாராளுமன்ற வழியிலே வருகிற சட்டமன்றம். ஒரு நகல் எடுக்கக்கூட எம்.எல்.ஏ-க்களுக்கு உரிமை இல்லையா? இதற்காகத்தான் 2 இலட்சம் மக்களுடைய பிரதிநிதியாக இருக்கிறோமா? (குறுக்கீடு) சொல்லுப்பா. தயவுசெய்து இதற்கு இந்த அரசாங்கம் ஒரு முடிவு செய்ய வேண்டும். அத்தனை உறுப்பினர்களுடைய உரிமையைக் காப்பதற்கு— ஒரு நகல்ங்க—நகல் எடுக்கும் இயந்திரம் இங்கே உடனடியாக வாங்க இந்த அரசு முயற்சி எடுக்க வேண்டும். எந்த எம்.எல்.ஏ. கொண்டு போய்க் கொடுத்தாலும் உடனடியாக நகல் எடுத்துக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

பாவம் காலையிலே இந்தச் சட்டமன்ற வளாகத்திலே இருக்கக்கூடிய அந்த கூட்டுகிற, பெருக்குகிற பெண்கள் எல்லாம் ஒரு மனு—ஐயா பெண்கள்—கொடுத்திருக்கிறார்கள். அதற்கு ஒரு நகல் எடுத்து மற்ற எம்.எல்.ஏ.-க்களுக்கு கொடுக்க வேண்டும். இதை எடுத்துக்கொண்டு நான் 5 இடத்திற்கு அலைகிறேன். எங்கேயும் கிடைக்கவில்லை. வெளியிலே போய் வாங்கி வருவதற்கு முன்னால் நீங்கள் இங்கே மணி அடித்து ஆரம்பித்து விட்டீர்கள். இதை தயவுசெய்து நீங்கள் பரிசீலனை செய்ய வேண்டும். அந்தப் பெண்கள் 10 வருடம், 15 வருடமாக அங்கே கூட்டுவது, பெருக்குவது கழுவுவது, துடைக்கிறது எல்லாம் செய்கிறார்கள். அந்தப் பெண்களை இப்போது பயம் பிடித்துவிட்டது. இந்தக் கூட்டம் முடிந்தவுடனே வேறு ஆட்களை போட்டுவிடுவார்களோ? எங்களையே வைத்திருப்பார்களோ? ஏற்கெனவே அங்கே வேலை செய்து கொண்டிருந்த ஆட்களை எல்லாம் மாற்றிவிட்டார்கள், இந்த அலுவலகத்திலே, சட்டமன்றத்திலே ஆண்களை எல்லாம் மாற்றிவிட்டார்கள். அதேபோல மாற்றிவிடுவார்களோ என்று பயந்துகொண்டு, அங்கே நடுங்கிக் கொண்டிருக்கிறார்கள். தயவுசெய்து இந்த ஏழைகள்மீது கை வைக்க வேண்டாம். அவர்களை தினக்கூலியாக—அவர்களுக்கு தினக் கூலியாக-வேலையை அவர்களுக்கு நிரந்தரமாக்கிக் கொடுங்கள். அவர்கள் செய்கிற அலுவலகம், வீடெல்லாம் கட்டிக் கொடுத்துவிட்டீர்கள். அதையும் செய்து



கொடுங்கள் என்று நிதியமைச்சருக்கு அந்த மனுவை நான் கொடுத்து விடுகிறேன்.

(மனுவை மாண்புமிகு நிதியமைச்சரிடம் கொடுத்தார்).

அதேபோல, அரசு வாகனத்தை சட்டமன்ற உறுப்பினர்கள்—சட்டமே B.D.O.அலுவலகத்திலிருந்து மாதத்திலே 2 நாளைக்கு ஜீப் எடுத்துக்கொண்டு போகலாம் என்று இருக்கிறது. பெட்ரோல் 50 லிட்டர் அவர்கள் போட்டுக்கொடுக்க வேண்டும். பல B.D.O.கள் அதுவும் இல்லையென்று சொல்லிவிட்டார்கள். தொகுதிக்குள்ளே போக முடியவில்லை. எங்களுடைய சட்டமன்ற பெண் உறுப்பினர் திருமதி காசாம்பு அவர்கள் போய் பார்க்கிறார்கள். அவர்கள் கொடுக்கவே மாட்டேன் என்று தகராறு பண்ணிக்கொண்டிருக்கிறார்கள். மலைப்பகுதி, செல்ல வேண்டும், கார் போக முடியாது, ஜீப் கொடுங்கள் என்றால் கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 15 நிமிடங்கள் பேசி ஆகிவிட்டது.

**திரு. ஐ. கணேசன்:** இது என்ன முறை? பழைய முறைப்படி 2 நாட்கள் அந்த ஜீப்பை கண்டிப்பாகக் கொடுக்க வேண்டும். அப்படி இல்லாவிட்டால் ஒரு கார் வாங்கிக் கொடுங்கள். எம்.எல்.ஏ. பதவி போனவுடன் எப்படி எம்.எல்.ஏ. அலுவலகத்தை அரசு எடுத்துக்கொள்கிறதோ அதேபோல் எடுத்துக் கொள்ளுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு பஞ்சாயத்து தலைவருக்கு டாட்டா சுமோ, ஒன்றுக்கு இரண்டு கொடுக்கிறார்கள் பஞ்சாயத்து யூனியனிலே, அவர் ஜீப்பில் வருகிறார். நாங்கள் நடந்து வந்து வெளியில் நின்று கொண்டிருக்கிறோம். அவர்கள், மாண்புமிகு பஞ்சாயத்துத் தலைவர்கள் (சிரிப்பு) Union Chairman—வேதனையாக இருக்கின்றது தலைவரே! இது என்ன? இரண்டு நாள் ஜீப்பை —எங்கெங்கோ ஓடிக்கொண்டிருக்கிறது—எடுத்துக்கொண்டு தொகுதியிலே நாங்களும் சுற்றிப்பார்த்துவிட்டு வர வேண்டும், செல்ல வேண்டும். இல்லையென்றால் அடுத்த முறை எங்களை கல்லாலே அடிப்பார்கள். அப்படி போக வேண்டுமென்றால் அதற்கு ஜீப்பை கொடுக்க மாட்டேன் என்கிறார்கள். இது என்ன முறை? என்ன நியாயம்? இவற்றையெல்லாம் நீங்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சாதாரண ஒன்று இது.

அதேபோல சென்ற முறை தி.மு.க. என்பதை மறந்துவிடுங்கள். அதற்கு முன்னால் நம்முடைய அண்ணா தி.மு.க., நம்முடைய அரசாங்கம் 5

வருடங்கள் ஆட்சியில் இருந்திருக்கிறது. பழைய சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எவ்வளவு வேதனைப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள்? அவர்களுக்குப் போதுமான ஓய்வூதியத்தை தயவுசெய்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தேவைப்படும் ஓய்வூதியத்தை வழங்க இந்த அரசாங்கம் முழு முயற்சியோடு பாடுபட வேண்டும்.

*பிற்பகல் 12-10*

அதேபோல என்னுடைய கோரிக்கை. கவர்னர் உரையிலே சொல்ல வேண்டுமென்று நினைத்தேன். அதை பிறகு சொல்லிக்கொள்கிறேன்.

இங்கு பேசிய உறுப்பினர்கள் எல்லாம் மிக அழகாகப் பேசினார்கள். மிசோரம், ஆந்திரா, மற்ற மாநிலங்களிலே எவ்வளவு சம்பளம் கொடுக்கிறார்கள் என்று சொன்னார்கள். ஆனால் ஒன்றே ஒன்று, எங்களுக்கு அந்த அளவுக்குச் சம்பளம் வேண்டாம். இன்று நாட்டு நிலைமை சரியில்லை. கேட்டால் நீங்கள் நிச்சயமாக கொடுக்கப்போவதில்லை. 3 ஆயிரம், 5 ஆயிரம், 10 ஆயிரம் ரூபாயை அதிகப்படுத்தப்போகிறீர்கள். இருந்தாலும் பரவாயில்லை.

பாராளுமன்றத்திலே, நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு 4 மடங்கு சம்பளம் உயர்த்திவிட்டார்கள். நமக்கு இரண்டாயிரம் ரூபாய்தான் சம்பளம் என்று இருக்கிறது. மற்ற எல்லா allowance-களையும் சேர்த்து 12 ஆயிரம் ரூபாய் வருகிறது. (குறுக்கீடு) எல்லோருக்கும் தெரியட்டுமே, என்ன தவறு. 12 ஆயிரம் ரூபாய் வருகிறது. ஆனால், நியாயமான, நேர்மையான ஒரு சட்டமன்ற உறுப்பினருக்கு அது போதுமா? தயவுசெய்து சிந்தித்துப் பாருங்கள். நேர்மையாக ஆட்சி நடக்க வேண்டும், சத்தியமாக நடக்க வேண்டும். தூய்மையாக நடக்க வேண்டும், சட்டமன்ற உறுப்பினர்கள் அத்தனைபேரும் நேர்மையாக நடக்க வேண்டும். நாங்கள் தயார். எங்களுக்குத் தேவையான தொலைபேசி கட்டணத்தையாவது நீங்கள் ஏற்றுக்கொள்ள வேண்டாமா? 12 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கினால் தொலைபேசி பில் 14 ஆயிரம், 16 ஆயிரம், 18 ஆயிரம் என்று வந்து நிற்கிறது. அதற்காக 3 ஆயிரம் ரூபாயை வீட்டிலே சென்று கடன் வாங்க வேண்டியதாக இருக்கிறது. இந்த தொலைபேசி கட்டணத்தையாவது உயர்த்த வேண்டாமா? ஆந்திராவிலே 28 ஆயிரம் ரூபாய், ராஜஸ்தானில் 23 ஆயிரம் ரூபாய், அதேபோல அத்தனை மாநிலங்களிலும் 20 ஆயிரம் ரூபாய்க்கு மேல் சம்பளம் இருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) நம்முடைய சம்பளத்தை உயர்த்திக் கொடுக்க இந்த அரசு ஏன் தயங்க வேண்டும்? தப்பு செய்யவில்லை, எந்தத் தொல்லையும் இல்லை. எம்.எல்.ஏ.-க்களுடைய



சம்பளத்தைவிட தொலைபேசி கட்டணத்தை உயர்த்திக் கொடுங்கள், தபால் கட்டணத்தை உயர்த்திக் கொடுங்கள், போதுமான அளவுக்கு தபால் கட்டணம் இல்லை, அதை உயர்த்திக் கொடுங்கள் என்று இந்த அரசை கேட்டுக்கொள்கிறேன்.

அருமை நண்பர்களே இதிலே நீங்கள் குறுக்கிடுவீர்கள் என்று நினைத்தேன், குறுக்கிடவில்லை, பரவாயில்லை. நாங்கள் எல்லாம் 3-வது, 4-வது முறையாக சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கிறோம். பாய் அவர்கள் அழகாக சொல்லுவார்கள். எங்களுக்கு இந்த ஒரு மாதம் மிகவும் வேதனையாக இருந்தது. ஆரோக்கியமான வாதங்கள், ஆளுங்கட்சியாக இருந்தாலும், எதிர்க்கட்சியாக இருந்தாலும் ஆரோக்கியமான வாதங்கள் செய்வது நாட்டுக்குத் தேவை. பாவத்திற்குரிய ஏழை, எளியவர்கள் நமக்கு இவர்கள் போய் ஏதாவது செய்வார்கள், சென்ற அரசைவிட இந்த அரசு செய்யும் என்று நம்பி நமக்கு வாக்களித்திருக்கிறார்கள். அந்த வாக்குகளை வாங்கி உள்ளே வந்திருக்கின்ற இடத்தில், போடா, வாடா, எந்திரிடா, உட்காருடா, டேய் பேசாதேடா, இங்கே 4 பேர், அங்கே 4 பேர். என்ன இது? வேதனையாக இருக்கிறது. இந்த 12-வது சட்டமன்ற வரலாற்றிலே ஒரு தடவை புரட்சித் தலைவர் அவர்கள் பேசும்போது கலைஞரை மிகக் கடுமையாக திட்டிப் பேசினார்கள். அண்ணன் நிதி அமைச்சருக்குத் தெரியும். சபாநாயகர் அவர்களுக்குத் தெரியும். அப்போதுதான் பயங்கரமாக சண்டை வந்தது. அண்ணன் துரைமுருகன்கூட மயக்கம் போட்டு விழுந்து, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்கள் அவரை அப்படியே தாவி கட்டிப்பிடித்து, தன் மடியிலே தலையை வைத்து, தண்ணீர் தெளித்து, உடனடியாக அவர்களுடைய டாக்டர்களை வரவழைத்து, தன்னுடைய காரிலே அனுப்பி வைத்தார்கள். இதெல்லாம் வரலாறு. அதன் பிறகு எந்த அசம்பாவிதமும் நடக்கவில்லை. இப்போது தினசரி இந்த அருமையான நேரம், பொன்னான நேரம் வீணாகிறது. இதை எங்களுடைய பாட்டாளி மக்கள் கட்சி வன்மையாகக் கண்டிக்கிறது என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

**திரு. எஸ்.எம். சீனிவேல்:** 1989-ல் மார்ச் 25-ல் நடந்ததை சொல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கணேசன், 8 மணித்துளிகள் கொடுக்கப்பட்டது. 19 மணித்துளிகள் பேசியிருக்கிறீர்கள். உரையை முடித்துக்கொள்ளுங்கள்.

**திரு. ஐ. கணேசன்:** நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநில ஆட்சித் தலைவர்கள், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள், மாவட்ட நிருவாகம், மாநிலச் சட்டமன்றம், தேர்தல்கள், ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும், பல்வகை, பல்வகை மூலதனச் செலவு, மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் ஆகிய 8 மானியக் கோரிக்கைகளை ஓரே நேரத்தில் எடுத்துக்கொண்டு, 1½ மணிக்குள் அதை முடிக்க வேண்டுமென்று, 10 நிமிடத்திற்குள் அல்லது 8 நிமிடத்திற்குள் உரையை முடிக்க வேண்டுமென்று சொல்லப்பட்டிருக்கிறது. இப்போதைய நிலையில் இதை நான் ஏற்றுக்கொள்கிறேன்.

இந்த பட்ஜெட் தொடர் கூட்டம் என்பது இந்த முறை கூடுதல் நேரமாக, காலையிலும், மாலையிலும் வைத்து இரவு 12 மணி, ஒரு மணிக்குப் பிறகு எங்களுக்கு டாக்குமெண்டுகள் முழுவதும் வந்து, நாங்கள் விடிய விடிய படிக்க நேரம் இல்லாமல், முழுக்க முழுக்க படித்து, வெளியே இருந்து வருகின்ற மகஜர்களை எல்லாம் பார்த்து, இங்கே வந்து காலையிலே பத்திரிகைகளைப் பார்த்து, பிறகு ஏதாவது பேச வேண்டும் என்று நினைக்கின்றபோது, நீங்கள் 3 நிமிடங்களில் முடிக்க வேண்டும் ஏன்று சொல்கிறபோது, நடுக்கத்தோடு உட்கார வேண்டியிருக்கிறது. எங்கள் கடமையை பூரணமாகப் பூர்த்தி செய்ய முடியவில்லை. ஆகவே, இதை கொஞ்சம் நீட்டித்து நடத்த வேண்டும் அல்லது ஒரு நாளைக்கு நடத்தும் மானியங்களின் எண்ணிக்கையையாவது குறைக்க வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-15*

அடுத்து, இந்த மாவட்ட நிருவாகம், மாநில அமைச்சர்கள், அதனுடைய நிர்வாகச் செயல்பாடுகள், ஓய்வூதியங்கள், அதாவது தியாகிகள் பென்ஷன் போன்ற ஒன்றிரண்டு விஷயங்களை மாத்திரம் நான் எவ்வளவு சுருக்கமாகப்பேச முடியுமோ, அவ்வளவு விரைவாக பேசி முடிக்க விரும்புகிறேன்.

ஒரு அரசாங்கத்தினுடைய வெற்றி என்பதே விரைந்து முடிவு எடுப்பதிலும், விரைந்து அதைச் செயல்படுத்துவதிலும், முடிந்த வரை உடனுக்குடன் தீர்வு காணப்படுவதிலும்தான் அடங்கியிருக்கிறது என்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.



ஒருவகையில் எங்களுக்கெல்லாம் மிகப் பெரிய திருப்தியும் ஒரு நம்பிக்கையும் என்றுகூடச் சொல்லலாம். நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்கள், அவருடைய செயல்பாட்டில், உண்மையில் நாங்கள் மிகுந்த திருப்தியடைகிறோம், மகிழ்ச்சியடைகிறோம், பெருமைப்படுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) மிகப் பெரிய எதிர்பார்ப்பு எங்களுக்கு மட்டுமல்ல, தமிழ்நாட்டிலுள்ள மொத்த மக்களுக்கும், முதலமைச்சர் அவர்களைப் போலவே, நம்முடைய மொத்த அமைச்சரவையும் செயல்பட வேண்டும் என்பதுதான். அதனுடைய அர்த்தம், நம்முடைய அமைச்சர் பெருமக்கள் எல்லா விஷயங்களிலும், உடனுக்குடன் முடிவு எடுப்பதிலும், அதை விரைந்து செயல்படுத்துவதிலும், இன்னும் கூடுதல் வேகம் காட்டவேண்டுமென்று சொல்கிறபோது, இப்போது நாங்கள் வேகமாக இல்லையா என்று எந்த அமைச்சர் பெருமகனும் தயவுசெய்து தவறாக நினைக்க வேண்டாம். அவ்வாறு நீங்கள் செயல்படுவதன் மூலமாக, முதல்வர் அவர்களின் வேலை சுமை குறையும் என்பது மட்டும் அல்ல, ஓரே நேரத்தில் நம்முடைய நிருவாக அமைப்புகளை, அதிகாரிகளை நாம் செயல்படுத்துவதன் மூலமாக அவர்களை வேகப்படுத்த முடியும். அவர்கள் விரைந்து செயல்படுவதன் மூலமாக மக்கள் நல காரியங்கள் மக்களைச் சென்றடைவதற்கு, அது உதவியாக இருக்கும். உதாரணமாக, பஞ்சாலை தொழிலாளர்களுடைய சம்பள உயர்வு பிரச்சினை 10(b) (i) proclamation சம்பந்தமான விஷயத்திலே, policy விஷயம், முதல்வர் அவர்கள் சொல்லவேண்டுமென்பது மிகச் சரியானது. ஆனால், ஒரு மின் மயானம் கட்ட வேண்டிய பிரச்சினை. 90.00 இலட்சம் ரூபாய் பொது ஜனங்கள் செலவு செய்து கட்டுவதற்கு ஏற்பாடு செய்துவிட்டார்கள். பல்வேறு வெகு ஜன் அமைப்புகள் உதவி செய்கிறார்கள். கோவை மாநகராட்சி, 1 ஏக்கர், 40 சென்ட் நிலத்தைக் கொடுப்பதற்கு மாமன்றம் தீர்மானம் போட்டு, நிறைவேற்றி அனுப்பியாகி விட்டது. இதிலே நம்முடைய அரசாங்கத்திற்கு, சல்லிக் காசு செலவு இல்லை. அதற்கு ஒரு அனுமதி போட்டுக் கொடுப்பதில் என்ன பெரிய பிரச்சினை? 8 மாதங்களாக அவர்கள் நடக்கிறார்கள். நம்முடைய மாநகராட்சி நிர்வாகம், குடிநீர் வழங்கல் நிர்வாகம் என்ன செய்து கொண்டிருக்கிறது? உள்ளாட்சி நிர்வாக அமைப்புகள் என்ன செய்து கொண்டிருக்கின்றன? இதிலே என்ன செலவு இருக்கிறது. ஒரு order issue பண்ணணும், still pending.

அதேமாதிரி, நேற்றைய தினத்தில் ஒரு மகிழத்தக்க, பெருமைப்படத்தக்க சம்பவம். திருத்துறைப்பூண்டியில் ஒரு மாணவன் கொலை செய்யப்பட்ட விஷயத்தில, மரியாதைக்குரிய முதல்வர் அவர்கள் விரைந்து நடவடிக்கை எடுத்து, நேற்றையதினமே announce செய்து, 1.00 இலட்சம் ரூபாய் declare செய்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையில் நாங்கள் பெருமைப்பட்டோம். இதைச் சொல்கிறபோது மாண்புமிகு முதல்வர் அவர்கள் இங்கே இநத அவையில் இருப்பது மிகச் சிறந்த ஒன்று என்று நான் நினைக்கின்றேன்

அந்த வகையிலே அவருடைய கவனத்திற்கு நான் கொண்டுவர விரும்புவது என்ன என்று சொன்னால், 1989 ஆம் ஆண்டு, இந்து மத வெறியாகளால் ஹக்கீம் என்கிற 10 ஆம் வகுப்பு மாணவன் ஒருவன் கொலை செய்யப்பட்டான். இதுபோன்ற பரஸ்பர கொலைகள்தான், குண்டு வெடிப்பில் முடிந்தன. அலியாத் என்கிற ஒரு முஸ்லீம், அவருடைய மனைவி ரபியா, அவர்களுக்கு 5 குழந்தைகள். அந்தப் பையன் கொலை செய்யப்பட்டு, அவன் இறந்து 11 வருடங்களுக்கு மேல் ஆகிறது. கடந்த 5 வருட ஆட்சிக்காலத்தில், 90 முறை அவர்கள் மனு செய்திருக்கிறார்கள். 15000 ரூபாய் கொடுத்து உதவி செய்திருக்கிறார்கள். அங்குள்ள வட்டாட்சியர், மாவட்ட ஆட்சியர் அவர்களுக்கு 2.00 இலட்சம் ரூபாயும், அந்தக் குடும்பத்தில் ஒருவருக்கு வேலையும் கொடுக்கலாம் என்று பரிந்துரை செய்தும்கூட, கடந்த அரசு செய்யவில்லை. இப்போது நம்முடைய ஆட்சியின் மீது மிகப் பெரிய நம்பிக்கை வைத்து, மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கு இதைக் கொண்டு வர விரும்புகிறேன். அவர்கள் 7 முறை சென்னைக்கு வந்திருக்கிறார்கள் ஒரு முறை, கணவனும், மனைவியும் சென்னைக்கு வந்து, கோவைக்குத் திரும்புவது என்றால், 2000 ரூபாய் செலவாகும். அந்த வகையில் 14000 ரூபாய் செலவு செய்திருக்கிறார்கள. மனு தந்திருக்கிறார்கள். 2 தினங்களாக என்னுடைய அறையில் கதறிக் கொண்டிருக்கிறார்கள. நான் உள்துறைச் செயலாளர் அவர்களிடம் நேரடியாக அவர்களை அழைத்துக் கொண்டுபோய், இதன் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் தயவுசெய்து இதனை பரிசீலனை செய்யுங்கள் 5 குழந்தைகள் இருக்கிறார்கள், கோட்டைமேடு பகுதியில் இதுபோன்று கொலை செய்யப்பட்டவர்களின் குடும்பங்களுக்கு உதவி செய்யப்பட்டிருக்கிறது, அதேமாதிரி இதைச் செய்ய வேண்டுமென்று கேட்டேன. அது still pending ஆக இருக்கிறது. உடன் நியாயமான ஒரு பதிலை தருவதற்குக் கூட நம்முடைய நிர்வாக அமைப்புகள் மிகுந்த தயக்கம் காட்டுகிறது அல்லது உடனுக்குடன் முடிவதில்லை.



பிற்பகல் 12-20

ஆகையினால்தான் இந்த அரசு பதவி ஏற்றவுடன் 90 நாட்களில் பதில் அளிக்க வேண்டும் என்று அறிவித்திருக்கிற அறிவிப்பு மிகப் பெரிய வரவேற்பை பெற்றிருக்கிறது. நாங்களும் ஆதரிக்கிறோம். அதை நடைமுறைப்படுத்துவதற்கு அதிகாரிகளை நிர்பந்திப்பதும் அவர்களை செயல்பட வைப்பதும் நம்முடைய அமைச்சர் பெருமக்களின் பணிகளில் ஒன்றாக இணைய வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல மாவட்ட நிர்வாகங்களைப்பற்றி சொல்ல வேண்டியதே இல்லை. மணிக்கணக்கில் பேச வேண்டும். எந்த ஒரு காரியத்திற்கும் ஜனங்கள் படுகிற அவஸ்தை என்பது வர்ணிக்க முடியாதது. ஒரு ஜாதிச் சான்றிதழ் வாங்குவதற்கு சாதாரண எழுத்தறிவு, படிப்பறிவு இல்லாத ஏழை மக்கள் எத்தனை முறை நடக்கிறார்கள். மணியக்காரரிலிருந்து, ரெவின்யூ இன்ஸ்பெக்டர் கையெழுத்து வாங்கி தாசில்தாரரிடம் போய் ஒரு சர்ட்டிபிகேட வாங்குவதற்குக்கூட கஷ்டப்படுகிறார்கள், மனுநீதி நாட்கள் என்பதெல்லாம் வெறும் கண்துடைப்பு, அடையாளபூர்வ ஏற்பாடுகளாக இருக்கின்றன. கடந்த காலத்தில் இருந்தது. இனிமேல் இருக்கக் கூடாது. மக்கள் அவர்கள எதிர்பார்க்கும் பலன்கள் நேரடியாக கிடைக்கின்றபோதுதான் அரசாங்கத்தின் மீதும் நம் மீதும் வைத்திருக்கிற நம்பிக்கை நியாயமானதாக நடந்ததாக அர்த்தமாகும் என்பதை நான் வலியுறுத்த விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதே மாதிரி இந்த எம்.எல்.ஏ.-க்களுடைய சட்டமன்ற அலுவலகம் சம்பந்தப்பட்ட வரைக்கும் பல உறுப்பினர்களுக்கு இன்னும் கட்டப்படவில்லை. அது காலம் கடத்துகிற நிலையில் இணைந்திருக்கிறது. இப்போது என்னுடைய தொகுதியிலேயே கடந்த 5 ஆண்டுகளில் கட்டப்படவில்லை அந்தத் தொகுதி ஒரு அமைச்சருடைய கையில் இருந்ததினால் அவருடைய வீட்டிலேயே அலுவலகத்தை வைத்து நடத்திக் கொண்டார். தனி அலுவலகம் இல்லை. ஆகையினால் இடம் பார்த்து கொடுக்கப்பட்டும் அது இன்னும் கட்டப்படாத நிலையில் பணி துவங்கப்படாத நிலையில் இருக்கிறது. ஆகவே, அதுபோன்ற இடங்களில் உடனடியாக கட்டி முடிக்கப்பட வேண்டும்.

Computer பற்றியெல்லாம் இங்கே பேசிய உறுப்பினர்கள் சொன்னார்கள். என்னுடைய கருத்தும்கூட அதுதான். தனிப்பட்ட முறையில் வேறு எந்த நலனும் இதிலே கிடையாது. ஜனங்களுக்கும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் சர்க்கார்

நிர்வாகிகளுக்கும், அமைச்சர்களுக்குமான இடையறாத தொடர்புகள், இடையறாத போக்குவரத்து நேரடியான சந்திப்புகள் பிரச்சினைகளின் மீது கலந்தாலோசிக்கிற ஏற்பாடுகள் இவை எல்லாம் தேவைப்படுகின்றன. அதற்கு Computer இருக்கிறது என்று சொன்னால் உதவியாக இருக்கும். அரசுக்கு நிதிச் சுமை. 50,000 ரூபாய் ஒரு Computer worth என்று சொன்னால் 234 பேர்களுக்கு 1 கோடியே 15 இலட்சம் ரூபாய் ஆகப் போகிறது. இதை நாம் ஒதுக்கீடு செய்ய முடியவில்லை என்று சொன்னாலும் மரியாதைக்குரிய மாண்புமிகு உறுப்பினர் திரு. கணேசன் குறிப்பிட்டதைப்போல சட்டமன்ற உறுப்பினர்களுடைய மேம்பாட்டு நிதியிலிருந்து என்னென்ன item-களுக்குச் செலவழிக்கலாம் என்கிற வழிகாட்டு நெறிமுறை சொல்லப்பட்டிருக்கிறதோ அதில் இதையும் கூட ஒன்றாகச் சேர்த்துக்கொள்வதில் தவறு இல்லை. நம்முடைய தேவைக்கு அது அவசியப்படுகிறது என்பதை நானும் வலியுறுத்த விரும்புகிறேன். *(மணியடிக்கப்பெற்றது)*

ஒரே ஒரு விஷயம். முடித்துவிடுகிறேன். ஊராட்சி ஒன்றிய அலுவலகங்கள் சம்பந்தப்பட்டவரைக்கும் பல அலுவலகங்கள் கட்டட பராமரிப்பு இல்லாமல் இருக்கின்றன. எஸ்.எஸ்.குளம் ஊராட்சி ஒன்றிய அலுவலகம் புதிதாக கட்ட வேண்டும் என்பது இல்லை. இருப்பதை பராமரிப்பதற்காகவாவது நம்முடைய வருவாய்த் துறை அனுமதி அளிக்க வேண்டும்.

தியாகிகள் Pension சம்பந்தப்பட்ட வரைக்கும் இங்கே பலரும் குறிப்பிட்டதைப் போல அவர்களுக்கு மாநில அளவில் கொடுக்கப்படுகிற தியாகிகள் pension இன்னும் சற்று கூடுதலாக உயர்த்திக் கொடுக்க வேண்டும். கேரளாவில் மத்திய அரசு கொடுக்கிற ரூ. 3,000 அளவுக்குக் கொடுக்கிறதாக அவர்கள் சொல்கிறார்கள். ஆகையினால், அதிலே ஏதாவது உயர்த்த முடியுமா என்று பார்த்து கட்டாயம் அதை உயர்த்திக் கொடுக்க வேண்டும். அவர்களுடைய வாரிசுகளுக்கு வேலை கொடுப்பதிலே முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்பதிலே ஏற்கெனவே இருக்கக்கூடியதில் இன்னும் கொஞ்சம் அதிகப்படுத்த வேண்டும் என்று அவர்கள் கேட்கிறார்கள். வயது முதிர்ந்தவர்கள் வாழ்ந்து முடியும் தருவாயில் இருக்கிறார்கள். அதைக் கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டும்.

சென்னை மாநகராட்சியிலே அந்த மாதிரி வாரிசுகளுக்கு வேலை கொடுக்கிற வாய்ப்பு இருக்கிறது. அது மற்ற மாநகராட்சிகளில் இல்லை என்று சொல்கிறார்கள். இதர மாநகராட்சிகளுக்கும் விஸ்தரிக்க



வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றோம். சட்டமன்ற ஊழியர்களுடைய குவார்ட்டர்ஸிலே இருக்கிற ஊழியர்கள் சம்பந்தமான விஷயம். திரு. கணேசன் சொன்னதைத்தான் நானும் வலியுறுத்த விரும்புகிறேன். நன்றி.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது பேசுகின்றபோது அரசாங்கம் விரைந்து பதில் சொல்ல வேண்டும், எந்தக் காரியமாக இருந்தாலும் உடனடியாக பதில் கிடைக்க வேண்டும் என்பதை வலியுறுத்திச் சொன்னார். இந்த அரசாங்கம் மிகவும் துரிதமாக விரைந்து செயல்படுகின்ற அரசாங்கம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதற்கு ஒரே ஒரு உதாரணத்தை எடுத்துக் காட்டி இங்கே சொல்ல விரும்புகிறேன். இப்பொழுதுதான் Connect 2001 என்ற சர்வதேச Information Technology - Communications and Bio Informatics Conference மற்றும் exhibition ஆகியவற்றை தொடங்கி வைத்துவிட்டு வந்தேன். அங்கே அந்த exhibition-ஐ சுற்றிப் பார்க்கும்போது பல வெளிநாட்டு Information Technology நிறுவனங்களும் அங்கே அவர்களுடைய தயாரிப்புகளை பொதுப் பார்வைக்காக வைத்திருக்கிறார்கள். அங்கே நான் பார்த்த ஒரு நிறுவனத்தின் பெயர் Verizon Infotech. அவர்கள் இப்போது தமிழ்நாட்டில் Reliance மற்றும் Bharathi Telecom போன்ற நிறுவனங்கள் Optic Fibre Cable இங்கே lay செய்து கொண்டு இருக்கிறார்கள். அவர்களுக்குத் தேவையான கருவிகளை, எக்யூப்மெண்டை இவர்கள் சப்ளை செய்கிறார்கள். இது ஒரு அமெரிக்கன் கம்பெனி. அந்த நிறுவனத்தின் ஸ்டாலுக்குள், பூத்துக்குள் சென்று நான் பார்வையிடும்போது, அவர்கள் ஒரு முக்கியமான தகவலை எனக்குச் சொன்னார்கள். இந்த கம்பெனியை எங்கே நிறுவுவது என்று அவர்கள் யோசித்தபோது, முதலில் சீனாவோடு தொடர்பு கொண்டார்கள். ஜப்பான் நாட்டோடு தொடர்பு கொண்டார்கள். இங்கே தமிழ்நாட்டோடு தொடர்பு கொண்டார்கள். தமிழ் நாட்டிலிருந்து, இந்த அரசாங்கத்திடமிருந்து 6 மணி நேரத்திற்குள் பதில் கிடைத்ததால் அவர்கள் இங்கேயே வந்து அவர்களுடைய நிறுவனத்தைத் தொடங்கி இருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற செய்தியை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

*பிற்பகல் 12-25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சுப்பையா பாண்டியன்.

**திரு. எம். சுப்பையா பாண்டியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாதாரண ஒரு குக்கிராமத்திலே விவசாயக் குடும்பத்திலே பிறந்து 10 ஆண்டுகாலம் கிளைக் கழகச் செயலாளராகவும், 10 ஆண்டுகாலம் குருவிகுளம் ஒன்றிய கழகச் செயலாளராகவும் இருந்த என்னை, இதய தெய்வம் மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நெல்லை புறநகர் மேற்கு மாவட்ட கழகச் செயலாளராகவும், கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினராகவும், வெற்றி பெறச் செய்து இந்த மாமன்றத்திலே பேசுவதற்கு எனக்கு வாய்ப்பு அளித்த இதய தெய்வம், கழக நிரந்தரப் பொதுச் செயலாளர் அம்மா அவர்களுடைய பொற்பாதங்களைப் பணிந்து, பேச ஆரம்பிக்கிறேன்.

நாங்களெல்லாம் ஒன்றிய கழகச் செயலாளர்களாக இருக்கும்போது இந்த மாடத்திற்குள்ளேயே வர முடியாது. ஒரு பாஸை வாங்கிக் கொண்டு வர வேண்டும். இத்தருணத்திலே இந்த மாடத்திற்குள்ளே ஆன்றோர்களும், சான்றோர்களும் இருக்கக்கூடிய இந்தச் சபையிலே எனக்குப் பேச, ஒரு சாதாரண விவசாயக் குடும்பத்திலே பிறந்தவனுக்கு வாய்ப்பு அளித்ததற்கு பாருள்ள மட்டும், கடல் நீருள்ள மட்டும், ராமர் பேருள்ள மட்டும் வீபீஷணனுக்கு பட்டம் கட்டினேன், கட்டினேன் என்பதைப்போல, நானும் என் குழந்தை, மனைவி மக்களும், என் உற்றார் உறவினரும் காலம் பூராவும் இதய தெய்வம் அம்மா அவர்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய உறுப்பினர்கள் குரல்வளைகள் நெரிக்கப்படுகின்றன. நாங்கள் 4 மானியக் கோரிக்கைகளிலே பேச எழுதிக் கொடுத்தோம். எங்களுக்கு பேச வாய்ப்பு இல்லை. விவசாயத் துறை மானியக் கோரிக்கையில் பேச எழுதிக் கொடுத்தேன். அதற்கும் வாய்ப்பு கிட்டவில்லை. கூட்டுறவுத் துறை மானியக் கோரிக்கையில் பேச எழுதிக் கொடுத்தேன்; அதற்கும் வாய்ப்பு கிட்டவில்லை. கைத்தறித் துறை மானியக் கோரிக்கையில் பேச எழுதிக் கொடுத்தேன். அதற்கும் வாய்ப்பு கிட்டவில்லை. இந்த பொது மானியக் கோரிக்கையிலே பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு என்னுடைய நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்கிறேன். காலம் இல்லை, 5 நிமிடம் எடுத்துக்கொள்ள வேண்டும் என்று கூறி இருக்கிறீர்கள். நான் எவ்வளவோ பேசவேண்டும் என்று தயார் செய்தேன். காலத்தின் அருமை கருதி இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அம்மா



அவர்களுக்கு முதலிலே என். தொகுதி பிரச்சினையைக் கூறி விடுகிறேன். நீங்கள் மணி அடித்து என்னை உட்கார வைத்தாலும் வைத்து விடுவீர்கள்.

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களே, என்னுடைய கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் நான் வாக்குகள் கேட்கும்போதும், நன்றி சொல்லும்போதும், அந்தப் பகுதியிலே இஸ்லாமிய சமுதாயத்துப் பெண்கள் அதிகமாக இருக்கின்ற காரணத்தினால் அங்கே ஒரு கலைக் கல்லூரியை அமைத்துத்தர வேண்டுமென்று இதய தெய்வம் அம்மா அவர்களுடைய பாதம் பணிந்து வேண்டி கேட்டுக் கொள்கிறேன்.

எங்களுடைய கடையநல்லூரிலே தனி வட்டாட்சியர் அலுவலகம் இல்லை. தென்காசிக்கு, 25 கிலோ மீட்டர் தூரம் எல்லா காரியங்களுக்கும் பொது மக்கள் செல்லவேண்டி இருப்பதால் கடையநல்லூரை தலைமையிடமாகக் கொண்டு ஒரு வட்டாட்சியர் அலுவலகம் அமைத்துத் தர அம்மா அவர்களை பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஒரு துணைக் கருவூலம் அமைத்துத் தர வேண்டுமென்று அம்மா அவர்களை பாதம் பணிந்து கேட்டுக் கொள்கிறேன்.

எனது தொகுதிக்கு உட்பட்ட திருமலைக்குமாரசாமி கோயில் வருடத்திற்கு சுமார் 50 இலட்சம் ரூபாய் வருமானம் உள்ள பெரிய திருத்தலம். அந்தத் திருத்தலத்தில் கும்பாபிஷேகம் செய்ய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் பணம் ஒதுக்கியும் அது நடைபெறவில்லை. அங்குள்ள பொதுமக்கள், கும்பாபிஷேகம் அம்மா வந்தவுடனே செய்யவேண்டுமென்று கேட்டு இருக்கிறார்கள். அதற்கிணங்க மாண்புமிகு அம்மா அவர்கள் அந்த திருமலைக்குமாரசாமி கோவில் கும்பாபிஷேகம் செய்ய உத்தரவிட வேண்டுமென்று பாதம் பணிந்து கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12-30*

இந்த நிதிநிலை அறிக்கையிலே முந்தைய தி.மு.க. ஆட்சிக் காலத்தில் இருந்த பணத்தை எல்லாம் செலவு செய்து, அதிகமான கடன் சுமையை தலையில் தூக்கி வைத்துவிட்ட நிலையிலும் மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே பல நல்ல திட்டங்களை வகுத்து இருக்கிறார்கள். நான் அவற்றை எல்லாம் எடுத்துச் சொல்ல நேரம் இல்லாத காரணத்தால் ஒரு புலவர் சொன்னதைச் சொல்கிறேன்.

"ஆலிலை பூவும் காயும்

அதில் சில பழங்களும் உண்டானால்

சாலவே பட்சிகள் எல்லாம் தன் கூடு என்று வாழும்;

வாலிபர் வந்துகூடி வந்திருப்பர் கோடானுகோடி;

ஆலிலை, பழம், காய் உதிர்ந்துபோனால்

அங்கு வந்து இருப்பாரோ"

என்று சொல்லி இருக்கிறார். ஒரு ஆலமரத்திலே இலைகள், பழங்கள், காய்கள் இருந்தால் அங்குள்ள பட்சிகள் எல்லாம் கூடு கட்டி, முட்டையிட்டு குஞ்சு பொறித்து, அந்தப் பழத்தை சாப்பிடலாம்; வாலிபர்கள் இளைப்பாறி செல்லலாம் என்று ஒரு புலவர் சொல்லி இருக்கிறார். அந்த மரம் பட்டுப் போயிருந்தால், அங்கே யார் வந்து இருப்பர்? அதுபோல தி.மு.க. ஆட்சிக் காலத்தில் கஜானாவை காலி செய்துவிட்டுப் போனாலும், (மேசையைத் தட்டும் ஒலி) இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பல நல்ல திட்டங்களை தீட்டி இந்த தமிழ்நாட்டு மக்களுக்கு மட்டுமல்ல, இந்தியாவிலே ஒரு சகாப்தத்தையே படைத்து இருக்கிறார்கள் என்பதை இந்த மாமன்றத்தின் வாயிலாக நான் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

இதய தெய்வம் அம்மா அவர்களே, இங்கே தி.மு.க.-வைச் சேர்ந்த உறுப்பினர்கள் பல குறைகளை எல்லாம் சொன்னார்கள். நாங்கள் எல்லாம் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் point of order, point of order என்று கேட்டும், எங்களுக்கு வாய்ப்பு கொடுக்கவில்லை. ஏனென்றால், அவர்கள் பல குறைகளைச் சொன்னார்கள், நாங்கள் அவற்றிற்கெல்லாம் பதில் சொல்வதற்குத் தயாராக இருந்த நிலையில் எங்களுக்கு வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது. ஏனென்றால், இங்கே முந்தைய ஆட்சியில் எவ்வளவோ ஊழல்கள் எல்லாம் செய்து இருக்கிறார்கள்.

நான் பேசுவதற்கு நேரம் இல்லாத காரணத்தினால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு 5 நிமிடம் கொடுத்து இருக்கிறீர்கள்; ஆகையால், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஒன்றிய அளவில் அரசு திட்டப் பணிகள் நடைபெறுவதைக் கண்காணிக்க சட்டமன்ற உறுப்பினர்கள், அதிகாரிகள் அடங்கிய குழு அமைத்து பணிகள் முறைப்படி நடந்து இருக்கின்றனவா என்பதை ஆய்வு



செய்ய ஆவன செய்ய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக் கொள்கிறேன்.

கடையநல்லூர் நகரில் அரசு ஊழியர்களுக்கு குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட வேண்டும் என மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள், மக்கள் குறைகளைக் கேட்க கிராமங்களுக்குச் செல்லும்போது அரசு வாகனம் ஒதுக்கித்தர வேண்டுமென மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

கடையநல்லூர் தொகுதியில் பல கிராமங்களில் தனி வாக்குச்சாவடி அமைத்துத்தர மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைக் கேட்டுக்கொண்டு, இங்கே நேரம் இல்லாத காரணத்தால், எனக்கு இங்கே பேச வாய்ப்பு அளித்த மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

## 9. விதி 110-ன்கீழ் அறிக்கை

### வட்ட கூட்டுறவு விட்டு வசதி கடனுக்கான வட்டி, அபராத வட்டி, சேவைக் கட்டணம் தள்ளுபடி குறித்த மாண்புமிகு முதலமைச்சர் அறிக்கை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 110-வது விதியின்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி வேண்டி உள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதல்வர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கு 1978-1979 ஆம் ஆண்டு முதல் 1998-1999 ஆம் ஆண்டு வரை வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களின் மூலம் வீடு கட்டுவதற்காக வழங்கப்பட்ட கடன் அசல் தொகையினை உறுப்பினர்கள் செலுத்தினால், அவர்கள் செலுத்த வேண்டிய வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆகியவற்றை அரசு தள்ளுபடி செய்யலாம் [illegible] எடுத்த



தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
223754
சென்னை-600 008
D V2,3'A01 P01.13

உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) இத்திட்டத்தின் மூலம் கடன் நிலுவை அசல் ரூ.292.6 கோடியை உறுப்பினர்கள் செலுத்தும் பட்சத்தில், அவர்கள் வட்ட கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு செலுத்த வேண்டிய வட்டி, அபராத வட்டி மற்றும் சேவைக் கட்டணம் ஆக மொத்தம் ரூ.110 கோடியை தள்ளுபடி செய்து (மேசையைத் தட்டும் ஒலி) நலிந்த பிரிவு மக்களுக்கு உதவிட ஆணையிட்டு உள்ளேன். இதன் மூலம் 5 இலட்சத்து 18 ஆயிரத்து 500 கடனாளிகள் பயன் பெறுவார்கள் என்னும் செய்தியை இம்மாமன்றத்தில் அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 8. மானியக் கோரிக்கைகள், 2001-2002, விவாதமும் வாக்கெடுப்பும்—*தொடர்ச்சி*

**(அ) கோரிக்கை எண். 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்.**

**(ஆ) கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம்**

**(இ) கோரிக்கை எண் 7—மாநிலச் சட்டமன்றம்**

**(ஈ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்**

**(உ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

**(ஊ) கோரிக்கை எண் 42—பல்வகை**

**(எ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு**

**(ஏ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கன்களும் முன்பணங்களும்.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி.*

*பிற்பகல் 12-35*

**திரு. ஜி. பழனிசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், பல்வகை, தேர்தல்கள், மாநிலத் தலைமையிடம், மாவட்ட நிருவாகம் ஆகிய மானியக் கோரிக்கைகள் மீது பேசுவதற்கு வாய்ப்பளித்திருக்கிற தங்களுக்கு நன்றி கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*முதலாவதாக, நான் இரண்டு தினங்களுக்குமுன் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு என்னுடைய தொகுதியிலே*



*ஒரு மாணவன், 10-வது வகுப்புப் படித்துக்கொண்டிருக்கிற ஒரு மாணவன் மோகன், அங்கேயிருக்கிற ஆசிரியர்களால் தீ வைத்துக் கொளுத்தப்பட்ட அந்தச் சம்பவத்தை கொண்டுசென்றேன். ஒரு பிற்படுத்தப்பட்ட குடும்பத்தைச் சார்ந்த அவர்களுக்கு ஒரே மகனான அவனுக்கு ஏற்பட்ட நிலைக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு இலட்சம் ரூபாய் இந்தக் குடும்பத்திற்கு நிதி வழங்கி ஆறுதல் கூறியுள்ள அவர்களுக்கு (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுடைய குடும்பத்தின் சார்பாகவும். என் சார்பாகவும் நான் இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*அதேபோன்று, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்றைக்கு விதி 110-ன் கீழ் இந்த மன்றத்திலே வாசித்தளித்த அறிக்கையில் வீடு கட்டும் சங்கத்தின் சார்பாக நலிந்த, ஏழை எளிய அவர்கள் பணத்தைக்கூட திரும்பக் கட்டமுடியாமல், வட்டி உயர்ந்த காரணத்தினால் பல்வேறு சிரமத்திற்கு உள்ளானவர்களைப் பற்றி பல சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே எடுத்து வைத்திருந்தாலும்கூட, எதிர்பார்க்காத வகையிலே இந்த தினத்திலே அறிவித்திருப்பதற்காக, நிச்சயமாக தமிழ்நாட்டு மக்கள் அவர்களுக்கு நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறோம். விவசாயிகளுக்கு நன்மை அளித்ததுபோன்று, இந்தத் திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருப்பதற்கு என் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*இந்தச் சட்டமன்றம் நாளையதினம் நிறைவு செய்கிற நாள்; அடுத்த சட்டமன்றம் கூடும் வரை. பல்வேறு ஆக்கபூர்வமான, நாட்டு மக்களுடைய நன்மைகளைக் கருதி, பல்வேறு கருத்துக்களை பல்வேறு துறைகளுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும் எடுத்துச் சொல்லுகின்ற ஒரு நல்ல வாய்ப்பைப் பெற்றிருக்கிறோம்.*

*குறிப்பாக, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள். இந்த மன்றம் உங்களுடைய ஆளுகைக்கு உட்பட்டிருந்தபோதுகூட, எதிர்க்கட்சிகளுக்கும், ஆளும்கட்சிக்கும் பேச வாய்ப்பளித்து இந்தச் சபையை நடத்திச் செல்வதிலே மிக நிதானமாக நடத்திச் சென்றிருக்கிறீர்கள் என்பதிலே எனக்கு மன ஆச்சரியமில்லை; அதற்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.*

*குறிப்பாக, சட்டமன்றக் கூட்டம் என்பது அடுத்த உள்ளாட்சி அமைப்பினுடைய தேர்தல் வருகிற காரணத்தினால், காலை நேரத்திலும், மாலை நேரத்திலும் வைத்தபோதுகூட, மாண்புமிகு சட்டமன்ற*

உறுப்பினர்கள் பல பேருக்கு சில சிரமங்கள் இருந்தாலும், என்றும் இல்லாத வகையில் முழுமையாக இருந்து இந்தச் சபையை நடத்துவதிலே, நான் பார்த்த வகையிலே அதிகமான சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துகொண்டிருக்கிற வரலாறு என்பது இந்தச் சட்டமன்றக் கூட்டத் தொடர்தான். (மேசையைத் தட்டும் ஒலி) இதை நான் பார்க்கிறபோது, அரசியல் பொறுப்புணர்வும், நாம் ஏற்றுக்கொண்டிருக்கிற அந்தக் கடமையும், நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவரவர்களும், சரியாக நாட்டு மக்களுக்குச் செய்வார்கள் என்று ஒரு நம்பிக்கையூட்டியிருக்கிறது என்பதை நான் இந்த அவையிலே குறிப்பிடாமல் இருக்க முடியாது. மாண்புமிகு உறுப்பினர்கள் திறம்பட இந்தக் கூட்டங்களிலே இரு வேளைகளிலும் கலந்துகொண்டு இருக்கிறார்கள்.

எதிர்வரும் காலங்களில் இந்தச் சட்டமன்றக் கூட்டத்தை ஒரு வேளைக்கு ஒரு மானியக் கோரிக்கை என்று வைத்து, நம்முடைய ஆளும் கட்சி, எதிர்க்கட்சி ஆக்கபூர்வமான ஆலோசனைகளைக் கூறுவதற்கு எங்களுக்கு உதவிபுரிய வேண்டும் என்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், இன்று நம்முடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய கோரிக்கைகளை பற்றி இங்கே எடுத்து வைத்து இருக்கிறார்கள். உண்மையிலேயே பரிதாபத்திற்குரியவர்கள் பல பேர் சட்டமன்ற உறுப்பினராக இருக்கிறபோது, அவர்களுக்குக் கிடைக்கின்ற மரியாதையும், மதிப்பும், அலுவலகத்திற்குப் போகிறபோது கிடைக்கின்ற மரியாதையும் மதிப்பும் இந்தச் சட்டமன்ற உறுப்பினர் பதவியை இழந்த பின்னால் கிடைப்பதில்லை. பல்வேறு துறையிலே இருந்து வந்திருக்கக்கூடியவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். டாக்டர்களாக இருப்பவர்கள், இஞ்சினீயர்களாக இருப்பவர்கள், பொதுத் துறை நிறுவனத்திலிருந்தெல்லாம் வந்திருக்கிறார்கள். டாக்டர்களாக வந்திருக்கிறவர்கள் ஐந்தாண்டு காலம் கழித்து திரும்ப அந்த் டாக்டர் தொழில் பார்க்கவேண்டும் என்று சொன்னால், முற்றிலும் மறந்துவிடுவார்கள். என்ன என்றே தெரியாது.

அதேபோல வழக்கறிஞர்களாக வந்திருக்கிறவர்கள் மறுபடியும் இன்னொரு முறை சட்டம் படித்துவிட்டுத்தான் வழக்கறிஞராகப் போகமுடியும். அப்படிப்பட்டவர்கள் எல்லாம் சில கஷ்டங்களுக்கு உள்ளாகியிருக்கிறார்கள். அவர்களுக்கு மாண்புமிகு முதல்வர் அவர்களும், நிதி அமைச்சர் அவர்களும், அவர்களுடைய ஓய்வூதியத்தை அதிகப்படுத்திக் கொடுக்கலாம் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



அதேபோன்று, நம்முடைய சுதந்திரப் போராட்டத் தியாகிகள் எல்லோரும் நிறைவு கட்டத்திற்கு வந்துவிட்டார்கள். குறைந்த நம்பிக்கையிலே இருக்கிறார்கள். அவர்களுக்கு சமீபத்திலேகூட, சுதந்திரம் பெற்ற 50 ஆண்டுகளுக்குப் பிறகும் போராடிய அவர்களுக்குக் கிடைக்காத அந்த ஓய்வூதியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைச் சந்தித்து சிலர் கொண்டுவந்து கொடுத்த மனுவின் அடிப்படையிலே சமீபத்திலே வழங்கியிருப்பதை பல சுதந்திரப் போராட்டத் தியாகிகள் வாழ்த்தியிருக்கிறார்கள். அவர்களுடைய மனைவிகளுக்கு வழங்கக்கூடிய அந்த ஊதியத்தை எல்லாம் கொஞ்சம் உயர்த்திக் கொடுத்து வழங்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-40*

சட்டமன்ற உறுப்பினர்கள் மறைந்த பின்னால் அவர்களுடைய மனைவிமார்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. அதுபோன்று நம்முடைய மாநிலத்திலே மேலவையிலே இருந்து பணியாற்றியவர்களின் மனைவிமார்களுக்கு அந்த ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்று பலபேர் மனு கொடுத்திருக்கிறார்கள். இதுவும் ஏன் விடுபட்டது என்று சொன்னால், அநேகமாக சில நபர்கள் மட்டுமே இருக்கிறார்கள். அவர்களைப் பார்த்து, அவர்களில் மோசமான நிலையில் இருக்கிற குடும்பங்களுக்கு அதையும் வழங்க வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, மாவட்ட நிருவாகத்தைப் பொறுத்தவரையில் இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் பலபேர் நம்முடைய அமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கிறார்கள். மாவட்ட நிருவாகத்திலே தற்போது மனுநீதி நாள் முகாம்கள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இப்போது கிராமப்புறங்களிலே இருக்கிற மக்கள் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் மனு கொடுத்து தங்களுடைய கோரிக்கைகளைப் பெறுவதிலே சிரமம் இருக்கிற காரணத்தால் நேரடியாக மக்களிடத்திலே போய் மனுக்களைக் கேட்டு, மனுநீதி நாள் என்ற முகாம்கள் நடத்தி, அதன்மூலமாக அவர்களுடைய பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவேண்டுமென்று அரசாங்கம் இப்போது விரும்பி இருக்கிறது. ஆனால், அந்த விழா எப்படி இருக்கிறது என்றால், ஏதோ ஒரு மாவட்ட ஆட்சித் தலைவரை வரவேற்கிற ஒரு விழாவாக மாறி விடுகிறதேதவிர ஒரு மனுநீதி நாள் முகாமாக இல்லை. இன்னும் சொன்னால், அந்தத் துறையில் இருக்கிற பல்வேறு சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் அந்த விழாவிலே, அந்த நிகழ்ச்சியிலே கலந்துகொள்வது இல்லை. R.D.O. வோ, யாரோ கலந்துகொள்கிறார்கள், D.R.O.-வோ யாராவது கலந்துகொள்கிறார்கள். பெரும்பகுதி மாவட்ட ஆட்சித் தலைவர்கள், அந்த

நிகழ்ச்சியிலே கலந்துகொள்வது இல்லை. அதிலே அந்த மாவட்டத்திற்கு உட்பட்டிருக்கிற அனைத்து மக்கள் கோரிக்கைகளையும் நிறைவேற்றுகிற விதத்தில் அந்த அதிகாரிகளைக் கலந்துகொள்ளச் செய்கிற விதத்தில், நம்முடைய நிதி அமைச்சர் அவர்கள் ஆணையிட வேண்டும், வருவாய்த் துறை அதிலே முழுமையாக கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கான கோரிக்கைகளை எல்லாம் வைத்தார்கள். அதை என்ன வேண்டுமானாலும் செய்யுங்கள். எனக்கு அதிலே பிரச்சினை கிடையாது; நிதியினைக் கேட்க மாட்டேன். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களைப் பற்றி நாட்டு மக்கள் எப்படி நினைக்கிறார்கள் என்று சொன்னால், அவர்கள் ஏதோ சமுதாயத்திலே ஒரு குற்றவாளிகளைப் போல பலபேர் பேசுகிற நிலைமை சமீபத்திலே வந்திருக்கிறது. சில இடங்களிலே பார்த்தால் சட்டமன்ற உறுப்பினர்களை கேலி செய்கிற, கிண்டல் செய்கிற நிலை, ஒரு கேலிக்கு ஆட்பட்டிருக்கிற நிகழ்ச்சிகள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வந்திருக்கிறது. கடந்த காலத்திலே ஏற்பட்டதினுடைய விளைவால் அது வந்திருக்கிறது. ஆக, சட்டமன்ற உறுப்பினர்கள் அவர்களுடைய நிருவாகத்திலே, அவர்கள் செய்யும் செயல்பாட்டிலே, மக்களுடைய கோரிக்கைகளை வடிகட்டித்தான் அமைச்சரிடத்திலே வருகிறார்கள். அமைச்சர் பெருமக்கள் மக்களுடைய அத்தனை குறைகளையும் கேட்டு நிறைவேற்றுவது என்பது முடியாது. தாசில்தார் ஆபீசிலிருந்து, R.D.O., ஆபிசிலிருந்து, D.R.O. ஆபீசிலிருந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலிருந்து அநேகமாக பெரும்பகுதி மக்களுடைய தேவைகளை ஆங்காங்கு இருக்கிற பிரச்சினைகள் குறித்து கொடுக்கக்கூடிய மனுக்கள்மீது, ஒரு சட்டமன்ற உறுப்பினர் முழுமையாக கவனம் செலுத்தி முடிந்தபின்னால், அவர்களால் தீர்வு செய்ய முடியாத பிரச்சினைகளை அமைச்சரிடத்திலே அணுகுகிற ஒரு வாய்ப்பு இருக்கிறது. அதிகாரிகளிடத்திலே அணுகுகிற ஒரு வாய்ப்பு இருக்கிறது.

சட்டமன்ற உறுப்பினர்கள் சரியாகச் செயல்படுவதற்கான கருவிகள், இயந்திரங்கள் அவர்களுடைய அலுவலகத்திற்குக் கொடுத்து, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் சொல்லியிருக்கிற அந்தப் பணிகளை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஒரு சட்டமன்ற உறுப்பினர் நேர்மையாகவும், நாணயத்தோடும், ஒழுக்கமான முறையில் நடக்க வேண்டுமென்று சொன்னால் அந்தப் பணிகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல ஊராட்சி ஒன்றியத்தில், ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் ...... (குறுக்கீடு) ஒழுங்காகத்தான் சொல்கிறேன். தப்பாகச் சொல்லவில்லை. (குறுக்கீடு) சட்டமன்ற உறுப்பினர்கள் சரியாக, திறம்பட



செயல்படுகிற வகையில் கருவிகள், இயந்திரங்கள் வழங்க வேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்கிறேன்.

நம்முடைய ஊராட்சி ஒன்றியங்களில் இருக்கிற ஜீப்புகளை இரண்டு நாட்கள் எடுத்துக்கொண்டு போகலாம் என்று உள்ளாட்சித் துறை அமைச்சராக முன்பு இருந்தவர் ஒரு உத்தரவு போட்டார். அதன்படி 50 லிட்டர் டீசல் போட்டால் அவர்கள் எடுத்துப் போகலாம் என்று சொன்னார்கள். இப்போது அதுவும் கிடைப்பது இல்லை. அநேகமாக 20 வருடங்களாக சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறோம, வாகனம் இல்லாமல் பஸ்ஸிலேதான் போய்க் கொண்டிருக்கிறோம். மக்கள் பிரதிநிதிகள் எந்த அளவுக்குச் செய்ய வேண்டுமோ அதுமாதிரி செய்து கொண்டிருக்கிறோம். ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஜீப்புகளைப் பயன்படுத்தித்தான் மக்களுடைய குறைகளைக் கேட்க அந்த முகாம்கள் நடத்த ஏற்பாடு செய்கிறோம். ஆகவே, அந்தவகையிலே பார்த்தோம் என்று சொன்னால், அதற்காக நம்முடைய உள்ளாட்சித் துறை. திரும்பவும் சட்டமன்ற உறுப்பினர் கேட்டால் ஊராட்சி ஒன்றியத்தினுடைய ஜீப்புகளை வழங்க வேண்டுமென்று உத்தரவிடவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 12-45*

நேரம் கருதி, சில கருத்துக்களை மட்டும் சொல்லி நிறைவு செய்கிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்கூட - அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தைக் கூட்டி, காவிரி நதிநீர் பிரச்சினைக்கு ஒரு நிரந்தரத் ்ர்வு காண வேண்டும் என்பதற்காக நல்ல முயற்சி எடுத்து, ஆளும் கட்சியா எதிர்க் கட்சியா என்று பார்க்காமல் அனைத்துக் கட்சிகளுடைய கருத்துக்களை கேட்டறிந்து காவிரி நதிநீா பிரச்சினைக்கு, நம்முடைய பாரத பிரதமரைச் சந்தித்து. ஜனாதிபதியைச் சந்தித்து ஒரு தீர்வு காண வேண்டுமென்று விரும்பினார்கள். ஆனால், இன்றைய தினம் என்னவாகிவிட்டது என்று சொன்னால், தமிழகத்திலுடைய ஒற்றுமை எந்த அளவுக்குக் கேலிக்கூத்தாக மாறியிருக்கிறது என்பது வேறு எல்லாக் கட்சிகளையும் சார்ந்திருக்கிற நாடாளுமன்.ற உறுப்பினர்கள் எல்லாக் சென்றிருக்கிறார்கள். பொறுப்புணர்வோடு தமிழநாட்டின் நலன் கருதி, அந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், இங்கே ஆளுங்கட்சியாக இருந்த திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த நண்பர்கள் பெயரளவுக்கு திருவாரூர் சட்டமன்ற உறுப்பினரை மட்டும் அனுப்பிவிட்டு, யாருமே கலந்து கொள்ளவில்லை என்று சொல்லாமல் இருப்பதற்காக அனுப்பிவிட்டு,

இங்கே காவிரி நதிநீர்ப் பிரச்சினைக்கு தீர்வு காண்பதற்கு மாறாக, முரண்பாடான அறிக்கையை வெளியிடுவது என்பது மிகவும் வேதனையளிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) இது எந்த அளவுக்கு தமிழகத்தின் நலனைப் பாதுகாக்கப் போகிறது என்பதை எண்ணிப்பார்க்கையில் மனவேதனை அளிக்கக்கூடியதாக இருக்கிறது. நான் யாரையும் குற்றம் சொல்ல வேண்டும் என்பதற்காகச் சொல்லவில்லை. தமிழகத்தின் நலனில் என்ன அக்கறை செலுத்தி இருக்கிறோம்? தமிழகத்தினுடைய உயிர்நாடியான பிரச்சினை காவிரி நதிநீர்ப் பிரச்சினை. அந்தப் பிரச்சினைக்கு இப்போது தஞ்சாவூர் மாவட்டத்திலே இருக்கிற, திருவாரூர் மாவட்டத்திலே இருக்கிற காவிரிப் படுகையிலே இருக்கிற விவசாயிகள் எவ்வளவு கவலைக்குரியவர்களாக இருக்கிறார்கள் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். இப்போது பத்திரிகைகளில் வருகின்ற செய்திகளை எல்லாம் பார்த்தோம் என்றால் கவலையளிப்பது போல்தான் வந்து கொண்டிருக்கின்றன. ஆகையால், அப்படிப்பட்ட அறிக்கையை எல்லாம் பொறுப்பான எதிர்க்கட்சியாக இருக்கிற திராவிட முன்னேற்றக் கழகம் தருவதை விடுத்து, தமிழகத்தின் நலனைப் பாதுகாக்கின்ற வகையில் இதிலேயாவது நீங்கள் ஒத்துழைக்க வேண்டுமென்று இந்தச் சபையின் மூலமாகக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மணியடிக்கப்பெற்றது) நான் முடித்து விடுகிறேன்.

இறுதியாக என்னுடைய தொகுதிப் பிரச்சினை. நீண்ட காலமாக முத்துப்பேட்டை ஊராட்சி ஒன்றியத்தை தாலுகாவாக அறிவிக்க வேண்டுமென்று நான் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றேன். அதையும் அரசு பரிசீலனை செய்து, அந்தப் பணிகளையும் நிறைவேற்றிட வேண்டுமென்று கேட்டு, அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ப.வெ. தாமோதிரன்.

'**திரு. ப.வெ. தாமோதிரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'நிமிர்ந்த நன்னடையும் நேர்கொண்ட பார்வையும்,
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்,
திமிர்ந்த ஞானச் செருக்கும்..'

கொண்ட பாரதியின் புதுமைப் பெண்ணாகிய இதய தெய்வம் அம்மா அவர்களே, தோல்விகளையே தோரணங்களாக்கி, ஏமாற்றங்களையே ஏணிப்படிகளாக்கி, வேதனைகளையே வெற்றிப் படிகளாக்கி, சோதனைகளைச் சாதனைகளாக்கிய சரித்திர நாயகியே, தென்னகத்து



ஜான்சி ராணியே, (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களே, அன்பின் உருவாய், அறிவின் திருவாய், எம்மனோர்க்கு நற்குருவாய், கழகத்தின் கற்பகத்தருவாய், காப்பதற்கு நீ வருவாய், எம் கவலை தீர்த்தருள்வாய், கனிவோடு பிரார்த்தித்தோம். காவியமாய் வந்து எங்கள் நெஞ்சில் நீங்கா ஓவியமான எம் தாயே, இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, கொங்கு மண்டலத்தில் பச்சார்பாளையம் என்னும் குக்கிராமத்தில் சிறிய விவசாயக் குடும்பத்தில் பிறந்த இந்த எளிய தொண்டனை, கழகம் தோன்றிய காலத்தில் பொங்கலூர் தொகுதி அமைப்பாளராகவும், 30 ஆண்டுகளாக சுல்தான்பேட்டை ஒன்றியக் கழகச் செயலாளராகவும், தொடர்ந்து பொறுப்பு வகிக்கும் எனக்கு, இதய தெய்வம் அம்மா அவர்கள் திருநெல்வேலி சீமையிலே நடந்த வீர வரலாற்று வெற்றி மாநாட்டிலே தங்களின் திருக்கரத்தால் நற்சான்றிதழ் வழங்கியதோடு மட்டுமல்லாமல், பொங்கலூர் சட்டமன்ற உறுப்பினராக எனக்கு வாய்ப்பளித்து, எனது வெற்றிக்காக கடும் வெய்யிலையும் பொருட்படுத்தாமல், பொங்கலூர் தொகுதி முழுவதும் உள்ள பொதுமக்களைச் சந்தித்து, இரட்டை இலைச் சின்னத்திலே வாக்களிக்கச் செய்து, என்னை வெற்றி பெறச் செய்து, தமிழக மக்களுக்கு அடையாளம் காட்டிய என் இதய தெய்வமே, காலைப் பொழுது விடிய மறந்தாலும், குயிலினங்கள் கூவ மறந்தாலும், ஏழை எளிய விவசாயப் பெருமக்களையும், கைத்தறி நெசவாளர் பெருமக்களையும், ஏழை ஆதிதிராவிட பெருமக்களையும் ஒருபோதும் மறவாத எங்கள் இதய தெய்வம் அம்மா அவர்களே (மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்களே, தங்களுக்கு எனது கோடான கோடி நன்றி மலர்களை, தங்களின் பொற்பாதங்களில் காணிக்கையாக்கி எனது கன்னிப் பேச்சை தொடங்குகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலேயே பொங்கலூர் தொகுதி பெரிய தொகுதியாகும். ஆகவே, எனக்கு 10 நிமிடங்கள் அம்மா அவர்களுடைய அனுமதியோடு கொடுத்தாக வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. தாமோதிரன், தொகுதி அளவை வைத்து நேரம் நிர்ணயிப்பதில்லை.

**திரு. ப.வெ. தாமோதிரன்:** எங்கள் அன்புத் தாயின் புண்ணியத்தால், அன்பினால், வேண்டுகோளை ஏற்று, எனக்கு வாக்களித்த பொங்கலூர் தொகுதி வாக்காளர்களுக்கும், கழக, மாவட்ட, ஒன்றிய கிளைக் கழகப் பொறுப்பாளர்களுக்கும், மதச்சார்பற்ற ஜனநாயக முற்போக்குக் கூட்டணிக்

கட்சி நண்பர்களுக்கும், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், பத்திரிகையாளர்களுக்கும், புகைப்படக்காரர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியைக் கூறிக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-50

கடந்த கால அரசு தன்னை விளம்பரப்படுத்திக் கொள்வதற்காகவே நலத் திட்டங்கள் என்ற பெயரிலே கொண்டு வந்த உதவாத திட்டங்களால் எத்தனையோ பற்றாக்குறை நிதிச்சுமையை உருவாக்கி விட்டுச் சென்ற நேரத்திலே விளம்பரத்துக்காக அன்றி உள்ளார்த்தமாகவே நமது அரசு பயன்பெறும் திட்டங்களை அத்துணை அரசுத் துறையிலும் சீரிய தொலைநோக்குடைய சிந்தனையோடு நமது மாண்புமிகு இதய தெய்வம் முதல்வர் அவர்கள் நமது புரட்சித் தலைவர் அரசை மீண்டும் இங்கு அமர வைத்த தமிழ் மக்கள் தம்மீது வைத்துள்ள நம்பிக்கைக்கேற்ப நூற்றுக்கும் மேற்பட்ட அரசு நிறுவனங்களையும், நூறை எட்டிக் கொண்டிருக்கும் அரசு சார்பற்ற தன்னாட்சி அமைப்புகளையும் முழுவதுமாகவே பரிசீலித்து ஆய்வு செய்து அதன் அடிப்படையில் தமிழக நலன் காக்க, வளம் காக்க, தமிழ் மக்கள் துயர் துடைக்க, வாழ்வு மகிழ்வடைய பல்வேறு துறைகளிலேயும் பல்வேறு நலத் திட்டங்களைக் கொண்டுவந்து நம் மக்களுக்கு அளித்துள்ள தமிழக அரசின் நிதிநிலை அறிக்கை அரசின் முதல்கட்டமாக, 'விளையும் பயிர் முளையிலேயே தெரியும்' என்ற பொன்மொழிக்கேற்ப சீரிய சிறப்பாக அமைந்துவிட்டதை எண்ணி மனதாரப் பெருமைப்படுகிறேன். அதை உளமாரப் பாராட்டுகிறேன்.

சிறிய நோக்கம் கொண்டோரின் சிந்தனைக்கும் எட்டாத சீரிய நல்திட்டங்களை சிதறிக் கிடக்கும் தமிழகத்தைச் சீர்படுத்த கொண்டுவரப்பட்ட தொலைநோக்குப் பார்வை கொண்ட விலைமதிக்க இயலாத நிதிநிலை அறிக்கையினை நான் மட்டுமல்ல, நல்லோரும், நாட்டோரும் நயந்தும் வியந்தும் பாராட்டுகின்றனர். காலத்தின் அருமை கருதி எனக்கும் இதயதெய்வம் அம்மா அவர்களுக்கும் பெருமை சேர்த்த என் பொங்கலூர் தொகுதிக்கு வருகிறேன்.

பொங்கலூர் தொகுதியின் மேம்பாட்டுக்கென செயல்படுத்தவேண்டிய பணிகளின் பட்டியலை இந்த மாமன்றத்திலே சமர்ப்பித்துக் கொள்ள விழைகின்றேன். பொங்கலூர் தொகுதியின் வளர்ச்சிக்காக சில முக்கியப் பணிகள், செயல்பாடுகள் குறித்து, பொங்கலூர் மற்றும் சுல்தான்பேட்டை ஒன்றியங்கள் பயன்பெறும் பில்லூர் - அத்திக்கடவு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக குடிநீர் போதிய அளவு கிடைப்பதில்லை.



2200 எல்.பி.எம். குடிநீர் வரவேண்டிய அளவில் 800, 900 எல்.பி.எம். தண்ணீர்தான் வருகிறது. இதைச் சீரமைக்க அரசு கடும் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

குண்டடம் ஒன்றியத்தில் காவிரி ஆறு கூட்டுக் குடிநீர்த் திட்டம் மூலம் நிறைய கிராமங்களுக்குக் குடிநீர் கிடைக்கவில்லை. இதுவிவரம் அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். பாண்டியாறு - புன்னம்புழா திட்டத்தை நிறைவேற்ற அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். பொங்கலூர், சுல்தான்பேட்டை, குண்டடம் ஆகிய ஒன்றியத் தலைமையிடங்களில் படுக்கை வசதியுடன்கூடிய அரசு மருத்துவமனை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

இத்தொகுதி முழுவதும் கிராமப் பகுதிகளைக் கொண்ட பெரும் பரப்பளவும் நீண்ட தூரச் சாலைகளும் கொண்ட தொகுதியாகும். அரசு சிறப்பு நிதி ஒதுக்கீடு செய்து இவற்றைச் செப்பனிட்டு தார்ச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்ய வேண்டும்.

இத்தொகுதியின் பெருமளவு கிராமங்கள் ஆதிதிராவிடக் குடும்பங்கள் நிறைந்துள்ள பகுதியாகும். இவர்களின் அடிப்படை வசதியான இலவச வீட்டுமனைப் பட்டாக்களை தகுதியுடைய அனைவருக்கும் ஆதிதிராவிட நலத் துறையின் மூலம் வழங்க ஆவன செய்ய வேண்டும். இத்தொகுதியிலுள்ள ஆதிதிராவிட பொதுமக்கள் தொகுப்பு வீடுகள் வேண்டி காத்திருப்போர் பட்டியலில் ஏராளமாக உள்ளதால் கூடுதலாக இத்தொகுதியில் தொகுப்பு வீடுகள் ஒதுக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

தொகுதியின் மையப்பகுதியில் ஒரு அரசு கலைக் கல்லூரி அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டும்.

இத்தொகுதி, பெரிய வெங்காயம் அதிக அளவிலே பயிரிடப்படும் தொகுதியாகும். ஆகவே, எங்களுடைய தொகுதியிலே குளிர்ப்பதன Godown ஒன்று அமைத்துக் கொடுக்க வேண்டும்.

இத்தொகுதியில் இன்னும் நிறைய தடுப்பணைக் குட்டைகள் ஆழப்படுத்தப்படாமல் உள்ளன. இவற்றை ஆழப்படுத்தவும், புதிய குட்டைகளை அமைக்கவும் அரசு ஆவன செய்ய வேண்டும்.

தேங்காய் விலை வீழ்ச்சியைச் சரிக்கட்ட அரசு கொப்பரைத் தேங்காயைக் கொள்முதல் செய்ய வேண்டும். இத்தொகுதியில் ஒரு மடை விட்டு ஒரு மடை பி.ஏ.பி. பாசனத் திட்டத்திலுள்ள நடைமுறைக் குறைபாடுகளை ஒரு குழு அமைத்து பரிசீலனை செய்து அவற்றை நீக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

தமிழக மக்களின் நல்வாழ்வும், தமிழகத்தின் வளர்ச்சியுமே தலையாய கொள்கையாகக் கொண்டு எத்திட்டத்தையும் விளம்பர நோக்குடைய திட்டமாக அறிவிக்காமல் அத்துணை துறைகளையும் அலசி ஆராய்ந்து, அவசியமும், அவசரமும், அத்தியாவசியமும் கொண்ட அற்புதமான திட்டங்களைத் திரட்டி நிதிநிலை அறிக்கையாகக் கொடுத்த எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், எனது நன்றியினைக் கூறி நான் உள்ளவரை, எனக்கு வாழ்வையளித்த இதய தெய்வம் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் உண்மை விசுவாசியாகவும், அம்மா அவர்களின் புண்ணியத்தால் என்னைத் தேர்வு செய்த எனது தொகுதி பொதுமக்களுக்கு உண்மைத் தொண்டனாகவும் இருப்பேன் என்று உறுதி கூறி எனது உரையை மன நிறைவோடு நிறைவு செய்கிறேன். நன்றி, வணக்கம்.

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒன்றரை மணிக்கு இன்றைக்கு அலுவல்களை முடிக்க வேண்டும். (குறுக்கீடு) இல்லை, அதற்கில்லை. அறிவிப்பை மட்டும் சொல்லிவிடுகிறேன். ஒன்றரை மணிக்கு அலுவல்களை முடித்தாக வேண்டும். மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் பதிலுரைக்கு அரை மணி நேரம் தேவைப்படுகிறது. இன்னும் ஓர் உறுப்பினர் திரு. ஹக்கீம் அவர்கள் பேச வேண்டும். அவர் எப்போதுமே கடைசி நேரத்திலே மாட்டிக் கொள்கிறார். ஒரு ஐந்து மணித்துளிகளுக்குள்ளே பேசி முடித்துவிடுவார். திரு. பரிதி இளம்வழுதி, என்ன கேட்க வேண்டும்?

*பிற்பகல் 12-55*

**திரு. பரிதி இளம்வழுதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது ஏதோ காவிரி நீர்ப்பிரச்சினையிலே திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு அக்கறை இல்லை என்பதைப்போல பேசினார். தன்னுடைய வசதிக்காக சிலவற்றை அவர் மறந்துவிடுகிறார். 1995 ஆம் ஆண்டு டிசம்பர் இறுதியிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கூட்டிய அனைத்துக் கட்சிக் கூட்டத்திலே திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பிலே நான் கலந்து கொண்டிருக்கிறேன். அன்றைய பிரதமரைச் சந்திக்கச் சென்றபோது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு வந்திருக்கிறேன். இவ்வளவு பெரிய தமிழகத்தின் ஜீவாதாரப் பிரச்சினையிலே ** (குறுக்கீடுகள்) (கூச்சல்)

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி கடைசியாகச் சொன்ன அந்த வாசகம் நீக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) (கூச்சல்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் பேசுகிறார். (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக இருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் இந்த அவையினுடைய அமைதியைக் கெடுக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு இந்த வினாவை எழுப்பினார் என்றே நான் கருதுகிறேன். மாண்புமிகு உறுப்பினர் கம்யூனிஸ்ட் இயக்கத்தினுடைய உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் பேசுகிறபோது ஒரு நியாயமான வினாவை எழுப்பினார்.

நியாயம் என்பது, மத்தியிலே உங்கள் ஆட்சி இருக்கிறது. உங்களது ஆட்சியிலே பிரதம அமைச்சர் உங்களது பிரதம அமைச்சராக இருக்கிறார். உங்களது அமைச்சர் ஒரு அதிகாரம் பெற்ற most powerful Minister ஆக உங்கள் இயக்கத்தைச் சேர்ந்தவர் அங்கே டெல்லியிலே இருக்கிறார். நீங்கள் உத்திரவிட்டால் கிருஷ்ணாவிலிருந்து தண்ணீர் வந்துவிடும். அதை நீங்கள் செய்யத் தவறிவிட்டு தமிழக மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு புரட்சித் தலைவி அவர்கள் டெல்லிக்குச் செல்லவில்லையா என்று கேட்பது (மேசையைத் தட்டும் ஒலி) தமிழின் பெயரால், தமிழினத்தின் பெயரால், தஞ்சைத் தரணிக்கு, திருச்சி மாவட்டத்திற்கு, தமிழர்களுக்கு நீங்கள் இழைக்கின்ற துரோகத்தைக் காட்டுகிறது என்பதைத்தான் அவர் எடுத்து சொன்னார். (மேசையைத் தட்டும் ஒலி)

ஆட்சியிலே நீங்கள் அங்கே இருக்கிறீர்கள் மைய ஆட்சியிலே இருக்கிற அந்தப் பதவியை எது எதற்கோ பயன்படுத்துகிற நீங்கள் வறுமையிலே வாடுகின்ற, உழைக்கின்ற—உழுதவன் கணக்குப் பார்த்தால் உழக்குக் கூட

மிஞ்சாது என்று சொல்லி—அல்லல்படுகிற உழவர்களுக்குத் தண்ணீர் தருகின்ற பொறுப்பைத் தட்டிக் கழித்துவிட்டு ஏதேதோ பிரச்சினைகளுக்கு சுய ஆதாயத்திற்காக நீதிமன்றங்களைக்கூட வளைத்துப் போடலாமா என்று எண்ணக்கூடிய அளவிற்கு நீதித் துறையிலேகூட தலையிடுகிற முயற்சிகளில் ஈடுபட்டுக்கொண்டு உங்கள் பதவியை அதற்குப் பயன்படுத்துகிறீர்களே ஒழிய தமிழக மக்களைக் காப்பதற்கு அல்ல என்பதைத்தான் திரு. பழனிசாமி அவர்கள் எடுத்துச் சொன்னார்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் இதைப்பற்றி விவாதித்த போது அனைத்துக் கட்சிக் குழுவை டெல்லிக்கு அனுப்பிப் பிரதமரை சந்திக்கச் செய்ய வேண்டும் என்று முடிவு எடுக்கப்பட்டபோதே என்னால் செல்ல இயலாது என்பதை நான் தெரிவித்திருந்தேன். இந்தக் குழு செல்வதற்கு நான்தான் ஏற்பாடுசெய்தேன். அனைத்துக் கட்சித் தலைவர்களும் அங்கே சென்று பிரதமரைச் சந்திக்க நான்தான் ஏற்பாடு செய்தேன். அரசின் சார்பில் இரண்டு அமைச்சர்களும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த அத்தனை நாடாளுமன்ற உறுப்பினர்களும் இந்தக் குழுவில் இடம் பெற்றார்கள். இவ்வளவு அக்கறையுடன் இதைப்பற்றிப் பேசுகிற மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் 1995-ல் நான் அனைத்துக் கட்சிக் குழுவை டெல்லிக்கு அழைத்துச் சென்றபோது என்னுடன் வந்ததாகக் குறிப்பிடும் பரிதி இளம்வழுதி அவர்கள் அன்றைக்கு இருந்த அக்கறையை ஏன் இன்றைக்குக் காட்டவில்லை? தி.மு.க.வின் சார்பில் மாண்புமிகு உறுப்பினர் பரிதி இளம்வழுதி அவர்கள் டெல்லிக்கு ஏன் செல்லவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) அது மட்டும் அல்ல; இப்போது சென்று வந்த அனைத்துக் கட்சிக் குழுவில் தி.மு. கழகத்தின் சார்பில்—ஒரே ஒரு சட்டமன்ற உறுப்பினர் திரு. அசோகன் அவர்கள்தான் கலந்துகொண்டார்கள். தி.மு.கழகத்திற்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மக்களவையில் 11 உறுப்பினர்கள் இருக்கிறார்கள். ஒரு நாடாளுமன்ற உறுப்பினர்கூட கலந்துகொள்ளாதது ஏன் என்பதைப் பற்றி அவர்கள் விளக்கிக் கூறமுடியுமா? (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, திரு. பழனிசாமி அவர்கள் இந்தக் காவிரிப் பிரச்சினை என்பது முக்கியமானப் பிரச்சினை, இதிலே தி.மு.க. அக்கறை செலுத்த வேண்டும். இதிலேகூட பொறுப்பைத் தட்டிக்



கழிப்பது வருந்தத்தக்கது என்று திரு. பழனிசாமி அவர்கள் சொன்னார்கள். நீங்கள் திரு. பழனிசாமிக்கு பதில் சொல்ல வேண்டுமே தவிர, தென்னை மரத்திலே தேள் கொட்ட பனை மரத்திலே நெறி கட்டிய கதையாக எங்களிடத்திலே எதற்காக மோதுகிறீர்கள்? அவர்களிடத்திலே மோதுங்கள். திரு. பழனிசாமி அவர்கள் உங்களுக்குள்ள அக்கறையின்மையைப் புலப்படுத்தியிருக்கிறார்கள். பழனிசாமிக்குப் பதில் சொல்லுங்கள்.

**திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக நான் அன்றைக்குக்கூட சொன்னேன். இந்தக் காவிரிப் பிரச்சினையில் நீங்கள் உயர்ந்தவர்களா; நாங்கள் உயர்ந்தவர்களா என்ற பிரச்சினை வராமல் இருப்பது நாட்டுக்கு நல்லது என்று. காரணம், அந்த இலாகாவை நிர்வகித்தவன் என்ற முறையிலே அதைச் சொன்னேன். மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்கள் அந்தப் பேச்சைத் தவிர்த்திருக்கலாம். ஆனால் ஒருவர் போனாலும் சரி, இருவர் போனாலும் சரி, அது அசோகன் போனாலும் சரி, ஹர்ஷர் போனாலும் சரி, திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் ஒருவர் போயிருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் அழைத்தார்கள் அந்த சர்வக் கட்சிக் கூட்டத்திற்கு. நம்முடைய பேராசிரியர் அவர்களும் நானும்கூட சென்றிருந்தோம். முதலமைச்சர் போக முடியாது என்பதை அங்கே விளக்கமாகத்தான் தெரிவித்தார். அதிலே எல்லாம் எங்களுக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. ஆனால், அசோகனை அனுப்பினார்களே, வரவில்லையே என்றால், அசோகன் என்றால் அவருக்கு ரொம்ப இளக்காரமாகத் தெரிகிறது. பரவாயில்லை.

இன்னொன்றையும் சொல்கிறேன். வி.பி. சிங் அவர்கள் பிரதம மந்திரியாக இருந்த காலத்தில்... (குறுக்கீடு)

*பிற்பகல் 1-00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பழைய கதைக்கு எல்லாம் போக வேண்டாம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஹக்கீம் பேசுங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. துரைமுருகன், திரு. பழனிசாமி சொன்னதற்கு பதிலோடு முடியுங்கள். பழைய கதைகளுக்கு எதற்குப் போகிறீர்கள்? உட்காருங்கள். இந்தப் பிரச்சினையோடு முடியுங்கள். வி.பி. சிங் இருந்தபோது, பிறகு அவர் ஆண்டபோது, இவர் ஆண்டபோது, என்று பழைய கதைகளுக்குப் போகாதீர்கள். திரு. பழனிசாமி அவர்கள் அதற்கு விளக்கம் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் செம்மலை உட்காருங்கள். (குறுக்கீடுகள்) ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். திரு. பழனிசாமி சொல்லுங்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன்,

நீங்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமருங்கள். திரு. துரைமுருகன் நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் திரு. பழனிசாமிக்குத்தான் கேள்வி கேட்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. பழனிசாமிக்கு இந்தக் கேள்வியைக் கேட்கிறீர்கள். திரு. பழனிசாமி பதில் சொல்வார்.

**திரு. துரைமுருகன்:** நான் ஆளும் கட்சி உறுப்பினர்களோடு எந்தப் பிரச்சினைக்கும் வரவில்லை. நடந்ததை நான் சொன்னேன். ஆனால், மாண்புமிகு திரு. பழனிசாமி அவர்களுக்கு நான் ஒன்றை ஞாபகப்படுத்த வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த காலத்தில் அப்போது நான் சந்திக்கச் சென்ற நேரத்தில்...... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை. இந்தப் பிரச்சினையிலே அவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் பழைய கதைகள், ஒவ்வொரு கதைக்கும் சென்றால் சரியாக வராது.

**திரு. துரைமுருகன்:** ஆளும் கட்சி உறுப்பினர்களோடு எந்தப் பிரச்சினைக்கும் நான் வரவில்லை. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு ஜி. பழனிசாமி அவர்களுக்கு நீங்கள் ஏதாவது விளக்கம் சொல்வதாக இருந்தால் சொல்லுங்கள். நீங்கள் பழைய கதைகள் திரு. வி.பி. சிங். ஆண்டபோது, பிறகு முன்னொரு காலத்திலே நாங்கள் ஆண்டபோது என்று இந்தப் பழங்கதைகளெல்லாம் இப்போது வேண்டாம். உட்காருங்கள், கேட்க வேண்டியதை கேட்டுவிட்டீர்கள். திரு. பழனிசாமி, பதில் சொல்லுங்கள். திரு. பழனிசாமி இப்போது உங்களுக்கு பதில் சொல்வார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)

**திரு. துரைமுருகன்:** நான் விளக்கம் சொல்லிவிடுகிறேன். அதற்குப் பிறகு நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இல்லை அனுமதிக்க முடியாது. திரு. பழனிசாமி, பேசுங்கள்.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் சொல்வது, திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு மிகப் பொறுப்பு வாய்ந்த பிரச்சினைகள் இருக்கிறது என்று சொன்னால், அவர்கள் பொறுப்பு வாய்ந்தவர்கள், நான் மறுக்கத் தயாராக இல்லை. அவர்கள் பொறுப்போடு செயல்படலாம். அதைச் சொல்லவில்லை. நம்முடைய



சர்வ கட்சிக் கூட்டத்திலே, மாண்புமிகு முதல்வர் கூட்டிய கூட்டத்தில் அன்றைக்கு சொன்னது அநேகமாக பேராசிரியர் கலந்துகொண்டார், மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அதிலே கலந்துகொண்டார். இவர்களெல்லாம் கலந்துகொண்டபோது அங்கேயிருக்கக்கூடிய நாடாளுமன்ற உறுப்பினர்களும், அனைத்து அரசியல் கட்சித் தலைவர்களும், காவிரி படுகையிலே இருக்கின்ற விவசாயிகளும் அதிலே கலந்துகொள்ள வேண்டும் என்றுதான் ஏகமனதாக தீர்மானம் இயற்றப்பட்டது. அப்போதுகூட பேராசிரியர் அவர்களோ, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்களோ எங்கள் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கலந்துகொள்ளமாட்டார்கள் என்று சொல்லவில்லை, இல்லையா. அப்படி யாரும் சொல்லவில்லை. ஆகையால், யாரும் கலந்துகொள்ளவில்லை என்றுதான் நான் கூறினேனே தவிர, அதற்கு மாறாக தினந்தோறும் அநேகமாக காவிரி நீர்ப் பிரச்சினையிலே அறிக்கை விட்டுக்கொண்டே இருக்கிறார்கள். மாண்புமிகு திருவாரூர் சட்டமன்ற உறுப்பினரை நான் குறைத்து மதிப்பிடவில்லை. அவர் காவிரி படுகையைச் சேர்ந்தவர். அவர் போவதும் நான் போவதும்கூட ஒன்றுதான். அதுகூட தவறில்லை. உங்களுடைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் 11 பேர் இருக்கிறார்களே, (மேசையைத் தட்டும் ஒலி) மத்திய அமைச்சர்களாக பொறுப்பேற்றிருக்கிறார்களே, அவர்கள் என்ன செய்தார்கள், தமிழ்நாட்டு மக்களுக்கு. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி சொன்னதில் எந்தத் தவறும் இல்லை. இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் பேசுகிறபோது ஒரு தி.மு.க. எம்.எல்.ஏ., திரு. அசோகன் சென்றது அவ்வளவு இளக்காரமாக இருக்கிறதா என்று கேட்டார். இளக்காரமாக யாரும் நினைக்கவில்லை. இளக்காரமாக யாரும் சொல்லவும் இல்லை. அப்படிப் பேசவும் இல்லை. இந்தப் பிரச்சினை ஏன் எழுந்தது? மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி எழுந்து முதலமைச்சருக்கு அக்கறை இல்லை, முதலமைச்சர் ஏன் டெல்லிக்குச் செல்லவில்லை, ஏன் பிரதமரைச் சந்திக்கவில்லை என்று கேட்டார். அக்கறை இருப்பதால்தான் அனைத்துக் கட்சிக் கூட்டத்தை நான் கூட்டினேன். (மேசையைத் தட்டும் ஒலி) அக்கறை இருப்பதால்தான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் குழு சென்று பிரதமரைச் சந்திக்க நான் ஏற்பாடு செய்தேன். ஆனால், தி.மு. கழகத்தைப் பொறுத்தவரை நாடாளுமன்ற கூட்டத்தொடர் முடிந்துவிட்டது. அவர்களுக்கு மக்களவையில் 11 நாடாளுமன்ற உறுப்பினர்ச

இருக்கிறார்கள். அங்கே மத்தியிலே அமைச்சர்கள் இருக்கிறார்கள். மூன்று பேர் அமைச்சர்கள் இருக்கிறார்கள். இன்னும் மாநிலங்கள் அவையில்கூட அவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கிறார்கள். அவர்களில் ஏன் யாரும் கலந்துகொள்ளவில்லை. அதுமட்டுமில்லை, இன்றைக்கு எந்தப் பெரிய அலுவலும் இல்லாமல் ஆற அமர நிறைய ஓய்வெடுக்கக்கூடிய ஒரு சூழ்நிலையில் அவர்களுடைய கட்சி தானைத் தலைவர் இருக்கிறார். (மேசையை தட்டும் ஒலி) அவர் திருவாரூர்காரர். அந்த டெல்டா பகுதியிலேயே பிறந்தவர், வளர்ந்தவர். அவர்களுடைய கட்சித் தலைவர் ஏன் காவிரி பிரச்சினையில் அக்கறை எடுத்துக்கொள்ளவில்லை? நான் கூட்டிய அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் ஏன் கலந்துகொள்ள வரவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) அவர் ஏன் டெல்லிக்குச் செல்லவில்லை? (மேசையைத் தட்டும ஒலி) அவர் ஏன் பிரதமரை சந்திக்கவில்லை? (மேசையைத் தட்டும் ஒலி) (கூச்சல்-குழப்பம்)

பிற்பகல் 1-05

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். இப்போது மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள் பதில் அளிப்பார்கள். 1-30 மணிக்குள் விவாதத்தை முடிக்கவேண்டும். திரு. ஹக்கீம் அவர்கள் பொருத்தருள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அவை முன்னவர் அவர்கள் பதில் அளிப்பார்கள். இந்தப் பிரச்சினை முடிந்தது.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காவிரிப் பிரச்சினையில் அரசியல் செய்யக்கூடாது. அதை அரசியல் ஆக்கக்கூடாது. உண்மையில், தமிழகத்திற்கு காவிரி நீர் கிடைக்க வேண்டும் என்பதற்காக அனைத்துக் கட்சிகளும் ஒரே அணியில் திரண்டு நிற்கவேண்டுமென்றுதான் அனைத்துக் கட்சிக் கூட்டத்திலும் நான் பேசினேன். ஆனால், இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. பரிதி இளம்வழுதி அவர்கள் ஏதோ குற்றம் கூறவேண்டும் என்பதற்காக குத்திக்குத்தி பேசுகிறார். நான் கேட்கவிரும்புவது, இவர்களுடைய கட்சித் தலைவர் என்ன செய்து கொண்டிருக்கிறார் என்பதுதான் (மேசையைத் தட்டும் ஒலி) அவருக்குப் பொறுப்பு இல்லையா? (மேசையைத் தட்டும் ஒலி) அவரும் மக்களால் தேர்த்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினர். காவிரியைப் பற்றிப் பேச அவர் இந்த அவைக்கு வருவதில்லை (குறுக்கீடு) நான் பேசிக்கொண்டிருக்கிறேன். அவருடைய தானைத் தலைவர், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு சட்டமன்ற உறுப்பினர், ஆனால், மக்கள் பிரச்சினையைப் பற்றிப் பேச, காவிரியைப் பற்றி பேச அவர்



இந்த அவைக்கு வரவில்லை. நான் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டினால், அந்தக் கூட்டத்தில் கலந்துகொள்வதில்லை. டெல்லிக்குச் செல்லும் அனைத்துக் கட்சி தலைவர்கள் குழுவிலும் அவர் செல்வதில்லை. ஆனால், இங்கே உட்கார்ந்துகொண்டு, தினமும் அறிக்கைவிட்டுக்கொண்டிருக்கிறார். குற்றம் கூறிக்கொண்டிருக்கிறார். இதுதான் காவிரியில் உள்ள அக்கறையா? (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பரிதி இளம்வழுதி கேட்டதற்கு முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லியிருக்கிறார். முதலமைச்சர் அவர்கள் ஏன் போகவில்லை என்று அவர் கேட்டார், அவர் பதில் சொல்லியிருக்கிறார். விளக்கம் முடிந்தது. அவை முன்னவர் அவர்கள். (கூச்சல்—குழப்பம்) உட்காருங்கள், உட்காருங்கள். அதை ஏற்கமுடியாது. இப்போது அவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . . . (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஆளும் கட்சி உறுப்பினர்கள் அமைதியாக அமருங்கள். அமைதியாக அமருங்கள். அவை முன்னவர் அவர்கள் பேசுகிறார்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்ல ஒரு வாய்ப்புத் தாருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள், இந்த குறிப்பிட்ட மானியங்களின் மீது பேசுகிறபோது, பல்வேறு கருத்துக்களை எடுத்து இயம்பியிருக்கிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சைத் தரணியில் உள்ள விவசாயப் பெருங்குடி மக்கள், திமு.க. விவசாயிகளுக்கு எதிரான ஓர் இயக்கம் என்பதை எடுத்துக்காட்டுகிற முகத்தான், நடந்து முடிந்த தேர்தலிலே புரட்சித் தலைவி அவர்களுக்கு அமோக வெற்றியை தந்துவிட்ட காரணத்தால், தஞ்சைத் தரணியில் இருக்கிற புரட்சித் தலைவியின் இரட்டை இலைச் சின்னத்திற்கு வாக்களித்த அந்த மக்களுக்கு தீங்கிழைக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) புரட்சித் தலைவியை முதலமைச்சராக ஆக்கிய தஞ்சைத் தரணியிலே இருக்கிற விவசாயப் பெருங்குடி மக்களை, அவர்களுக்கு இன்னல்களை, இடர்பாடுகளைத் தரவேண்டுமென்ற சதித் திட்டத்தோடு, காவிரித்

தண்ணீர் தஞ்சைக்கும், திருச்சிக்கும் வரக்கூடாது என்ற சதித் திட்டத்தோடு, பிரதம அமைச்சரிடம் சொல்லி, தி.மு.க. தலைவர் கருணாநிதி அவர்களும் தி.மு.க.-வினுடைய, டெல்லியிலே இருக்கிற அமைச்சர் முரசொலி மாறன் அவர்களும் *(கூச்சல்-குழப்பம்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை அலுவலை தடுக்கக்கூடிய வகையில் யாரும் நடந்துகொள்ளக்கூடாது. உட்காருங்கள். உட்காருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்ல ஒரு வாய்ப்புக் கொடுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இல்லை, முன்னவர் அவர்களே, பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, மாண்புமிகு திரு. துரைமுருகன் அவர்கள், அவருடைய கடமையிலிருந்து தவறியிருக்கிறார்கள். தி.மு.க.-வினுடைய தலைவர், திரு. கருணாநிதி அவர்கள், அவருடைய கடமையிலிருந்து தவறியிருக்கிறார்கள். அதற்கு முக்கிய காரணம், புரட்சித் தலைவி அவர்களை அரசியலை விட்டு ஒழித்துவிட வேண்டும் என்பது தி.மு.க. தலைவர் கருணாநிதியினுடைய சதித்திட்டம். 24 மணி நேரமும் அவர் எண்ணிக்கொண்டிருக்கிற திட்டம். அந்தத் திட்டத்தை முறியடித்து, சிந்தனைச் செல்வியாக, அரசியல் சாணக்கியாக, விளங்குகிற புரட்சித் தலைவியை, தமிழக மக்கள் முதலமைச்சராக்கி விட்டார்களே என்ற வயிற்று எரிச்சல் தி.மு.க. தலைவர் கருணாநிதிக்கு. *(மேசையைத் தட்டும் ஒலி)* அந்த வயிற்று எரிச்சலின் காரணமாக, அ.தி.மு.க.-வுக்கு ஓட்டு அளித்த, தமிழகத்தினுடைய காவல் தெய்வமாக விளங்குகிற, புரட்சித் தலைவியை முதலமைச்சராக ஆக்கிய, காவிரி டெல்டாவிலே வாழ்கிற அந்த விவசாயப் பெருங்குடி மக்களுடைய வயிற்றிலே அடிக்க வேண்டுமென்று, டெல்லியிலே முரசொலி மாறனும், இங்கே தி.மு.க. தலைவர் கருணாநிதியும், சதித் திட்டம் தீட்டி, *(மேசையைத் தட்டும் ஒலி)* காவிரித் தண்ணீர் தமிழகத்திற்கு வராமல் தடுத்துக்கொண்டிருக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை நான் இங்கே சொல்கிறேன். பழிவாங்குவதற்கு, உங்களுக்குத் தெம்பு இருந்தால், உங்களுக்குத் திராணி இருந்தால், அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின்மீது தாக்குதல் நடத்துங்கள். *(மேசையைத் தட்டும் ஒலி)* உங்களை நாங்கள் சந்திக்கத் தயாராக இருக்கிறோம். *(மேசையைத் தட்டும் ஒலி)*



அதற்கு மாறாக *(கூச்சல்-குழப்பம்)* அதற்கு மாறாக பொன்மனச் செம்மல் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் வாரிசு, எங்களது அன்னை, புரட்சித் தலைவி அவர்களை முதலமைச்சராக ஆக்கிய விவசாயிகளின் வயிற்றிலே அடிக்கிறீர்களே, இது நியாயமா? இது நியாயமா? என நான் உங்களைக் கேட்கின்றேன். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவையை அமைதியாக நடத்த உதவிடாத எதிர்க்கட்சி உறுப்பினர்களை அவையிலேயிருந்து...

*பிற்பகல் 1-10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களை வேண்டிக்கொள்கிறேன். கொஞ்சம் அமருங்கள். திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள். *(குறுக்கீடு)* திரு. துரைமுருகன், பேசுங்கள். *(குறுக்கீடுகள்)* அனைவரும் உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* திரு. துரைமுருகன், பேசுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு உண்மை தெரிந்தாக வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் பேசுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரேயொரு உண்மை தெரிந்தாக வேண்டும். *(குறுக்கீடு)* அவரைப் பேசச்சொல்கிறீர்களே?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சொன்னதற்குப் பதிலைச் சொல்லி அத்தோடு பிரச்சினையை முடியுங்கள். 1½ மணிக்கு விவாதத்தை முடித்து, வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இது உங்களுக்கே தெரியும். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெருந்தன்மையோடு, எதிர்க் கட்சிகளுடைய குரலை ஒடுக்கக்கூடாது என்கிற அந்த உணர்ச்சியோடு அவர்கள் உங்களைப் பேச அனுமதித்திருக்கிறார்கள். நானேகூட இந்த முறை தவறு என்று கருதுகிறேன். என்றாலும்கூட, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விருப்பத்திற்காக நான் உங்களைப் பேச அழைக்கிறேன்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே பெருந்தன்மை, உணர்வு என்றெல்லாம் இல்லை. இது எங்களுடைய உரிமை. மாண்புமிகு முதலமைச்சர் ஒரு கருத்தைச் சொன்னார். *(கூச்சல்)* அதற்கு நாங்கள் பதில் சொல்ல வேண்டும். *(கூச்சல்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினைக்கு வாருங்கள்.

**திரு. துரைமுருகன்:** எங்களுடைய பதில் சரியாக இருக்கலாம். (குறுக்கீடுகள்) இன்னமும் அதற்குப் பதில் சொல்வதற்கு முதலமைச்சருக்கு வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பிரச்சினைக்கு வாருங்கள்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 2,3 கேள்விகளைக் கேட்டார்கள். முதல் கேள்வி, ஏன் உங்களுடைய தலைவர், நான் கூட்டிய அந்த சர்வக் கட்சிக் கூட்டத்திற்கு வரவில்லை என்று கேட்டார்கள். ஆனால், அதிலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், முதலிலே திரு. பரிதி இளம்வழுதி சொன்ன குற்றச்சாட்டிற்குத்தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏன் டெல்லிக்குப் போகவில்லை என்று அவர் கேட்டதற்கு, அவர்கள் பதில் சொன்னார்கள்.

**திரு. துரைமுருகன்:** Sir, அதைத்தான் சொல்கிறேன். திரு. பழனிசாமி அவர்களுக்கு நான் முதலிலே ஒன்று சொல்கிறேன். திரு. வி.பி. சிங் அவர்கள் பிரதமராக இருந்த காலத்தில் (குறுக்கீடுகள்) பாருங்கள். ஐயா, மாண்புமிகு பேரவைத் தலைவர் சொன்னார். நான் நேராக முதலமைச்சருக்குப் பதில் சொல்ல வந்தேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்தான் சொன்னார். (கூச்சல்) முதலமைச்சருக்குப் பதில் சொல்லச் சொல்கிறீர்களா, இல்லை, இவர்களுக்குப் பதில் சொல்லச் சொல்கிறீர்களா? (கூச்சல்) நீங்கள், யாருக்குப் பதில் சொல்லசொல்கிறீர்களோ, அவருக்கு நான் பதிலைச் சொல்கிறேன். (குறுக்கீடுகள்) முதலமைச்சருடைய. . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நான் 1½ மணிக்கு விவாதத்தை முடிக்க வேண்டும். இந்த அவையிலே இருந்தவர் நீங்கள். உங்களுக்குத் தெரியும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. துரைமுருகன் அவர்கள் இந்த மானியக் கோரிக்கைகளுக்குப் பதில் தரக்கூடாது என்று எண்ணுகிறாரோ என்று எனக்குப் புரியவில்லை.



**திரு. துரைமுருகன்:** இந்த மன்றத்திலே நடைமுறைக்குக் குறுக்கே நிற்கவேண்டும் என்ற எண்ணம் உடையவன் அல்ல நான். நான்தான் மாண்புமிகு முதலமைச்சருடைய கருத்திற்குப் பதில் சொல்ல வந்தேன். சபாநாயகர்தான் சொன்னார்கள்; அவர்கள் சொன்னார்கள் (குறுக்கீடு) அந்தக் கதை வேண்டாம். அது வேண்டாம், அதை விட்டுவிடுங்கள். ஏனென்றால், நான் சொல்லிவிடுகிறேன். ஒன்றே ஒன்றைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டார்கள். ஏன் உங்களுடைய தலைவர் வரவில்லை என்று. எங்கள் தலைவர் வராததால், பொதுச் செயலாளர் மற்றும் என்னை அனுப்பினார். ஆனால் கலைஞர் முதலமைச்சராக இருந்தபோது, நாங்கள் காவிரி நதிநீர்ப் பிரச்சினை குறித்து கூட்டிய அந்தக் கூட்டத்திற்கு மாண்புமிகு இன்றைய முதலமைச்சா வரவில்லை. (குறுக்கீடு) அன்றைக்கு இருந்த எஸ்.ஆர். ராதாதான் அதிலே கலந்துகொண்டிருந்தார். ஆகவே, ஒரு கட்சியினுடைய சார்பிலே (குறுக்கீடுகள்) இது என்ன நியாயம்? (குறுக்கீடுகள்) இது என்ன நியாயம்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், நீங்கள் சொல்ல வேண்டியதைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்ல வேண்டிய விளக்கத்தைச் சொல்லிவிட்டீர்கள். (குறுக்கீடு) எனக்கு உள்ள பிரச்சினை 1½ மணிக்குள் விவாதத்தை முடிக்க வேண்டும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதத்தை முடிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துரைமுருகன் அவர்களுக்கு அதிகச் சலுகை காட்ட வேண்டாம்; காலம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 1½ மணிக்கு விவாதத்தை முடிக்க வேண்டும். திரு. துரைமுருகன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அவை முன்னவர் அவர்களுடைய பதிலுரை.

*(அவையில் பேசுவதற்கு வாய்ப்பு கேட்டு தி.மு.க. உறுப்பினர்கள் தொடர்ந்து நின்றுகொண்டே இருந்தனர்.)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியக் கோரிக்கையின்மீது பதில் கூறுவதற்கு எனக்கு அனுமதி அளிக்க வேண்டுகிறேன். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் பேசுகின்றபோது. . . .

**திரு. துரைமுருகன்:** என்ன சார், அர்த்தம்?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** பல்வேறு கருத்துக்களை, கோரிக்கைகளை எடுத்துச்சொன்னார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. துரைமுருகன், இது விவாதப் பொருள் அல்ல. சொல்ல வேண்டியதை சொல்வதற்கு அனுமதி கொடுக்கப்பட்டது. நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள் 1½ மணிக்குள் முடிக்க வேண்டும். (குறுக்கீடுகள்) நான் இவ்வளவு சொல்கிறேன்? 1½ மணிக்குள் விவாதத்தை முடிக்க வேண்டும் என்று சொல்கிறேன். (குறுக்கீடுகள்) மறுபடியும், மறுபடியும் பிரச்சினையை வளர்த்துக்கொண்டே போகக்கூடாது. (குறுக்கீடுகள்) உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். திரு. பரிதி இளம்வழுதியைப் பேசுவதற்கு அனுமதி அளித்ததினுடைய விளைவுதான் இவ்வளவும் என்று தெரிகிறது. இனிமேல் உங்களுடைய சுயரூபம் என்ன என்று எங்களுக்குப் புரிகிறது. அவை முன்னவர் அவர்கள், நீங்கள் பேசுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர் (குறுக்கீடுகள்) நான் பதில் சொல்லியாக வேண்டும். (குறுக்கீடுகள்) நிறைவேற்றிவிடலாம். மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே விவாதம் செய்துவிட்டார்கள். விவாதத்திற்கு நான் பதில் சொல்ல வேண்டாமா? மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சித் தேர்தலிலே தற்போது முறைகேடுகள் நடப்பதாக திரு. பரணிகுமார் என்ற தி.மு.க. கட்சியின் மாண்புமிகு உறுப்பினர் பேசும்போது கூறினார். நடந்து முடிந்த தேர்தலிலே, சென்ற பொதுத் தேர்தலிலே தி.மு.க. தலைமையுடைய உத்தரவின் அடிப்படையில் வாக்காளர் பட்டியலில் பல்வேறு முறைகேடுகள் நடந்தன.

உதாரணமாக, மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கும், மாவட்ட ஆட்சித் தலைவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்டிருக்கின்ற R.D.O.-க்கள் அதேபோல Municipal Commissioner ஆகியோர்கள்...

*பிற்பகல் 1-15*

**திரு. துரைமுருகன்:** தலைவர் அவர்களே, நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம். அதற்காவது அனுமதி கொடுங்கள்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அவை முன்னவர் அவர்களே, திரு. துரைமுருகன் வெளிநடப்பு செய்வதற்கு ஓர் அனுமதி கேட்கிறார்.

**திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு முதலமைச்சரும், மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் எடுத்து வைத்த அந்தக் குற்றச்சாட்டுக்குப் பதில் சொல்வதற்கு எங்களுக்கு வாய்ப்புத் தராத காரணத்தினால் இந்த மன்றத்தினுடைய நடவடிக்கைகளுக்கு நாங்கள் குறுக்கே நின்றோம் என்ற அவப்பெயர் எங்களுக்கு வராமல் இருக்க வேண்டும். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அது ஏற்கெனவே நின்றுவிட்டீர்கள். குறுக்கே நின்றுவிட்டீர்கள்.

**திரு. துரைமுருகன்:** அதனால் நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.

*(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளிநடப்புச் செய்தனர்.)*

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிசாமி அவர்கள் காவிரி நீர்ப் பிரச்சினையில் எதிர்க் கட்சியான தி.மு.க. நடந்துகொண்ட முறை சரியில்லை என்பதனை எடுத்துச் சொன்னார்கள். தெள்ளத் தெளிவாக மக்களுக்குத் தெரியும். டில்லியிலே தி.மு.க.வின் சார்பிலே மூன்று அமைச்சர்கள் இருக்கிறார்கள். ஆங்கு ஆட்சி இயந்திரத்தை ஆட்டிப் படைத்துக்கொண்டிருக்கிற பிரதம அமைச்சரைவிட சூப்பர் பிரதம அமைச்சர் என்ற முறையிலே ஆங்கிருக்கின்ற Commerce & Industries Minister செயல்பட்டுக் கொண்டிருப்பதை நாடு அறியும்.

தஞ்சை மாவட்டத்திலும் திருச்சியிலும் காவிரி நீரை நம்பியிருக்கின்ற உழவர் பெருமக்களெல்லாம் இன்று தண்ணீர் இல்லாத காரணத்தால் தத்தளித்துக்கொண்டிருக்கின்ற அவல நிலையைப்பற்றி ஒரு சிறிதும் கவலைப்படாமல் புரட்சித் தலைவி அவர்களின் ஆட்சிக்குத் தொல்லை தரவேண்டும், மக்களினுடைய ஏகோபித்த ஆதரவைப் பெற்று தமிழகத்தினுடைய காவல் தெய்வமாக தமிழகத்திலே இன்று செயல்பட்டுவரும் இந்தப் புரட்சித் தலைவி அவர்களுக்குத் தொல்லைகளைத் தர வேண்டுமென்பதுதான் டில்லியிலே இருக்கிற மத்திய அரசு, மத்திய அரசைச் சேர்ந்த திரு. முரசொலி மாறன் அவர்களுக்கும், இங்கே இருக்கின்ற தி.மு.க.வின் தலைவர் திரு. கருணாநிதி அவர்களுக்கும்

தலையாய கொள்கையாக இருப்பதை தமிழ்நாட்டு மக்கள், அவையிலே இவர்கள் நடந்துகொள்கின்ற முறையிலேயிருந்து அறிந்துகொள்வார்கள் என்பதை நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

சென்ற தேர்தலிலே தமிழகத்து மக்கள், குறிப்பாக, காவிரி டெல்டா பகுதியிலே இருக்கிற மக்களெல்லாம் புரட்சித் தலைவி அவர்களுக்காக அன்னை புரட்சித் தலைவி அவர்கள் முதலமைச்சராக வரவேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையில் அமோக வாக்கினை அளித்துவிட்டார்களே என்ற ஆத்திரத்தினடிப்படையில், அதன் காரணமாக தஞ்சைத் தமிழ் மக்கள் காவிரி நீரை நம்பியிருக்கின்ற மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை, அவர்களுக்கு ஒரு தண்டனையைத் தரவேண்டுமென்ற நோக்கோடு, ஒருவேளை தி.மு.க. தலைவர் கருணாநிதியும் அவருடைய மருமகன் டில்லியிலேயிருக்கின்ற திரு. மாறனும், திரு. வாஜ்பாய் அவர்களிடமே சொல்லி, மைய அரசை வற்புறுத்தி, மாண்புமிகு கிருஷ்ணா அவர்களிடம் சொல்லாமல், சொல்வதற்குக் காலம் தாழ்த்தி, தஞ்சைக்கு காவிரி நீர் வராமல் தடுக்கின்றார்கள் என்ற குற்றச்சாட்டை (மேசையைத் தட்டும் ஒலி) நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதன் காரணமாகத்தான் ஏதோ சாக்குப்போக்குக்கு ஊமையைப்போலச் செயல்பட வேண்டுமென்ற உத்தரவை இட்டு மாண்புமிகு உறுப்பினர் திரு. அசோகனை மட்டும் அனுப்பிவிட்டு, அதிகார பீடத்திலே அமர்ந்திருக்கின்ற திரு. மாறன் அங்கு செல்லவில்லை, திரு. பாலு அங்கு செல்லவில்லை, இன்னுமொரு அமைச்சரும் அங்கு செல்லவில்லை. எம்.பி.க்கள்கூட அந்தக் குழுவிலே இடம் பெறவில்லை என்றால் அவர்களுடைய எண்ணமெல்லாம் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசைக் கலைக்க வேண்டும்; புரட்சித் தலைவிக்குத் தொல்லை தரவேண்டும். முடிந்தால் நீதித் துறையைக்கூடத் தங்கள் கைக்குள் போடுவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். இப்படிப்பட்ட வெறித்தனம் மிக்க, காழ்ப்புணர்ச்சியுள்ள ஓர் அரசியல் அணுகுமுறையைத் தமிழக மக்களுக்கெதிராக தமிழக மக்களினுடைய துரோகியாக தி.மு.க. வினுடைய தலைவர் கருணாநிதி அவர்களும் (மேசையைத் தட்டும் ஒலி) டில்லியிலே முரசொலி மாறன் அவர்களும் செயல்பட்டுக்கொண்டிருக்கின்ற காரணத்தினால்தான், காவிரி மககளை, காவிரி தண்ணீரை நம்பியிருக்கின்ற தமிழகத்து மக்களை வஞ்சிக்கிறார்கள் என்ற குற்றச்சாட்டை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே சொல்கிறேன்.

தி.மு.க. உறுப்பினர் திரு. பரணிகுமார் அவர்கள் பேசுகிறபோது ஒன்றைச் சொன்னார். நடக்கவிருக்கின்ற உள்ளாட்சித் தேர்தலிலே வாக்குகளைச்



சேகரிப்பதில் தவறு நடக்கிறது என்று சொன்னார். அதற்கு நான் அப்போதே விளக்கம் அளித்தேன். சென்ற பொதுத் தேர்தலின்போதுதான் ஒவ்வொரு சட்டப்பேரவைத் தொகுதிக்கும் கிட்டத்தட்ட 20,000 வாக்குகள், 30,000 வாக்குகள் அண்ணா தி.மு.க. கூட்டணிக்கு வாக்களிக்கக்கூடிய மக்களினுடைய வாக்குகள் ஏற்கெனவே Photo Identity Card எடுத்துவிட்ட மக்களினுடைய வாக்குகளெல்லாம் தி.மு.க. தலைமையினுடைய உத்தரவினுடைய அடிப்படையில் மாவட்ட ஆட்சித் தலைவர்களுக்கு அந்த உத்தரவு போய் R.D.O.க்களுக்குச் சென்று, Municipal Commissioner என்ற நிலையிலே இருக்கின்ற Assistant Returning Officer-க்குச் சென்று எடுத்த எடுப்பிலே ஒரு தெருவிலே 1,000 ஓட்டுகள் இருக்கின்றன என்றால், அதிலே 800 ஓட்டுகள் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அணிக்கு ஆதரவான ஓட்டு என்றால் அந்த 800 ஓட்டுகளையும் ஸ்கேல் வைத்து அடித்துவிட்ட நிலை, ரெக்கார்டுகள் ஆக இருக்கிறது. இத்தகைய ஊழலை, இத்தகைய முறைகேட்டை, குறுக்கு வழியிலே தேர்தலிலே வெற்றி பெற வேண்டும் என்ற நோக்கோடு தி.மு.க.வினர் மேற்கொண்டனர்.

பிற்பகல் 1-20

தற்போது நடக்க இருக்கிற உள்ளாட்சித் தேர்தலில் புதிய வாக்காளர்களை ஏற்கெனவே இ க்கின்ற பட்டியலை ஓட்டித்தான் சேகரிக்கிறார்களேயொழிய, இதில் அரசினுடைய தலையீடு அணுவளவும் இல்லை. அப்படி சூழ்ச்சியான முறையிலே வாக்காளர் பட்டியலில் வாக்களிக்கக்கூடிய மக்களை தி.மு.கவின் தலையீட்டால் நீக்கப்பட்டபோதும்கூட, தமிழகத்து மக்களுடைய தானைத் தலைவியாக விளங்குகிற புரட்சித் தலைவி அவர்களுடைய செல்வாக்கின் காரணமாக, தொகுதிக்கு 20,000, 30,000 ஓட்டுகள் நீக்கப்பட்ட போதிலும் தமிழகமே ஒன்று திரண்டு புரட்சித் தலைவி அவர்களின் பின்னாலே இருந்த காரணத்தினால் (மேசையைத் தட்டும் ஒலி) முதலமைச்சராக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள் என்பதுதான் உண்மை என்பதனை நான் எதிர்க் கட்சி உறுப்பினர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பாரமலை அவர்கள் பேசுகி போது ஒரு தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த. . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நி மைச்சர் அவர்கள் 1-30 மணிக்கு முடிக்க வேண்டும். ஏதாவது விப்புகள் இருந்தால் சொல்லிவிடுங்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை இங்கே தந்திருக்கிறீர்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சட்டப் பேரவை உறுப்பினர்களுடைய கோரிக்கைகளுக்கு. கருணை அடிப்படையில் அவர்கள் செவி சாய்த்து, உங்களது கோரிக்கைகளையெல்லாம் ஈடேற்றக் கூடிய தாய் உள்ளம் படைத்தவர்தான் அன்னை புரட்சித் தலைவி என்பது (மேசையைத் தட்டும் ஒலி) நீங்கள் அனைவரும் அறிந்த ஒன்று. அந்த அடிப்படையிலே நேரம் இல்லாத காரணத்தினால் பலவற்றை விளக்கமாகச் சொல்லக்கூடிய நிலையிலே இல்லை. அவற்றையெல்லாம் மாண்புமிகு முதல்வர் அவர்கள் பரிவோடு பரிசீலிப்பார்கள் என்ற உறுதியை மாண்புமிகு அம்மா முதலமைச்சர் அவர்களின் சார்பில் அவைக்கு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மற்றும் ஒன்றை மாண்புமிகு உறுப்பினர்கள் கோரினார்கள். கார் லோன் வேண்டும் என்ற கோரிக்கையை வைத்தார்கள். பல பகுதிகளிலேயிருந்து வந்து இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு கார் வசதி இல்லை. 'TIIC' மூலமாக கார் லோன் வேண்டும் என்றும் அதற்கு Interest concession வேண்டுமென்றும் கேட்டு இருக்கிறீர்கள். மாண்புமிகு அம்மா அவர்களிடம் அதை எடுத்துச் சொன்னேன். கட்டாயம் அந்த உதவியை மாண்புமிகு உறுப்பினர்களுக்குத் தருவதற்கு (மேசையைத் தட்டும் ஒலி) உத்தரவாதம் தர வேண்டும் என்று எடுத்துச் சொன்னார்கள். அதற்கும் அம்மா அவர்கள் சம்மதித்திருக்கிறார்கள்.

இன்னும் முக்கியமான ஒன்று. மக்கள் பணியை இரவு பகல் என்று பாராமல் ஆற்றுகின்ற சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு கடிதத் தொடர்பு, ஆட்சியுடன் கடிதத் தொடர்பு ஆகியவற்றை செம்மையாக ஈடேற்ற computer வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் பலர் கோரினீர்கள். அந்த computer-ஐ தொகுப்பு நிதியிலிருந்து எம்.எல்.ஏ.க்களுடைய நிதியிலிருந்து தரலாம் என்ற கோரிக்கையையும் தந்திருக்கிறீர்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தாயுள்ளத்தோடு அதற்கும் இசைவு தெரிவித்திருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை நான் (மேசையைத் தட்டும் ஒலி) உங்களுக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்கள் இறப்பிற்குப் பிறகு அவர்களுடைய வாரிசுதாரர்களுக்கு தற்போது மாதம் 500 ரூபாய் வழங்கப்படுகிறது. அதை உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னீர்கள். அம்மாவிடம், மாண்புமிகு



முதல்வர் அவர்களிடம் அதை எடுத்து இயம்பினேன். உடனடியாக அந்த 500 ரூபாயை 2,500 ரூபாயாக உயர்த்தித் தர வேண்டும் என்ற (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையினையும் தாய் உள்ளத்தோடு அறிவித்திருக்கிறார்கள்.

பேசியவர்கள் எல்லோரும் சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கு இன்றைய வாழ்க்கைச் செலவை கணக்கில் கொண்டு நிதித் தட்டுப்பாடு இருந்தபோதிலும்கூட வேறு ஏதாவது உயர்த்த முடியுமா என்ற கோரிக்கையை இங்கே பல்வேறு உறுப்பினர்கள் வைத்தார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சில ஆணைகளை இட்டிருக்கிறார்கள். தற்போது உறுப்பினரின் ஈட்டுப் படி ரூ. 3,500 ஆக இருப்பதை ரூ. 4,000 ஆக உயர்த்தியும், தற்போது வழங்கப்படும் தொலைபேசிப் படி ரூ. 2,750 என்றிருப்பதை உயர்த்தி 4,000 ரூபாய் ஆக்கவும் சட்டமன்ற உறுப்பினர்கள் தங்கள் தொகுதியில் சீரிய முறையில் தங்கள் கடமைகளை ஆற்றுவதற்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் தொகுதிப் படி 875 ரூபாயை 2,000 ரூபாயாக உயர்த்தவும், தபால் படி ரூ.875-ஐ ரூ.1,500 ஆக உயர்த்தவும்; அதுபோலவே தொகுப்புப் படி ரூ. 2,000-ஆக இருப்பதை ரூ. 2,500-ஆக உயர்த்தலும், ஒட்டுமொத்தமாக தற்போது மாண்புமிகு உறுப்பினர்கள் பெற்று வருகின்ற ரூ. 12,000 என்கிற ஒட்டுமொத்த பணத்தை 16,000 ரூபாயாக உயர்த்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) ஆணையிட்டிருக்கிறார்கள் என்ற மகிழ்ச்சியான செய்தியை இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 1-25

ஆட்சி தற்போது சந்தித்து வருகிற அவலமான நிதி நெருக்கடி அவைக்குத் தெரிந்த ஒன்று, கஜானா காலியாகிவிட்ட நிலை என்று இருந்த போதிலும்கூட, நமது தமிழகத்தினுடைய தாய் அன்னை புரட்சித் தலைவி அவர்களைப் பொறுத்தவரைக்கும் சட்டப் பேரவை உறுப்பினர்கள் மக்களுக்குப் பணியாற்றுகிறபோது அவர்களுக்கு உரிய ஊக்குவிப்பைத் தர வேண்டுமென்ற நோக்கோடு இதுவரையிலும் சுதந்திரத் தமிழகத்தில் எந்தக் காலத்திலும் இல்லாத அளவிற்கு எடுத்த எடுப்பிலேயே 4,000 ரூபாய் உயர்த்தித் தருவது (மேசையைத் தட்டும் ஒலி) நமது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்கள்தான். 12,000 ரூபாயை தாயுள்ளத்தோடு 16,000 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள் என்பதை அவைக்கு நான் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதைப்போலவே மேற்கூறிய சலுகைகளை அளித்ததைக் கருத்தில்கொண்டு மாண்புமிகு அமைச்சர்களுக்கு மாண்புமிகு பேரவைத்

தலைவர் அவர்களுக்கு ஈட்டுப் படி ரூ. 3,000-ஆக இருப்பதை மாதந்தோறும் 6,000 ரூபாயாக உயர்த்தி வழங்க வேண்டுமென்ற ஆணையையும் (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் இட்டிருக்கிறார்கள். அதுபோலவே சம்பளம். . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நிதியமைச்சருக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். முதலமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** அதுபோலவே, முதன்முறையாக மாதந்தோறும் எதிர்பாராத செலவு ரூ. 3,000-மும், தொகுதிப் படியாக ரூ. 2,000-மும் வழங்கப்பட வேண்டுமென்ற ஆணையையும் அம்மா அவர்கள் அளித்திருக்கிறார்கள் என்பதை அவைக்குத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சி அடைகிறேன்.

அதுபோலவே, மாண்புமிகு அமைச்சர்கள் மற்றும் பேரவைத் தலைவர் ஆகியோரின் ஒட்டுமொத்தமான மாதச் சம்பளம் ரூ. 18,000-ஆக உயர்த்தப்பட்டு உள்ளது என்பதையும் அவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேற்கூறிய சலுகைகள் அளித்ததைக் கருத்தில்கொண்டு பேரவைத் துணைத் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர், அரசு தலைமைக் கொறடா ஆகியோருக்கு சம்பளம் ரூ. 6,500-ஆக இருப்பதை ரூ. 7,000-ஆகவும், ஈட்டுப் படி ரூ. 3,000-ஆக இருப்பதை ரூ. 6,000-ஆகவும் உயர்த்தி வழங்க வேண்டுமென்ற ஆணையையும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள்.

முதன்முதலாக மாதந்தோறும் எதிர்பாராத செலவு ரூ. 2,500-ம் தொகுதிப் படியாக ரூ. 2,000-ம் வழங்கப்பட வேண்டுமென்ற ஆணையையும் மாண்புமிகு முதல்வர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள்.

பேரவைத் துணைத் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர், தலைமை அரசுக் கொறடா ஆகியோரின் மாதச் சம்பளம் ரூ. 9,500 ஆக இருப்பது ரூ. 17,500-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது என்பதையும் (மேசையைத் தட்டும் ஒலி) நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்லாமல், சட்டமன்ற கூட்டங்களில் கலந்துகொள்வதற்கும் குழுக் கூட்டங்களில் கலந்துகொள்வதற்கும் உறுப்பினர்களுக்கு வழங்கப்படும் தினப் படி 250 ரூபாயை மாண்புமிகு முதல்வர் அவர்கள் 400 ரூபாயாக உயர்த்தியிருக்கிறார்கள் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதையும் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



அதைப்போலவே, பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர், எதிர்க் கட்சித் தலைவர், அரசு தலைமைக் கொறடா ஆகியோருக்கு நாளொன்றுக்கு 16 லிட்டர் எரிபொருள் அல்லது மாதத்திற்கு அதிக அளவு 500 லிட்டர் எரிபொருள் என்று வழங்குவதற்கு முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். உறுப்பினர்கள் பதவிக் காலத்தில் இறக்க நேரிடின் அவர்கள் எஞ்சிய பதவிக் காலம் வரை அவரது வாரிசுதாரருக்கு குடும்பப் படி ரூ. 500 மாதந்தோறும் வழங்கப்படுகிறது. இக்குடும்பப் படி ரூ. 500-லிருந்து ரூ. 1,000-ஆக உயர்த்தி வழங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தற்போது முன்னாள் சட்டமன்றப் பேரவை மற்றும் மேலவை உறுப்பினர்களுக்கு சில சலுகைகள் வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர்கள் கூறினீர்கள். தற்போது மருத்துவப் படி ரூ. 2,000 ஆக அவர்களுக்கு வழங்கப்படுகிறது. அதை ரூ. 3,000-ஆக உயர்த்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஆணையிட்டிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த உயர்வுகள் அனைத்தும் 15-9-2001 தேதியிலிருந்து அமலுக்கு வருமென்று நான் அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் இதுகாறும் கூறிய பல்வேறு ஆலோசனைகளை அரசு கருத்தில் கொண்டு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்ளும். அரசு இயந்திரத்தில் நிருவாகத் தூய்மையை செம்மையாக, துரிதமாக, விரைவாக மேற்கொள்ள வேண்டுமென்ற ஆணையை, ஆணித்தரமான ஆணையை மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இட்டிருக்கிறார்கள். அது செவ்வனே நடைமுறைப்படுத்தப்படும் என்ற வாக்குறுதியைத் தந்து, அவையிலே வைத்திருக்கிற மானியக் கோரிக்கைகளை எல்லாம் அவை ஏற்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டு அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 1-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அலுவல் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது. பேரவைத் தலைவர் என்ற முறையில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தச் சம்பள உயர்வு வெளிநடப்புச் செய்த உறுப்பினர்களுக்கும் பொருந்தும் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

**(அ) கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 9—மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது.

"மாநில ஆட்சித் தலைவர், அமைச்சர்கள், தலைமையிடப் பணியாளர்கள் பற்றிய 9 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.1,85,78,00,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சரின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஆ) கோரிக்கை எண் 11 —மாவட்ட நிருவாகம்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 11—மாவட்ட நிருவாகம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே.என். சேகரன், இருக்கையில் இல்லை.

திரு. கே.என். சேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"மாவட்ட நிருவாகம் பற்றிய 11 ஆம் எண் மானியக் கோரிக்கையின் கீழ் ரூ.5,70,78,58,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களுடைய தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

### (இ) கோரிக்கை எண் 7 — மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 7 — மாநிலச் சட்டமன்றம். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.



**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கே. சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 7 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.12,30,41,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஈ) கோரிக்கை எண் 8—தேர்தல்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 8—தேர்தல்கள். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.



திரு. மீ.அ. வைதியலிங்கம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. கந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு.பெ. சாமிநாதன், இருக்கையில் இல்லை.

திரு. மு.பெ. சாமிநாதன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்.

**திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ்.வி. திருஞானசம்பந்தம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. க. முருகவேல் ராஜன்.

**திரு. க. முருகவேல் ராஜன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. க. முருகவேல் ராஜன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம், பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சு. சிவராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"தேர்தல்கள் பற்றிய 8 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.87,84,50,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)



ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(உ) கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 41—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும். வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. மீ.அ. வைதியலிங்கம், இருக்கையில் இல்லை.

திரு. மீ.அ. வைதியலிங்கம், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப் பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. சி.ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. கா. சுந்தசாமி.

**திரு. கா. கந்தசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கா. கந்தசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ், இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. வி.கே. லட்சுமணன்.

**திரு. வி.கே. லட்சுமணன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வி.கே. லட்சுமணன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. துரை. கி. சரவணன், இருக்கையில் இல்லை.

திரு. துரை. கி. சரவணன், அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 41ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.30,29,17,37,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஊ) கோரிக்கை எண் 42—பல்வகை**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 42—பல்வகை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மே.ப. காமராஜ், இருக்கையில் இல்லை.

திரு. மே.ப. காமராஜ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. டாக்டர் தே. குமாரதாஸ். இருக்கையில் இல்லை.

டாக்டர் தே. குமாரதாஸ் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்பெற்றதாகக் கருதப்படுகிறது.

"பல்வகை பற்றிய 42 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.3,96,26,25,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

*பிறபகல் 1-35*

### (எ) கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 60—பல்வகை மூலதனச் செலவு. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்;** திரு. ஜி.கே. மணி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களின் வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.

**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"பல்வகை மூலதனச் செலவு பற்றிய 60 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.9,91,17,98,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

**(ஏ) கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும், முன்பணங்களும்**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கோரிக்கை எண் 61—மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன். திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு.எச்.எம். ராஜு அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி. பழனிசாமி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. ஐ. கணேசன்.



**திரு. ஐ. கணேசன்:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஐ. கணேசன் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது. திரு. மு. கார்த்தி.

**திரு. மு. கார்த்தி:** இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. மு. கார்த்தி அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகிறது.

"மாநில அரசு வழங்கும் கடன்களும் முன் பணங்களும், பற்றிய 61 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் ரூ.6,43,12,70,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## 6. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2001 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் ஆய்வு செய்யவும் மேதகு ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்."

## 5. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண்2) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் சட்டத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (உ) சட்டப் பேரவை உறுப்பினர்களுக்குத் தேநீர் வழங்கல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. மாலை சட்டமன்றக் கூட்டம் நடைபெறவிருப்பதால், 4-30 மணியளவில் சட்டமன்றப் பேரவை மண்டபத்தை ஒட்டிய பகுதியில் உறுப்பினர்களுக்குத் தேநீர் வழங்க ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.





பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் பிற்பகல் 4-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-37 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

பிற்பகல் 4-30 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் டாக்டர் கா. காளிமுத்து அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

## 6. அறிவிப்புகள்-தொடர்ச்சி

### (ஊ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "2001-ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் ஆய்வு செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்து உள்ளார்கள்."

## 10.அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)

### (அ) தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2001), மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2001) @ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

---

@ 12-9-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை நான் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி சார்பிலே வரவேற்கிறேன். ஆதரிக்கிறேன். ஆனால் இதையொட்டி ஒருசில கருத்துக்களைச் சொல்ல வேண்டிய தேவை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. அரசு, பொதுத் துறையிலே இருக்கிற நிறுவனங்களைப் பாதுகாப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றால், அந்த ஸ்தாபனங்களை இன்று பாதுகாக்க முடியாத ஒரு நிலை ஏற்பட்டிருக்கிறது. ஏற்கெனவே, தமிழ்நாடு சிமெண்ட் ஃபேக்டரியைப் பொறுத்த அளவிலே, அதைப் பாதுகாக்கக் கூடிய முறையிலேயும், அதேபோன்று தமிழ்நாடு Newsprint and papers நிறுவனத்தைப் பாதுகாக்கக்கூடிய முறையிலேயும் இந்தத் திருத்தத்தைக் கொண்டு வந்திருப்பதை நான் வரவேற்கிறேன்.

ஏற்கெனவே, பொதுத் துறை ஸ்தாபனங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்காக மத்திய அரசுகூட நிதி உதவிகளைச் செய்து இருக்கிறது. அதேபோன்று பாதுகாப்பு நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கின்றன. சிமெண்ட் தொழிற்சாலைக்கும் அதேபோன்று NewsPrint தொழிற்சாலைக்கும் மட்டும் போட்டிருப்பது காணாது. மேலும், பல பொதுத் துறை ஸ்தாபனங்களை, குறிப்பாக, அரசு ரப்பர் கார்ப்பரேஷனை பாதுகாத்துக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று, தமிழ்நாடு டீ கார்ப்பரேஷனைப் பாதுகாக்க வேண்டிய தேவை இன்றைக்கு ஏற்பட்டிருக்கிறது. தேயிலைத் தொழிலுக்கும் அதேபோன்று ரப்பர் தொழிலுக்கும் ஏற்பட்டு இருக்கிற நெருக்கடி, மத்திய அரசு எடுத்துக் கொண்டு இருக்கிற தவறான பொருளாதாரக் கொள்கையின் காரணமாக, இன்று சார்க் நாடுகளிலே இருந்தும், அதேபோன்று வெளிநாடுகளிலே இருந்தும் இந்த இரண்டு பொருள்களையும் இந்த நாட்டிலேயே இறக்குமதி செய்யப்படுவதன் காரணமாக, இந்த இரண்டு தொழிலும் இன்றைக்குக் கடுமையாக பாதிக்கப்பட்டு இருக்கிறது என்பது மட்டுமல்ல; இதனால் அரசினுடைய இந்த இரண்டு பிரதான தொழில் ஸ்தாபனங்கள், ஏற்கெனவே பல கோடி ரூபாய் லாபத்தை ஏற்படுத்திக் கொண்டிருந்த அந்த நிறுவனங்கள், இன்று மூடுவிழாவை நோக்கிச் சென்று கொண்டிருப்பது தமிழக அரசுக்கு நன்கு தெரியும். ஆகவே, அரசு, ரப்பர் தேவைப்படுகின்ற இடங்களுக்கெல்லாம், அரசு ரப்பர் கார்ப்பரேஷனிலிருந்து வாங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், தேயிலைத்



2001 செப்டம்பர் 13] [திரு. ஜே. ஹேமச்சந்திரன்]

தொழிலைப் பாதுகாப்பதற்கு சிவில் சப்ளைஸ் கார்ப்பரேஷன் மூலம், அதனுடைய கடைகளிலே தேயிலை விற்பதற்கான நடவடிக்கைகளை எடுத்து இருக்கிறார்கள். அதேபோன்று, ரப்பர் தொழிலையும் பாதுகாத்துக் கொள்வதற்கு, தேயிலைக்கு எடுத்த அதேபோன்ற நடவடிக்கையை இந்த ரப்பர் தொழிலையும் பாதுகாத்துக் கொள்வதற்கு, குறிப்பாக அரசு ரப்பர் கார்ப்பரேஷனைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக் கொள்கிறேன்.

ஏற்கெனவே, சிமெண்டைப் பொறுத்த அளவிலே, சென்ற அவையிலே Public Undertaking Committee-யிலே உறுப்பினராக இருந்த நேரத்தில், ஆலங்குளத்திலே இருக்கிற சிமெண்ட் ஆலையை அந்தக் கமிட்டி பார்வையிட்ட நேரத்தில் அதனுடைய நிர்வாகப் பொறுப்பிலே இருந்தவர்கள், தமிழக அரசினுடைய தவறான நடவடிக்கைகள் காரணமாகவும் அல்லது எங்களை ஆதரிக்க, எங்களைப் பாதுகாக்கக்கூடிய முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்படாததன் காரணமாகவும் இந்த ஆலை மூடுவிழாவை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்ற தகவலையெல்லாம் அன்றைக்கு எடுத்து வைத்தார்கள். அது சம்பந்தமாக ஏராளமான வாதப் பிரதிவாதங்கள் இங்கே நடந்து இருக்கின்றன என்ற காரணத்தினால் நான் அதற்குள்ளே போகவில்லை. இன்று அந்தத் தொழிலைப் பாதுகாத்துக் கொள்வதற்கு இந்த நடவடிக்கை நிச்சயமாக உதவும் என்று கருதுகிறேன். அதேபோன்ற நடவடிக்கைகள் பொதுத் துறை ஸ்தாபனங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு, அதேபோன்று தேவையான பொருள்களை நம்முடைய Co-optex வழியாக, கூட்டுறவு நூற்பாலைகள் வழியாக வாங்குவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை இதுபோன்ற சட்டத்திலே தேவையான திருத்தங்களைக் கொண்டுவந்து செய்ய வேண்டுமென்று கேட்டு வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன்.

*பிற்பகல் 4-35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த ஒளிவின்மை என்பதற்குப் பெயரளவில்தான் நாம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வருகிறோமேயொழிய, சில நேரங்களிலே இதுபோன்ற சட்டங்களை,

ஆட்சிப் பொறுப்புக்கு வரக்கூடியவர்கள், அதிகார வர்க்கம் தங்களுக்கு உகந்தாற்போல வளைத்துக் கொள்கிறது. அந்த வகையிலேதான் எப்படிப்பட்ட சூழலுக்கு சிமெண்ட் கார்ப்பரேஷன் (TANCEM) முன்பு ஆளாக்கப்பட்டது என்பது இந்த அவையிலே முழு அளவிலே விவாதிக்கப்பட்டு இருக்கிறது.

சில நேரங்களில் அரசு அப்படிப்பட்ட ஒரு நடவடிக்கை எடுக்கிற காரணத்தால் சிமெண்ட் கார்ப்பரேஷன் நட்டத்திற்கு உள்ளானது மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே சிமெண்ட் விலை உயர்வுக்கும் அது காரணமாக இருந்து, தமிழ்நாட்டு மக்களை பெருத்த அளவில் பாதித்து இருக்கிறது. இப்படிப்பட்ட பொதுத் துறை நிறுவனங்களைக் காப்பாற்றக்கூடிய அந்த மாபெரும் பொறுப்பு அரசுக்கு இருந்து கொண்டிருக்கிறது. அதனாலே G.O.75 பற்றிக்கூட இந்த அவையிலே அதிகமாக விவாதிக்கப்பட்டு, அந்த G.O. 75 வந்த காரணத்தினாலே சிறு தொழில்கள் எப்படியெல்லாம் தமிழகத்திலே பாதிப்புக்கு உள்ளானது என்பதுபற்றி நம்முடைய நிதித் துறை அமைச்சர் அவர்கள் இந்த அவையிலே குறிப்பிட்டார்கள்.

எங்களுக்கு இருக்கிற வருத்தமெல்லாம், சிமெண்டில் பெருத்த அளவிலே ஊழல் நடந்து இருக்கிறது; முறைகேடுகள் கடந்த ஆட்சியிலே நடந்து இருக்கின்றன; பல கோடி ரூபாய் இதிலே கொள்ளை அடிக்கப்பட்டு இருக்கிறது என்றெல்லாம் சொல்லி, அதை நீங்கள் எல்லாம் கண்டு பிடித்தும்கூட இன்னும் அந்தத் தவறு செய்த அதிகாரிகள் மீதோ, தவறு செய்த, அப்போதிருந்த ஆட்சியாளர்கள் மீதோ இன்று வரை ஒரு சிறு துளி நடவடிக்கையும் இல்லை என்பதுதான் தமிழ்நாட்டு மக்களுக்கு பெருத்த ஏமாற்றத்தை அளித்துக் கொண்டிருக்கிறது.

நான் ஒரு முறை இந்த அவையிலே கேட்டபோது, நம்முடைய மாண்புமிகு நிதித் துறை அமைச்சர் அவர்கள் சொல்கிறபோது, தண்டிக்கப்பட்ட மக்களை விடுவிப்பதுதான் எங்களுடைய ஆட்சியின் நோக்கம், அதாவது தவறு செய்தவர்களைத் தண்டிப்பது எங்கள் நோக்கம் அல்ல என்கிற வகையில் கோடிட்டு சில கருத்துக்களை இங்கே சொன்னார்கள். அப்படிப்பட்ட கருத்து நாட்டு மக்களுக்கு எந்த வகையிலும் உகந்ததாக இருக்காது. வாக்களித்த மக்களுக்கு நாம் நல்லதைச் செய்ய வேண்டுமென்று சொன்னால், தவறு செய்தவர்கள் யாராக இருந்தாலும் நடவடிக்கை எடுக்க வேண்டும். டான்செம் கம்பெனியில் இருக்கக்கூடிய அதிகாரிகளே இதற்கு உடந்தையாக இருந்தார்கள், வளைந்து





கொடுத்தார்கள் என்றுகூட இந்த அவையிலே நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அன்று அப்படி வளைந்து கொடுத்த அதிகாரி யார்? அந்த அளவிற்கு அந்த சிமெண்ட் கொள்கையையே தலைகீழாக மாற்றி, மூட்டை 80 ரூபாய் சிமெண்டை அன்று 200 ரூபாய் மூட்டை என்று விற்கிற அளவிற்கு விலை உயர்வுக்கு உடந்தையாக இருந்த, அந்த ஊழலுக்கு உறுதுணையாக இருந்த அதிகாரிகள் யார் என்றும் நீங்கள் இந்த நாட்டிற்கு அடையாளம் காட்ட வேண்டும். அதேபோல அந்த அளவிற்கு ஊழலை வளர்த்துவிட்டு, அதிலே லாபம் அடைந்தவர்களையும் நீங்கள் நாட்டிற்கு அடையாளம் காட்டினால்தான், நீங்கள் உண்மையிலேயே வாக்களித்த மக்களுக்கு நன்மை செய்கிறீர்கள் என்று பொருளாகும். ஆகவே, இந்த பொதுத் துறை நிறுவனங்கள் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் சொன்னதுபோல, டான்செம் மட்டுமல்ல, அதுபோல பல பொதுத் துறை நிறுவனங்கள் இன்று நட்டத்திற்கு ஆளாக்கப்பட்டு இருக்கின்றன. அது எதிர்காலத்திலே நடக்குமா அல்லது எதிர்காலத்திலே அதுவும் மூடுவிழாவைக் காணுமா என்று சொல்லக்கூடிய நிலைமையில் போய்க் கொண்டிருக்கிற காரணத்தினால், நீங்கள் உரிய இதுபோன்ற சட்டத் திருத்தங்களைக் கொண்டு வந்ததைக் காப்பாற்றுவதோடு மட்டுமல்லாமல், அதிகாரிகளைக் கொஞ்சம் தயவுசெய்து, அது யாராக இருந்தாலும், Rules and Regulations-க்குத் தகுந்தாற்போல அவர்கள் நடக்கவில்லை என்று சொன்னால், அடுத்த கணம் அவர்கள் வேலையில் இருந்து நீக்கப்படுவார்கள் என்கிற உறுதியையும், கொள்ளை அடிக்கிற கூட்டம் யாராக இருந்தாலும் அவர்களைக் கைது செய்து சிறையிலே அடைப்போம் என்கிற உறுதியையும் நீங்கள் நாட்டு மக்களுக்கு அளித்தால்தான் உங்களை மக்கள் நம்புவார்களேயொழிய, இல்லையென்று சொன்னால், இந்தச் சட்டங்கள் எல்லாம் போடுகிறோம்; ஏட்டளவிலே இருந்து வருகிறது; ஏட்டுச் சுரைக்காய் கறிக்கு உதவாது என்று சொல்வதுபோல, நாம் இந்த அளவிற்கு நேரத்தைப் பயன்படுத்தி, இந்த அளவிற்குப் பணத்தைச் செலவழித்து, இப்படியெல்லாம் சட்டத்தை இயற்றி, அந்தச் சட்டம் செயல்படாமல் போகும் என்று சொன்னால், பிறகு சட்டமே தேவையில்லை. ஆகவே, சட்டத்தைச் செயலாக்கத்திற்குக் கொண்டு வருவதற்கு நம்முடைய நிதித் துறை அமைச்சர் அவர்களும் அரசும் நிச்சயமாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு இந்த ஒப்பந்தப் புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவை வரவேற்று அமைகிறேன். நன்றி, வணக்கம்.

பிற்பகல் 4-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒளிவின்மை சட்டத் திருத்தத்தைப் பொறுத்தவரையில், இது கொள்கை ரீதியாக எடுக்க வேண்டிய ஒரு பிரச்சினை. தமிழகத்திலே சிறு தொழில்கள் வளர வேண்டும் என்பதிலே யாருக்கும் இருவேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. பொது நிறுவனங்களுடைய தொழில்களைக் காக்க வேண்டும் என்பதிலேயும் யாருக்கும் இருவேறுபட்ட கருத்துக்கள் இருக்க முடியாது. ஆனால், அதேநேரத்தில், வாங்குபவர்களின்மீது அது அரசு நிறுவனமாக இருந்தாலும், மற்ற கூட்டு நிறுவனங்களாக இருந்தாலும், அவர்களுக்குக் குறைந்த விலையிலே வாங்குவதற்கான ஒரு வாய்ப்பைக் கொடுக்கவேண்டுமா என்பதுதான் கேள்வி. இதிலே இரண்டுவிதமான சலுகைகளைக் கொடுக்கிறோம். price preference, purchase preference— கொள்முதலிலே ஒரு சலுகை, விலையிலே ஒரு சலுகை, கொள்முதலிலே மட்டும் சலுகை இருக்கும் என்று சொன்னால், அதிலே எந்தவிதமான பிரச்சினையும் இருக்க முடியாது. ஆனால், விலையிலே சலுகை கொடுக்கிறபோது, அதிலே பல்வேறு தவறுகள் நடப்பதற்கு, வாய்ப்புகள் உருவாவதற்குக் காரணங்கள் இருக்கின்றன. குறிப்பாக இந்த இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவருடைய அறிக்கை, மார்ச் 31, 2000-ல் முடிந்த இந்த அறிக்கையிலே பக்கம் 119-ல் சுட்டிக்காட்டப்பட்ட ஒரு செய்தியை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

"தமிழ்நாடு சிமெண்ட் கழகத்திடமிருந்து அதிக விலைக்கு சிமெண்ட் வாங்கியது தொடர்பாக அதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது. 1997 பிப்ரவரி 19ஆம் தேதி அன்று பிறப்பிக்கப்பட்ட அரசாணையின் அடிப்படையில், தமிழ்நாட்டில் உள்ள அனைத்து முகமைகளும் ஆகஸ்ட் 1997 வரை தமிழ்நாடு சிமெண்ட் கழகத்திடமிருந்து சிமெண்ட் கொள்முதல் செய்தன. இக்கழகம் குறிப்பிட்ட காலத்திற்குள் சிமெண்ட் வழங்க இயலாதபட்சத்தில் முகமைகள் கழகத்திடமிருந்து கொள்முதல் செய்வதற்குப் பதில், வெளி ஒப்பந்தம் முறை மூலம் சிமெண்ட் வாங்கலாம் என்று ஆகஸ்ட் 1997 அரசாணையில் பிறப்பிக்கப்பட்டது. வேலூர், ஈரோடு, மதுரை மற்றும் சேலம் போன்ற முகமைகளிலுள்ள ஆவணங்களை ஆய்வு செய்ததில், ஏப்ரல் 1997 முதல் ஆகஸ்ட் 1997 வரையிலான காலத்தில், 23,799.50 மெட்ரிக் டன் சிமெண்ட் இக்கழகத்திடமிருந்து வாங்கியது தெரிந்தது. முகமைகள்





பகிரங்கமாக ஒப்பந்தப்புள்ளிகள் பெற்று open tender முடிவு செய்த குறைந்தபட்ச விலை, மெட்ரிக் டன்னுக்கு ரூபாய் 2,227 மற்றும் ரூபாய் 2,640-க்கு இடைப்பட்டிருக்க, இக்கழகத்திடமிருந்து வாங்கிய சிமெண்டின் விலை மெட்ரிக் டன்னுக்கு ரூ.3,160 என்று இருந்தது. ஆகவே, தனியாரிடம் open tender-லே வாங்குகிறபோது ரூ.2,227லிருந்து ரூ.2,640 வரை இருந்தது. அதையே இந்த சிமெண்ட் கம்பெனியிலே வாங்குகிற விலை ரூ.3,160 ஆக இருந்தது. இவ்வாறாக, அதிக விலை கொடுத்து இக்கழகத்திடமிருந்து சிமெண்ட் வாங்கியதில் கீழ்க்கண்டவாறு ரூ.1.68 கோடி தவிர்த்திருக்கக்கூடிய செலவு ஏற்பட்டது" என்று இதிலே குறிப்பிடப்பட்டிருக்கிறது.

ஆகவே, இதனுடைய நோக்கம் என்பது, வாங்குவோருக்கு நீங்கள் purchase preference கொடுப்பதிலே எந்தவிதமான சந்தேகமும் இருக்க முடியாது. ஆனால், price preference மற்ற இடங்களிலே குறைந்த விலைக்குக் கிடைக்கிறபோது, அதே விலைக்கு இங்கே இருக்கிற சிறு தொழில்களோ, அரசு நிறுவனங்களோ கொடுக்க முன்வரும் என்று சொன்னால், 15 சதவிகிதம் என்ன நூற்றுக்கு நூறு சதவிகிதம்கூட அவர்களிடமிருந்து வாங்கிக் கொள்வதிலே எந்தவிதமான கொள்கை முரண்பாடும் இருக்க முடியாது. ஆனால் அதேநேரத்தில், price preference கொடுக்கிற காரணத்தினால் சில தவறுகள் ஏற்படுவதற்கு இதிலே வாய்ப்புகள் இருக்கின்றன. குறிப்பாக, கடந்த காலங்களில் அதுபோல வெளி மாநிலங்களிலே குறைந்த விலைக்குக் கிடைக்கிற பொருள்களைக்கூட Letter pad கம்பெனிகளாக் சில கம்பெனிகள் உருவாகிக்கொண்டு அவற்றின் மூலமாக அரசு நிறுவனங்களுக்கு அதிக விலைக்கு சப்ளை செய்த வரலாறுகள் எல்லாம் உண்டு. ஆகவே, அதுபோன்ற தவறுகள் ஏற்படுகிற வாய்ப்பு இருக்கிற காரணத்தினால், உண்மையான small scale industries இங்கேயே சில பொருள்களைத் தயாரிப்பவர்கள்கூட இதிலே போட்டியிட முடியாத சூழ்நிலைகள் உருவாகின்றன. ஆகவே, உண்மையான சிறு தொழிலை நடத்துகிறவர்களுக்கு அவர்களுடைய தொழிலைப் பாதுகாக்க வேண்டும் என்று சொன்னாலும்கூட, இதிலே நீங்கள் purchase preference கொடுப்பதிலே எந்தவிதமான வேறுபாடும் இருக்க முடியாது. அதைத்தான் கடந்த கால ஆட்சியிலேகூட டெண்டர் கோருகிறபோது எல்-1 ஆக இருக்கிற குறைந்த விலைக்கு அதிலே போட்டி இடுபவர்களுடைய விலைக்கு மற்ற சிறு தொழில் செய்பவர்களும் அந்த விலைக்குக் கொடுக்க முன்வருவார்கள் என்று சொன்னால், 15 சதவிகிதம் அல்ல 50 சதவிகிதம்கூட வாங்கலாம் என்று கூட சொல்லப்பட்டிருந்தது. ஆகவே, இந்த அரசாணையைப் பொறுத்தவரையில், இதிலே நீங்கள் price preference என்பதையெல்லாம் எடுத்துவிட்டு purchase preference அவர்களுக்கு வாங்குகிற சலுகை

கொடுத்தோம் என்று சொன்னால், மற்ற அரசு நிறுவனங்கள்—நீங்கள் வேண்டுமானால் டான்செம் என்பது...(குறுக்கீடு) நான் சொல்லிவிடுகிறேன்—ஒரு பொது நிறுவனம் என்றுகூட சொல்லலாம். அது ஒரு பொது நிறுவனம்; அதிலே போனாலும்கூட பரவாயில்லை. ஆனால் பொது நிறுவனங்களுக்கு மட்டும் இதைக் கொடுக்காமல் சிறுதொழில் நிறுவனங்கள் என்று தனியார் நடத்துகின்ற நிறுவனங்களாகவும் இருக்கின்றன. ஆகவே, அரசு நிறுவனங்கள் அதுபோன்ற தனியார் நிறுவனங்களிலே வாங்குகிறபோது, இதுபோன்ற பிரச்சினைகள் உருவாகக் காரணமாக இருக்கின்றன.

*பிற்பகல் 4-45*

மேலும், இதுபோன்ற சிறுதொழில் நிறுவனங்கள் Monopolistic ஒரே நிறுவனமாக இருந்துவிடும் என்று சொன்னால் அவர்கள் சொல்கிற விலைக்கே பொருட்களை நீங்கள் 15 சதவிகிதம் வாங்க வேண்டிய கட்டாயமும் ஏற்படுகிறது. அதுவும், 2,3 தொழிற்சாலைகள் மட்டும் வைத்திருப்பவர்கள் சிண்டிகேட் அமைத்துக் கொண்டுகூட விலையை நிர்ணயிக்கிற சூழ்நிலைகளும் உருவாகின்றன. அவற்றின் மூலமாக, அரசுக்கு பொருட்களை வாங்குகிறபோது இழப்பும் அதிகம் ஏற்படுவதற்கு, இந்தத் தணிக்கை அறிக்கையிலே சுட்டிக்காட்டி இருப்பதைப்போல, அதுபோன்ற வாய்ப்புகள் இருக்கிற காரணத்தாலே மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இதிலே purchase preference-ஐ மட்டும் கொடுத்து price preference-க்கு மிகக் குறைந்த அளவிலே ஒரு கட்டுப்பாட்டை விதிப்பார்கள் என்று சொன்னால், இதைக்கூட செயல்படுத்துவதற்கு எங்களுக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. கே. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களும், மாமன்றத்தினுடைய உறுப்பினருமான அருமை அண்ணன் அவர்கள் பேசுகின்றபோது சிறு தொழிலைப் பாதுகாப்பதிலேயும், பொது நிறுவனங்களைப் பாதுகாப்பதிலேயும் அரசுக்கு மாறுபட்ட கருத்து இல்லை என்று தன்னுடைய கருத்துரையிலே கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதிலும் குறிப்பாக கொள்முதல் முன்னுரிமை அளிப்பதிலேயும், 15 சதவிகிதம் என்று சொல்லப்படுகிற விலை முன்னுரிமை அளிப்பதிலேயும் கருத்து வேறுபாடு இருக்கிறது என்றும் அவர் தன்னுடைய கருத்திலே





சொல்லியிருக்கிறார். எங்களுடைய குறைபாடுகள் எல்லாம் கடந்தகால ஆட்சியிலே அரசாணை எண் 75 மூலமாக....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர், சட்டமுன்வடிவின்மீது நிதி அமைச்சர் பதில் சொல்வார். அப்போது பதிலைப் பார்த்துக் கொள்ளலாம். (குறுக்கீடு) சட்டமுன்வடிவின்மீது நிதி அமைச்சர் பதில் சொல்லும்போது பார்த்துக் கொள்ளலாம். திரு. எச்.எம். ராஜு.

***திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நமது மாண்புமிகு நிதி அமைச்சர் கொண்டுவந்த இந்தச் சட்டத் திருத்த மசோதாவை காங்கிரஸ் கட்சியின் சார்பாக நாங்கள் வரவேற்கிறோம். மற்ற மாநிலங்களில்—டான்செம்-ஐ எடுத்துக் கொண்டால்—அங்கே 100 ரூபாய்க்குக் கிடைக்கும் அந்த சிமெண்டானது நமது மாநிலத்திலே 200 ரூபாய் வரை விற்கும்போது கட்டுமானப் பணிகள் எந்த அளவு பாதிக்கப்பட்டன என்பதைத் தயவுசெய்து பார்க்கவேண்டும். கட்டுமானப் பணியில் ஈடுபட்ட இலட்சோப இலட்ச தொழிலாள மக்கள் பாதிக்கப்பட்டார்கள். காரணம் என்னவென்றால் வெளி மாநிலங்களில் சிமெண்ட் மூட்டை 100 ரூபாய்க்குக் கிடைக்கும்போது வீடு கட்டுபவர்கள், வாங்குபவர்கள் 200 ரூபாய் கொடுத்து சிமெண்ட் வாங்க பயப்படுகிறார்கள். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும், சத்தியமூர்த்தி பவனிலேகூட சிமெண்ட் சில டன்கள் கொண்டு வந்தாலும்கூட 80 ரூபாய், 100 ரூபாய் என்ற அளவிலே அந்த சிமெண்ட் விற்கப்பட்டன. ஆக அது எப்படி ஏற்பட்டது? அந்த நிலை வருங்காலத்தில் கண்டிப்பாக ஏற்படக்கூடாது. அந்த நியாயமான விலையில் நமது மாநிலத்திலும் எல்லோருக்கும் கிடைக்க வேண்டும். அதன் மூலமாக ஆயிரக்கணக்கான அல்லது இலட்சக்கணக்கான அந்த கட்டுமானப் பணியாளர்களும் அவர்கள் வாழ்விலே முன்னேறுவதற்கு வசதிப்பட வழிசெய்ய வேண்டும். ஆக விலை ஏற்றத்திற்கு எந்த அளவிலே யார் அதில் ஈடுபட்டார்களோ அவர்களையெல்லாம் தண்டிப்பதற்காக என்னென்ன சட்டங்களைக் கொண்டு வர முடியுமோ அதை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கொண்டு வர வேண்டுமென்று கேட்டு, நன்றி கூறி அமைகிறேன்.

**திரு. போளூர் வரதன்:** தலைவரவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கட்சியின் சார்பாக ஒருவர் பேசினால் போதும், திரு. ஜி. பழனிசாமி.

**திரு. ஜி. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இந்த ஒப்பந்தப்புள்ளி ஒளிவின்மைச் சட்டத்தை கம்யூனிஸ்டு கட்சி சார்பாக வரவேற்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் குறிப்பிட்டதுபோல பொதுத் துறையை பாதுகாக்கின்ற அடிப்படையில் அரசு சார்பற்ற தொழில்களுக்கு ஊக்கம் அளித்து செழுமைப்படுத்துவதிலே முன்னுரிமை கொடுத்து purchase செய்வதிலே ஒன்றும் தவறு கிடையாது. அப்படிச் செய்வது ரொம்ப தரமானது. அதுமாதிரி செய்ய வேண்டும். ஆனால் கடந்த காலத்தைப் பொறுத்தமட்டில் சிமெண்ட் விலை என்பது அநேகமாக தமிழகத்திலே ஒரு சூறாவளிப் புயல் போல வீசியது. இதை யார் கட்டுப்படுத்துவது? யார் விலை ஏற்றுகிறார்கள்? தமிழக அரசால் விலை உயருகிறதா? இல்லை, மத்திய அரசால் இந்த விலை உயருகிறதா? என்று தெரியாமல் அது சூறாவளிப் புயல் போல இருந்தது. அப்படி இருந்தபோது மாநில அரசைக் கேட்டோம் என்று சொன்னால், இது எங்களுக்குச் சம்பந்தம் இல்லை. மத்திய அரசு சம்பந்தப்பட்டது என்று சொன்னார்கள். மத்திய அரசைக் கேட்டால் இதில் எங்களுக்குச் சம்பந்தம் கிடையாது. அந்தந்த மாநிலங்களினால்தான் நிர்ணயிக்கப்படுகிறது என்று சொன்னார்கள். பொதுவாக யார் பாதிக்கப்பட்டார்கள் என்று சொன்னால், அரசுத் துறை பாதிக்கப்பட்டது; தனியார் துறை வலுப்பெற்றது. ஆகவே, சிமெண்ட் விலை பல மடங்கு உயர்ந்தது. எந்தவொரு நன்மையும் கிடைக்காத சூழ்நிலைதான் ஏற்பட்டது. ஆகவே, இந்தச் சட்டத்தின் மூலமாக பொதுத் துறையிலே சிமெண்ட் கொள்முதல் செய்வதற்கு இந்தச் சட்டமுன்வடிவு கொண்டு வந்திருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது.

*பிற்பகல் 4-50*

இன்னொன்றையும்கூட மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே குறிப்பிட்டார்கள். சிமெண்ட் விலை 110 ரூபாய் என்று சொன்னால், 80 ரூபாய்க்கு விற்கிறபோது வாங்கினால் அரசுக்கு இலாபம்தானே என்று சொன்னார்கள். அப்படி விலை கொடுத்து வாங்கப்பட்ட சிமெண்ட்டால் கட்டப்பட்டிருக்கின்ற கட்டடங்களின் தரம் எப்படி இருந்தது? அந்த சிமெண்டினுடைய தரம் எப்படி இருந்தது? அதையெல்லாம் பார்த்தோம் என்று சொன்னால் சி-53-ன்படி தரம் உள்ள சிமெண்டா என்று யார் பரிசோதித்தார்கள்? இன்னும் சொல்ல வேண்டுமென்றால், தமிழக அரசால் இப்படிப்பட்ட சிமெண்ட் வாங்கப்பட்டு கட்டப்பட்டிருக்கிற அந்தக் கட்டடங்கள் எல்லாம் உள்ளே போனதாக வரலாறு தமிழகத்திலே உள்ளது. அதை எந்த கம்பெனியிலிருந்து யார் வாங்கினார்கள் என்று பார்க்க முடிந்ததா? ஆக, அரசுத் துறையிலிருந்து வாங்கக்கூடிய சிமெண்ட் தரமான





சிமெண்டாக, நம்பிக்கைக்குரிய சிமெண்டாக, நம் அரசால் தயாரிக்கக்கூடிய சிமெண்ட்டாக இருக்கிறபோதுகூட 10 ரூபாய் அதிகம் இருந்தாலும் பரவாயில்லை, தரமான சிமெண்டை வாங்குகிற வாய்ப்புகளை உருவாக்குகிறோம். இதை நம்பி இருக்கிற பல இலட்சக்கணக்கான தொழிலாளர்களைப் பாதுகாக்கிறோம். வேலைவாய்ப்பை உருவாக்குவது எப்படி? வேறு மாநிலங்களில் 10 ரூபாய் குறைவு என்பதற்காக, அண்டை மாநிலங்களில் போய் சிமெண்ட் வாங்கினால், இங்கே இருக்கிற தொழிலாளர்களைத் தெருவிலே விடுவதா? ஆக, இப்படி எந்த ஒரு சிந்தனையும் இல்லாமல், குறுகிய நோக்கத்தோடு எந்தத் திட்டமும் இல்லாத அளவுக்கு ஒரு மாறுதல் செய்யப்பட்டதை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னொரு வேதனை என்னவென்று சொன்னால், தமிழகத்தில் இருக்கிற பேப்பர் தொழிற்சாலைகளில் தயாரிக்கப்படும் பேப்பர்களுக்கு வரி போடப்படுகிறது. ஆனால், வெளிநாடுகளில் இருந்து வருகின்ற பேப்பர்களுக்கு வரி கிடையாது. பலநூறு கோடி ரூபாய்க்கு பேப்பர்கள் தேங்கிப் போயிருக்கின்றன. நாங்கள் இதைப் பல தடவை சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறோம். ஆகையால், கொள்முதல் செய்வதையாவது நீங்கள் செய்யுங்கள். வெளி மாநிலங்களிலிருந்து, அண்டை மாநிலங்களிலிருந்து வரக்கூடிய பேப்பர்களைக் கட்டுப்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று சொன்னோம். அதை எல்லாம் இங்கே கேட்காதீர்கள். நாடாளுமன்றத்திலே கேளுங்கள், டெல்லி சர்க்காரைக் கேளுங்கள் என்றார்கள். டெல்லி சர்க்காரைக் கேட்டபோது என்னவாயிற்று, டெல்லி சர்க்காரில் அங்கம் பெற்றிருந்தவர்கள் இங்கே மாநில சர்க்காரைக் கேளுங்கள் என்று விளக்கம் அளிப்பதெல்லாம் இருந்தது. இப்போது இந்தச் சட்டத்தைக் கொண்டுவந்து தளர்த்தி இருப்பது என்பது வரவேற்க வேண்டிய, இது நல்ல சட்டம். அரசுத் துறைகளில் சிமெண்ட் தொழிற்சாலைகளை நவீனப்படுத்துவதற்கு அரசு கொஞ்சம் கவனம் செலுத்த வேண்டும். பழைய மாடலில், பழைய method-ல் சிமெண்ட் தொழிற்சாலைகள் இருக்கின்றன. தனியார் தொழிற்சாலைகள் போன்று அரசுத் தொழிற்சாலைகள் கிடையாது. ஏனென்றால், தனியார் தொழிற்சாலைகளுக்காகும் செலவுகளுக்கும், அரசுத் தொழிற்சாலைகளுக்காகும் செலவுகளுக்கும் வேறுபாடுகள் எல்லாம் இருக்கின்றன. அரசும் இதைப் பரிசீலிக்க வேண்டும் என்று கேட்டு, இந்தச் சட்டத்தை ஆதரித்து அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

[2001 செப்டம்பர் 13

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதியமைச்சர் கொண்டுவந்துள்ள ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை சட்டத திருத்தத்தின் மேலே பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே என்னுடைய கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கடந்த ஆண்டு 2000 அக்டோபர் திங்கள் 1-ஆம் தேதி அன்று கொண்டு வரப்பட்ட அந்தச் சட்டத்தினாலே சிறு தொழில்கள், குறுந்தொழில்கள் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டதோடு, தொழிலாளர்களுக்கு வேலையிழப்பு ஏற்பட்டு மிகுந்த பாதிப்புக்கு உள்ளானார்கள் என்றெல்லாம் சொல்லி, இங்கே சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறீர்கள். ஆகவே, இந்தச் சட்டத் திருத்தத்தைச் சொல்கின்ற நேரத்திலே நம்முடைய மரியாதைக்குரிய மாண்புமிகு திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் சொன்னது மாதிரி ஏதோ TANCEM-க்கும் TNPL-க்கும் என்று மட்டுமல்லாமல், இது எல்லா நிலைகளிலும் இருக்கக்கூடிய அரசு சார்பு நிறுவனங்களுக்கும் கொண்டு வருவது பாதுகாப்பாக இருக்கும். பொருத்தமுடையதாக இருக்கும் என்ற கருத்தைச் சொல்லிக்கொள்கிறேன்.

அதேநேரத்திலே, எங்கே purchase செய்தாலும்கூட, கொள்முதல் செய்தாலும்கூட அல்லது கொள்முதல் செய்கிற நேரத்திலே முன்னுரிமை கொடுப்பது என்பது வரவேற்கக்கூடியது. அதிலே மாறுபட்ட கருத்துக்கு இடம் இருக்க முடியாது. ஆகவே, அப்படி preference என்று சொல்கின்ற நேரத்திலே கொள்முதலுக்கு முன்னுரிமை என்று சொல்லி வரவேற்கக்கூடிய அதேநேரத்திலே விலை முன்னுரிமை என்று சொல்கிறோம். விலை முன்னுரிமை என்று சொல்கிற நேரத்தில் 10 சதவிகிதம், 15 சதவிகிதம், 20 சதவிகிதம் என்று சொன்னாலும்கூட, குறிப்பிட்ட விலைக்கு மேலே, 10 சதவிகிதம், 15 சதவிகிதம், 20 சதவிகிதமோ கொடுப்போம் என்று சொன்னாலும்கூட, நமக்கு இழப்பு ஏற்படுவதற்கு வாய்ப்பு இருக்கிறதா; இல்லையா என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். அப்படி விலை முன்னுரிமை கொடுக்கின்ற நேரத்திலே நமக்கு இழப்பு ஏற்படுகின்ற காரணத்தினாலே அதை நாம் ஏற்றுக் கொள்ள வேண்டுமா அல்லது அந்த இழப்பைத் தவிர்க்க வேண்டுமா என்று நாம் சிந்திக்கக்கூடிய நிலையிலே இருந்து கொண்டிருக்கிறோம். ஆகவே, எந்தவகையிலே பார்த்தாலும்கூட, நமக்கு இழப்பு என்பது ஏற்படவே கூடாது.



2001 செப்டம்பர் 13] [திரு. ஜி.கே. மணி]

பிற்பகல் 4-55

அதைக்கூட நான் ஒரு சின்ன ஆலோசனையாகச் சொல்கிறேன். நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்கள் இங்கே தெளிவாகச் சொன்னார்கள். விலையைக் கட்டுப்படுத்த வேண்டும். இப்போது டான்செம் என்று சொன்னால் அல்லது இங்கே சிமெண்ட் உற்பத்தி செய்தாலும்கூட இந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் தேதியிலிருந்து அடுத்த ஆண்டு ஏப்ரல் கடைசி தேதி வரையிலே இந்த சிமெண்ட் உற்பத்திக்கு என்ன அடக்க விலை ஆகிறது. உற்பத்தியாளர்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்க வேண்டும். அதேநேரத்திலே பயனாளிகளுக்கு அடக்க விலையிலே பொருள் கிடைக்க வேண்டும். அந்தவகையிலே உற்பத்தியாளர்கள், நுகர்வோர், பயனாளிகள், அதைப் போலவே இதையெல்லாம் கண்காணிக்கக்கூடிய அரசு அதிகாரிகள், இப்படி மூவரையும் உள்ளடக்கி முத்தரப்பு என்று சொல்லக்கூடிய வகையிலே முத்தரப்பு மாநாட்டை—முத்தரப்பு நிலை என்று சொல்லி பல்வேறு நிலைகளிலே செய்யக்கூடிய இந்த அரசு இப்படி எலலா நிலைகளிலும் ஒரு முத்தரப்பு குழுவை—அமைத்தது அதிலே ஆண்டுக்கு இந்தப் பொருள் இன்ன விலைதான் என்ற ஒரு விலையை நிர்ணயம் செய்கின்ற நேரத்திலே உற்பத்தியாளர்களுக்கு உரிய விலை கிடைக்கும். பயனாளிகளுக்கு, நுகர்வோருக்கு அடக்க விலையிலே பொருள் கிடைக்கும். அரசு இங்கே ஊழல் இல்லாமல் எவ்வித கு. றங்குறைகளுக்கும் ஆளாகாமல் நிர்வாகத்தைச் செம்மையாக செய்வதற்கு வாய்ப்பிருக்கும் என்ற காரணத்தினாலே, பாட்டாளி மக்கள் கட்சியினுடைய சார்பிலே கொள்முதல் முன்னுரிமை என்பது வரவேற்கக்கூடிய ஒன்று என்றும். அதேநேரத்திலே விலை முன்னுரிமை என்பது நமக்கு பாதிக்கக்கூடியதாக இருக்கிறது என்றும் அதைப் பரிசீலனை செய்ய வேண்டுமென்றும் கருத்துச் சொல்லி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்கள் பேசுகிறபோது இந்தச் சட்டத்தினுடைய பாதுகாப்பு வேறு சில அரசு அமைப்புகளுக்கும் நீட்டிக்கப்பட வேண்டுமென்று கோரியிருக்கிறார்கள். அதுகுறித்து அரசு கட்டாயம் பரிசீலிக்கும் என்பதனை அவைக்குச் சொல்ல விரும்புகிறேன்.

[திரு. சி. பொன்னையன்] [2001 செப்டம்பர் 13

அன்புச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் பேசுகிறபோது சிமெண்டைப் பற்றிக் கூறினார்கள். அதுபோலவே மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி. பழனிசாமி அவர்களும், மாண்புமிகு உறுப்பினர் திரு. எச்.எம். ராஜு அவர்களும் பேசுகிறபோது சிமெண்ட் விலை உயர்வு. அதற்குள்ள காரணங்கள், எடுக்கக்கூடிய நடவடிக்கைகள் ஆகியவை பற்றி எடுத்துச் சொன்னார்கள். இதுகுறித்து மிகத் தெளிவாக ஏற்கெனவே அவையிலே நான் எடுத்துச் சொல்லியிருக்கிறேன்.

சிமெண்ட்டைப் பொறுத்தவரைக்கும் அதை மிகச் சாதுரியமாக சாமார்த்தியமாக, மைய அரசினுடைய ஆதரவோடு சில சிமெண்ட் தொழிற்சாலைகள் செயல்படுகிற காரணத்தால் இது ஒரு முறைகேடாகவே தமிழகத்திலே தொடங்கி இந்தியத் துணைக் கண்டத்திலுள்ள அனைத்து சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கும் பரவி, இன்று நாட்டிலே கட்டடத் தொழில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகி, கட்டடத் தொழிலாளர்களுக்கு. வேலையில்லாத் திண்டாட்டம் என்ற ஒரு நிலையைக்கூட இது உருவாக்கக்கூடிய அளவிற்குச் சென்றுவிட்டது.

இதிலே மிக முக்கியமான ஒன்று—நான் ஏற்கெனவே சொன்னதைப்போல Cartel என்ற ஒன்று form செய்திருக்கிறார்கள், அமைத்திருக்கிறார்கள். தமிழகத்திலே இது தொடங்கப்பட்டபோது செட்டிநாடு சிமெண்ட்டில் இருக்கிற ஓர் உயர் அதிகாரி இந்த Cartel-னுடைய பொறுப்புக்கு நியமிக்கப்பட்டு, அதன்மூலமாக தமிழகத்திலேயிருக்கிற சிமெண்ட் தொழிற்சாலைகள் ஒரு குறிப்பிட்ட அளவிற்குத்தான் உற்பத்தியை மேற்கொள்ள வேண்டும் என்று ஒரு முடிவிற்கு வந்தார்கள். 75% உற்பத்தி செய்யக்கூடிய ஒவ்வொரு சிமெண்ட் தொழிற்சாலையிலும் 25% fly ash என்று சொல்லக்கூடிய அந்தப் பொருளைக் கலந்தால் 100% ஆகிவிடுகிறது. சிமெண்ட் தொழிற்சாலைகளைப் பொறுத்தவரைக்கும் இந்த flyash add பண்ணலாம் என்று ஒரு வரையறை இருக்கிற காரணத்தால் Total Production capacity can be augmented to 125% என்பதுதான் நிலை. ஆனால் இந்த Cartel form செய்து ஒரு முடிவுக்கு வந்தார்கள். குறிப்பாக தமிழகத்திலேயிருக்கிற இந்தியா சிமெண்ட் நிறுவனம்தான் முதன்முதலாக இந்த Cartel-ஐ கொண்டுவருவதற்கு வித்திட்டது. அந்த சிமெண்ட் தொழிற்சாலையினுடைய சார்பில்தான் இந்த Cartel form செய்யப்பட்டு ஒவ்வொரு சிமெண்ட் தொழிற்சாலையினையும் அவர்கள் வற்புறுத்தினார்கள். நீங்கள் 40 சதவிகிதம்தான் உற்பத்தி செய்ய வேண்டும்; 50 சதவிகிதம்தான் உற்பத்தி



2001 செப்டம்பர் 13] [திரு. சி. பொன்னையன்]

செய்ய வேண்டும்; அப்படி நீங்கள் குறைந்த உற்பத்தி செய்கிறபோது விலையை நாம் உயர்த்திவிடலாம். விலையை உயர்த்துகிறபோது உங்களுக்கு முழு உற்பத்தி செய்து வருகிற இலாபத்தை 50 சதவிகித production-லே அந்த இலாபம் உங்களுக்கு வந்துவிடுகிற காரணத்தால் எதற்காக வீணாக working capital and other expenditure தேவையில்லை அல்லவா என்று ஒருபுறம் சொல்லி மறுபுறம் அவர்கள் கண்டிக்கப்பட்டு, வற்புறுத்தப்பட்டு, அச்சுறுத்தப்பட்டும்கூட ஒரு நிலை அவர்களுக்கு உருவாக்கப்பட்டது.

பிற்பகல் 5-00

அதற்குப் பிறகு ஆந்திர மாநிலத்திலே இருக்கிற சிமெண்டை தமிழகத்திற்குக் கொண்டு வருவதற்கு வழிவகை செய்தார்கள். ஆந்திராவில் இருக்கிற எரகொண்டாலா, பிரியங்கா, ராசி, கொரமண்டல் போன்ற சிமெண்ட் தொழிற்சாலைகள் எல்லாம் இந்தியா சிமெண்ட் கட்டுப்பாட்டிற்கு வந்தவுடன் அங்கிருந்து ஒவ்வொரு ஆண்டும் 25 இலட்சம் டன் சிமெண்ட் தமிழகத்திற்குக் கொண்டு வந்தார்கள். அப்படி அங்கிருந்து 25 இலட்சம் டன் சிமெண்ட் தமிழகத்திற்கு வருகிறபோது தமிழகத்திலே உற்பத்தி செய்கிற தொழிற்சாலைகள் அந்த 25 இலட்சம் டன் குறைவாக உற்பத்தி செய்ய வேண்டும் என்று அவர்கள் வற்புறுத்தப்பட்டு அதற்கு அவர்கள் இசைவைத் தெரிவித்துவிட்டார்கள். இப்படி ஒரு Cartel form செய்த பிறகு 80 ரூபாய்க்கு விற்றுக் கொண்டிருந்த அந்த சிமெண்ட் ரூ. 120, ரூ. 130 என ஆகி இறுதியிலே ரூ. 180, ரூ.200 என்ற நிலைக்குச் சென்றுவிட்டது. அரசு நிறுவனங்கள் எல்லாம் அரசுப் பணிகளுக்கு அது P.W.D. ஆக இருக்கலாம், Highways Department-ஆக இருக்கலாம், உள்ளாட்சித் துறையாக இருக்கலாம், Water Board-ஆக இருக்கலாம், அவர்கள் அரசுக்குத் தேவையான சிமெண்ட் கோருகின்றபோது இந்த Tender Transparency Act-ஐயும் கொண்டு வந்துவிட்டார்கள், 1998 ஆம் ஆண்டு. Tender Transparency Act-ஐ கொண்டு வந்து இந்தச் சட்டத்தின் மூலமாக ஏற்கெனவே அளிக்கப்பட்டிருந்த சலுகைகள் இரத்து செய்யப்பட்டுவிட்டன. அரசு நிறுவனங்களுக்கெல்லாம் 5% விலைச் சலுகை, purchase preference 50% என்று ஏற்கெனவே இருந்ததை மாற்றி அந்தச் சலுகைகளை எல்லாம் இரத்து செய்துவிட்டு எல்லோரும் இதிலே போட்டியிட வேண்டும். இந்தியத் துணைக் கண்டத்தில் எங்கிருந்து வந்தாலும் இந்த purchase-லே போட்டியிட வேண்டும் என்று Tender Transparency Act-ஐ 1998-லே கொண்டு வந்து விட்டார்கள். ஒருபுறம் இந்தச் சட்டத்தைக் கொண்டு வந்து விட்டார்கள் பாதுகாப்பு கொடுத்தார்கள். இன்னொருபுறம் அவர்கள் மிகவும் சாதுரியமாக சிமெண்ட் Cartel-ஐ உருவாக்கி அந்த Cartel மூலமாக இதுதான் விலை என்று சொல்கிறபோது

[திரு. சி. பொன்னையன்] [2001 செப்டம்பர் 13

அந்த விலைக்குக் குறைவாக யாருமே அதை Quote பண்ண முடியாத நிலையை உருவாக்கினார்கள். அப்போதுதான் TANCEM நிறுவனத்தையும் அதற்கு உடந்தையாகச் செயல்படக்கூடிய ஒரு சூழலையை உருவாக்கினார்கள். TANCEM நிறுவனம் 65 ரூபாய், 70 ரூபாய் என்று சிமெண்ட்டை விற்றுக் கொண்டிருந்தது. அந்த TANCEM நிறுவனம் சில காரணங்களைக் காட்டி Cost of production 145 ரூபாய் என்று அவர்களும் கோரி எல்லோரும் ஒன்றாகச் சேர்ந்து ஒரு கூட்டாகச் சேர்ந்து ஒரு பொது நிறுவனம், அரசு நிறுவனம். அரசுத் துறை சிமெண்ட்டுக்கு ஒரு டெண்டர் கேட்கிறபோது நாங்கள் 180 ரூபாய்க்குத்தான் தருவோம் என்று எல்லோரும் நின்றுவிட்டார்கள்.

தற்போதுகூட எங்களது ஆட்சி வந்த பிறகு நாங்கள் சில துறைகளுக்கு டெண்டர் கேட்கும்போது யாருமே சிமெண்ட் தருவதற்கு முன்வரவில்லை. தமிழகத்திலே இருக்கின்ற சிமெண்ட் தொழிற்சாலைகள், எந்த ஒரு சிமெண்ட் தொழிற்சாலையும் tender call for பண்ணியபோது சிமெண்ட் தருவதற்கே முன்வரவில்லை. இந்த விலை என்றால் வாங்குங்கள் என்று சொன்னது ஒன்று, Quote பண்ணாமல் நின்றுவிட்டார்கள், அந்த அளவிற்கு ஒரு கூட்டாக அந்த cartel செயல்பட்டு நாம் சிமெண்ட் வாங்கமுடியாத ஒரு நிலையை உருவாக்கினார்கள்.

அது மட்டுமல்ல, இதையெல்லாம் மீறிவிட்டு அரசு கையிலே அதிகாரம் இருக்கிறது என்ற காரணத்தால் வெளிநாடுகளிலே சிமெண்ட் விலை மிகக் குறைவாக இருக்கிறது என்று வெளிநாடுகளிலிருந்து சிமெண்டை நாம் இறக்குமதி செய்துவிடலாம் என்று இறக்குமதி செய்யலாம். ஆந்திர மாநிலம் அந்த முயற்சியிலே ஈடுபட்டது. இந்தியத் துணைக் கண்டத்தின் பிற மாநிலங்கள் ஈடுபட்டன. ஆனால் அன்றைக்கு உடனடியாக டெல்லியிலே என்ன செய்தார்கள்? மையத்திலே இருக்கின்ற Commerce Ministry and Industries Ministry வெளிநாடுகளிலிருந்து இந்தியாவிற்கு சிமெண்ட் வந்தால் 25% அதற்கு வரி என்று போட்டார்கள். எங்குமே தப்பிக்க முடியாத அளவிற்கு--இந்த அவை மிகவும் உன்னிப்பாகக் கவனிக்க வேண்டும், சிந்திக்க வேண்டும் என்பதற்காக நான் சொல்கிறேன்--ஒருபுறம் Tender Transparency Act-ன் மூலமாகப் பாதுகாப்பு. யார் வேண்டும் என்றாலும் தமிழகத்திற்கு சிமெண்ட் கொண்டு வரலாம். குறிப்பாக ஆந்திர மாநிலத்தில் இருந்து அந்த சிமெண்ட் இங்கே வரவேண்டும். அதுதான் மிக முக்கியமான ஒன்று. அடுத்து வெளிநாடுகளிலிருந்து சிமெண்ட் கொண்டு வந்து



2001 செப்டம்பர் 13] [திரு. சி. பொன்னையன்]

சிமெண்ட் விலையைக் குறைக்கலாம் என்றால் 25% அதற்கு Import Duty என்று போட்டுவிட்டார்கள். இதைவிட மிக முக்கியமான பல மாநிலங்களில் கூறினார்கள் சிமெண்ட் விலை கிடுகிடுவென உயருகிறதே, மைய அரசு இருக்கிறது, மாநிலங்களுக்கு அதிகாரம் இல்லையே, மைய அரசு நடவடிக்கை எடுத்து சிமெண்ட் விலையைக் குறைக்க வேண்டாமா? Essential Commodities Act-ல் கொண்டு வர வேண்டாமா? Price regulate பண்ண வேண்டாமா? என்ற கோரிக்கைகள் எல்லாம் எழுப்பப்பட்டபோது Cement Control Order of 1967 and Industries Development Regulation Act-மூலமாகத்தான் சிமெண்ட் விலையை நிர்ணயிக்க முடியும். தனியாக ஒரு விதி இருக்கிறது. A provision is there to regulate the cement price. That power is vested with the Government of India. அந்த விதியையும் தளர்த்திவிட்டார்கள். That provision was deleted totally. அந்த provision-ஐயும் எடுத்துவிட்டு, கேட்டால் சிமெண்ட் விலையை நிர்ணயிக்கக்கூடிய அதிகாரம் எங்களுக்கு இல்லையென்று கை விரித்துவிட்டது மத்திய அரசு.

பிற்பகல் 5-05

இந்த நாட்டிலே, ஒரு சுதந்திர பாரதத்திலே இருந்த விதியை நீக்கிவிட்டு எப்படிப்பட்ட democracy, the highest democracy, the largest democracy of the world என்று நாம் சொல்லிக்கொண்டு எந்த அரசு நிறுவனத்தாலும் ஒன்றும் செய்ய முடியாத அளவிற்கு டெல்லியிலே இருக்கின்ற அந்த Commerce Ministry, அந்த Industries Ministry, எப்படியெல்லாம் சட்டத்தை தனக்குச் சாதகமாக வளைத்து சில சிமெண்ட் தொழிற்சாலைகளுக்கு ஊக்குவிப்பைத் தந்து (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டிலே இப்படிப்பட்ட ஒரு தவறை செய்திருக்கிறார்கள்.

இதனால் பாதிப்பு யாருக்கு? அரசுக்கு மட்டுமல்ல, பாதிப்பு, இப்படி 180 ரூபாய், 200 ரூபாய் என்று விலை கொடுத்து அரசு நிறுவனங்கள் எல்லாம் சிமெண்டை வாங்குகிறபோது அரசுக்குத்தானே இழப்பு. மக்கள் வரிப் பணத்தை இப்படி மறைமுகமாக, அந்தப் பணத்தை கொள்ளையடித்து என்றுகூட சொல்வேன், எடுத்து தனியார் நிறுவனங்களுக்குத் தாரை வார்த்ததினுடைய நோக்கம் என்ன? எந்த விலைவாசி என்றாலும் கட்டுப்படுத்துகிறோம், ஆனால், கோடானு கோடி பணத்தை முதலீடு செய்து கோடீஸ்வரர்களாக விளங்குகின்ற இந்த சிமெண்ட் ஆலைகளுக்கு இப்படித் திட்டமிட்ட சலுகைகளை மத்திய அரசினுடைய தொழில் துறை

[திரு. சி. பொன்னையன்] [2001 செப்டம்பர் 13

Commerce Ministry தந்ததினுடைய மர்மம் என்ன? இதன் காரணமாகத்தான் சிமெண்ட் விலையைக் குறைக்க வேண்டுமென்று முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதிலும்கூட குறைக்க முடியாத ஒரு நிலை இருந்தது.

தமிழகத்திலே தொடங்கப்பட்ட இந்த cement cartel படிப்படியாக எல்லா மாநிலங்களுக்கும் நீட்டிக்கப்பட்டு--- இன்று நான் ஏற்கெனவே அவையிலே சொன்னதைபோல---பல்லாயிரக்கணக்கான கோடி ரூபாய் மக்களுடைய பணம் இதில் கொள்ளையடிக்கப்பட்டுக்கொண்டிருக்கிறது. அதற்குத்தான் எப்படி எப்படியெல்லாம் இதைத் தடுக்க வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர்கள் கேட்டார்கள். Price Regulation Act-ல் விலையைக் கட்டுப்படுத்தக்கூடிய விதியைத் தளர்த்தி டெல்லியிலே இருக்கின்ற Industries Ministry அதைக் கையில் வைத்துக்கொண்டது. சிமெண்ட் விலையை எங்களால் கட்டுப்படுத்த சட்டமில்லை. அவர்கள் என்ன வேண்டுமானாலும் இந்தியாவிலே செய்யலாம் என்று ஒரு நிலையைச் செய்துவிட்டார்கள்.

அதற்காகத்தான் தற்போது நாங்கள் எடுத்துக்கொண்டிருக்கிற முயற்சி, அரசு சிமெண்ட் நிறுவனத்தைப் பொறுத்தவரைக்கும் அதைச் சீரமைக்கின்ற பணியிலே நாங்கள் ஈடுபட்டிருக்கிறோம். அரசு சிமெண்ட் நிறுவனங்களைப் பொறுத்தவரைக்கும் We have to take up modernisation. மாண்புமிகு உறுப்பினர் திரு. பழனிச்சாமி அவர்கள் சொன்னதுபோல, obsolete condition-ல் இருக்கின்ற நிலையை மாற்றி modernisation-க்குக் கொண்டு வரும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருக்கிறோம்.

இன்னொரு முக்கியமான ஒன்று. இது மற்ற தொழிற்சாலைகளைப் போன்று அல் ல. சிமெண்டுக்கு வேண்டியது, major raw material is lime stone. அதற்கு அர ்க்குச் சொந்தமான நிலத்தை Lease-க்கு நாம் சிமெண்ட் ம்பெனிகளுக்குக் கொடுக்கிறோம். அதிலே 100%, 200% escalation of cost production என்பது கற்பனையிலும்கூட சிந்திக்க முடியாத ஒன்று. அப்படி முடியாது. எனவே, இவற்றையெல்லாம் கருத்தில் கொண்டுதான் டான்செம் நிறுவனத்திற்கு முக்கியத்துவம் தர வேண்டும், டான்செம் றுவனம் அதனுடைய உற்பத்தியையும் அதிகப்படுத்த வேண்டுமென்ற முறையில் இதைக் கொண்டு வந்திருக்கிறோம்.



2001 செப்டம்பர் 13] [திரு. சி. பொன்னையன்]

நாங்கள் இன்னும் சில நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம். அவை தற்போது ஆய்விலே இருக்கின்ற காரணத்தால் அவைக்குச் சொல்ல முடியாத நிலையில் இருக்கிறேன். கட்டாயமாக இந்த சிமெண்ட் விலையை புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு முன்பு இருந்த நிலைக்குக் கொண்டு வரும் என்ற உறுதியை நான் அவைக்குத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) கடும் நடவடிக்கைகளை எடுக்க இருக்கிறோம். ஒரு ஆட்சியையே ஆட்டிப்படைக்கலாம், அகில இந்தியாவையே ஆட்டிப்படைக்கலாம் என்று டெல்லியிலே இருக்கிற Industries Ministry and Commerce Ministry நினைக்குமேயானால், இந்த மக்கள் ஜனநாயகம் உள்ள பாரதத்தில் இது நடக்க முடியாது, நடக்க விடமாட்டோம் என்பதனை (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியத் துணைக் கண்டத்திற்கு எடுத்துக்காட்ட கடுமையான நடவடிக்கையை தமிழகத்திலே மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் எடுக்க இருக்கிறார்கள் என்ற உத்தரவாதத்தை அவைக்கு நான் தரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகிறபோது விலைச் சலுகையைப் பற்றிச் சொன்னார்கள். விலைச் சலுகை என்பது ஒரு கொள்கை முடிவு. தமிழகத்திலே இருக்கின்ற பல்லாயிரக்கணக்கான small scale industries, cottage industries and tiny industries என்று சொல்லக்கூடிய சிறு தொழில்கள், குறுந்தொழில்கள், குடிசைத் தொழில்கள் எல்லாம்—G.O. 75 என்று, அந்த G.O. வையும் கொண்டு வந்து—தமிழகத்திலே இருக்கின்ற small scale industries எல்லாம்—தரம் கெட்ட பொருட்களைச் செய்கிறார்கள், தமிழகத்திலே இருக்கின்ற tiny industries எல்லாம், குறுந்தொழில்கள் எல்லாம் தரம் கெட்ட பொருட்களைச் செய்கிறார்கள் என்று சொல்லிவிட்டு, இந்தியத் துணைக் கண்டத்திலே எங்கிருந்து வேண்டுமென்றாலும் small scale industries-க்குத் தேவையான பொருட்களை வாங்கிக்கொள்ளலாம் என்று G.O. 75-ஐக் கொண்டு வந்தது கடந்த கால அரசு. அதன் மூலம், தரமான பொருட்களை வாங்கினார்களா என்றால் இல்லை.

அதைத்தான் நான் சொல்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் கூறினார்கள். அவருக்குத் தெரியாமலேகூட நடந்திருக்கலாம். எப்படி இங்கு நம்முடைய அந்த Institute of Road Transport இருக்கிறதோ; அதைப்போல All India Institute of Road Transport இருக்கிறது. அதிலே பல தொழில் நிறுவனங்கள் எல்லாம் அங்கத்தினர்களாக இருக்கின்றன. அந்தத் தொழில் நிறுவனங்களில் பல, வெறும் letter pad-ஐ மட்டும் வைத்துக்கொண்டு, கம்பெனிகளே இல்லாமல், அவர்கள் தமிழக போக்குவரத்துக் கழகமாக இருந்தாலும் சரி அல்லது மின்சார வாரியமா

[திரு. சி. பொன்னையன்] [2001 செப்டம்பர் 13

இருந்தாலும் சரி, பிற மாநிலங்களிலிருந்து தரமற்ற பொருள்களைத் தருகிறார்கள்.

*பிற்பகல் 5-10*

ஏற்கெனவே அவையிலே நான் விளக்கியிருக்கிறேன். Electricity Board, conductors வாங்கியதில், மிகவும் தரமற்ற அந்த Conductor-களை மிக அதிகமான விலைக்கு வாங்கப்பட்டதைக்கூட அவைக்கு நான் சொல்லியிருக்கிறேன்.

எனவே, நமது கொள்கையெல்லாம், தமிழகத்திலே சிறு தொழில்கள் ஆயிரக்கணக்கில் இருக்கின்றன, இலட்சக்கணக்கான ஏழைகள், அதிலே உழைக்கும் வர்க்கத்தினர், அதிலே தொழிலாளர்களாகப் பணியாற்றுகிறார்கள். கடந்த 5 ஆண்டு காலத்தில், இந்த G.O.-75 நடைமுறைக்கு வந்தபிறகு பல தொழிற்சாலைகள் மூடப்படக்கூடிய நிலைக்குவந்து, மூடப்பட்டுவிட்டன. தொழிற்சாலைகளில் வேலை செய்கிற இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வேலையிழந்து, வேதனைக்குரலோடு தத்தளிக்கின்ற ஒரு அவல நிலை உருவாக்கப்பட்டிருக்கிறது. இதை மாற்றவேண்டும் என்பதுதான் மாண்புமிகு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவியின் கொள்கை முடிவு. அதற்காக அப்படி நலிந்த நிலையில் இருக்கிற, G.O.-75 ஆல் நசுக்கப்பட்ட நிலையில் இருக்கிற, சிறுதொழில்களுக்கு ஊக்கம் தரவேண்டும். அவை புதுப்பிக்கப்படவேண்டும். அந்தத் தொழிலாளர்களுக்கு மீண்டும் வேலை வாய்ப்பு கிட்டவேண்டும். இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் இதனால் பலனை அடையவேண்டும் என்ற நோக்கத்துடன்தான் இந்த price preference, அதைப்போல purchase preference ஆகியவற்றை சிறுதொழில்களுக்குக் கட்டாயம் தரவேண்டுமென்பது இந்த அரசினுடைய தலையாய கொள்கை. புரட்சித் தலைவி அவர்கள் சிரமேற்கொண்டு இதை நடைமுறைப்படுத்தவேண்டுமென்று சூளுரைத்து செயல்படுகிறார்கள். காரணம் பாதிக்கப்பட்டு இருப்பவர்கள் இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் என்பதுதான்.

இங்கே தரக்கட்டுப்பாட்டை கொண்டு வருவதற்கு மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்கள் பேசுகிறபோது, தரம் குறைந்துவிட்டால் என்ன செய்வது என்று சொன்னார்கள். தரத்தைப்



2001 செப்டம்பர் 13] [திரு. சி. பொன்னையன்]

பொறுத்தவரைக்கும் இந்தியத் துணைக்கண்டத்திலேயிருக்கிற பிற மாநிலங்களில் உற்பத்தியாகின்ற பொருள்களைவிட, தமிழகத்திலேயிருக்கிற சிறு தொழில்களில் ஈடுபட்டிருக்கிற, சிறுதொழில்களில் ஈடுபட்டிருப்பவர்கள் தமிழர்கள் என்றாலோ, தமிழகத்தைச் சார்ந்த மக்கள் என்றாலோ மனசாட்சி நிறைந்தவர்கள் என்று பொருள். கோவை மாவட்டத்தை எடுத்துக்கொண்டால், அங்கு மோட்டார் பம்ப் செய்கின்ற தொழில் இந்தியத் துணைக் கண்டத்தில் எந்த மாநிலத்திலும் இல்லாத அளவுக்குத் தரமான பொருளை மிகக்குறைந்த விலையில் உற்பத்தி செய்து, அவர்கள் தமிழகத்திற்கு ஒரு பெருமையை சேர்த்துக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு) நீங்கள் சொல்லுங்கள்.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரத்தைப் பற்றி சொல்லவில்லை, போலி கம்பெனிகள், letter pad கம்பெனிகள் உருவாகியிருக்கின்றன என்று சொன்னேன். தரத்தைப் பொறுத்தவரையில்கூட, போக்குவரத்துக் கழகங்களைப் பொறுத்தவரையில் நீங்கள் சொன்னீர்கள். இங்கு I.R.T. இருப்பதைப்போல, அங்கே டெல்லியிலே ரேட் கான்ட்ராக்ட், அவர்கள் பொருள்களின் தரத்தை சோதனை செய்துதான் சொல்கிறார்கள். நம் தமிழ்நாட்டில் இருக்கிற பொருள்கள் தரமற்றவை என்று சொல்லவில்லை. இங்கே செய்யப்படுகிற பொருட்களின் விலை வித்தியாசம்தான். நாங்கள் சொன்னது, price preference. தயவுசெய்து நான் ஒன்றைச் சொன்னால், நீங்கள் இன்னொன்றைச் சொல்லி twist செய்கிறீர்கள். நாங்கள் சொல்வது price preference-ஐ பற்றிதான் சொல்கிறோமே தவிர, தரத்தைப் பற்றியது அல்ல. தரம் எல்லாம் ஓரே தரம்தான். டெல்லியிலே இருப்பது ரேட் கான்ட்ராக்ட் பிக்ஸ் செய்து, டெஸ்ட் செய்துதான் அவர்களும், ரேட் பிக்ஸ் செய்கிறார்கள். அதிலே நீங்கள் சொன்னது மாதிரி letter pad கம்பெனிகள் இருக்கலாம். எல்லா இடத்திலும் இருக்கிறது. இங்கே சொன்ன மாதிரி பல இடங்களில் கரூரில் பல letter pad கம்பெனிகள் உருவாகியிருந்த காலங்கள் எல்லாம் உண்டு. அந்த மாதிரி உருவாவது எந்தக் காலத்திலும் இருக்கிறது. loopholes-ஐ பயன்படுத்திக்கொண்டு உருவாக்கியவர்கள் உண்டு. அந்த மாதிரி இருந்தால், அவற்றைத் தடை செய்வதில் எந்தவிதமான ஆட்சேபனையும் இல்லை.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வது போல அதை

[திரு. சி. பொன்னையன்] [2001 செப்டம்பர் 13

நான் twist செய்யவில்லை. தரமான கம்பெனிகள் தமிழகத்திலே இருக்கிறபோது, மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி அவர்களுடைய போக்குவரத்துத் துறை எதற்காக டெல்லியிலிருந்து, வடபுலத்திலிருந்து பொருள்களை வாங்கினார்கள்? தேவையில்லையே? (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு) நான் பேசி முடித்துவிடுகிறேன். வரிக்குவரி பதில் என்று சொல்லிக்கொண்டு இருந்தால், இன்னும் பல சட்டமுன்வடிவுகள் நிறைவேற்றப்படவிருக்கின்றன. அதற்காகத்தான் நான் சொல்கிறேன். எனவே, நான் சொல்லவருவது, என்னவென்றால், தமிழகத்திலே இருக்கிற சிறு தொழிற்சாலைகளில், தனியார் துறையால் இயக்கப்படுகின்ற தொழிற்சாலைகள், பிற மாநில தனியார் தொழிற்சாலைகளைவிட தரமான பொருட்களை தமிழகத்திலே உற்பத்தி செய்வது நாடறிந்த உண்மை. அவர்களுக்கு நாம் ஊக்கம் தரவேண்டும். Technology upgradation-களுக்கு வழிவகைகளைத் தரவேண்டும். அவர்களுக்கு என்னென்ன ஊக்குவிப்புகளைத் தரவேண்டுமோ அந்த ஊக்குவிப்புகளைத் தந்து, தமிழகத்திலேயிருக்கிற சிறு தொழில்கள் இன்னும் தரத்தை அதிகப்படுத்தவேண்டும். Cost of production should be brought down by modernisation என்ற முறையில் அவர்கள் உற்பத்திச் செலவை குறைப்பது எப்படி என்பதற்கெல்லாம் அரசு வழிவகைகளைச் சொல்லவேண்டும். அத்தகைய அணுகுமுறைகளை புரட்சித் தலைவியினுடைய அரசு எடுக்கவிருக்கிறது.

Price preference-ஐப் பொறுத்தவரைக்கும் நான் ஏற்கெனவே சொல்லிவிட்டேன். செத்துக் கொண்டிருக்கிற, செத்துவிட்ட தொழில்களுக்கு, சிறு தொழில்களுக்கு புத்துயிர் அளிக்கவேண்டும் என்பது புரட்சித் தலைவி அவர்களது தலையாய கொள்கை. அந்தக் கொள்கை ஈடேற வேண்டும் என்பதற்காக (மேசையைத் தட்டும் ஒலி) அந்தக் கொள்கை ஈடேறுகிறபோது, வேலை இழந்து தத்தளிக்கின்ற இலட்சக்கணக்கான ஏழைகளுக்கு மறுவாழ்வு கிட்டும் என்பதற்காக, விலைச்சலுகை என்பதை இந்த அரசு கொடுக்கும். இது ஒரு கொள்கை முடிவு என்பதனைச் சொல்லி, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவை அவை ஏற்குமாறும், இதை நிறைவேற்றித்தருமாறும் நான் வேண்டுகிறேன்.



2001 செப்டம்பர் 13]

*பிற்பகல் 5-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர்.

[2001 செப்டம்பர் 13

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளிகள் ஒளிவின்மை (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 10/2001) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## 11. அரசினர் தீர்மானம்

### விதி 30-(3)-ன்கீழ் நிகழ்ச்சி நிரலில் மாற்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** இன்று ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுவதாக இருந்த 2001 ஆம் ஆண்டு அண்ணா பல்கலைக்கழக (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 11/2001) நாளை (14-9-2001) எடுத்துக்கொள்வது குறித்த தீர்மானம். மாண்புமிகு பேரவை முன்னவர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவை விதி 30(3)-ஐ தளர்த்தி இன்றைய நிகழ்ச்சி நிரலில் இனம் 8 அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்) என்ற தலைப்பின்கீழ் உள்ள, உள் இனம் 2 நாளை (14-9-2001)-ல் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி மற்றும் சட்ட அமைச்சர் அவர்கள் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2001 செப்டம்பர் 13] [பேரவை தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

## 10. அரசினர் சட்டமுன்வடிவுகள் (ஆய்வு செய்தல்)— தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 7/2001), மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

***மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 7/2001) @ ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறவேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** அடுத்து வருகின்ற சட்டமுன்வடிவும், மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுக்குத் தொடர்புடையது. எனவே, கருத்துக்களைக் கூற விரும்புகிற உறுப்பினர்கள் இந்த இரு சட்டமுன்வடிவுகள் குறித்தும் கூறலாம். திரு. கா. கந்தசாமி (குறுக்கீடு) கட்சிவாரியாக யாராவது ஒருவர் பேசுங்கள், (குறுக்கீடு) திரு. என். நன்மாறன் அல்லது திரு. டி. மணி, யாராவது ஒருவர் பேசலாம் (குறுக்கீடு) அது தனி. அது இப்போது இல்லை. இப்போது திரு. கா. கந்தசாமி பேசுங்கள்.

பிற்பகல் 5-20

**(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)**

**திரு. கா. கந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவினை தமிழ் மாநில காங்கிரஸ் கட்சியின் சார்பாக வரவேற்கிறேன். தணிக்கை செய்கின்றபோது ஊராட்சிகளிடமிருந்து அந்தத் தணிக்கை நிதியை அரசு வசூலிக்க வேண்டுமென்று சொன்னால்,

@ 10-9-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. கா. சுந்தசாமி] [2001 செப்டம்பர் 13

ஊராட்சிகளின் வருமானத்தைப் பெருக்க வேண்டும். இந்தச் சட்டமன்றத்தில் இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினர்கள் பலர் ஏற்கெனவே ஊராட்சிமன்றத் தலைவர்களாக, பஞ்சாயத்து யூனியன் Chairman-களாக இருந்து இருக்கிறார்கள். அவர்கள் நேரடியான அதிகாரத்தைப் பெற்றவர்கள். எம்.எல்.ஏ.க்களுக்கு இருக்கின்ற அதிகாரத்தைக் காட்டிலும், பஞ்சாயத்துத் தலைவர்களுக்கு அதிக அதிகாரம் இருக்கின்றது. எம்.எல்.ஏ.-களுக்கு வெறுமனே பரிந்துரை செய்கின்ற அதிகாரம்தான் இருக்கின்றது.

அப்படி ஊராட்சி மன்றங்கள் தணிக்கை நிதியைச் செலுத்துகின்றபோது உள்ளாட்சி அமைப்புகளின் வருமானத்தைப் பெருக்கியாக வேண்டும். ஊராட்சி அமைப்புகள் சிறப்பாகச் செயல்பட்டால் அரசுக்கு நிதிச் சுமை குறைவதோடு இந்தப் பணிப் பளுவும் குறையும். தங்கள் நிதியாதாரங்களைப் பெருக்க உள்ளாட்சி அமைப்புகள் அரசின் மானியங்களை மட்டும் நம்பியிராமல் வரி வசூலைச் சிறப்பாகச் செய்ய வேண்டும். தேவையற்ற செலவுகளைக் கட்டுப்படுத்த வேண்டும். புதிதாகக் கடைகள் கட்டி வாடகைக்கு விடுதல், ஆக்கிரமிப்புகளை அகற்றி அந்த இடங்களை ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல், உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்கு வரும்போது அவர்கள் செலுத்த வேண்டிய நுழைவு வரியை முழுமையாகவும் குளறுபடிகள் இல்லாமலும் வசூலித்தல் போன்ற நடவடிக்கைகளால் உள்ளாட்சிகளில் வருமானத்தைப் பெருக்க முடியும்.

கடந்த ஆட்சிக் காலத்திலே பல கோடி ரூபாய் செலவு செய்து உள்ளாட்சி அமைப்புகளின் சார்பாக மரக் கன்றுகளை நட்டார்கள். இந்த மரக்கன்றுகளையெல்லாம் இன்றையதினம் பார்க்க முடியவில்லை. கடந்த ஆட்சிக் காலத்திலே இந்த மன்றத்திலே சட்டமன்ற உறுப்பினராக இருந்த டாக்டர் செல்லக்குமார் அவர்கள் இந்த மரக்கன்றுகள் நடுவதிலே கோடிக்கணக்கிலே ஊழல் நடைபெறுகிறது என்று சொல்லி சேலத்திலே போராட்டத்தைக்கூட நடத்தினார்கள். அவரை அந்த அரசு கைது செய்து சிறையிலே வைத்தது. அப்படி நடப்பட்ட மரக்கன்றுகள் தொடர்ந்து இருக்கின்றனவா என்பதை இந்த அரசு பார்த்துக்கொள்ள வேண்டும்.

பள்ளிகளையும், மருத்துவமனைகளையும் உள்ளாட்சி அமைப்புகள் நடத்துகின்றன. பள்ளிகளை நடத்துகின்ற பொறுப்பை கல்வித் துறை அமைச்சர் எடுத்துக்கொண்டால் உள்ளாட்சி அமைப்புகளின் நிதிச் சுமை குறையும். அதேபோன்று, மருத்துவமனைகளை நடத்துகின்ற பொறுப்பை உள்ளாட்சித் துறை செய்யாமல் மக்கள் நல்வாழ்வுத் துறை எடுத்துக் கொண்டால் உள்ளாட்சிக்கு நிதி சுமை குறையும். எனவே, நீங்கள் இதைப்



2001 செப்டம்பர் 13] [திரு. கா. சுந்தசாமி]

பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மருத்துவமனைகள் நடத்துவதையும், பள்ளிகளை நடத்துவதையும் நீக்கிவிட்டால், அந்த நிதியிலிருந்து மக்களுடைய குடிநீர்ப் பிரச்சினைகளைத் தீர்க்கலாம், ரோடுகள் போடலாம், துப்புரவுப் பணிகளை இன்னும் நல்ல முறையிலே செய்யலாம். எனவே, பள்ளிகளை நடத்துவதையும் மருத்துவமனைகளை நடத்துவதையும் உள்ளாட்சி விட்டுவிட முடியுமா என்பதைப் பார்க்குமாறு நான் கேட்டுக்கொள்கிறேன்.

உள்ளாட்சி அமைப்புகளில் இரண்டு அடுக்கு முறை இருந்தால் நன்றாக இருக்கும். ஏனென்று சொன்னால் கடந்த காலத்திலே மாவட்ட வளர்ச்சி மன்றங்கள் இருந்தன. அந்த வளர்ச்சி மன்றங்கள் இருக்கின்றபோது Chairman-கள் பஞ்சாயத்து யூனியன் Chairman-கள், எம்.எல்.ஏ.க்கள் எல்லாம் அதிலே உறுப்பினர்களாக இருந்து, அது ஒரு மினி சட்டசபையாக நடந்தது. எல்லா அரசு அதிகாரிகளையும் சந்திக்கக்கூடிய வாய்ப்பு இருந்தது. அவர்களிடம் நேரடியாகக் கேள்வி கேட்கின்ற வாய்ப்பும் இருந்தது. இப்போது எம்.எல்.ஏ.-க்களால் மாவட்ட அதிகாரிகளை நேரடியாகப் பார்க்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. எனவே, மீண்டும் இந்த இரண்டு அடுக்கு முறையைக் கொண்டு வரவேண்டுமென்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த சட்டமன்றத் தேர்தலிலே மின்னணு வாக்குப் பதிவு நடத்தப்பட்டது. அதிலே சில குறைபாடுகள் இருக்கலாம். ஆனால், கள்ள ஓட்டுப் போடுவதை அந்த மின்னணு இயந்திரம் தடுக்கின்றது. உடனடியாகத் தேர்தல் முடிவுகளை அறிய முடிகின்றது. எனவே, அதிலுள்ள குறைபாடுகளை நீங்கள் நீக்கி, மீண்டும் மின்னணு இயந்திரத்தைப் பயன்படுத்துமாறு கேட்டு, நான் இந்தச் சட்டமுன்வடிவை வரவேற்று அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்கள்.

*பிற்பகல் 5-25*

**திரு. டி. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஊராட்சிகளில் தணிக்கை செய்கின்றபோது, அந்தத் தணிக்கையினுடைய வழியில் அல்லது தணிக்கையினுடைய செலவில் ஒரு பகுதியை அந்த ஊராட்சி செலுத்த வேண்டும் என்று சொல்கின்றது இந்தச் சட்டமுன்வடிவு.

நம்முடைய ஊராட்சியினுடைய வருமானத்தை பொறுத்தமட்டில் அவர்களுடைய ஊழியர்களுடைய சம்பளத்தைக்கூட கொடுக்க முடியாத நிலையில் பல ஊராட்சிகள் இன்று நம்முடைய மாநிலத்திலே இருக்கின்றன.

அதேபோன்றுதான் அந்த ஊராட்சியினுடைய செலவினங்கள். குறிப்பாக மின்சாரத்தைப் பொறுத்தமட்டில், மின்சாரக் .கட்டணத்தை இன்று கட்ட முடியுமா என்று கேட்டால் கட்ட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. எனவேதான், முன்பு இருந்த மாதிரி அந்தத் தணிக்கை செய்கின்ற, அதிலே வருகின்ற செலவினங்கள் பூராவையும் அரசே ஏற்றுக்கொள்வதுதான் அந்த ஊராட்சிகள் சிறப்பாகச் செயல்படுவதற்கு, இன்றைய பொருளாதாரச் சூழ்நிலையில் சாத்தியமாகும்.

நம்முடைய ஊராட்சி மன்றங்கள், ஒன்றியங்களைப் பொறுத்தமட்டிலே நான் ஏற்கெனவே உள்ளாட்சி மன்றங்களுடைய நிதிநிலை அறிக்கையின்போது சில கருத்துக்களைச் சொன்னேன். மேல்புறத்திலே இருக்கிற ஊராட்சி ஒன்றியத்திலே வருமானம் என்பது மிகக் குறைவாக இருந்த காரணத்தினால், சரியாக ஊழியர்களை வைத்து வேலை செய்யக்கூட முடியாத சூழ்நிலை இருக்கிறது. அத்துடன் நின்றுவிடவில்லை. அரசாங்கம் இலவசமாக 1,2,3 என்று ஜீப்பை கொடுத்தார்கள். அந்த ஜீப்புகளை மழையும், வெய்யிலும் படாமல் பாதுகாப்பதற்கு ஒரு Shed-ஐ போடுவதற்குக்கூட அங்கு நிதி இல்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. இந்த நிலையில் தான் முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம் இருக்கிறது. இதுதான் அந்த மாவட்டத்தினுடைய பிரத்தியேகமான சூழ்நிலை.

வருமானம் எப்படி குறைக்கப்பட்டிருக்கிறது என்பதையும் பொருளாதார சீர்குலைவு என்பது அந்த மாவட்டத்திலே எப்படி இருக்கின்றது என்பதையும் பார்க்கவேண்டும். மிக முக்கியமான வருவாயைப் பெருக்கித் தருகின்ற இரப்பருடைய விலை வீழ்ச்சியின் காரணமாகவும் தேங்காயினுடைய விலை வீழ்ச்சியின் காரணமாக, பொருளாதாரத்திலே மிகப் பெரிய பாதிப்பு ஏற்பட்டிருக்கின்ற ஒரு மாவட்டமாக இருக்கின்றது.

அந்த நிலையில் சில ஊராட்சிகளை நாம் எடுத்துக்கொண்டால் புலியூர்சாலை என்ற பகுதியிலே ஒரு ஊராட்சி, சம்பளம் கொடுக்க முடியாது. அதுபோன்று பல ஊராட்சிகள் இருக்கின்றன. அப்படி சம்பளத்தை கொடுப்பதற்கும், மின்சாரக் கட்டணத்தை கட்டுவதற்கும், அதுபோன்று பாதுகாக்கப்பட்ட குடிநீரைத் தருகின்றபோது அந்தப் பாதுகாக்கப்பட்ட குடிநீருக்கான வேலையை செய்வதற்கும் அதற்கான



மின்சாரத்திற்கான செலவினைக்கூட தர முடியாத, பல ஊராட்சிகள் இருப்பதை அந்த மாவட்டத்திலே நான் கண்கூடாகப் பார்க்கின்ற ஒரு நிலை இருக்கிறது.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

எனவே, இந்த வகையில் அந்த ஊராட்சிகளிலே இன்னொரு குறைபாட்டை நாம் சந்திக்கின்றோம். ஏற்கெனவே 11-வது நிதிக் குழுவினுடைய அறிவிப்புகளும் வந்து, அந்த நிதியைத் தருகின்றபோதுகூட பாரபட்சம் என்கின்ற முறையைக் கையாளுகின்றார்கள். அதை உள்ளாட்சி மன்றங்களில் பார்க்க முடிகின்றது. நான் இதைத் தெளிவாகச் சொல்வதற்கு இப்போது விரும்பவில்லை. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சருடைய கவனத்திற்கு இந்தந்த உள்ளாட்சி மன்றங்களிலே, நகராட்சிகளிலே, நடந்திருக்கிறது என்ற தகவலை அவருக்கு நான் சொல்லியிருக்கின்றேன். அதை நான் இப்போது வெளிப்படையாகச் சொல்வதற்கு இது சரியான நேரமல்ல.

நம்முடைய ஒன்றியங்களுக்கு நிதியைத் தருகின்றபோது பாரபட்சமான ஒரு நிலையைக் கடைப் பிடிப்பதை அந்த மாவட்டத்திலே நாம் பார்க்கிறோம். இது தமிழ்நாட்டிலே பல மாவட்டங்களிலும் இருக்கின்ற நிலைதான். ஆகவேதான் இந்தத் தணிக்கை செய்கின்றபோது அதிலே வருகின்ற அந்த செலவினத்தினை அந்த ஊராட்சியினுடைய தலையிலே வைத்து விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும். முந்தைய அரசு எந்த அளவிற்கு அதை செலுத்தப் பார்த்தார்களோ, அதற்கு எப்படி வழி வகுத்தார்களோ, எந்த முறையில் அந்த வேலைகள் நடந்தனவோ அந்த வகையிலே அந்த ஊராட்சியில் இந்தத் தணிக்கை செய்கின்றபோது அந்தச் செலவினத்தை அவர்கள் தலையில் சுமத்தாமல் இருக்க வேண்டும் என்ற ஒரு கருத்தைக் கூறிக்கொள்கிறேன். இந்தச் சட்டத்திலே அந்தக் கருத்து இருக்கிறது. அந்தக் கருத்து என்ன என்று பரிசீலனை செய்து, அந்தக் கருத்தின் அடிப்படையில் அந்த ஊராட்சிகளுக்கு அந்தத் தணிக்கை செய்கின்றபோது வருகின்ற செலவினத்தைச் சுமத்தக் கூடாது என்ற கருத்தைச் சொல்லி அமைகின்றேன்.

பிற்பகல் 5-30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பொன்முடி.

**டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்ன கருத்தை நான் முழுமையாக வரவேற்கிறேன். குறிப்பாக அவருடைய மாவட்டத்திலே மட்டுமல்ல, தமிழகத்திலே இருக்கிற பல்வேறு கிராமப் பஞ்சாயத்துக்களுக்கு நிதி ஆதாரம் இல்லாமல் தவித்துக் கொண்டிருக்கிற சூழ்நிலை இருக்கிறது. நேரடியாக மத்திய அரசிலேயிருந்து அவர்களுக்கு ஒதுக்கப்படுகிற பணம்கூட இதற்குத்தான் செலவிடப்பட வேண்டுமென்ற தலைப்பிட்டே அவர்களுக்கு ஒதுக்கப்படுகின்றன. அதேபோல மாநில அரசாங்கத்திலிருந்து கொடுக்கப்படுகிற நிதி உதவிகள்கூட, இவை இவற்றிற்குத்தான் என்று ஒதுக்கப்படுகின்றன. இப்படிப்பட்ட சூழலில் தணிக்கைகளுக்காக அவர்களே அவர்கள் சொந்தமாக வரிபோட்டு ஏதேனும் வைத்திருந்தால்தான் இதைக் கட்டக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கும். ஆகவே, மாநிலத்திலேயிருந்து அவர்களுக்குக் கொடுக்கிற grants ஏதேனும் இருக்குமானால், அதிலே தணிக்கைக்கு என்று ஒரு நிதியைக் கூட பிடித்துவிட்டுக் கொடுப்பீர்கள் என்று சொன்னால், அவர்களிடமிருந்து வசூலிக்கிற கஷ்டமாவது இல்லாமல் இருக்கும். ஏனென்றால் அன்றைக்கு மாண்புமிகு மின் துறை அமைச்சர் சொன்னதைப்போல, மின்சாரக் கட்டணம் உள்ளாட்சித் துறையிடமிருந்து கட்ட வேண்டிய தொகையே இன்னும் அதிகமாகிக் கொண்டிருக்கிற சூழ்நிலை. ஆகவே, மின்சாரத் தொகையைக் கட்ட முடியாத ஊராட்சிப் பஞ்சாயத்துக்கள், அதுமாதிரி பல பஞ்சாயத்துக்கள் இருக்கிறபோது அந்தச் சுமையோடு இந்தத் தணிக்கை செய்கிற சுமையையும் சுமத்த வேண்டாம். ஆகவே, தணிக்கையை நீங்கள் ஊராட்சிகளின் மீது செலுத்தாமல், அரசே அந்தச் செலவினை ஏற்க வேண்டும் என்ற மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மணி அவர்களுடைய கருத்தை நானும் வரவேற்று அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவுகள்மீது இப்போது உறுப்பினர்கள் குறிப்பிட்டுச் சொன்னதைப்போல என்னுடைய கருத்தையும் இணைத்துக்கொள்ள விரும்புகிறேன்.

3 அடுக்கு ஊராட்சி ஏற்பட்டதற்குப் பின்னாலே நிதிநிலைமை சரியாக இருக்கிறது என்று குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஓரளவு உண்மைதான். ஆனாலும் எல்லா காலங்களிலும், எல்லா வகையான





நிதியும் ஊராட்சிகளுக்குக் கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு தொடர்ந்து கடந்த முறையும் இருந்தது. இப்போதும் இருக்கலாம். வருங்காலங்களில்கூட அப்படி இருக்கலாம். ஏனென்றால் மத்திய அரசாங்கத்தினுடைய நிதி வரவைப் பொறுத்து பல அம்சங்கள் இதிலே உள்ளடங்கி இருக்கிற காரணத்தினாலே, இந்தப் பிரச்சினைகளை எல்லாம் சமாளிப்பது என்பது சிற்றூராட்சிகளுக்கு மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. ஆகவே, தணிக்கைக்கு ஏற்படுகிற செலவுகளை இவ்வளவு என்றுகூட சொல்லவில்லை. அதில் நூற்றுக்கு இவ்வளவு என ஏதாகிலுமொரு தொகையை ஊராட்சிகளிடமிருந்து வசூலிப்பதை அரசு முடிவு செய்துள்ளது என்று உள்ளது. அப்படிப் பார்த்தால் அது ஏதோ ஒரு வகையிலே ஒரு வருமானமாக அல்லது வரவு வைக்க வேண்டுமென்பதற்குரிய முயற்சியாக இந்தச் சட்டமுன்வடிவு வேண்டியதில்லை. ஏதோ ஒரு வகையிலே வரவு என்கிற அந்த முயற்சிகள் இருக்கின்றபோதுகூட, அரசேகூட, அதிலே பெரிய அளவு வர வேண்டாம்; அல்லது வரும் என்று எதிர்பார்க்காமல் இந்தச் சட்டமுன்வடிவு வந்திருப்பதாகத்தான் நான் கருதுகிறேன். ஆகவே இது ஒரு தேவையில்லாத விஷயமாகத்தான் நாங்கள் கருதுகிறோம். ஆகவே, இதை நீக்கிக்கொள்ளலாம்.

குறிப்பாக ஊராட்சிகளிலே இன்னும் பல பிரச்சினைகள் இருக்கின்றன. மின்சாரத்தைப் பற்றி இங்கே குறிப்பிட்டுச் சொன்னதைப்போல, ஒரு மின் கம்பம் நடுவதற்கு என்று சொன்னாலே ஒரு ஊராட்சி 10,000 ரூபாய் கட்ட வேண்டிய அவசியம் இருக்கிறது. மிக அவசியத் தேவையான ஒரு கிராமத்திற்கு, ஒரு தெருவிற்கு மின் விளக்கு அல்லது ஆதிதிராவிடத் தெருக்களுக்கு மின் விளக்கு அமைக்க வேண்டுமானால் 3 போஸ்ட் போட வேண்டுமென்றால் 30,000 ரூபாய் செலுத்தினால்தான் அந்த இடத்திற்கு மின் கம்பம் போட முடிகிறது. அது இல்லாத காரணத்தாலேயே அந்தத் தெருவிற்கு மின் விளக்கு கொடுக்க முடியாத ஒரு சூழ்நிலைகூட ஆகிவிடுகிறது. இதையேகூட அரசு ஏற்று நடத்த வேண்டுமென்று கடந்த காலங்களிலே நாம் வலியுறுத்திச் சொல்லி வந்திருக்கிறோம். ஆகவே, இப்படி இக்கட்டான சூழ்நிலை இருக்கிறபோது, நிதிநிலையைப் பொறுத்த இந்தச் சட்டமுன்வடிவைப் பற்றி நமது அரசு மறுபரிசீலனை செய்வது அவசியம் என்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே சொல்லிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. லா. சந்தானம்.

**திரு. லா. சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கு உறுப்பினர்கள் எல்லாம் குறிப்பிட்டதுபோல, நாங்களெல்லாம்

ஊராட்சியிலே, ஊராட்சி ஒன்றியத்திலே பங்கு வகித்தவர்கள் என்கின்ற காரணத்தினால், இந்த நிலை மிகத் தெளிவாகவே தெரிந்திருக்கிறோம்.

சில கிராமப் பஞ்சாயத்துக்களிலே மின்சாரக் கட்டணம் கட்ட முடியாத அளவிற்கு, குடிநீர் தொட்டிகளுக்கு மின் இணைப்பு கொடுக்கின்ற மோட்டார்களினுடைய மின் இணைப்பைக்கூட துண்டிக்கின்ற நிலைமையெல்லாம் ஏற்பட்டிருக்கிற இப்போதுகூட அது இருந்து கொண்டு இருக்கிறது. எனவே, சமுதாயத்திலே இருக்கிற பொருளாதார ஏற்றத் தாழ்வைக் காட்டிலும் இந்த உள்ளாட்சித் துறையிலே மிகப் பெரிய ஏற்றத் தாழ்வுகள் இருக்கின்றன. ஒன்றுமே இல்லாத ஊராட்சிகளும் இருக்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய்களை வருமானம் வைத்துக்கொண்டு செலவு செய்யாத ஊராட்சிகளும் இருக்கின்றன. இப்படி எல்லாம் இருக்கின்ற காரணத்தால் இந்தச் சட்டமுன்வடிவை, அவர்கள் சொன்னது போல, இதற்கென்று அரசாங்கம் தனியாக நிதியொதுக்கீடு செய்வதற்கு முயற்சிகளைச் செய்ய வேண்டுமென்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்திலே மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் உட்பிரிவுகளை வகை செய்கின்ற வகையிலே இந்த தேர்தல் முடிவுகள் வெளியான தேதியிலிருந்து மனு ஒன்றினைத் தாக்கல் செய்வதற்கு 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் என்று கூடுதலாக்கக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பைக் கொடுத்திருக்கின்ற காரணத்தினாலே இந்தச் சட்டத் திருத்தத்தினை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பில் நாங்கள் மனதார வரவேற்கிறோம்.

*பிற்பகல் 5-35*

காரணம், ஒரு தேர்தலிலே, ஏதாவது ஒரு பின்னணியை வைத்து, அல்லது அதிகாரிகள் சூழ்ச்சி அல்லது திரைமறைவிலே ஏதாவது காரியங்கள் நடந்தாலும்கூட, வெற்றி பெறக்கூடிய ஒருவர் வெற்றி வாய்ப்பு இழந்ததாக அறிவிக்கப்பட்டு, அவருக்கு நியாயம் கிடைக்கின்ற வகையிலே அவர் வழக்குமன்றத்திற்குச் செல்வதை 15 நாட்கள் அவகாசம் என்பது குறைவாக இருக்கிறது. காரணம், அதற்குண்டான ஆவணங்களை எல்லாம் சேகரித்து மனு தாக்கல் செய்வதற்கு அவகாசம் கொடுக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்தின் அடிப்படையில் 15 நாட்களிலிருந்து 45 நாட்கள் வரை நீட்டித்து



இருப்பது வரவேற்கக்கூடியது என்று மீண்டும் ஒரு முறை இதை வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல, தணிக்கைக் கட்டணமாக ஏதாவது ஒரு தொகையை வசூல் செய்ய வேண்டுமென்ற ஒரு சட்டத்திருத்தத்தைக் கொண்டுவந்து இருக்கிறீர்கள். ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் என்று இருக்கக்கூடிய இந்த மூன்றடுக்கு முறையிலே, இது பல கோணங்களிலே வரவேற்கக்கூடிய ஒன்றாக இருந்தாலும்கூட, இரண்டு அடுக்கு முறைதான் சரியானது என்று எல்லோரும் சொல்லக்கூடிய ஒரு நிலை இன்று இருந்துகொண்டிருக்கிறது.

அப்படிப்பட்ட சூழ்நிலையில் எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னதை மாதிரி—ஏதோ அவரவர் பகுதியை மட்டும் சுட்டிக்காட்டினார்கள்--நான்கூட ஊராட்சி ஒன்றிய Chairman-ஆக இருந்தவன் என்ற வகையில், கடந்த காலங்களிலே பல்வேறு நிகழ்வுகளை எல்லாம் பார்க்கிற நேரத்திலே நிறைய ஊராட்சிகளில், சிற்றூராட்சிகளில் தெருவிளக்குக் கட்டணம் கட்ட முடியாத நிலையில் அலைந்து கொண்டிருக்கின்றார்கள். காலங்காலமாக இதுவரை மின்சாரம் இல்லாத கிராமங்கள் இருக்கின்றன என்கின்ற சூழ்நிலையில் அப்படிப்பட்ட கிராமங்களுக்குத் தெருவிளக்கு அமைப்பதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கிறது.

நான் சட்டமன்றத்திலே கடந்த 4 ஆண்டுகளுக்கு முன்பு பேசினேன். இதுவரையில் மின்சார வாடையே படாத கிராமங்கள் இன்னும் தமிழ்நாட்டில் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட குக்கிராமங்களுக்குக் கூட தெருவிளக்கு அமைக்க வேண்டுமென்று சொன்னால் ஊராட்சிகளில் நிதி இல்லாத காரணத்தாலே இப்படிப்பட்ட குறைபாடுகள் எல்லாம் தொடர்ந்து இருந்துகொண்டிருக்கின்ற சூழ்நிலை உள்ளது.

ஊராட்சி ஒன்றியங்களில் குடிநீருக்கான மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்கு கிராம ஊராட்சிகளாலும், சிற்றூராட்சிகளாலும் கட்டணம் செலுத்த முடியாத நிலை இருக்கின்றது. ஊராட்சி ஒன்றியங்களில் பணியாளர்களுக்குச் சம்பளம் கொடுக்க முடியாத நிலையில்—மாதக் கணக்கில் சம்பளம் தரமுடியாத நிலையில்—ஊராட்சி ஒன்றியங்களும் இருந்துகொண்டிருக்கின்றன. ஆகவே இப்படிப்பட்ட இக்கட்டான சூழ்நிலையில், சங்கடங்கள் எல்லாம் இருக்கின்ற நேரத்திலே தணிக்கைக்

[திரு. ஜி.கே. மணி] [2001 செப்டம்பர் 13

கட்டணம் வசூல் செய்வது, ஏதாவது ஒரு வகையிலே வசூல் செய்யலாம் என்று சட்டத் திருத்தம் கொண்டுவருவது மிகுந்த வேதனை அளிப்பதாக இருக்கிறது. இது இப்படி நசுக்கப்பட்ட ஊராட்சிகளை, ஒன்றியங்களை மீண்டும் நலிவுக்கு நாம் அழைத்து செல்லக்கூடிய வகையிலே இருக்கின்ற காரணத்தால் நம்முடைய தமிழக அரசு மீண்டும் இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் மாவட்ட ஊராட்சிகள் என்ற ஸ்தாபனங்களுடைய வரவு-செலவை தணிக்கை செய்கின்ற தணிக்கை துறையினருக்கு அரசே அவர்களுடைய படி, செலவு மற்றும் இதர செலவுகளை ஏற்றுக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மாண்புமிகு உறுப்பினர்கள் இங்கே சொல்லிய கருத்துக்களை எல்லாம் பார்க்கிறபோது சில ஊராட்சிகளில் வேண்டுமானால் வருமானம் குறைவாக இருக்கலாம். ஆனால் வருமானம் அதிகப்படியாக இருக்கக்கூடிய ஊராட்சிகள், ஊராட்சி ஒன்றியங்கள், மாவட்ட ஊராட்சிகள் இருக்கின்றன. ஆகவே அப்படிப்பட்ட நிலைமைகளை எல்லாம் பரிசீலனை செய்து 1997 மற்றும் 1998 ஆம் ஆண்டிலிருந்து மாநில நிதிக்குழு பரிந்துரையின் அடிப்படையில், உள்ளாட்சி அமைப்புகள் நிதிநிலையில் நன்றாக இருக்கின்றன என்று பரிந்துரை செய்ததன் அடிப்படையில் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர வேண்டிய ஒரு அவசியம் ஏற்பட்டிருக்கிறது.

வருமானம் குறைவாக இருக்கின்ற ஊராட்சிகளுக்கு, ஏதாவது, இதிலே இருந்து விலக்கு அளிக்க முடியுமா என்பதையும் பரிசீலித்து வருமானம் கூடுதலாக இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளுக்கு தணிக்கை செய்கின்ற அந்தக் கட்டணத்தை நிர்ணயிப்பது தொடர்பாக அரசு சீலித்து நல்ல முடிவு எடுக்க இருக்கிறது. இருந்தாலும் இந்தச் சூழ்நிலையில், றுடைய நிதிநிலைமையைக் கருத்தில் கொண்டு ஊராட்சிகளுக்கு, மாநில நிதிக் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் தணிக்கைத் துறையினர் தணிக்கை செய்வதற்கு ஒரு குறிப்பிட்ட கட்டணத்தை, குறைந்த அளவு கட்டணத்தை நிர்ணயம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை, ஒரு கட்டாய சூழ்நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே, ஏதாவது ஒரு தொகை று வருகின்றபோது, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளுடைய வருமானத்தின் அடிப்படையில், வருமானம் குறைவாக இருக்கக்கூடிய



2001 செப்டம்பர் 13] [திரு. சி. துரைராஜ்]

உள்ளாட்சி அமைப்புகளுக்குக் குறைந்த கட்டணமும், கூடுதலாக இருக்கக்கூடிய உள்ளாட்சி அமைப்புகளுக்குக் கூடுதல் கட்டணமும் இருக்கும். எனவே, ஏதாவது ஒரு குறிப்பிட்ட தொகையை வசூலிப்பதுதான் நியாயமாக அமையும் என்று இந்த நேரத்திலே குறிப்பிட நான் கடமைப்பட்டிருக்கிறேன். எனவே, மேற்காணும் சட்டமுன்வடிவிற்குச் செயல் வடிவம் கொடுக்கின்ற வகையில், இச்சட்டமுன்வடிவை நிறைவேற்றித் தருமாறு வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 5-40*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவை தலைவர்] [2001 செப்டம்பர் 13

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு, தமிழ்நாடு ஊராட்சிகள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 7/2001) நிறைவேற்றப்பெற வேண்டும்."
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (இ) தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 12/2001). மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,



2001 செப்டம்பர் 13] [திரு. சி. துரைராஜ்]

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 12/2001)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்.

---

@ 12-09-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 13

**மாண்புமிகு திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (இரண்டாம் திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 12/2001) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஈ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2001), மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2001) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறவேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வருகின்ற சட்டமுன்வடிவும் மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்குத் தொடர்புடையது.

---

@ 10-09-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 13] [பேரவை தலைவர்]

எனவே, கருத்துக்களைக் கூறக்கூடிய உறுப்பினர்கள் இரண்டையும் சேர்த்துக் கூறலாம். திரு. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களின் தேர்தலை நடத்துவதற்கான திருத்தத்தைப் பற்றி இங்கே அறிவித்திருக்கிறார்கள். குறிப்பாக, கூட்டுறவுத் துறையைப் பொறுத்தவரையிலே, தேர்தல்கள் நடத்துவதற்கான அறிவிப்புகளை நமது அரசு அறிவித்திருக்கிறது. அதைப்பற்றிய கருத்து இருக்கிறது என்று சொன்னாலும், உரிய காலத்திலே அதை நடத்துவதற்கான முயற்சிகளை எடுக்கவேண்டுமென்பதை நான் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன். குறிப்பாக, உறுப்பினர்களைச் சேர்ப்பதிலே பல்வேறு விதமான குளறுபடிகளும், பிரச்சினைகளும் இருக்கின்றன என்ற ஒரு செய்தி வலுவாக இருக்கிறது. ஆகவே, இந்த உறுப்பினர்கள் சேர்க்கையைப் பற்றியும், முறைப்படுத்தி வகைப்படுத்துவதற்கான வகையிலேயும் அரசு அதைச் சிந்தித்துச் செயல்படுத்துவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும்.

*பிற்பகல் 5-45*

குறிப்பாக, அதிலே விவசாயிகளோ அல்லது அதற்குச் சம்பந்தப்பட்டவர்களோ உறுப்பினர்களாக இல்லாதவர்கள்கூட, வெளியிலிருந்து உறுப்பினர்களாக இருப்பதற்கான முயற்சிகள் இருக்கின்றன. அவற்றையெல்லாம் தடுப்பதற்கான, நீக்குவதற்கான முயற்சிகளை எடுத்து, உரியவர்களை உறுப்பினர்களாக இணைத்து, விடுபட்டவர்களையும் சேர்த்து, அந்தத் தேர்தலை நடத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இதிலே குறிப்பாக, பல கூட்டுறவு அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தாமலேயே ஒத்திவைக்கப்பட்டுக்கொண்டே வந்துகொண்டிருக்கிறது. சில அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்தப்பட்டது. சில அமைப்புகளுக்கு நடத்தப்படாமல் ஒத்திவைக்கப்பட்டதற்கும் நீட்டிப்பு செய்து கொண்டே இருக்கிறோம். ஆகவே, தேர்தல் நடத்தப்பட்டது, நடத்தப்படாதது எல்லாவற்றிற்கும் இணைத்து, நடத்தவேண்டும் என்பதை ஒரு கொள்கையாக எடுத்து, தேர்தலை நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கொண்டுவர உத்தேசிக்கப்பட்டுள்ள இந்தச் சட்டம், கூட்டுறவு

சித்தாந்தத்தின் அடிப்படையையே தகர்க்கக்கூடியதாக இருக்கிறது. ஜனநாயக முறையிலே யார் கூட்டுறவு சங்கங்களை, அவர்கள் தங்களுக்காக உருவாக்கி, அந்தச் சங்கங்களில் தங்களுக்கான இயக்குநர்களை, தலைவரைத் தேர்ந்தெடுத்து, அந்தச் சங்கத்திலே யார் யாரை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும் என்பதை அந்தச் சங்க நிர்வாகக் குழுதான் முடிவு செய்ய வேண்டும் என்பது. ஒரு உண்மையான கூட்டுறவுச் சித்தாந்தம். ஜனநாயக நெறிமுறைகளில் இருக்கக்கூடிய அந்த நிலை இன்றைக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, இந்தத் தேர்தலை செப்டம்பரிலே நடத்துவோம் என்று இதைக் கலைக்கின்ற நேரத்திலே, சொன்னார்கள். ஆனால், இப்போது டிசம்பரிலே இந்தத் தேர்தலை நடத்துவோம் என்று சொல்கிறார்கள். இன்றைக்கு ஜனநாயக முறையிலே ஒரு கூட்டுறவு இயக்கத்தினுடைய உறுப்பினராகச் சேர்வதுதான், அந்த ஜனநாயகத்தினுடைய முக்கிய பங்கு. அதிலேயும் குறிப்பாக, உறுப்பினர்கள் ஒன்றுகூடி, தங்களுக்கான திட்டங்களை வகுக்கக்கூடிய நிலைகளிலே இன்றைக்கு இந்த உறுப்பினர்களைச் சேர்ப்பது, தனி அதிகாரிகளுக்கு அதிகாரம் தருவது, தேர்ந்தெடுக்கப்படுகின்ற, தலைவர்கள் இயக்குநர்களுக்கு இருக்கின்ற உரிமையை பறிக்கக்கூடியதாக இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஒரு இயக்கத்திலே யார் யார் இருக்க வேண்டும் என்பதை, அந்த இயக்கத்திலே இருக்கின்ற அனைவரும் சேர்ந்து, அந்த இயக்கத்திலே இருக்கிறவர்கள்தான் அவர்களை உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும். நம்முடைய வீட்டிலே நாம் யார் யார் உறுப்பினராக இருக்கிறோம் என்பதை நாம்தான் முடிவு செய்யக்கூடியதாக இருக்க வேண்டுமே தவிர, இதற்காக ஒரு வெளி ஆள் வந்து செய்யக்கூடிய நிலை இருக்கக்கூடாது.

அதுவும் குறிப்பாக, தனி அலுவலர், தேர்தல் நடைபெறாமல் ஓராண்டு காலம் அங்கே பதவியில் இருந்தால்கூட, மற்றவர்களை உறுப்பினர்களாகச் சேர்க்கக்கூடிய வாய்ப்பை உருவாக்கித் தரலாம். ஆனால், விரைவிலே தேர்தலை நடத்துவேன் என்று சொல்லிவிட்டு, இப்போது அந்த அதிகாரத்தைத் தனி அலுவலர்களிடம் கொடுப்பது, இந்தக் கூட்டுறவு சித்தாந்தத்தையே கேலிக்குரியதாக்குகிறது என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இது நீண்டகாலம்



தள்ளிவைக்கப்பட்டது என்றால், அந்த உரிமையை அவர்களுக்குத் தரலாமே தவிர, இந்தச் சட்டத்திலே இருக்கின்ற, ஜனநாயக முறையிலே தேர்ந்தெடுக்கப்பட்டு, கூட்டுறவுத் துறை ஜனநாயக முறையிலே நடைபெற வேண்டும் என்றுதான், பிரதமர் தலைமையிலே நடைபெற்ற கூட்டுறவுத் துறை மாநாட்டிலேகூட, அனைதது மாநில கூட்டுறவுத் துறை அமைச்சர்களும் கலந்து கொண்ட மாநாட்டிலே அதற்கு எப்போதும் ஜனநாயக முறையிலே — தலைவர்கள், இயக்குநர்கள் எப்படி உள்ளாட்சித் தேர்தல்களிலே தேர்ந்தெடுக்கப்படுகிறார்களோ, அதைப்போல — இருக்க வேண்டும் என்று அங்கே சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்த நிலை தொடர்ந்தால்தான், அவர்களுக்கான அந்தப் பகுதி மக்களுடைய தேவைகள், அந்தச் சங்கத்திலே — பால் கூட்டுறவுச் சங்கமாக இருந்தாலும், பல்வேறு கூட்டுறவுச் சங்கங்களாக இருந்தாலும் — யார் அதிலே பயனாளிகளாக இருக்கிறார்களோ அவர்களைப் பாதுகாக்கக்கூடிய வகையிலே, அந்தப் பணிகளை மேற்கொள்ளமுடியும் என்ற வகையிலே, அப்படிப்பட்ட உறுப்பினர்களைச் சேர்க்கக்கூடிய வகையிலே இந்தச் சட்டத்திருத்தத்தை ஆய்ந்து, அதில் நீங்கள் கவனத்தைச் செலுத்த வேண்டுமென்று கேட்டு அமைகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவு சங்கங்களுக்கு தனி அலுவலர்களை நியமிபபதற்கான ஒரு சட்டமுன்வடிவையும், அதேபோல உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக ஒரு சட்டமுன்வடிவையும் இங்கே அரசு கொண்டு வந்து இருப்பதனை நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் திரு. கு. பிச்சாண்டி அவர்கள், கூட்டுறவு சித்தாந்தத்தைப் பற்றியெல்லாம் இங்கே மிகத் தெளிவாகப் பேசினார்கள். பால் சொசைட்டிக்குக் கொண்டுபோய் ஒரு ரிக்ஷாக்காரரை உறுப்பினராக்குவது; (மேசையைத் தட்டும் ஒலி) நெசவாளர் கூட்டுறவு சங்கத்திலே ஒரு விவசாயியைக் கொண்டுபோய் அல்லது ஒரு கூலித் தொழிலாளியைக் கொண்டுபோய் அந்த இடத்திலே உறுப்பினர் ஆக்குவது. இப்படிப்பட்ட சித்தாந்தங்கள்தான் கடந்த தேர்தலிலே நடைபெற்று (மேசையைத் தட்டும் ஒலி) கூட்டுறவு சங்கங்கள் என்பதை (குறுக்கீடு)

[2001 செப்டம்பர் 13

பிற்பகல் 5-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் வாக்கியத்தை முடிக்கவில்லை. அவர் வாக்கியத்தை முடிக்கட்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** தமிழகம் எவ்வளவு படுபாதாளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஓர் உயர்மட்டக் குழுவில், இந்த உணவுத் துறையைப் பற்றி, ரேஷன் கார்டைப் பற்றி அறிவதற்காக, அரசு எங்களை உறுப்பினராக்கி, இப்போது நிதித் துறைச் செயலாளராக இருக்கின்ற திரு. சந்தானம் அவர்களுடைய தலைமையில் நாங்கள் எல்லோரும் மத்திய பிரதேசத்திற்கு போனோம். அங்கே எப்படி Public Distribution System செயல்படுகின்றது என்பதைப் பார்ப்பதற்காக நாங்கள் அங்கே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்க அமைப்புகளை எல்லாம், மலைக் கிராமங்களிலே போய் பார்த்தபோது, அவர்கள் சொன்ன வார்த்தை, தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களைப் பார்த்துவிட்டுத்தான் நாங்கள், 1960, 1970-களிலே இந்த இடத்திலே கூட்டுறவுச் சங்கங்களை மத்திய பிரதேசத்திலே நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம், நீங்கள் போய் ஏன் அங்கிருந்து இங்கு வந்திருக்கின்றீர்கள் என்று சொன்னார்கள். அப்போது சொன்னோம். எங்களுடைய பகுதியிலே இருக்கக்கூடிய கூட்டுறவுச் சங்கங்கள் எல்லாம் இப்போது தலைகீழாக மாறிவிட்டது. ஆகவேதான் இங்கே வந்து நீங்கள் ஏதாவது புதுமையான திட்டங்கள் வைத்திருக்கிறீர்களா என்று பார்த்துவிட்டுப் போகலாம் என்று கூறி நாங்கள் அங்கே போய் பார்த்துவிட்டு வந்தோம்.

பொதுவாக, கூட்டுறவுச் சங்கங்களினுடைய தலைவர்களாக இருக்கின்றவர்கள், என்னுடைய தாத்தா கிருஷ்ணமூர்த்தி அவர்கள் சேலம் மத்திய கூட்டுறவு வங்கியினுடைய தலைவராக இருந்தார்கள். District Board Chairman-ஆக இருந்தார்கள். அதேபோல என்னுடைய மாமனார் முல்லை வடிவேலு அவர்களும் அதே வேலூர் மாவட்டத்திலே மத்திய கூட்டுறவு வங்கியினுடைய தலைவராக இருந்தார்கள். கூட்டுறவுச் சங்கங்களிலே அப்போது இருந்தவர்களின் நிலை வேறாகவும், இப்போது இருக்கக்கூடியவர்கள் நிலை வேறாகவும் இருந்து கொண்டிருப்பதை, நீங்கள் ஒப்பிட்டு பார்க்கின்றபோது, கூட்டுறவுத் துறை என்பது கொள்ளையடிக்கக்கூடிய துறையாக இப்போது மாறிவிட்டிருக்கின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) வெறுங்கையிலே முழம் போடுவது போல



2001 செப்டம்பர் 13] [திரு. சி. ஞானசேகரன்]

இப்போது நீங்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தேர்தல் நடத்தினாலும்கூட, எந்தக் கூட்டுறவுச் சங்கமும் இப்போது திவால் ஆகாமல், சொந்த சுய நிதியை வைத்து அது நடைபெறுவதற்கான காரணங்களை அடிப்படையாக வைத்துக் கொண்டிருப்பதை நீங்கள் ஆராய வேண்டும்.

அதற்குத்தான் இங்கேகூட, இந்த அவையிலே ஒரு நாள் நான் சொன்னேன். நம்முடைய கூட்டுறவுத் துறை அமைச்சருக்கும் நம்முடைய அவை முன்னவருக்கும், இந்த அரசுக்கும் நான் வைக்கின்ற வேண்டுகோளே, எல்லா கூட்டுறவுச் சங்கங்களையும் 100% Verification செய்ய வேண்டும். அதிலே Crime Branch C.I.D.-யை வைத்து செய்ய வேண்டும். ஏனென்றால் C.S.R.-ஐ நம்பி பிரயோஜனம் இல்லை. C.C.I.W. கூட—ரொம்ப அதாவது dead slow, ஒரு எருமை மாடைவிட மிகக் குறைந்த வேகத்திலே செல்லக்கூடிய ஒரு துறையாகத்தான் C.C.I.W இருந்து கொண்டிருக்கிறது. ஏனென்றால், சில நேரங்களில், நானும் வக்கீலாக இருந்து Case நடத்தியிருக்கின்றேன். 10 ஆண்டு காலமானாலும்கூட, charge sheet கூட போட மாட்டார்கள். பிறகு Case நடக்க ஆரம்பித்தால், அங்கே யாராவது தலைவர் செத்திருப்பான். அல்லது யாராவது ஆடிட்டர் செத்திருப்பான். அப்படியே போனாலும் Case முடிவிற்கு வரமாட்டேங்கிறது. ஆகவே, இந்த வகையில் பார்த்தால் எல்லா சொசைட்டிகளிலும், அங்கே இருக்கக்கூடிய அதிகாரிகளும் அதற்கு உடந்தையாக உள்ளனர். பொதுவாக, கிராம தொடக்க வேளாண்மை வங்கிகளிலே இருக்கக்கூடிய Secretary-ஐ மாற்றுவதற்கு ஒரு G.O. போட்டார்கள். அவர்கள் எல்லாம் போய் ஒரு ஸ்டே வாங்கி வைத்துவிட்டு அவர்கள் 10 ஆண்டுகள், 15 ஆண்டுகள் அந்த இடத்திலே அமர்ந்து கொண்டிருக்கின்ற காரணத்தினாலே உண்மையில் விவசாயிகளுக்குக் கிடைக்கக்கூடிய அந்தக் கடன் அவர்களுக்கு போய் சேருவதில்லை. இவர்களே பல விவசாயிகளுடைய கையெழுத்தைப் போட்டுவிட்டு கொள்ளையடித்துக்கொண்டு அங்கேயே உட்கார்ந்து கொண்டிருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், இது கூட்டுறவு மானியக் கோரிக்கையல்ல.

**திரு. சி. ஞானசேகரன்:** இல்லை, சொல்கிறேன் சில Guidelines, அதாவது இந்த அளவிற்கு Special Officer-கள் வேண்டுமா என்கின்றபோது, என்னதான் election நடத்தினாலும்கூட, அதை சரி செய்யாமல் election நடத்தினால் சரியாக வராது. இப்போது உறுப்பினர்களாக, அதாவது சில பேர் யார்யாரோ வந்திருக்கிறார்கள். அவர்களை முதலிலே நீக்க

[திரு. சி. ஞானசேகரன்] [2001 செப்டம்பர் 13

வேண்டும். நீங்கள் உறுப்பினர்களை சேர்ப்பதற்கு மட்டும்தான் சட்டம் வைத்திருக்கிறீர்கள், இதிலே. யார், யாரெல்லாம் உண்மையான உறுப்பினர்கள் இல்லையோ அவர்களை எல்லாம் கழித்துக் கட்டுவதற்கு முதலில் நடவடிக்கை எடுக்க வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி). பிறகு உறுப்பினர்களைச் சேர்க்கவும் வேண்டும். பொதுவாக தலைவர் ஒருவர் வந்த பிறகு, அவருக்கு வேண்டிய ஆட்களை மட்டும் நீங்கள் உறுப்பினர்களாக சேர்த்துக்கொள்வீர்கள் என்று சொன்னால் அதிலும் பயன் இருக்காது.

Special Officer என்பவர்கள், அதுதான் சொன்னேன், C.S.R. போன்றவர்களையெல்லாம் போடும்போதுகூட கவனமாக இருக்க வேண்டும். குறிப்பாக, எங்களுடைய வேலூரிலே வீட்டு வசதி சங்கங்கள் இரண்டு இருக்கின்றன. உண்மையிலே அதற்கு நம்முடைய மந்திரிகள் வேறு மாறுபடுகிறார்கள். அதாவது, வீட்டு வசதி கூட்டுறவுச் சங்கம் என்று சொன்னால் அவருடைய துறைக்குப் போகிறது. கூட்டுறவுத் துறை அமைச்சரோ இவர். இப்படி இரண்டுபேரும் மாறி, மாறி இரண்டுங்கெட்டானாக இருக்கின்ற காரணத்தினால் யாருமே சரியான Control-லே இதை எடுக்காத காரணத்தினால், இன்று எங்களுடைய வேலூரிலே இருக்கக்கூடிய இரண்டு கூட்டுறவுச் சங்கங்களை பொறுத்தவரையில் நான் உங்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்கிறேன் ஒரு ஆய்வு நடத்துவீர்கள் என்று சொன்னால், எத்தனை இலட்சம், எத்தனை கோடி அங்கே மட்டும் கொள்ளை போய் இருக்கிறது என்பதை மிகத் தெளிவாக நீங்கள் புரிந்து உடனடியாக நடவடிக்கை எடுக்கலாம். ஆனால், இன்று வரைக்கும் எநத நடவடிக்கையும் இலலை.

ஆட்சி மாறி இருக்கின்றதேயொழிய நாங்கள் எதிர்பார்த்த அந்தக் காட்சி இன்னும் வரவில்லை. (மேசையைத் தட்டும் ஒலி).

நான்கூட இதே மன்றத்திலே சொல்லியிருக்கிறேன். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின்போது எங்களுடைய கற்பகம் சூப்பர் மார்க்கெட்டினுடைய தலைவர் 12 கோடி ரூபாய் கொள்ளையடித்திருக்கிறார் என்று இந்த அவையிலே பேசி அவரை மட்டும் பதவியிலிருந்து எடுத்துவிட்டார்கள், அந்த ஆட்சியிலே எடுத்துவிட்டார்கள். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய நகரச் செயலாளர் பதவியிலிருந்தும் எடுத்துவிட்டார்கள். ஆனால், இன்றுவரையிலும் சரி, அவரை, அவர்களுடைய ஆட்களை arrest செய்யவில்லை. நீங்கள் மாறி வந்திருக்கின்றீர்கள். நீங்களாவது இதுவரைக்கும் அவரை அரெஸ்ட்



2001 செப்டம்பர் 13] [திரு. சி. ஞானசேகரன்]

செய்வதற்கு ஏதாவது நடவடிக்கை எடுப்பீர்கள் என்று பார்த்தால் அதுவுமில்லை. இப்படியே நீங்கள் வைத்திருந்தீர்கள் என்று சொன்னால் அதற்குத் தேர்தல் நடத்தி என்ன பிரயோஜனம். அந்த சொசைட்டியே போய்விட்டது. இன்றைக்கு மூடிவிட்டார்கள். Number-1 in India. Number-1 in India; Karpagam Super Market has been closed, why? Actually, Who is responsible for the closure of the shop? அதையெல்லாம் நீங்கள் நினைத்துப் பார்க்க வேண்டும். இந்தக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு எல்லாம் உடனடியாகத் தேர்தலை நடத்த வேண்டும். உடனே Model Co-operative Act என்றாலும், அதைக் கொண்டு வாருங்கள் என்று சொன்னேன் நான். அவர் சொல்வது மாதிரி தேர்தல் வேண்டும். ஆனால், நல்லவர்கள், நேர்மையாக நடந்துகொள்பவர்கள், எளிமையானவர்கள் . .

பிற்பகல் 5-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர், சட்டமுன்வடிவிற்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இவர்களையெல்லாம் நீங்கள் கூட்டுறவாளர்களாக வைத்தீர்கள் என்று சொன்னால்தான், அந்தச் சங்கங்கள் உண்மையிலேயே நன்றாகச் செயல்படும். 'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பதெல்லாம் போய், இப்போது, கூட்டுறவு என்று சொன்னால், எவ்வளவு நாம் சுரண்டலாம்; எவ்வளவு நாம் கொள்ளையடிக்கலாம்; எந்தவிதமான விதிமுறைகளும் வேண்டாம், யாரை வேண்டுமானாலும் appointment செய்யலாம்; இப்படித்தான் இந்தச் சங்கங்கள், அதற்குத்தான் பயன்படுகின்றனவேயொழிய, மற்றவர்களுக்குப் பயன்படாத ஒரு சூழ்நிலை இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, தொடக்க வேளாண்மை சொசைட்டிகளின் Secretary-களை மாற்றுவதற்கு உடனடியாக நடவடிக்கை எடுங்கள்.

அதேபோல், ஒவ்வொரு மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கியிலே இருந்து transfer செய்யுங்கள். முதலிலே ஒரு G.O. வந்தது. இதற்கு முன்பிருந்த ஆட்சியிலே வந்தும்கூட, இதுவரைக்கும் அவர்கள் அங்கேயே இருக்கிற காரணத்தினால், அதே ஆளை 15 வருடங்கள், 20 வருடங்கள் retire ஆகும்வரையில் வைத்தீர்கள் என்றால், இருப்பதை சுரண்டி எடுத்துக்கொண்டு ஒன்றுமே இல்லாமல் நமக்கு அந்தச் சங்கங்களை எந்த அளவுக்குத் திவாலாக்க வேண்டுமோ அந்த அளவுக்குத் திவாலாக்கிவிட்டு போய்விடுவார்கள். கூட்டுறவு இயக்கங்கள் என்பதையே நிச்சயமாக தமிழகத்திலே நாம் காண முடியாத ஒரு நிலைமை வந்துவிடும் என்கிற

காரணத்தினால், நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், இதையெல்லாம் சரி செய்துவிட்டு, தேர்தலை நடத்துங்கள். தேர்தல் வேண்டும் என்பதுதான் எங்களுடைய கொள்கை. ஆனால், தேர்தல் வேண்டும் என்று சொல்வதற்கு முன்னால், நீங்கள் எதையெதையெல்லாம் சரி செய்ய வேண்டுமோ அதையெல்லாம் சரி செய்துவிட்டு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் பேசி முடியுங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய பேர் பேச வேண்டும்.

**திரு. சி. ஞானசேகரன்:** பிறகு நீங்கள் இந்தத் தேர்தலை நடத்துங்கள் என்று பணிவன்போடு கேட்டு அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எச்.எம். ராஜு.

**திரு. எச்.எம். ராஜு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சருடைய இந்தச் சட்டமுன்வடிவில், காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஓரிரு கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

'கூட்டுறவே நாட்டுயர்வு' என்பது மிக முக்கியமான ஒரு கொள்கை. அதேசமயத்தில், கால்நடை ஒன்றுமே வைத்து இல்லாதவர், அந்தக் கால்நடை சங்கத்தினுடைய தலைவராகவும், அந்த Federation-னுடைய Chairman-ஆகவும் வந்த காலகட்டங்கள் எல்லாம் இருக்கின்றன. ஒரு நாளைக்கு இவ்வளவு பால், சங்கங்களுக்கு ஊற்ற வேண்டும் என்று விதி இருந்தாலும்கூட, கடந்த 5 ஆண்டு காலமாக பாலே சங்கத்துக்கு ஊற்றாமல் Chairman ஆன கதைகள் எல்லாம் இருக்கின்றன. அந்த அளவிலே இல்லாமல், எந்த ஒரு தேர்தலானாலும், நேர்மையாக அது நடத்தப்பட வேண்டும். அவ்வாறு நேர்மையாக நடத்துவதற்கு என்னென்ன வழிவகைக்ளைச் செய்ய வேண்டுமோ அதை நாம் முதலில் செய்தாக வேண்டும்.

அதில் உறுப்பினர்களாக சேரக் கூடாதவர்கள் எல்லாம் இருக்கிறார்கள். அவர்களையெல்லாம் நீக்கி, நல்ல வகையிலே தேர்தலை நடத்தினால் நன்றாக இருக்கும். மீண்டும் பழையபடி நல்ல நல்ல நிலைமைகளிலே, காலம் காலமாக சிறப்பான கூட்டுறவுச் சங்கங்கள் இருந்து, அப்போது தமிழ்நாடு முன் வரிசையிலே இருந்தது. இந்தியாவிலேயே முதல் 10, 15-வது இடம் என்ற வகையிலே சிறப்பான கூட்டுறவு அமைப்புகள் எல்லாம் இருந்தன. அதன்படி மீண்டும் அந்த நல்ல நாட்கள் அதிவிரைவில் வரும் என்று எதிர்பார்க்கிறேன். ஆகவே, அந்தவகையிலே, அந்தத்





தேர்தல்களையெல்லாம் சிறப்பாக நடத்த வேண்டுமென்று ஒரு உறுதியான நிலையை நாம் எடுத்தாக வேண்டும். அன்றையதினம் யார் என்று பார்க்காமல், கட்சியைப் பார்க்காமல் அந்தந்தத் தலைவர்கள் எல்லாம் மிகச் சிறந்த முறையிலே கூட்டுறவை நடத்திக் காண்பித்திருக்கிறார்கள். அந்த சங்கங்கள் எல்லாம் கண்டிப்பாக மூடப்படக்கூடாது. விவசாயிகளின் முன்னேற்றத்திற்காக இந்தக் கூட்டுறவுச் சங்கங்களினுடைய ஒவ்வொரு பிரிவும் சிறப்பாகச் செயல்படுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று சொல்லி நன்றி கூறி அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜே. ஹேமச்சந்திரன்.

**திரு. ஜே. ஹேமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டுறவுச் சட்டத் திருத்தங்களை நாங்கள் ஆதரிக்கிற அதேநேரத்திலே, ஒருசில கருத்துக்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறோம். இந்தக் கூட்டுறவுச் சட்டத்தை ஒட்டுமொத்தமாகவே மாற்றுவதற்கான ஒரு புது கூட்டுறவுச் சட்டத்தை உருவாக்க வேண்டிய நிலை இன்று நாட்டிலே இருந்து கொண்டிருக்கிறது என்பது என்னுடைய தாழ்மையான கருத்து.

ஏற்கெனவே, திராவிட முன்னேற்றக் கழக அரசிலே அன்றைக்கு இருந்த அமைச்சர் திரு. கே.என். நேரு அவர்கள் ஒரு சட்டத்தையே தயாரித்து ready யாக வைத்திருக்கிறோம்; நாங்கள் அதை அவையிலே கொண்டுவந்து நிறைவேற்ற இருக்கிறோம் என்றெல்லாம் சொன்னார்கள். அது என்ன ஆயிற்று என்று தெரியவில்லை. நான் என்ன சொல்கிறேன் என்றால், இன்றைக்கு இருக்கிற கூட்டுறவுச் சட்டம், பல முறைகளிலே ஊழல்களை ஏற்படுத்துவதற்கு வகை செய்கிற சட்டமாக அமைந்திருக்கிறது. இந்தச் சட்டத்தைப் படித்துப் பார்த்தால், Registrar of Co-operative Society என்பது ஒரு சர்வாதிபதி என்ற முறையிலே அமைந்திருக்கிறது. ஆகவே, அப்படிப்பட்ட ஒரு மூல சட்டத்தையே திருத்துவதற்கு தகுந்த அளவிலேயுள்ள நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்க வேண்டுமென்று கேட்டு, இந்த திருத்தங்கள் சம்பந்தமாக ஒரு சில கருத்துக்களைச் சொல்ல விரும்புகிறேன்.

இப்போது, இந்தத் தேர்தல் டிசம்பர் மாதத்தில் நடத்தப்படும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது. அதேநேரத்திலே, சட்டத் திருத்தம் ஓராண்டு காலத்திற்குக் கொண்டுவரப்பட்டிருக்கிறது. இந்த ஓர் ஆண்டு காலத்திற்கான நீட்டிப்பு இப்போது மக்களிடத்தில் ஒரு சந்தேகத்தை

ஏற்படுத்தி இருக்கிறது என்று நான் சொல்வதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே ஏற்கெனவே இந்த அரசு அறிவித்திருக்கிற முறையிலே டிசம்பர் மாதத்திலே இந்தத் தேர்தலை நடத்துவதற்கு இந்த அரசு கட்டாயமாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லையென்றால் அது மக்களிடையே ஓர் அவநம்பிக்கையை ஏற்படுத்துவதற்குக் காரணமாகும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 6-00*

அதேபோன்று இந்தத் தேர்தலை நடத்துவதற்கு ஒரு தனி ஆணையத்தை ஏற்படுத்த வேண்டும் என்பது எங்களுடைய தாழ்மையான கருத்து. ஏனென்றால் சென்ற கூட்டுறவுத் தேர்தல் நடந்த நேரத்திலே எப்படிப்பட்ட தில்லுமுல்லுகள் எல்லாம் பல இடங்களிலே ஏற்பட்டன என்பது தெரியும். திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய முன்னாள் அமைச்சர் இங்கே பேசினார். கூட்டுறவுச் சங்கத் தேர்தலிலே சென்னையிலே அவர்கள் நடத்தின அடாவடித்தனம் எல்லாம் இந்த நாட்டில் இருக்கிற மக்களுக்குத் தெரியாதா? (மேசையைத் தட்டும் ஒலி) நேர்மையாகத்தான் தேர்தல்களை நடத்தினார்களா?

இன்று அவர்கள் புது உறுப்பினர்களை சேர்ப்பது பற்றி ஆட்சேபித்தார்கள். ஜனநாயக அஸ்திவாரத்தில் உறுப்பினர்களைச் சேர்ப்பதிலே ஏன் பயப்பட வேண்டும்? நேர்மையாக, சரியான முறையில் தேர்தல் நடத்தப்பட்டால் உறுப்பினர்கள் யாரைத் தேர்ந்தெடுக்கவேண்டுமோ அவர்களைத்தான் தேர்ந்தெடுப்பார்கள். அந்த ஜனநாயகத்திலே நம்பிக்கை வைத்திருப்பவர்கள் இந்த சொசைட்டியிலே, சொசைட்டிக்கு சட்டதிட்டங்கள் இருக்கின்றன. அந்த சட்டதிட்டங்கள்படி உறுப்பினர்களாக தகுதியானவர்களைச் சேர்க்க வேண்டும்.

எங்களுடைய மாவட்டத்திலே பல கூட்டுறவுச் சங்கங்களில் இன்று திராவிட முன்னேற்றக் கழக நண்பர்கள் பொறுப்பிலே இருக்கிற சங்கங்களிலே உறுப்பினர்களை சேர்ப்பதற்கு மறுக்கிறார்கள். ஏன்? இன்று உறுப்பினர்களாக வருவதற்குத் தகுதி உள்ளவர்கள் என்று அந்த சொசைட்டியினுடைய by-law-வில் உறுப்பினர்கள் போன்றவர்களைச் சேர்க்க வேண்டும், அதற்கு, தனி அதிகாரிகளுக்கு அதிகாரம் வழங்க வேண்டும் என்று இருக்க வேண்டும். அப்படி இருந்தால்தான் ஜனநாயக பூர்வமான தேர்தலாக, மக்களுடைய உண்மையான சொசைட்டிகளாக அந்த சொசைட்டிகள் மாற்றப்படும் என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.





திராவிட முன்னேற்றக் கழகத்தில் உள்ள ஒரு தலைவர் அவர் சங்கத்திற்கு தலைவராகி கூட்டுறவு வங்கியினுடைய தலைவராக வருவதற்குக் கூட முயற்சித்தார். எப்படி? அந்த சொசைட்டியிலே ஏற்கெனவே ஆயிரம் பேர் மெம்பர். அவர் 1200 பேரை அவருடைய பாக்கெட்டிலிருந்து பணத்தைக் கொடுத்து உறுப்பினர்கள் ஆக்கி அவர் அந்தச் சங்கத்திற்கு தலைவர் ஆனார். அதுதானா ஜனநாயகம்? நான் என்ன சொல்கிறேன் என்றால் இன்று இந்த நாட்டிலே இருக்கிற ஒரு சாதாரண குடிமகன் அந்த சொசைட்டியிலே அல்லது ஏதேனும் சொசைட்டியிலே உறுப்பினராகச் செல்வதற்கு போகிற நேரத்திலே அந்த சட்டதிட்டப்படி அவனுக்குத் தகுதி இருக்கிறதா என்று பார்ப்பதற்கான எல்லா நிலைமைகளும் இன்றைக்கு இருக்கின்றன. அதை வைத்துக்கொண்டு உறுப்பினர்கள் சேர்க்கப்பட வேண்டும்.

இன்று மாநிலத்தில் உள்ள பல கூட்டுறவுச் சங்கங்களில் பொறுப்பிலே இருக்கக்கூடியவர்கள் குறிப்பாக செயலாளராக இருக்கக்கூடியவர்கள் அந்தச் சங்கத்திலே புது உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கு மறுக்கிறார்கள். அது குமரி மாவட்டத்திலே Joint Registrar-உடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. ஆனால் அவர்களால் ஒன்றும் செய்ய முடியவில்லை. ஆகவே அமைச்சர் அவர்கள் இதிலே பிரத்யேகமாக கவனிக்க வேண்டும். இந்தச் சட்டத்திருத்தம் மூலம் உண்மையான நோக்கத்தை நிறைவேற்ற வேண்டுமானால் அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

அதேபோன்று இப்போது தனி அதிகாரிகள் நியமனம் செய்யப்பட்டு இருக்கிறார்கள். பல இடங்களில் தனி அதிகாரிகள் சர்வாதிபதிகளாக செயல்களை நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

ஏற்கெனவே ஒரு சொசைட்டியிலே ஒரு ஏழை பெண் அங்கே 500 நாட்கள் வேலை செய்துகொண்டு இருந்தார். (மணியடிக்கப்பெற்றது) 500 நாட்களுக்கு மேலே வேலை செய்த அந்த ஊழியரை எடுத்துவிட்டு deputation-னிலே Government-லேயிருந்து ஓர் ஆளை எடுத்து அங்கே நியமனம் செய்து இருக்கிறார்கள். எதற்காக? இந்த அரசு ஏழைப் பெண்களை பாதுகாக்கின்ற அரசு, இன்று ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற நேரத்திலே ஒரு ஏழைப் பெண்ணை எல்லா தகுதியும் உள்ள பெண்ணை, 500 நாட்களுக்கு மேலே வேலை செய்த பெண்ணை, வேலையிலிருந்து வெளியேற்றிவிட்டு Government-லேயிருந்து deputation-லே ஓர் ஆளைக் கொண்டு வந்து அங்கே ஊழியராக நியமனம் செய்திருக்கிறார்கள்.

[திரு. ஜே. ஹேமச்சந்திரன்] [2001 செப்டம்பர் 13

இப்படிப்பட்ட சர்வாதிகார நடவடிக்கைகளை பல இடங்களிலே இந்தத் தனி அதிகாரிகள் செய்துகொண்டு இருக்கிறார்கள்.

இன்னும் ஓர் எடுத்துக்காட்டைச் சொல்ல விரும்புகிறேன். இன்று பொது விநியோக முறையைப் பொறுத்த அளவிலே நல்ல முறையிலே அது நடத்தப்பட வேண்டும் என்றால் அந்தக் கடைகளுக்குத் தேவையான ஊழியர்கள் இருக்க வேண்டும். மக்கள் பொருள்களை வாங்குவதற்கு வருகிற நேரத்திலே அவர்களுக்குப் பொருள்களைக் கொடுப்பதற்கு கடைகளிலே ஊழியர்கள் இருந்தால்தான், மக்களுக்குத் தேவையான பயன்கள் கிடைக்கும். அந்த வகையிலே ஊழியர்களை நியமனம் செய்வதை இந்தத் தனி அதிகாரிகள் தடுக்கிறார்கள். ஆகவே, அந்தக் கடைகள் சரியான முறையிலே செயல்பட முடியவில்லை. ஆகவே, இந்தத் தனி அதிகாரிகள் நடைமுறையிலே இருக்கிற விஷயங்களைக்கூட கணக்கில் எடுத்து, சட்டதிட்டங்களைப் புரிந்து, இந்தக் கூட்டுறவுச் சங்கங்களும் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நடத்தப்படுகின்ற இந்த ration shop-களும் சரியான முறையிலே செயல்படுவதற்கு உளப்பூர்வமான முறையிலே நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும்.

பிற்பகல் 6-05

ஊழியர்களைப் பழிவாங்கக்கூடிய முறையிலே, ஊழியர்களை harrass பண்ணக்கூடிய முறையிலே உள்ள நடவடிக்கைகளை இப்போது பல தனி அதிகாரிகள் எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். அது நிறுத்தப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே சொல்லி, இந்தச் சட்டத்திருத்தத்தை ஆதரித்து, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லா. சந்தானம், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. லா சந்தானம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களைச் சேர்க்கின்ற நிலையில் கடந்த காலங்களில் பல்வேறு முறைகேடுகள் நடந்து இருக்கின்றன. தேர்தல் வந்தவுடனே அன்றைக்கு இருக்கின்ற ஆளுகின்ற கட்சிக்குச் சாதகமானவர்களை உடனடியாக 11 ரூபாய் கட்டிவிட்டால் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலோ அல்லது பால் உற்பத்தியாளர் சங்கங்களிலோ அங்கத்தினர்களாக, தங்களுக்கு வேண்டியவர்களை மட்டும் சேர்த்துக்கொண்டு, மற்றவர்களையெல்லாம் சேர்க்க முடியாத ஒரு



2001 செப்டம்பர் 13] [திரு. லா. சந்தானம்]

சூழ்நிலையை ஏற்படுத்தி, அதற்குரிய அதிகாரிகளிடத்திலே சொல்லி இவர்கள் கொடுக்கின்ற அந்த அங்கத்தினர் பட்டியலை மட்டும் ஏற்றுக்கொள்ள வேண்டும்; மற்றவர்கள் கொடுப்பதை ஏற்றுக்கொள்ளக்கூடாது என்கின்ற நிலையையெல்லாம் ஏற்படுத்தி, கூட்டுறவுச் சங்கங்களிலே அங்கத்தினர்கள் சேர்க்கப்பட்டு இருக்கிறார்கள்.

அதுபோல வருகின்ற காலத்திலும் இல்லாது, ஏற்கெனவே சேர்த்தவர்களையும் மறுஆய்வு செய்ய வேண்டும். இருக்கின்ற அங்கத்தினர்கள் எல்லாம் உண்மையானவர்கள்தானா என்பதை ஆய்வு செய்ய வேண்டும். ஏற்கெனவே, பல சங்கங்களிலே அவர்களுடைய ஆளுகைக்கு உட்பட்ட இடங்களில் மட்டும் அல்லாது வெளியிலே இருந்துகூட தங்களுக்கு வேண்டியவர்களை உறுப்பினர்களாகச் சேர்த்துக்கொண்டு அவர்களை வாக்காளர்களாக ஆக்குகின்ற நிலை எல்லாம் இருந்து கொண்டிருக்கிறது. எனவே, சங்கங்களிலே உறுப்பினர்களாக ஆகின்றவர்கள், விவசாயிகள் கூட்டுறவுச் சங்கமாக இருந்தால் அதிலே கடன்பெற்று 4, 5 ஆண்டுக்காலம் உறுப்பினர்களாக இருந்தவர்களை அனுமதிக்க வேண்டும்.

அதுபோல, பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலே இருந்தால் அவர்கள் ஏற்கெனவே மாடுகளை வைத்து, கடன் வாங்கி பால் உற்பத்திச் சங்கத்திற்கு பால் கொடுத்தவர்களாக இருக்க வேண்டும். இப்படியெல்லாம் அந்தச் சங்கத்திலே ஈடுபாடு உள்ளவர்கள் மட்டும்தான் உறுப்பினர்களாக இருக்கின்ற நிலையை ஏற்படுத்துவதற்கு அரசு முன்வரவேண்டும்.

திடீரென்று அந்த நேரத்திலே தேர்தல் வந்தவுடனே 11 ரூபாயை யார் வேண்டுமானாலும் கட்டிவிட்டு அவர்கள் உறுப்பினர்கள் ஆகலாம் என்ற நிலை வருகின்றபோது அந்தச் சங்கத்திலே பல்வேறு முறைகேடுகள் நடக்கின்ற வாய்ப்பு இருக்கிறது. எனவே, ஏற்கெனவே இருக்கின்ற உறுப்பினர்களையும் மறுஆய்வு செய்து திரும்ப நடத்துகின்ற தேர்தலில் உண்மையான அங்கத்தினர்கள் மட்டும் அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே இடம் பெறுகின்ற வாய்ப்பினை அரசு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. லத்தீப். நேரம் அதிகமானால் இன்றைக்கு எம்.எல்.ஏ-க்களுக்கு பிரியாணி விருந்தை அண்ணன் லத்தீப் அவர்கள்தான் ஏற்றுக்கொள்ள வேண்டும். (சிரிப்பு)

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரம் அதிகமாகி விட்டால் பேரே இல்லை என்று சொல்லி விடுவீர்களே, அப்படிச் சொல்லிவிட்டு போக வேண்டியதுதானே? *(சிரிப்பு)*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த இரண்டு சட்டமுன்வடிவுகளுடைய அடிப்படை நோக்கத்தை நான் முழு மனதுடன் வரவேற்று இந்த இரண்டு சட்டமுன்வடிவுகளையும் ஆதரிக்கின்றேன்.

*பிற்பகல் 6-10*

ஓர் ஆண்டுக் காலம் அல்லது ஈராண்டுக்காலம், எத்தனை ஆண்டுக் காலமாக இருந்தாலும், இன்றைக்கு இந்தத் துறை எந்த வியாதியால் பாதிக்கப்பட்டிருக்கிறதோ அந்த வியாதி தீருமா? என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. ஏனென்றால், கூட்டுறவுத் துறை என்பது இப்போது நம்முடைய மாநிலத்தைப் பொறுத்தவரையில் மட்டுமல்ல, ஏனைய இடங்களிலும் தீரா வியாதியால் பாதிக்கப்பட்டு இருக்கிறது. இதற்கு நாம் எந்த வகையில், எந்த மருந்தைக் கொடுத்தால் இந்த வியாதி தீரும் என்பது இதுவரையில் சரியான முறையில் கண்டுபிடிக்கப்படவில்லை என்றுதான் நான் கருதுகிறேன். எனவே, நீங்கள் கேட்டு இருக்கிற காலக்கெடு மிகக் குறுகிய காலம். அந்தக் காலத்திற்குள் இந்த வியாதியை நீங்கள் தீர்ப்பீர்களா என்பது எனக்குச் சந்தேகமாக இருக்கிறது. இருந்தாலும் ஓராண்டு நீங்கள் கேட்டு இருக்கிறீர்கள். இந்த ஓராண்டுக்குள் கூட்டுறவுத் துறையை முழுமையாக நீங்கள் தூய்மைப்படுத்தி, செம்மைப்படுத்தி, செழுமைப்படுத்தி நாட்டுக்கும் வீட்டுக்கும் பயன்படக்கூடிய வகையில் அதைத் திருத்தி அமைக்கிறீர்களா அல்லது முறைப்படுத்தப்போகிறீர்களா? எந்த வகையிலேயாவது அது நாட்டுக்குப் பயன்பட்டால், நீங்கள் செய்கிற சேவைகளிலே அதுதான் மிக முக்கியமான சேவை என்பதை நான் மிகுந்த அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

எனக்கு முன்பு பேசிய உறுப்பினர்கள் எல்லாம் பல நல்ல கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். எனவே, அந்தக் கருத்துக்கள் அனைத்தையும் நான் ஆதரிக்கிறேன். அதை மீண்டும் வற்புறுத்திச் சொல்ல வேண்டிய அவசியம் இல்லை என்று நான் கருதுகிறேன்.

ஒன்றை நான் சொல்ல விரும்புகிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களும், நம்முடைய திரு. லா. சந்தானம் போன்றவர்களும் மிகத் தெளிவாகச் சொன்னார்கள். முதலில் bonafides of the co-operative concept என்று சொல்லக்கூடிய அளவுக்கு இங்கேகூட





பேசினார்கள். ஏனென்றால் co-operation என்பது, ஜனநாயகமே அங்கு இல்லாமல் செய்து விடுவதற்கோ, கூட்டுறவினுடைய தத்துவத்திற்கோ, நீங்கள் அதற்கு மரண அடி கொடுத்து விடாதீர்கள் என்றெல்லாம்கூட பேசினார்கள். அப்படி மரண அடி கொடுப்பதற்கு என்ன இருக்கிறது? உயிரே இல்லையே; உயிர் இருந்தால்தானே நீங்கள் அதற்கு மரண அடி கொடுப்பதற்கு இயலும். அது ஏற்கெனவே செத்துவிட்டது. எந்த அளவுக்கு என்று சொன்னால், co-operative societies are co-operative robberies. Co-operative robberies என்ற அளவிற்கு Co-operative நிலைமை கடைசி மூச்சு விட்டுக் கொண்டிருந்தது; இப்போதுகூட விடுகிறது என்று நான் கருதுகிறேன். அதனால்தான் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தச் சட்டமுன்வடிவைக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

நான் உங்களைக் கேட்டுக்கொள்வது, எந்த ஆட்சி வந்தாலும், தயவுசெய்து, Co-operative Society-களை, கூட்டுறவுத் துறையை, அரசியலிலே இருந்து முழுக்க முழுக்க அகற்றி வையுங்கள். நீங்கள் அரசியலிலே இருந்து அதற்கு விடுதலை கொடுத்தீர்கள் என்றால், ஓரளவுக்கு Co-operative Societies மூலம் இந்த கூட்டுறவுத் துறையினுடைய நோக்கம் நிறைவேறும்.

இன்றைக்கு இருக்கிற Co-operative Society-கள் பற்றி எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் சொன்னார்; திரு. ஜே. ஹேமச்சந்திரன் அவர்களும் சொன்னார்கள். உண்மையான உறுப்பினர்கள் இருக்கிறார்களா என்பதை நீங்கள் ஆய்வு செய்ய வேண்டும்; ஆய்வு செய்து உண்மையான உறுப்பினர்களைக் கண்டுபிடிக்க வேண்டும்; உண்மையான உறுப்பினர்களைச் சேர்க்க வேண்டும்; இன்றைக்கு இருக்கிற Co-operative Society-களில் எத்தனை பேர் மீது 80 (1) enquiry நடந்து கொண்டிருக்கிறது? மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைக்கூட ஒரு தகவலாக இந்த அவைக்கு தெரிவிக்க வேண்டும்.

இப்போது கலைக்கப்பட்டிருக்கிற Co-operative Society-களில் எத்தனை Society-களில் எத்தனை பேர்கள் மீது 80 (1) enquiry நடந்து கொண்டிருக்கிறது என்பதை தயவு செய்து அமைச்சர் அவர்கள் இன்றைக்கு இல்லாவிட்டாலும், அவர்களிடத்திலே தகவல் அதுபற்றி இருந்தால் சரி; இருந்தால் அந்தத் தகவலைக்கூட இந்த அவைக்குத் தெரிவிக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படி நீங்கள் தெரிவித்தால், இந்த விவரங்களுக்கு எல்லாம் நீங்கள் கேட்கிற ஓராண்டு போதுமா என்பதை என்னால் புரிந்துகொள்ள முடியும்.

[திரு. ம. அப்துல் லத்தீப்] [2001 செப்டம்பர் 13

நான் இப்போது சொல்கிறேன், ஓராண்டு போதாது. தேர்தல் நடத்தப்பட வேண்டுமென்பதில் எந்தவிதமான இருவேறு கருத்துகளுக்கும் இடமில்லை; தேர்தல் நடத்தப்பட வேண்டும்; Co-operative Society-களை தேர்தல் இல்லாமல் நடத்தக் கூடாது. அது ஒரு ஜனநாயக முறையிலே உறுப்பினர்களால் உருவாக்கப்படுகிற அமைப்பு. அதிலே உண்மையாக சேர்ந்த உறுப்பினர்கள் எத்தனை சதவீதம் என்பதைத் தெரிவியுங்கள், பார்க்கலாம். அங்கே 80 சதவீதம் உறுப்பினர்கள் உண்மையான உறுப்பினர்கள் அல்ல. நான் வேண்டுமானால் அதற்கு challenge செய்கிறேன். உண்மையான உறுப்பினர்களே இல்லை. All pseudo members; imaginative members. என்ற முறையிலே இருக்கிறது.

Co-operative Society-களைக் காப்பாற்றுங்கள். அதைக் காப்பாற்ற வேண்டுமானால் ஓராண்டு போதாது. அந்த ஓராண்டை நீங்கள் எடுத்துக்கொள்ளுங்கள்; அப்படி எடுத்துக்கொள்ளும்போது சரியான சிகிச்சை செய்யுங்கள்; வியாதியை தீர்த்துவிடுங்கள்; சரியான உறுப்பினர்களை சேருங்கள்; உறுப்பினர்களை இணைத்து, சரியான உறுப்பினர்களை வைத்து தேர்தல் நடத்துங்கள். ஏனென்றால் இப்போது இருக்கிற நம்முடைய இந்த அனுபவம் மிகக் கசப்பான அனுபவம் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமோ என்னமோ; எனக்குத் தெரியாது; ஒருவேளை எங்களுடைய மாவட்ட அமைச்சர் மாண்புமிகு திரு. பாண்டுரங்கன் அவர்களுக்குத் தெரியும். முன்னோர்கள் எல்லாம் வாணியம்பாடியிலே, வாணியம்பாடி Co-operative Society-யை, தியாகங்களைச் செய்து உருவாக்கினார்கள். ஆனால் இன்றைக்கு என்ன நடக்கிறது தெரியுமா? எந்த உறுப்பினருக்கும் அங்கே அனுமதியில்லை. தலைவராக ஒருவன் வருவான். யார் தலைவர் என்றால், எவன் ஆளும் கட்சிக்காரனோ அவன் தலைவராக வருவான். மற்றவர்களை எல்லாம் eliminate பண்ணுவான். ஆளும்கட்சிக்காரருக்குத்தான் அந்த இடம். எல்லா Co-operative Society-யிலும் நடக்கிறது. அங்கே என்ன ஒழுங்காக நடக்கிறது? ஆளும் கட்சிக்காரர்கள்தான் அங்கே ஆட்டம் போடுவார்கள் என்ற நிலை மாறி, இன்றைக்கு புதிதாக வந்திருக்கிற ஆளும்கட்சிக்காரர்கள் இந்த வியாதியைத் தீர்த்து வைக்கவேண்டும்.



2001 செப்டம்பர் 13] [திரு. ம. அப்துல் லத்தீப்]

*பிற்பகல் 6-15*

சில இடங்களிலே என்ன நடக்கிறது தெரியுமா? ஆளும் கட்சிக்காரர்களும், எதிர்க்கட்சிக்காரர்களும் சேர்ந்துகொள்வார்கள். இப்போது நடக்கிறது அதுதான். நீங்கள் ரொம்ப உஷாராக இருக்க வேண்டும். நான் ஆளும் கட்சிக்காரர்களுக்குச் சொல்கிறேன். உங்கள் கட்சி சார்பாக இருக்கிற செயலாளர்கள் கடந்த கால செயலாளர்களோடு சேர்ந்துவிட்டால், அதோடு அதோகதிதான். ஆகவே, இதையெல்லாம் தீர்த்து, — உண்மையாக நடக்கிறதை நான் சொல்கிறேன், எச்சரிக்கை செய்கிறேன். உங்களுடைய நலனுக்காகத்தான் சொல்கிறேன்—யாருக்கும் அங்கே அனுமதி கொடுக்காதீர்கள். நல்ல உறுப்பினர்களை, உண்மையான உறுப்பினர்களைச் சேருங்கள். அவர்களை வைத்து தேர்தல் நடத்துங்கள். அப்படி நடத்தி, உண்மையான கூட்டுறவு உணர்வை ஏற்படுத்தி, உண்மையான சங்கங்களை ஏற்படுத்துங்கள், நீங்கள் வரலாற்றில் வாழ்வீர்கள்.

கூட்டுறவுத் துறையைச் செம்மைப்படுத்தி, செழுமைப்படுத்தி, உயிர்ப்பித்த அரசு என்ற பெயர் உங்களுக்குக் கிடைக்கவேண்டும் என்பது என்னுடைய விருப்பம். எனவே, இந்த இரண்டு மசோதாக்களையும், உறுப்பினர்களை சேர்க்கும் மசோதாவையும், ஓராண்டு நீட்டிக்க வேண்டும் என்பதையும் மனதாரா, நெஞ்சார நான் ஆதரிக்கிறேன் (குறுக்கீடு) ஆமாம், bogus members என்று இருக்கிறார்கள் இல்லையா, only in the book இந்த book-லேதான் இருப்பார்கள். அவர்கள் யாருக்கு பயன்படுவார்கள் என்றால் எவன் அங்கே commanding பண்ணிக்கொண்டு இருக்கிறானோ அவன் பெயரை வைத்து நடத்திக்கொண்டு இருப்பான். ஆகையால், தயவுசெய்து இந்த bogus membership-ஐ எல்லாம் காலியாக்கி membership-யே ஒரு review செய்து தேவையில்லாத bogus members-ஐ எல்லாம் வெளியேற்றி, கல்தா கொடுத்து, உண்மையான member-களை நீங்கள் உறுப்பினர்களாக சேர்த்து, அதனால் co-operative societies movement-ஐ நீங்கள் உயிர்ப்பித்தால் நான் மிகவும் மகிழ்ச்சியடைவேன். அதற்கு இந்தச் சட்டமுன்வடிவுகள் பயன்பட வேண்டும். இந்தச் சட்டமுன்வடிவுகள் இங்கே நிறைவேறும்போது, நாட்டினுடைய எண்ணங்கள் நிறைவேறும் வகையில் உங்களுக்குத் துணிவும், துணிச்சலும், தெளிவும் இருக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் எடுத்துச் சொல்லி, இந்த மசோதாக்களை ஆதரித்து அமர்கிறேன்.

[2001 செப்டம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி;** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் தனி அலுவலர் நியமனச் சட்டம், அதைப்போல, தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்கள் சேர்த்தல் ஆகிய இந்தச் சட்டத்திருத்தங்களிலே பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களை நான் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே எனக்கு முன்னாலே பேசிய மாண்புமிகு உறுப்பினர் பெருமக்கள் எல்லாம், இன்றைய நிலவரத்தினைப் படம்பிடித்துக் காட்டியிருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவிலே நான் கருத்து சொல்லவேண்டும் என்றால் கூட்டுறவுத் துறைக்கு என்று சொல்லி இன்னும் முழுமையாக சட்டமே வரையறுக்கப்படவில்லை. இந்தக் கூட்டுறவுத் துறையிலே இருக்கக்கூடிய சட்டத்தை நாம் வரையறுத்து ஒரு பக்கம் சொல்வோம் என்றால் கூட்டுறவுத் துறையிலே வரையறுக்கப்பட்டும் தளர்த்திக்கொள்ளக்கூடிய வகையிலே இந்தச் சட்டம் இருந்துகொண்டிருக்கிறது. அந்த வகையிலே, வரையறுக்கப்பட வேண்டும் என்ற நோக்கத்தோடும், இங்கே நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம் என்ன கருத்துக்களை உள்ளவாறு எடுத்துச் சொன்னார்களோ, அதை நிறைவேற்றக்கூடிய அளவிலே இந்த அரசு செயல்பட வேண்டும் என்ற அந்த உன்னத நோக்கத்தைக் கொள்ளவேண்டும் என்று நான் முதலிலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

இங்கே நம்முடைய தனி அலுவலர்களுடைய பதவிக் காலம் ஓராண்டு நீட்டிக்கப்பட வேண்டும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. டிசம்பர் மாதத்திலே கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேர்தல் என்று சொல்லி, ஓராண்டு காலம் தனி அலுவலர் பதவிக் காலம் நீட்டிக்கப்பட வேண்டும் என்று சொன்னால், தேர்தல் தள்ளிப்போகுமோ என்ற சந்தேகம் வந்திருக்கிறது. ஆகவே, தேர்தல் தள்ளிப் போவதற்குப் பல்வேறு காரணங்கள் சொன்னாலும்கூட, உரிய காரணங்களைச் சொல்லி இதிலே இருக்கக்கூடிய குறைபாடுகளையெல்லாம் களைந்துவிட்டு, சற்று காலம் தாழ்த்தி நடந்தாலும் பொருத்தமுடையது என்று நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 13] [திரு. ஜி.கே. மணி]

*பிற்பகல் 6-20*

உதாரணமாக, இங்கே தனி அலுவலர் பற்றி நான் சொல்லுகின்ற நேரத்திலே, ஒவ்வொரு மாவட்டத்திலேயும் தனி அலுவலர்களிலே நேர்மையான அதிகாரிகள், நல்லவர்கள் என்று சொல்லி, அவர்களுக்கு மாவட்ட அளவிலே பாராட்டு விழா எடுத்தால் அது பொருத்தமுடையதாக இருக்கும். ஏனென்றால், இன்று தனி அலுவலர்களிடத்திலே ஊழல் புரையோடிக் கிடக்கிறது என்று எல்லா உறுப்பினர்களும் சொன்னார்கள், இதிலே ஒரு சில நல்லவர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்களுக்குப் பாராட்டு செய்வது நம்முடைய கடமையாக இருக்கும் என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏதோ ஆட்சியாளர்களைப் பற்றி, கடந்த காலங்களைப்பற்றி குறை சொல்வதற்காக இல்லை என்றெல்லாம் இங்கே மனம் திறந்து பேசினார்கள். நானும் அந்த வகையிலே மனம் திறந்து சொல்கிறேன், கடந்த காலங்களிலேயும்சரி, இன்றும் சரி,—இன்றுகூட என்னிடத்திலே ஒரு தனி அலுவலர் சொன்னார்—இப்படி குறைகள் இருக்கின்றன, நிவர்த்தி செய்ய வேண்டுமென்று சொன்ன நேரத்திலே சொன்னார், நான் தனி அலுவலராக வருவதற்கு *50,000* ரூபாய், *1* இலட்சம் ரூபாய் கொடுத்து வந்தேன் என்று சொன்னவர்கள் இன்னும் நிறைய பேர் இருக்கிறார்கள். குறை சொல்வதற்காக இல்லை, மனம் திறந்து பேச வேண்டும் என்பதற்காக சொல்கிறேன். ஆகவே, இப்படி பணம் கொடுத்துவிட்டு தனி அலுவலர் பொறுப்பில் வந்தவர்கள் என்ன செய்வார்கள்?

அதற்கு உதாரணத்தினைச் சொல்கிறேன், கடந்த நிர்வாகக் குழுவிலே இருந்த தலைவர்கள் பணி நியமனம் செய்தார்கள். அந்தப் பணி நியமனம் செய்துவிட்டு, நிரந்தரம் என்று சொல்லி, இன்னும் அவர்கள் சம்பளத்திலே arrears என்று சொல்லி, ஒவ்வொரு பணியாளரிடமும் ரூ. 50,000, ஒரு இலட்சம், ஒன்றரை இலட்சம் பெற்று, பத்தாயிரம், பதினைந்தாயிரம் ரூபாய் பணியாளர்களுக்குக் கொடுத்துவிட்டு மீதித் தொகையை எல்லாம் தலைவர்கள் எடுத்துக்கொண்டார்கள், இது வரலாறு, உண்மை.

அதற்குப் பிறகு அப்படி பணி நீக்கம் செய்ய வேண்டுமென்று இருந்தவர்கள் எல்லாம், இப்போது தனி அலுவலராக வந்திருக்கிறார்களே,

பணம் கொடுத்துக் கொண்டிருக்கிற நிலை இன்னும் தொடர்ந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இப்படிப்பட்ட நிலை நிச்சயமாக தொடரக்கூடாது என்ற நல்ல எண்ணத்திற்காகச் சொல்கிறேன், அந்தத் தனி அலுவலர்களை கண்காணிக்க வேண்டும். நம்முடைய தமிழக அரசை, கூட்டுறவுத் துறையை நான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன், தலைவணங்கி கேட்டுக்கொள்கிறேன், மாவட்டந்தோறும் இந்தத் தனி அலுவலர்களை நீங்கள் கண்காணிக்க வேண்டும், உடனடியாக ஆய்வு செய்ய வேண்டுமென்ற பணிவான வேண்டுகோளை நான் இங்கே வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இப்படி அந்தத் தனி அலுவலர்களைக் கண்காணிக்கக்கூடிய கடமை அரசுக்கு வந்தாக வேண்டும் என்று சொல்லி, இந்தத் தனி அலுவலர் பதவி நீட்டிப்புக்கு பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே ஆதரவையும் வரவேற்பையும் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து, கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்கள் சேர்க்கை என்று வருகிற நேரத்திலே, விவசாய கூட்டுறவு சங்கம் இருக்கிறது. இந்த விவசாயச் சங்கத்திலே யார் உறுப்பினர்கள் என்று சொன்னால், மீனவர்கள் இருக்கிறார்கள். இப்போதும் நெசவாளர் கூட்டுறவுச் சங்கம் என்று சொன்னால், அதிலே விவசாயிகளும், சலவைத் தொழிலாளியும் உறுப்பினராக இருந்து கொண்டிருக்கக்கூடிய நிலை தொடர்ந்து கொண்டிருக்கிறது. இன்னொன்றையும் இப்போது சொல்கிறேன், இப்போது ஆங்காங்கே இருக்கக்கூடிய தனி அலுவலர்கள், அந்தக் கூட்டுறவுச் சங்கங்களிலே பணியாற்றக்கூடிய செயலாளர்கள் உறுப்பினர்களைச் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். அதை யாரோ ஒருவரிடத்திலே பட்டியல் பெற்றுக்கொண்டு— இங்கே உறுப்பினர்கள் எல்லாம் சொன்னார்கள்— இவர்கள் எல்லாம் ஆளும் கட்சிக்காரர்கள். ஆளும் கட்சிக்காரர்கள் என்று சொன்னால்தான் உறுப்பினராக சேர்க்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கூட்டுறவுச் சங்கத்திலே மீனவர்கள் உறுப்பினர்களாக இருக்கிறார்கள் என்ற கருத்தைச் சொன்னார்கள். மீனவர் கூட்டுறவுச் சங்கத்தில்தான் மீனவர்கள் உறுப்பினர்களாக இருக்க முடியும். மற்ற கூட்டுறவுச் சங்கங்களிலே இருக்க முடியாது. பொதுப்படையாகச் சொல்லக் கூடாது.





**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, பொதுப்படையாக இல்லை, ஆதாரத்தோடு சொல்கிறேன். விவசாயக் கூட்டுறவுச் சங்கத்திலே மீனவர்கள் இருக்கிறார்கள். அதேநேரத்திலே நெசவாளர் கூட்டுறவுச் சங்கத்திலே சலவைத் தொழிலாளி இருக்கிறார். இன்னும் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இப்படி இருக்கிற நேரத்திலே, கூட்டுறவினுடைய நோக்கமே மாறிவிடும், முறைகேடாகிவிடும். 'கூட்டுறவே நாட்டுயர்வு', 'கூடி வாழ்ந்தால் கோடி நன்மை'. ஆகவே என்ன நோக்கத்திற்காக — என்ன தத்துவத்திற்காக இந்தக் கூட்டுறவுத் துறை இருக்கிறதோ—சமூக முன்னேற்றத்திற்காக பொருளாதார மேம்பாட்டிற்காக செயலாற்றிக் கொண்டிருக்கிற,—அந்த இலட்சியமே இன்று சீரழிந்து கொண்டிருக்கிறது. ஆகவே, இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். இப்படிப்பட்ட அவலங்கள் எல்லாம் தொடரக்கூடாது.

கூட்டுறவுத் துறையினாலே, சாதாரண அடித்தட்டு மக்கள், உழைக்கக்கூடிய மக்கள், பாட்டாளி மக்கள், நடுத்தர மக்கள் எல்லாம் முன்னேறுவதற்கு, இந்த அரசு, இந்தத் துறை உறுதுணையாக இருக்கக்கூடிய நிலை இருக்கிற நேரத்திலே, அங்கே பணியாற்றக் கூடியவர்களாலே இப்படிப்பட்ட அவலநிலை வரக்கூடாது. அரசாங்கத்தினுடைய நோக்கம், துறையினுடைய நோக்கம் சீரழியக்கூடாது என்பதற்காக சொல்கிறேனே தவிர, வேறு ஒன்றும் இல்லை.

இங்கே சொன்னார்கள், பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திலே ஒருவர் இத்தனை நாள் பால் ஊற்றியிருக்க வேண்டும், இத்தனை லிட்டர் ஊற்றியிருக்க வேண்டும் என்று சட்டத்திலே இடம் இருக்கிறது. அப்படி விதி இருந்தாலும்கூட அங்கே திடீரென்று உறுப்பினராக வந்துவிடுகிறார்கள். பாலே ஊற்றாத ஒருவர் அந்தச் சங்கத்திற்குத் தலைவராகி விடுகிற இப்படிப்பட்ட நிலை இருக்கிற காரணத்தால் நான் உங்களை, பேரவைத் தலைவர் அவர்களை வேண்டி விரும்பி கேட்டுக்கொள்கிறேன், இந்த உறுப்பினர் சேர்க்கைக்கு கால அவகாசம் கொடுங்கள். இருக்கக்கூடிய உறுப்பினர்கள் உண்மையான உறுப்பினர்களா என்று ஆய்வு செய்துவிட்டு, இப்போது என்ன நோக்கத்திற்காக இந்தச் சங்கங்கள் இருக்கின்றனவோ அந்த நோக்கத்திலே ஈடுபாடு உடையவர்களை, அந்த நோக்கத்தைக் கொண்டு பலன்பெறத் தகுதியானவர்களை கூட்டுறவுச் சங்கங்களிலே உறுப்பினர்களாகச் சேர்க்க வேண்டும்.

[திரு. ஜி.கே. மணி] [2001 செப்டம்பர் 13

பிற்பகல் 6-25

அதேநேரத்திலே இவர்கள் ஆளுங்கட்சியைச் சேர்ந்தவர்கள், இவர்கள் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள், அங்கே இருக்கக்கூடிய செயலாளர்கள், தனி அலுவலர்கள், அவர்களுடைய உறவினர்கள் எல்லாம் தலைவராக வரவேண்டும், மற்ற பொறுப்புகளுக்கு வரவேண்டும் என்ற நிலை எல்லாம் இருந்து கொண்டிருக்கிற காரணத்தினாலே இப்படிப்பட்ட நிலைகள் எல்லாம் ஏற்படாமல், நல்ல சூழ்நிலையினை உருவாக்கக்கூடிய வகையிலே கால அவகாசம் கொடுத்து, முறையாக உறுப்பினர்களைச் சேர்த்து, தேர்தல் நடத்துவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று சொல்லி, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கொண்டுவரப்பட்டிருக்கிற இந்தச் சட்டத் திருத்தத்தின்மீது மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய மேலான கருத்துக்களை, இந்தச் சட்டத் திருத்தத்திற்கு மேலும் வலிவு சேர்க்கின்ற வகையிலே, அரசுக்குச் சொல்லியிருக்கிறார்கள். மேலான கருத்துக்களைச் சொன்ன அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியை முதலிலே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

இந்தச் சட்டத் திருத்தத்தின் மேலே பல விளக்கங்களை சொல்கிற வாய்ப்பைக்கூடக் கொடுக்காமல், இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவதிலே இருக்கிற நியாயத்தை, அதற்கு வலு சேர்க்கிற வகையிலே மாண்புமிகு உறுப்பினர்கள் தெளிவாக தங்களுடைய கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள்.

ஒரு காலத்திலே இந்தியத் துணைக் கண்டத்திலே, கூட்டுறவு என்று சொன்னால் தமிழகத்தில்தான் அது சிறப்பாக இருக்கிறது, வளர்ந்திருக்கிறது என்று சொன்ன பெருமையை எல்லாம் எந்த அளவுக்கு இப்போது குலைத்து, சீரழித்திருக்கிறார்கள் என்பதற்கு நான் மானியக் கோரிக்கையிலே எடுத்துச் சொன்ன சில கருத்துக்களுக்கு வலு சேர்க்கின்ற வகையிலே இன்றைக்கு நம்முடைய மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களை இந்தச் சட்டத் திருத்தத்தின்மீது தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, அந்த அளவுக்கு இந்தக் கூட்டுறவுத் துறையினை சீரழித்து இருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாம், ஓராண்டு கேட்டிருக்கிறீர்கள். தனி அதிகாரிகள் மூலம் ஓராண்டுக்குள்ளே உங்களாலே இதையெல்லாம் சீர்படுத்த முடியுமா என்றெல்லாம்



2001 செப்டம்பர் 13] [திரு. ப. தனபால்]

கேட்டார்கள். அந்த அளவுக்கு ஊழலின் உறைவிடமாக இந்தக் கூட்டுறவுச் சங்கங்களை மாற்றிவிட்டு கடந்த ஆட்சியாளர்கள் போனதை செம்மைப்படுத்துவதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தத்தை இப்போது கொண்டு வந்திருக்கிறோம்.

உறுப்பினர்களை தனி அதிகாரிகள் சேர்ப்பதற்கு வகை செய்கின்ற அளவில்தான் இந்தச் சட்டத் திருத்தத்தை இங்கே அறிமுகப்படுத்தி, உங்களுடைய அனுமதியைக் கோரியிருக்கிறோம். ஏனென்று சொன்னால், கடந்த ஆட்சியிலே, ஜனநாயக முறையிலே தேர்தல் நடத்துகிறோம் என்று சொல்லி, எந்த அளவுக்கு முறைகேடாக, உறுப்பினர்களைச் சேர்க்க விடாமல், தேர்தல்களை நடத்தினார்கள் என்பது உங்களுக்குத் தெரியும். ஜனநாயக முறைப்படி நல்லவர்கள் இந்தக் கூட்டுறவு இயக்கத்திலே வந்து பணியாற்ற முடியாத அளவுக்கு, உறுப்பினர்களைச் சேர்க்க முடியாத அளவுக்கு அவர்களை எல்லாம் ஒதுக்கித் தள்ளிய காரணத்தினாலே, குறிப்பிட்டவர்கள் மட்டுமே உறுப்பினர்களாக இருந்து, தேர்தல்களை முறைகேடாக நடத்திய காரணத்தினால், பல பேர்களை, உண்மையிலேயே ஆர்வம் இருக்கிறவர்களை, இந்த ஜனநாயகத்திலே, கூட்டுறவிலே ஆர்வம் இருக்கிற நண்பர்களை எல்லாம் அந்தக்கால கட்டத்திலே சேர்க்க முடியாமல் போன காரணத்தினாலே, அவர்களையெல்லாம் முழுமையாக இந்தக் கூட்டுறவு இயக்கத்திற்கு கொண்டு வரவேண்டும் என்கின்ற வகையிலே அவர்களை எல்லாம் கொண்டு ந்து இந்தக் கூட்டுறவு இயக்கத்திலே இணைத்து, கூட்டுறவு இயக்கத்தை வளமோடு, செழுமையோடு நடத்த வேண்டுமென்ற எண்ணத்தின் அடிப்படையிலேதான், தனி அதிகாரிகளை இப்போது நியமித்து, அவர்கள் மூலமாகக் காரியங்களை நடத்திக் கொண்டிக்கிறோம்.

கடந்த காலத்திலே பல உறுப்பினர்களைச் சேர்க்க முடியாமல் கூட்டம் கூட்டமாக, அண்ணன் பொன்னையன் அவர்கள் சொன்னதைப்போல Scale வைத்து voter list-ஐ அடித்தார்களே, அதைப்போல, கூட்டுறவுத் துறையிலே யார் யார் எல்லாம் அவர்களுக்கு ஆகாதோ, அவர்கள் அத்தனை பேர் பெயர்களையும் நீக்கிவிட்டு, உறுப்பினர்களாக இருந்தவர்களைத் தூக்கிவிட்டு, உறுப்பினர்களாகச் சேரவிடாமல் தடுத்து தேர்தலை நடத்தினார்கள். ஆகவே, அப்படிப்பட்ட நல்லவர்களை கூட்டுறவு இயக்கத்திற்குக் கொண்டு வருவதற்காகத்தான் இன்றைக்கு புரட்சித் தலைவியினுடைய நல்ல அரசு இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து, தனி அதிகாரிகள் மூலமாக யார் யார் எல்லாம் நல்லவர்கள் இருக்கிறார்களோ, கூட்டுறவு இயக்கத்திலே ஆர்வமாக இருக்கிறார்களோ,

ஜனநாயக முறைப்படி சேர விரும்புகிறார்களோ அவர்களை எல்லாம் இந்த இயக்கத்திற்குள்ளே கொண்டு வருவதற்காகத்தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்து அவர்களை உறுப்பினர்களாகச் சேர்க்கின்ற பணியிலே ஈடுபட்டிருக்கிறோம்.

*பிற்பகல் 6-30*

அதுமட்டுமல்ல. இங்கே பேசியவர்கள் எல்லாம் இதையெல்லாம் உங்களாலே செம்மைப்படுத்த முடியுமா, அவ்வளவு நடந்திருக்கிறதே உங்களாலே முறைப்படுத்த முடியுமா என்றெல்லாம் கேட்டிருக்கிறீர்கள். இந்த அரசு முழுமையாக செய்யும். 100% verification கேட்டிருக்கிறீர்கள், நடந்து கொண்டிருக்கிறது. எங்கெல்லாம் தவறு நடக்கிறதோ அதை சுட்டிக்காட்டுங்கள். நிச்சயமாக தவறு செய்தவர்களைத் தண்டிப்பதற்கு இந்த அரசு முழு முயற்சியோடு புரட்சித் தலைவியினுடைய அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே உங்களுக்கு என்னுடைய வாக்குறுதியாக அரசின் சார்பிலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எவ்வளவு சங்கங்கள் 80(1) enquiry-யிலே இருக்கின்றன என்று அருமை அண்ணன் லத்தீப் அவர்கள் கேட்டார்கள். அந்தப் பணி முழுமையாக இப்போது நடந்துகொண்டிருக்கிறது. முழு விவரங்களையும் நான் உங்களுக்கு விரைவிலே தருகிறேன் என்ற உண்மையை மட்டும் இந்த நேரத்திலே பணிவன்போடு தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மூலச் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று சொல்லியிருக்கிறீர்கள். இருந்த சட்டத்தை வைத்துக்கொண்டே இவ்வளவு குழப்பங்களைச் செய்துவிட்டுப் போயிருக்கிறபோது இப்போது ஒரு சட்டத்தை மாற்றுவது என்று சொன்னால் அதிக காலம் ஆகும். அதற்கெல்லாம் மிகப் பெரிய ஆய்வு செய்ய வேண்டியிருக்கிறது. ஆகவே இருக்கிற அந்தச் சட்டத்தை வைத்து திருத்தங்களைக் கொண்டுவந்து தவறு நடக்காத அளவிற்கு ஜனநாயக முறைப்படி தேர்தல் நடத்த வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விரும்புகிறார்கள். ஆகவேதான் விரைவிலே தேர்தலை நடத்த வேண்டும், ஜனநாயகவாதிகள், உண்மையான கூட்டுறவாளர்கள் எல்லாம் இந்த இயக்கத்திற்கு வந்து கூட்டுறவுத் துறையினை நடத்த வேண்டும் என்பதற்காக விரைவான பணிகளை இந்த அரசாங்கம் மேற்கொண்டிருக்கிறது.





தேர்தல் நடத்துவதிலே எங்களுக்கு ஒரு சின்ன சந்தேகம், நடத்துவீர்களா, ஓராண்டு கேட்டிருக்கிறீர்களே என்று சொல்லியிருக்கிறீர்கள். இது மேலேயிருக்கிற சங்கங்களுக்கு. 1976-லேயிருந்து சட்டம் வந்து அந்த சங்கங்களுக்கெல்லாம் தேர்தலே நடக்காமல் தொடர்ந்து ஓராண்டு, இரண்டு ஆண்டு என்று சொல்லி தனி அதிகாரிகள் காலத்திலே அந்த சங்கங்களை நடத்திக் கொண்டிருக்கிறார்கள். அவைகளுக்கு ஓராண்டு கேட்டிருக்கிறோம். அதற்கு மேலும் இந்தத் தேர்தலை விரைவாக நடத்தி முடிக்க வேண்டுமென்று புரட்சித் தலைவி ஆணையிட்டிருக்கிறார்கள். அதற்கு அரசு இயந்திரம் முடுக்கிவிடப்பட்டிருக்கிறது. ஆகவே தேர்தலை நடத்தி முடிப்போம்.

அப்படியே விரைவாக தேர்தலை நடத்தி முடித்தாலும்கூட அதற்கு சில கால கட்டங்களிலே ஆரம்ப கட்டமாக தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கி, அதற்குப் பின்னாலே மத்திய வங்கி, மத்திய வங்கியிலேயிருந்து மாநில அளவிலேயிருக்கிற apex என்று சொல்லக்கூடிய இதற்கெல்லாம் தேர்தல் நடத்த வேண்டுமென்று சொன்னால் படிப்படியாக ஒவ்வொன்றாக வாய்ப்பு கொடுத்து அதற்கு தேதிகள் எல்லாம் கொடுத்து நடத்த வேண்டியிருக்கிறது.— ஏற்கெனவே இது 26-வது முறை என்று நினைக்கிறேன், நீட்டிக்கப்பட்டிருக்கிற அந்தத் தனி அதிகாரிகள் சட்டத்தின் பிரகாரம் அவர்களுக்கு ஆகஸ்டிலேயிருந்து ஜனவரிக்குள்ளாக காலம் நீட்டிப்பு முடிந்துவிடுகிற காரணத்தினாலே, அதனாலேதான் ஓராண்டுகாலம் வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோம். அதற்கு முன்னதாக தேர்தல் நடத்தி முடிப்பதற்கு இந்த அரசு முழு முயற்சியோடு பாடுபடும், அதிலே ஈடுபடும் என்பதனை இந்த நேரத்திலே உங்களுக்கு என்னுடைய பதிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த இயக்கம் நீங்கள் சொல்லியதுபோல மிகப் பெரிய ஊழலுக்கு ஓர் ஆதாரமாக இருந்திருக்கிறது. அவற்றையெல்லாம் தீர்ப்பதற்கு இந்த அரசு முழு முயற்சியோடு நடந்து கொண்டிருக்கிறது. அருமைச் சகோதரர் மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் குறிப்பிட்டதைப்போல தனி அதிகாரிகளை வைத்து இப்போது நடத்திக் கொண்டிருக்கிறோம். அந்தத் தனி அதிகாரிகள் யாராவது தவறு செய்வார்கள் என்று சொன்னால் அவர்களைப் பற்றி தயவுசெய்து அரசாங்கத்தினுடைய கவனத்துக்கு நீங்கள் கொண்டுவர வேண்டும். அப்படி தவறு செய்கிற தனி அதிகாரிகள் யாராக இருந்தாலும் தயவுதாட்சண்யமில்லாமல் இந்த அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும். நாட்டு மக்களுக்கு முழுமையானதொரு சேவை செய்கிற இயக்கமாக இந்தக் கூட்டுறவு

[திரு. ப. தனபால்] [2001 செப்டம்பர் 13

இயக்கத்தை மாற்ற வேண்டுமென்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் முழுமனதோடு செயல்பட்டுக் கொண்டிருக்கிற காரணத்தாலே அப்படிப்பட்ட விவரங்கள் ஏதாவது இருக்கும் என்று சொன்னால் மாண்புமிகு உறுப்பினர்கள் எப்போது வேண்டுமானாலும் தந்தாலும் அதை முறையான நடவடிக்கைக்கு உட்படுத்துவதற்கு இந்தத் துறை தயாராக இருக்கிறது என்ற ஒரு வேண்டுகோளை உங்கள் முன்னாலே வைக்கிறேன். ஆகவே அந்த நோக்கத்திற்காக, நீங்கள் எல்லாம் எண்ணுகிற அந்த சீரிய நோக்கத்தை நிறைவேற்றுவதற்கு, இந்த கூட்டுறவுத் துறையை நல்ல இயக்கமாக மாற்றுவதற்கு அடிப்படையாகத்தான் இந்தச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே மாண்புமிகு உறுப்பினர்கள் இந்த சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொண்டு சட்டமாக ஆக்கித்தர வேண்டுமென்று உங்களையெல்லாம் கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி விடை பெறுகிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. கு. பிச்சாண்டி:** Point of Clarification.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பிச்சாண்டி, என்ன, ஏதாவது கேட்க வேண்டுமா? இல்லை, இதிலே வேண்டாம். மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் (குறுக்கீடு) சரி, திரு. பிச்சாண்டி, சொல்லுங்கள்.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இருபதாண்டுகாலமாக அண்ணா தி.மு.க. ஆட்சிக் காலங்களில் எல்லாம் கூட்டுறவுத் தேர்தல் நடத்தப்படவில்லை. திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே 1989-90-லே கூட்டுறவுத் தேர்தல் நடந்தது, அதையும் கலைத்தீர்கள். அதேபோல இந்த ஐந்தாண்டு காலம் நடந்த சங்கங்களையும் இப்போது கலைத்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) ஆனால் பிறகு (குறுக்கீடு).....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.



2001 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

பிற்பகல் 6-35

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (தனி அலுவலர்கள் நியமன) திருத்தச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 8/2001) நிறைவேற்றப் பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சரவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

[பேரவைத் தலைவர்] [2001 செப்டம்பர் 13

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (உ) தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2001), மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2001) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

@ 11-9-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3, திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ப. தனபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 9/2001) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு கூட்டுறவு, உணவு, நுகர்பொருட்கள் வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஊ) தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டுவருவதன் மீதான வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2001), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டுவருவதன் மீதான வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2001) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"
எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து வருகிற இரண்டு சட்டமுன்வடிவுகளும் வணிக வரித் துறை அமைச்சருக்குத் தொடர்புடையவை. எனவே, கருத்துக்கள் கூற விரும்புகின்ற உறுப்பினர்கள் 3 சட்டமுன்வடிவுகள் மீதும் கூறலாம். (குறுக்கீடு) சரி இதை முடித்துவிடலாம்.

**திரு. சி. ஞானசேகரன்:** Actually, we request our Government to send it to Select Committee. அதை இப்போதே பாஸ் பண்ணிவிட்டால் வம்பாகப் போய்விடும். ஆக, கொஞ்சம் எங்களுடைய விவாதத்தைக் கேட்டதற்குப் பிறகு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் முடிவிற்கு வந்தால் நன்றாக இருக்கும்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

@ 12-9-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இல்லை, இந்தக் குறிப்பிட்ட சட்டமுன்வடிவின் மேலே மட்டும்தான் பேச வேண்டும் நீங்கள். (குறுக்கீடு) இதிலே மட்டும் தான் பேசவேண்டும் நீங்கள். ஏனென்றால் அடுத்து வரக்கூடிய சட்டமுன்வடிவுகளில் பிறகுதான் பேச வேண்டும் நீங்கள். எல்லாவற்றையும் சேர்த்து இதிலேயே பேசிவிடாதீர்கள். சரி, சொல்லுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களை நுகர்வதற்காகவோ, பயன்படுத்துவதற்காகவோ அல்லது விற்பனை செய்வதற்காகவோ கொண்டுவருவதன் மீது வரி விதிக்கப்படுவதற்கு வகை செய்வதற்கான இந்தச் சட்டமுன்வடிவை துவக்க நிலையிலேயே—அந்தச் சட்டமுன்வடிவினால் பிறகு அது சட்டமானால் ஏற்படக்கூடிய பாதிப்புகள், விளைவுகளின் காரணமாக அரசிற்கு சில ஆலோசனைகளை எடுத்துக்கூறி அதன் மூலமாக என்னென்ன விளையக்கூடும் என்பதையும் எடுத்துச் சொல்லி இந்தச் சட்டமுன்வடிவை நான் துவக்க நிலையிலேயே—திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக கண்டித்து இது சரி அல்ல என வரவேற்க முடியாத நிலையில் உங்கள் முன்னால் நான் நின்று என் கருத்தினைக்கூற விழைகின்றேன்.

சாலைகள் அமைத்துப் பேணி வருவது சந்தைகள் அமைப்பதற்கும் நலன் பயக்கும் நடவடிக்கைகளுக்கும் வகை செய்வது உள்ளிட்ட வணிகம் செய்வதற்கான வசதிகளுக்கு வழிவகை செய்துகொடுப்பதற்கான செலவுகளை ஈடுகட்ட, அதாவது மாநில அரசினுடைய வருவாயைப் பெருக்குவதற்காக இந்த நோக்கங்களை எல்லாம் செய்வதற்கு வருவாயைப் பெருக்குவதற்காக என்ற நோக்கத்தைப் பார்க்கிறபோது நன்றாகத்தான் இருக்கிறது. அமைதியாகத் தெரிகிற நீரிலே எப்படி ஆபத்தான முதலைகள் பதுங்கி இருக்குமோ அதுபோல, இதை மேலோட்டமாகப் பார்க்கின்றபோது மிக மென்மையாக, மிக அழகாக இருக்கிறது. ஆனால், ஒரு காலத்திலே வெள்ளைக்காரர்களால் octroi என்ற ஒரு வரி கொண்டு வந்த போது அந்த வரி விதிப்பை ஒரு காட்டுமிராண்டித்தனமானது, இருக்கக் கூடாது என்று அன்றைக்கு எல்லோருமே எதிர்த்து பிற்காலத்தில் பெருந்தலைவர் காமராஜர் முதலமைச்சராக இருக்கிறபோதும், பேரறிஞர் அண்ணா அவர்கள் முதலமைச்சராக இருக்கிறபோதும் இந்தக் கருத்துக்கள் வேறு வடிவிலே வரலாம் என்று எடுத்துச் சொல்லப்பட்டபோதும்கூட அவர்களால் ஏற்றுக்கொள்ள முடியாமல் அவை தேவையில்லை என்று ஒதுக்கித் தள்ளப்பட்டன. இராஜாஜி காலத்திலே இதற்கெல்லாம் விடை கொடுத்துவிட்டு அவர் என்ன செய்தார் என்றால் விற்பனை வரி (Sales

tax). ஆக்ட்ராய் வரிகள் எல்லாம் ஒழிந்தபோது விற்பனை வரி என்ற ஒன்றைக் கொண்டுவந்த பிறகு மீண்டும் இது வேறு வடிவில் வரலாம் என்று நம்முடைய தலைவர்கள் எல்லாம் எதிர்த்த நிலையில் எங்களுடைய தலைவர் முதல்வராக இருக்கும்போதுகூட அன்றைக்குத் தேவையில்லை என்று இருந்த நிலையில் *1983* ஆம் ஆண்டு ஒரு சட்டமுன்வடிவு நுழைவு வரியாக சட்டமுன்வடிவு எண் *34* என்று ஒன்று கொண்டுவரப்பட்டது. இங்கே இருக்கிற எதிர்க்கட்சிகளும் மற்ற அனைத்து அமைப்புகளும் கடுமையாக இந்த நுழைவு வரியினை எதிர்த்து, சட்ட முன்வடிவை எதிர்த்து கருத்துக்களைச் சொல்லி நாடு முழுவதும் போராட்டங்கள் நடைபெற்று, பிறகு அது நடைமுறைப்படுத்தப்படாமல் போனது.

*பிற்பகல் 6-40*

இந்தச் சட்டம் ஏதோ ஒரு புது வடிவம் பெற்று வந்திருக்கிறது என்று நான் கருதுகிறேன். இதிலே பாதிக்கப்படப்போவது நுகர்வோர் என்றால், பொதுமக்கள், அனைத்து தரப்பு மக்கள், நடுத்தர ஏழை எளிய அனைத்து மக்களும், அதைப்போல வியாபாரிகள் மற்றும் உள்ள விற்பனை செய்கின்ற சிறு கடைக்காரர்கள் இப்படி அனைத்துத் துறையினரையும் பாதிக்கக்கூடிய அளவிற்கு இந்தச் சட்டம் வழிவகுக்கும் என்பதை நான் எடுத்துக்கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசுக்கு இது எப்படிக் கூறப்பட்டது, ஆலோசனை சொல்லப்பட்டது என்று நான் ஆச்சரியப்பட்டுப் போகிறேன். காரணம், இதிலே நோக்கத்தில், வணிகம் செய்வதற்கு வழிவகை காண்பதற்கு, என்று வேடிக்கையான வார்த்தைகள்கூட சேர்க்கப்பட்டிருக்கின்றன.

கடலூர் பகுதியைப் பொறுத்தவரை புதுவையும் கடலூரும் அருகிலே இருப்பவைதான். பக்கத்தில் ஒருவன் பெட்டிக் கடை வைப்பதற்குக்கூட ஒரு பிஸ்கட்டிற்குக்கூட பிறகு இந்த வரி வருவதற்கு வாய்ப்புகள் வந்து சேர வழியுண்டு. காரணம், இன்றைக்கு சொல்லப்பட்டிருப்பது இரண்டு பொருட்கள் இணைப்புப் பட்டியலில். ஒன்று குளிர்பதனப் பெட்டி, இன்னொன்று காற்றுப்பதனப் பெட்டி. இந்த மூவர், நுகர்வோர், பயன்படுத்துவோர், விற்பனை செய்வோர், அதில் இரண்டாவதாக இருக்கிற பயன்படுத்தப்படுவதற்கான நிலையில் இருக்கின்ற குளிர்ப்பதன பெட்டி, காற்றுப்பதன பெட்டி. ஆனால், இந்த இணைப்புப் பட்டியல் தொடராது என்பதற்கு எந்த அத்தாட்சியும் இல்லை. மற்றைய இரண்டு நிலைகளிலே இது வராது என்பதற்கு எந்த உறுதியும் கிடையாது.





அப்படி உறுதி இல்லாத நிலையில் மற்றைய நிலைகளிலே பார்க்கின்றபோது எவ்வளவு பொருட்களை இதில் சேர்க்கப்போகிறார்கள்? இணைப்புப் பட்டியலில் எவ்வளவு வரப்போகிறது? அப்படி வருகிற அந்தப் பொருட்களின் மூலமாக விளைகின்ற நிலைகள் என்ன? விலைவாசி உயர்வு ஒருபுறம், பாதிக்கப்படுகின்ற மக்கள் ஒருபுறம். எல்லாவற்றிற்கும் ஒட்டுமொத்தமாக எதிர்காலத்திலே வியாபாரப் பெருங்குடி மக்கள் அனைத்து நிலைகளிலேயும் பாதிக்கப்படுகின்ற சூழ்நிலை, இவையெல்லாம் வருவதற்கு வாய்ப்புகளை இந்தச் சட்டமுன்வடிவு எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிறகு எந்தெந்தப் பொருட்களுக்கு விதி விலக்குகள் உண்டு என்று பிறகு மீண்டும் அறிவிக்க வேண்டிய நிலைமை. இவையெல்லாம் இருப்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, ஊழலுக்கு வழி வகுக்கும். ஊழலுக்கு வழி வகுக்கும் என்றால் நான் அரசையோ மற்றவற்றையோ சொல்ல விரும்பவில்லை. ஆனால், இந்தக் குறிப்பிலே இந்த முன்வடிவிலே நான் சட்டப் புத்தகத்தையும், முன்வடிவையும் வைத்துக்கொண்டு பேசுகிறேனே தவிர இங்கே, எங்களுடைய கட்சிக் கூட்டத்திலே முழக்கமிடுவதைப்போல பேசவில்லை. அது வேறு. நான் இங்கே குறிப்பிட விரும்புவது இந்த முன்வடிவில் *11*-வது புத்தி பக்கம் *22*, அதிலே அரசு, தான் விதிக்கக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்தச் சட்டத்தின்படி செலுத்தப்படத்தக்க வரி முழுவதையுமோ அல்லது அதன் பகுதியையோ செலுத்துவதிலிருந்து குறித்துரைக்கப்பட்ட வகைச்சேர்ந்த இறக்குமதியாளர்கள் எவருக்கும் விலக்களிப்பதானது பொது நலனுக்குத் தேவையாக இருக்குமானால் விலக்கு அளிப்பதற்கான அறிக்கையை அரசு மூலம் அது செய்யலாம். இவை எதற்கு வழி வகுக்கும்?

அதைப்போல, சுங்கச் சாவடிகள் ஆங்காங்கே அமைக்கப்பட்டு இதற்காக தனியாக அலுவலர்கள் நியமிக்கப்பட்டு செய்யப்படுகின்றபோது ஆங்காங்கே இவை ஊழல் பெருகுவதற்கு வழி வகுக்கும் என்று நான் சொல்ல வந்தேன். அரசிலே சொல்லப்பட்டிருக்கிற முன்வடிவில் இவை வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்று சொல்வது ஒரு எதிர்க்கட்சியினுடைய தார்மீகக் கடமையாகும். அந்த வகையில்தான் உங்களிடம் நான் இவற்றையெல்லாம் சுட்டிக்காட்டுவது என்னுடைய கடமை என்ற வகையிலே நான் இந்தக் கருத்துக்களை எடுத்துச் சொல்ல விரும்பினேன்.

[திரு. இ. புகழேந்தி] [2001 செப்டம்பர் 13

அதுமட்டுமல்ல, உள்ளாட்சித் துறைகள்—கார்ப்பரேஷன்கள், நகராட்சிகள் அதைப்போல உள்ளாட்சி அமைப்புகளுக்கு சாலை மற்றும் உள்ள பணிகளை, அடிப்படைத் தேவைகளைச் செய்வதற்கு வருவாயைப் பெருக்க என்று சொல்கிறபோது, இதை எப்படி அவர்களுக்குத் தரப்போகிறோம்? இதற்கு முன்பாக State Finance Commission, Corporation-க்கு ஒரு grant கொடுக்கும். அதைப்போல, surcharge on stamp duty. மாநகராட்சிப் பகுதியிலே, சென்னை மட்டுமல்ல, எல்லா பகுதிகளிலும் மாநகராட்சிப் பகுதிகளிலே முத்திரைத்தாள் கட்டணங்களை நம்முடைய மாநில சர்க்கார் மாநகராட்சிக்குக் கொடுக்கும். இது ராஜீவ் காந்தி அவர்களுடைய நகர்பாலிகா சட்டம் வந்ததற்குப் பிறகு உறுதி செய்யப்பட்டது. கொடுக்கலாம் அல்லது கொடுக்காமல் போகலாம் என்பது அல்ல, கொடுத்துத்தான் தீர வேண்டும் என்று உறுதி செய்யப்பட்டதன் நிலையிலே ஒரு வருவாயை மாநில சர்க்கார் உள்ளாட்சி அமைப்புகளுக்கு இவ்விதம் தர வேண்டுமென்ற ஒரு நிலையை சட்டப்பூர்வமாக, எழுத்துப்பூர்வமாகச் சொல்லப்பட்டது. அதன் அடிப்படையில்தான் இங்கேகூட நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

S.F.C. grant and surcharge on stamp duty *33 கோடியே 71 இலட்சத்து 29 ஆயிரத்து 202* ரூபாய் சென்னை மாநகராட்சிக்கு மாநில சர்க்கார் வழங்கியிருக்கிறது. மாநில சர்க்கார் கொடுப்பது கடமை. Corporation-ல் வசூலித்து பணத்தைக் கொடுத்திருக்கிறதே தவிர, நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர்....

*பிற்பகல் 6-45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி, சட்ட முன்வடிவுக்கு வாருங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** அதைத்தான் சொல்கிறேன். இதை எப்படி கொடுக்கிறார்கள் என்பதற்காகச் சொல்ல வருகிறேன். ஆகவே, இதில் நாம் கொடுத்ததற்கான எந்தவிதமான பெருமையோ, மற்றவையோ அல்ல. இது கொடுக்கப்பட வேண்டும். அவ்விதம் கொடுக்கப்பட்டிருக்கிறது. இது கடனுக்காகவோ, மற்றவர்களுக்காகவோ கொடுக்கப்படவில்லை என்பதை இங்கே எடுத்துச்சொல்லி, இந்தச் சட்டமுன்வடிவில் நாம் ஒரு வழியைக் காணவேண்டும். எத்தனை சதவிகிதம் எப்படி கார்ப்பரேஷனுக்கு கொடுக்கப் போகிறோம்? இல்லை, உள்ளாட்சி, நகராட்சிகளுக்கு எப்படி நாம் கொடுக்கப் போகிறோம் என்ற நிலைகளையெல்லாம் வகுப்போமானால், இந்த நோக்கம் நிறைவேறும். ஏனென்றால் அவைகளைச் சொல்லித்தான்,



2001 செப்டம்பர் 13] [திரு. இ. புகழேந்தி]

நாம் வரியை வசூலிக்கப் போகிறோம். அப்படி வசூலிக்கிற நேரத்தில், பொது மக்களும், வியாபாரிகளும், விற்பனையாளர்களும் பாதிக்கப்படக்கூடிய ஒரு நிலையில் இருக்கிற இந்தச் சூழ்நிலையில், இந்த அடிப்படைத் தேவை போய்ச்சேர வேண்டும்.

உள்ளாட்சி அமைப்புகளுக்கு grant வருகிறதோ, வரவில்லையோ என்ற நிலையில் இது கொண்டு வரப்படுகிறதோ என்றுகூட எனக்குத் தெரியவில்லை. ஆனால், நான் இறுதியாக என்னுடைய கருத்தை இங்கே சொல்லி விடைபெறுகிறேன். அதற்கு முன்பே எதிர்காலத்தில் வரக்கூடிய விளைவுகள், தமிழகத்தின் வணிகர்கள் மிகப்பெரிய பாதிப்புடன் அரசாங்கத்தைப் பார்க்கிற சூழ்நிலையும், *1983*-லே இதே மாமன்றத்திலே, அன்றைக்கு அந்த நுழைவு வரி வருகின்றபோது அந்தச் சட்டமுன்வடிவு நுழைவு வரியை எதிர்த்து எங்களுடைய அன்புத் தலைவர், தமிழகத்தினுடைய மாபெரும் தலைவராக என்றைக்கும் விளங்குகிற எங்கள் குடும்பத் தலைவர் கலைஞர் அவர்கள் அன்றைக்கு இதே மாமன்றத்திலே ஒரு கருத்தைச் சொன்னார்கள். தினமணிப் பத்திரிகை, அந்தப் பத்திரிகையிலே வந்த செய்தியையும் சொல்லிவிட்டுச் சொன்னார்கள்; இந்த சட்டமன்றத்தை நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். அவர் எப்போதுமே அரசியல் என்பதல்ல, ஓர் ஆலோசனை, ஓர் அறிவுரை, எதிர்கால தமிழகத்திற்கு வளம் காண்பதற்கான வழிவகைகளைக் காணத்தான் சொன்னாரே தவிர, நாமெல்லாம் எள்ளி நகையாடுவதற்கு அவர் சொல்லவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இ. புகழேந்தி, அதை வாசியுங்கள்.

**திரு. இ. புகழேந்தி:** இந்தச் சட்டமன்றத்திலே இந்தச் சட்டமுன்வடிவை கூட்டு ஆய்வுக் குழுவின் பரிசீலனைக்குத் தருவதே நல்லது. அந்த கூட்டு ஆய்வுக் குழுவுக்கு, சட்டமன்றக் கூட்டு ஆய்வுக் குழுவுக்குக் கொடுங்கள். சட்டமன்றக் கூட்டு ஆய்வுக் குழு பொது மக்களின் கருத்தை அறிந்து பிறகு ஒரு முடிவுக்கு வரவேண்டுமென்று ஒரு கருத்தைச் சொன்னார்கள். அந்தக் கருத்தின் அடிப்படையிலே இன்றைக்கு கொண்டு வந்திருக்கிற இந்தச் சட்டமுன்வடிவை முழுமையாக ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில், இயலாத நிலையில், மக்களும், வியாபாரிகளும், விற்பனையாளர்களும், பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலையை உருவாக்குகின்ற நிலை இந்தச் சட்டமுன்வடிவில் இருக்கிற காரணத்தால் தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லியதைப்போல, ஆய்வுக் குழுவுக்கு அனுப்புங்கள், இல்லையென்றால் இன்றைக்குக் கொண்டு வந்திருப்பதை வாபஸ் பெற வேண்டுமென்ற

[திரு. இ. புகழேந்தி] [2001 செப்டம்பர் 13

என்னுடைய கருத்தைச் சொல்லி, உங்களிடையே இந்தச் சட்டமுன்வடிவை திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பாக எதிர்த்து அமர்கிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. புகழேந்தி அவர்கள், இதை காட்டுமிராண்டித்தனமான, அந்தக் காலத்துக் கொள்கை என்ற முறையிலே இது நடைமுறைக்கு வரக்கூடாது என்ற கருத்துப்பட பேசினார்கள். மன்னிக்க வேண்டும். கருத்துப்பட பேசினார்கள். (குறுக்கீடு) ஆமாம்.

**திரு. இ. புகழேந்தி:** பல்கிவாலா சொன்ன ஒரு வார்த்தை அது. ஜான் என்பவர்கூட.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதைத்தான் சொல்கிறார்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** Yes, Yes. Correct. There is no dispute in your suggestion. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, octroi எந்த முறையிலே போடப்பட்டது, தற்போது Entry Tax தமிழகத்திலே எந்த முறையிலே விதிக்கப்பட இருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர்களுக்குப் புரிய வேண்டும் என்பதற்காகச் சொல்கிறேன். இந்த Entry Tax மீது உங்களுடைய இயக்கம் எதிர்ப்பைத் தெரிவிக்கிறது என்று முதன்முதலிலே சொல்லியிருக்கிறீர்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மறந்துவிட்டார் என்று கருதுகிறேன். தி.மு.க. ஆட்சியிலே இருந்த காலத்திலே 1990 ஆம் ஆண்டு Tamil Nadu Tax on Entry of Motor Vehicles in the Local Areas Act, 1990 என்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவந்து, Entry Tax-ஐ முதன்முதலில் அறிமுகப்படுத்தியதே நீங்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) அதை மறந்துவிட்டுப் பேசக்கூடாது என்பதற்காக நான் சொல்கிறேன்.

அடுத்து, Entry Tax-ஐப் பொறுத்தவரைக்கும் மகாராஷ்டிராவில் Entry Tax இருக்கிறது. Both entry tax and Octroi are in vogue—in force in Maharashtra. ஆனால், தமிழகத்தைப் பொறுத்தவரைக்கும் தமிழகத்திலே suppose ஒரு பெரிய air-conditioner என்று எடுத்துக்கொண்டால், air-conditioner-க்கு இங்கு 16 சதவிகிதம் வரி, ஆந்திர மாநிலத்திலே 16 சதவிகிதம் sales tax என்று இருக்கிறபோது நாங்கள் entry tax 20% என்று போட்டால் The difference of 4% only will be levied. இதுதான் entry tax. இதிலே வியாபாரிகளுக்குப் பாதிப்பு இல்லை.



2001 செப்டம்பர் 13][திரு. சி. பொன்னையன்]

பிற்பகல் 6-50

குறிப்பாக, இந்த இரண்டு item-களையும் ஏன் கொண்டு வருகிறோம் என்றால், பக்கத்திலே இருக்கிற ஆந்திர மாநிலத்திலே 12 சதவீதம் வரி. தமிழகத்திலே 20 சதவீதம் வரி. எனவே, தமிழகத்திற்கு வருவதற்குப் பதிலாக ஆந்திரத்திற்குச் சென்று, அங்கு பதிவு செய்து, அங்கிருந்து இங்கு வருகின்ற காரணத்தால் ஏகப்பட்ட வருவாய் இழப்பு ஏற்படுகிறது. வியாபாரிகளுக்கும் பாதிப்பு இல்லை; பொதுமக்களுக்கும் பாதிப்பு இல்லை. பாண்டிச்சேரி மாநிலத்திற்குத்தான் பாதிப்பு. தமிழகத்திற்கு வருவாயைத் தரும் என்பதால் இது சரியான ஒன்று என்பதை விளக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன்.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இவ்வளவு நேரம் பேசினீர்கள். மறுபடியும், மறுபடியும் விளக்கிக் கொண்டிருந்தால் எப்படி? திரு. சி. ஞானசேகரன், சொல்லுங்கள். (குறுக்கீடு) சரி.

**திரு. இ. புகழேந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,. Motor Vehicles-க்கு என்று எதற்காக entry tax போடப்பட்டது என்பது பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். வசதி படைத்த, வாய்ப்பு படைத்த பெரிய கனரக வாகனங்கள், மோட்டார் வாகனங்கள் போன்றவை மற்ற மாநிலங்களிலேயிருக்கின்ற நிலையைவிட, தமிழகத்திலே நம்முடைய மாநிலத்திலே வந்தால் இங்கேயே அதற்கான வாய்ப்பு பெருக வேண்டும் என்ற நோக்கிலே செய்யப்பட்டிருக்கிறதே தவிர, இவர்கள் பட்டியலிலே இரண்டை மட்டும் போட்டு, மேலும் பட்டியல் நீளும் என்கின்ற கருத்து பொதிந்திருக்கிற காரணத்தால், நுகர்வோர் என்று சொல்லியிருப்பது, பயன்படுத்துவோர் என்று சொல்லியிருப்பது, விற்பனையாளர் என்று சொல்லியிருக்கிற காரணத்தால்தான் நான் இந்தக் கருத்துக்களை அழுத்தமாகச் சொன்னேன் என்பதை இங்கே குறிப்பிட விரும்புகிறேன்.

**டாக்டர் க. பொன்முடி:** ஒரே ஒரு நிமிடம். சமச்சீர் வரி, ஒரு clarification; வேறு ஒன்றும் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் சொல்ல வேண்டியதை அவர் சொல்லிவிட்டார்; விடுங்கள். (குறுக்கீடு) திரு. சி. ஞானசேகரன், பேசுங்கள். (குறுக்கீடு) போதும், போதும்.

[2001 செப்டம்பர் 13

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள்ளே பொருட்களை நுகர்வோருக்காகவோ, பயன்படுத்துவோருக்காகவோ அல்லது விற்பனை செய்வதற்காகவோ கொண்டு வருவதன் மூலம் வரி விதிக்கப்படுவதற்கு வகை செய்வதற்கான இந்தச் சட்டமுன்வடிவை நான் உண்மையிலேயே வரவேற்க முடியாத சூழ்நிலையில் இருந்து கொண்டிருக்கின்றேன். காரணம், இரட்டை வரிவிதிப்பு முறையைப்போல் ஆக்கப்படும்.

ஏற்கெனவே, நம்முடைய அரசு, வணிகவரி என்ற பெயரில் இப்போது நிறைய பொருட்களுக்கு வரி விதித்துக் கொண்டிருக்கிறது. குறிப்பாக இந்த அரசே 66 சதவீதம் வருமானத்தை இந்த வணிகவரி மூலமாகத்தான் பெற்றுக்கொண்டிருக்கிறது. அப்படி பெற்றுக்கொண்டிருக்கிறபோது, இன்னும் நீங்கள் பொருட்களுக்கு, நுழைவு வரி என்று போட்டு, மக்களுக்கு அதை விநியோகம் செய்கிறபோது, அந்த entry tax கட்டக்கூடிய வியாபாரிகள் நிச்சயமாக அதே விலைக்குப் பொருட்களைக் கொடுக்கப் போவதில்லை. அவர்கள் அதிகமான விலை வைத்துக் கொடுக்கிறபோது, அந்த இடத்திலே விலை நிச்சயமாக உடனே உயரும். ஆகவே, விலைவாசி உயர்வு என்பது எல்லா பொருட்களுக்கும் தமிழ்நாட்டில் வந்துசேரக்கூடிய ஒரு நிலைமை வந்துவிடுகிறது.

இதிலே நீங்கள் எந்தெந்த, இணைப்புப்படி scheduled goods என்று சொல்லக்கூடியதை இந்தச் சட்டத்தின்படி பின்னாலே அறிவிக்க இருக்கிறீர்கள். அவ்வப்போது அறிவிக்கவும் போகிறீர்கள். அப்படி அறிவிக்கிறபோது, அந்தந்தப் பொருட்களின் மீதும் நீங்கள் scheduled goods-லே அதைச் சேர்த்து, நீங்கள் நுழைவு வரியை அதிலே ஒவ்வொரு point-லே, அதாவது நுழைகிறபோது அது நிச்சயமாக ஏறுகிறது என்று சொன்னால், அந்த tax-ம் அதிகம் ஆகிறது; tax அதிகம் ஆகிற காரணத்தால், ஒவ்வொரு பொருளினுடைய விலையும் நிச்சயமாக ஏறக்கூடிய வாய்ப்பு இருக்கிறது.

நம்முடைய நிதித் துறை அமைச்சர் ஒரு உதாரணத்தைச் சொன்னார்கள். கர்நாடகாவில் ஒரு பொருளுக்கு 12 சதவீதம், பொதுவாக அந்த air conditioner 12 சதவீதம் வரி. ஆனால், தமிழகத்திலே 20 சதவீத வரி. அப்படிச் சொல்கிறபோது, கர்நாடகாவிலே இருந்து அந்தப் பொருட்களை எல்லாம் வாங்கிக்கொண்டு வந்துவிடுகிறார்கள். அப்படி வாங்கி வருகிறபோது தமிழகத்திற்கு வரக்கூடிய வருவாய் போய்விடும் என்று சொன்னார்கள்.



2001 செப்டம்பர் 13] [திரு. சி. ஞானசேகரன்]

சமச்சீர் வரி என்று ஒன்றை ஏற்கெனவே இந்த இடத்திலே புகுத்திவிட்டு, அதிலே சிலவற்றை எல்லாம் நீங்கள் equal-ஆகச் செய்து கொண்டிருக்கிறபோது, இதையே காரணமாக நீங்கள் சொல்வீர்கள் என்று சொன்னால் எப்படி அதை ஏற்க முடியும்?

இரண்டாவது, இந்த Act-லே நீங்கள் மாநகராட்சி என்று எல்லாம் சொல்லியிருக்கிறீர்கள். இதற்கு எல்லாம் பங்கு கொடுக்கப் போகிறோம்; அதேபோல் கிராமப் பஞ்சாயத்துகளுக்குக் கொடுக்கப் போகிறோம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நகராட்சிகள் பற்றியும் சொல்லியிருக்கிறீர்கள்.

அதாவது, மாநிலத்திலே எங்கெங்கேயெல்லாம் ஒரு State-லேயிருந்து மற்றொரு State-க்கு வரும்போது ஒரு border-லே நீங்கள் வசூல் செய்யப்போகிறீர்கள். அப்படி வசூல் செய்கிறபோது, அதுவும் பொருட்களினுடைய அந்த value-விலேயிருந்து 30 சதவீதம்வரை இப்போது வரி போடப்படலாம் என்று வேறு சொல்லியிருக்கிறீர்கள். 100 ரூபாய் பொருளுக்கு 30 சதவீதம்வரை என்று சொல்கிறபோது நீங்கள் பின்னாலே வரையறுக்கப் போகிறீர்கள். சிலவற்றுக்கு 20 சதவீதம் என்று சொல்வீர்கள். சிலவற்றுக்கு 10 சதவீதம் என்று சொல்லப் போகிறீர்கள். இப்படியே போகும் என்று சொன்னால், 30 சதவீதம் வரை உயரும் என்று சொன்னால், நிச்சயமாக விலை உயர்வு, தமிழகத்து மக்களைப் பாதிக்கக்கூடிய ஒரு சூழ்நிலை உருவா ம் என்பதை நான் பணிவன்போடு நம்முடைய அவை முன்னவர் அவர்களுக்கும், அமைச்சர் பெருமக்களுக்கும், அரசுக்கும் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இது தேவைதானா என்று நீங்கள் சிந்தித்துப் பாருங்கள்.

பிற்பகல் 6-55

Entry tax-ஐ திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தாலும் சரி அல்லது இப்போது அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு கொண்டு வந்தாலும் சரி, அது மக்களைப் பாதிக்கும். இதை octroi என்பதன் மறுவடிவம் என்றுதான் சொல்ல வேண்டும். Octroi இல்லையென்று சொன்னாலும்கூட, இது octroi-யின் மறுவடிவம்தான். ஏற்கெனவே இந்தச் சட்டத்தைத் தமிழகத்திலே முந்தைய அரசு கொண்டுவந்து, பிறகு அதற்கெல்லாம் வணிகர்களெல்லாம் பெருத்த எதிர்ப்புத் தெரிவித்து பிறகு அதைச் செயல்படுத்த முடியாமலே போயிருக்கிறது. இப்போதும் நிச்சயமாக தமிழகத்திலே ஒரு மாபெரும் எதிர்ப்பு, நிச்சயமாக மக்களிடமிருந்தும் வரும், வணிகர்களிடமிருந்தும் வரும். இப்படிப்பட்ட எதிர்ப்பை எல்லாம் நாம் சம்பாதித்து, இந்த வரியை நாம் போட வேண்டுமா? சாலை போடுவதற்கும்

அதைப்போல சந்தையைப் பலப்படுத்துவதற்கும் என்றெல்லாம் அதற்குக் காரணம் சொல்கிறார்கள்.

ஏனென்றால், ஏற்கெனவே நம்முடைய நிதியமைச்சர் அவர்கள் வெள்ளை அறிக்கை வைத்து, கடந்தகால ஆட்சியிலே ஏற்பட்ட முறைகேடுகள்தான் இவ்வளவு நிதி நெருக்கடிக்கும் காரணம் என்று சொன்னார்கள். அப்படிப்பட்ட நிலையில் அந்த நிதி நெருக்கடியைக் கொண்டுபோய் மக்கள் தலையிலே சுமத்தி, அதற்காக நீங்கள் மக்களைப் பழிவாங்க வேண்டுமா என்பதைத்தான் நாம் கேட்க விரும்புகிறோம்.

உங்களுக்கு நிதி வேண்டும் என்றால், வேறு ஏதாவது ஆதாரத்தைக் கண்டுபிடித்து அதிலிருந்து நீங்கள் வரியைப் பெறலாமேயொழிய இப்படி செய்யக்கூடாது. ஏனென்றால் நீங்கள் வணிக வரியை வைத்திருக்கிறீர்கள். இப்படி ஒரு மறைமுகமாக, அதே வணிகவரித் துறையின் மூலம் இன்னும் கொண்டுவந்து வரியைப் போட்டு நீங்கள் பொருள்களினுடைய விலையை உயர்த்த வேண்டாம். நாங்களே இருக்கிற வரியையெல்லாம் குறையுங்கள் என்று கேட்டுக் கொண்டிருக்கிறோம். காலையிலேகூட நான் ஒரு கோரிக்கையை வைத்தேன். அதாவது, கிராமப்புறங்களிலே இருக்கக்கூடிய ஏழையெளிய மக்கள் விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த சில பெண்கள் மாடு வளர்த்து பிறகு பால் கறந்து வெண்ணெய் தயாரித்தால் அதற்குக்கூட 12 சதவீத வரி, அதையே 4 சதவீதமாக ஆக்குங்கள் என்று கோரிக்கை வைத்துக் கொண்டிருக்கிறோம். வணிகச் சின்னம் இல்லாதிருக்கிற வெண்ணெய்கே நீங்கள் அவ்வளவு வரியை விதித்திருக்கிறீர்கள். குருவித் தலையிலே கொண்டுபோய் பனங்காயை வைக்கிறீர்கள்.

அதேமாதிரி, பிஸ்கட்டுக்கு. கிராமப் பகுதியிலே பட்டிக்காட்டுக் கடைகளிலே எங்கேயாவது விற்கிற அந்த வணிகவரிச் சின்னம் இல்லாத பிஸ்கட்டுக்கு பிரிட்டானியா பிஸ்கட்டுக்கு விதிக்கப்படுகிற 12 சதவீத வரியை, அதற்குக் கொண்டுபோய் போடுகிறீர்கள். இந்த வித்தியாசங்களை நீங்கள் பிரித்துப் பார்க்காமல் எல்லாவற்றுக்கும் ஒன்றாகச் சகட்டு மேனிக்கு நீங்கள் வரியைப் போடுகிற காரணத்தினாலே அதிலே இவ்வளவு பெரிய இழப்பு.

அதேமாதிரி, tourism என்று எடுத்துக்கொண்டாலும்கூட, இந்த tourism-த்திலே *(மணியடிக்கப்பெற்றது)* இதோ உரையை முடித்துவிடுகிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள். இந்தச் சட்டமுன்வடிவுக்கு வாருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** இதோ வந்துவிடுகிறேன். அதாவது season, off season என்றிருக்கிறது. அதிலே 1000 ரூபாய் ஒரு அறைக்கு வாடகை போடுகிறீர்கள் என்றால், off season-லே 500 ரூபாய் போடுவார்கள். ஆனால், அந்த 1000 ரூபாயைக் கணக்கிட்டு நீங்கள் வரியை வசூல் பண்ணிக் கொண்டிருக்கக்கூடிய காரணத்தினாலே அத்துணை tourism-களாக வரக்கூடிய மக்களெல்லாம் இப்போது தமிழ்நாடே வேண்டாம், நாங்கள் கர்நாடகாவுக்குப் போய்விடுகிறோம், இல்லாவிட்டால் நாங்கள் ஆந்திராவிற்குப் போய்விடுகிறோம், இல்லாவிட்டால் நாங்கள் கோவாவிற்குப் போகிறோம் என்று போய்க் கொண்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட முறையிலே இத்தனை குளறுபடிகள் இருக்கின்றன.

சிட்டா நூலுக்கு 2 சதவீதம் வரி போட்டிருக்கிறீர்கள். அதையெல்லாம் எடுத்தீர்கள் என்று சொன்னால்கூட இன்னும் கொஞ்சம்கூடப் பெருகும். இதற்குத்தான் இருக்கிற வரியைக் குறையுங்கள் என்று நாங்கள் உங்களைக் கேட்டுக் கொண்டிருக்கிறபோது, இல்லை, இல்லை நாங்கள் அதிகமாக வரியைப் போட்டே தீருவோம் என்று நீங்கள் இப்படிப் போடுவது என்பதை நிச்சயமாகத் தமிழ்நாட்டு மக்கள் ஏற்கமாட்டார்கள். ஆகவே, நான் இந்த அரசையும் பொதுவாக நம்முடைய வணிகவரித் துறை அமைச்சர் அவர்களையும், நம்முடைய அவை முன்னவர் அவர்களையும் கேட்டுக்கொள்வதெல்லாம் இதைக் கொஞ்சம் ஆராய்ந்து பார்க்க Select Committee-க்கு அனுப்பி வையுங்கள். இதிலே நிறைய confusion இருக்கின்றது.

இதற்கு வேறு நீங்கள் எடுத்தவுடனேயே 1000 ரூபாய் அபராதம் போடலாம் என்று சொல்கிறீர்கள். 2-வது முறையாக offence கண்டுபிடித்தார்கள் என்றால் அதற்கு 6 மாதம் தண்டனை கொடுக்கலாம் என்று சொன்னால், இப்படியெல்லாம் கொண்டு போகிறது வரி என்று சொன்னாலே பயமாக இருக்கிறது. இதிலே வேறே ஜெயில் தண்டனை, அதற்கப்புறம் 5,000 ரூபாய் வரி, இப்படி எல்லாம் நீங்கள் போட்டுக்கொண்டு இருப்பதைத் தயவுசெய்து நிறுத்திவிட்டு இதை Select Committee-க்கு நீங்கள் அனுப்பி வைத்து ஆய்வு செய்யுங்கள். பிறகு பார்த்துக்கொள்ளலாம். அவசரக் கோலத்தில் அள்ளித் தெளித்து இந்தச் சட்டத்தை நீங்கள் நிறைவேற்றாதீர்கள்.

[2001 செப்டம்பர் 13

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** விலைவாசி ஏற்றத்திற்கு நீங்கள் உறுதுணையாக இருக்காதீர்கள் என்று கேட்டு, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கே.சி. கருணாகரன்.

**திரு. கே.சி. கருணாகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களை நுகர்வோர் நுகர்வதற்காகவோ, பயன்படுத்துவதற்காகவோ அல்லது விற்பனை செய்வதற்காகவோ கொண்டுவருவதன் மீது வரி விதிக்கப்படுவதற்கு வகை செய்வதற்கான இந்தச் சட்டமுன்வடிவை மகிழ்ச்சியுடன் ஏற்றுக்கொள்ள முடியாத நிலையில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி இருக்கிறது என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஏற்கெனவே, இங்கு இரண்டு மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் கருத்துக்களைச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஆட்சி, மறைந்த மாண்புமிகு டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் தலைமையிலே இருந்தபோது நுழைவு வரி என்று ஒன்று வந்து. நாடு முழுவதும் மக்கள் கடுமையாக எதிர்த்து, இந்தப் பேரவையிலேயும் எங்களைப் போன்ற கட்சிகள் அதற்கு ஆட்சேபம் தெரிவித்து கடைசியில் அது அமல்நடத்தப்படாமலேயே நிறுத்தி வைக்கப்பட்டது என்பது நடந்திருக்கிறது. ஆகையினால், இந்தச் சட்டமுன்வடிவு அறிமுகம் செய்யப்பட்டு நாளை சட்டமாக உருவாகிறபொழுது அதனால் ஏற்படுகிற விளைவுகள் தமிழக மக்களைப் பாதிக்கும் என்று நாங்கள் கருதுகிறோம். சிறிய, நடுத்தர, பெரிய அனைத்து வர்த்தகர்களின் வர்த்தகப் பரிவர்த்தனைகளும் அதனால் பாதிக்கும் என்று நாங்கள் கருதுகிறோம்.

*(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)*

இந்தச் சட்டமுன்வடிவிலே நோக்கங்களுக்கான காரண விளக்கவுரை சொல்லப்பட்டிருக்கிற கடைசிப் பக்கத்திலே அரசு அறிவிக்கை செய்யப்படக்கூடிய ஒருசில பண்டங்கள், பொருட்கள், உருப்படிகள், சரக்குகள் ஆகியவற்றின்மீது அவற்றைக் கொண்டு வருவதற்கான வரி ஒன்றை அறிமுகப்படுத்தும் என்றும், அதன்படி மேற்காணும் நோக்கங்களுக்காக இம்மாநிலத்தின் உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்களை நுகர்வதற்காகவோ, பயன்படுத்துவதற்காகவோ அல்லது விற்பனை செய்வதற்காகவோ கொண்டுவருவதன் மீது வரி விதித்து



2001 செப்டம்பர் 13] [திரு. கே.சி. கருணாகரன்]

வசூலிக்க சட்டம் ஒன்றை இயற்றுவதென முடிவு செய்யப்பட்டுள்ளது என்றும் சொல்லப்படுகிறது.

பிற்பகல் 7-00

பொருள்களை நுகர்வதற்காகவும், பயன்படுத்துவதற்காகவும், விற்பனை செய்வதற்காகவும், ஆகவே மூன்றும் இருக்கிறது. ஆகவே, விற்கிறவர்களையும் பாதிக்கும். நுகர்வோரையும் பாதிக்கும் என்ற நிலை இதிலே வருகிறது என்பதை சற்று ஆழமாக நம்முடைய அரசு கணக்கில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். ஏற்கெனவே, இதுபோன்ற பல வரி விதிப்புகள் காரணமாக, வாகனங்கள் வரி கட்டுவதன் மூலமாக, ஜனங்கள் தலையில் விலைகள் திணிக்கப்பட்டிருக்கின்றன. இதை எதிர்த்து கடுமையான போராட்டங்கள் நாட்டிலே நடந்திருக்கின்றன. கோவை மாவட்டத்தின் அமைச்சர்களுக்கும், மாமன்ற உறுப்பினர்களுக்கும், சட்டப் பேரவை உறுப்பினர்களுக்கும் தெரியும். ஆற்றுப் பாலத்தில் சுங்க வரி விதித்திருப்பது. அந்த ஆற்றுப் பாலம் என்பது 7 கோடி ரூபாய் மூலதனத்திலே L & T நிறுவனம் குத்தகைக்கு எடுத்துக் கட்டியிருக்கிறது. அதனுடைய மொத்தச் செலவு 7 கோடி ரூபாய். ஆனால், அவர்கள் செய்து கொண்டிருக்கிற 20 ஆண்டு கால ஒப்பந்தத்தில், 100 கோடி ரூபாயை மக்களிடமிருந்து அவர்கள் வசூலிக்க முடியும். டாக்சிக்கு 5 ரூபாய், டெம்போவிற்கும், வேனிற்கும் 15 ரூபாய், லாரிகளுக்கு 23 ரூபாய், பஸ்களுக்கு 15 ரூபாய் ஒவ்வொரு நடைக்கும். ஆக, பாலக்காட்டிலிருந்து, மதுரைப் பகுதியிலிருந்து, இதரப் பகுதியிலிருந்து அதைத் தாண்டி வருகிறபோதும், கோவையிலிருந்து அந்தப் பகுதிகளுக்குப் போகிறபோதும், இங்கே பணம் கட்ட வேண்டியிருக்கிறது.

மிகப்பெரிய போராட்டங்கள், சமீபத்தில்தான் தி.மு.க. ஆட்சியில் கடந்த ஆண்டில் நடந்தது. பல்லாயிரக்கணக்கானவர்கள் மறியல் செய்து, பல மாதங்கள் சிறையில் இருந்திருக்கிறார்கள். அதிலே என்ன வேடிக்கை என்று சொன்னால், ஏற்கெனவே இருக்கிற பாலத்தையும் பயன்படுத்தி, அதிலேயும் வசூலிக்கிறார்கள். ஒரு சேலை வாங்கினால், ஒரு ஜாக்கெட் இலவசம் என்று ஆடி மாத சிறப்புத் தள்ளுபடி செய்வது போல, புதிய பாலம் கட்டினால்; பழைய பாலம் இலவசம் என்று தி.மு.க. பழைய பாலத்தை தாரை வார்த்து L&T நிறுவனத்திற்கு. அதற்கும் சேர்த்து வசூல் பண்ணிக் கொண்டு இருக்கிறார்கள். நமக்கெல்லாம் தெரியும். ஆகையினால், இதுபோன்ற பாதிப்புகள், அடுத்து கூடுதலாக மக்கள்

[திரு. கே.சி. கருணாகரன்] [2001 செப்டம்பர் 13

தலையிலே வருவதற்குக் காரணமாக இருக்கக்கூடும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அச்சப்படுகிறது.

29 ஆம் பக்கத்தில் இதனுடைய வரம்புரைகள், இந்தச் சட்டமுன்வடிவிலே சொல்லப்பட்டிருக்கிறது. அதிலே இரண்டாம் வரம்புரை என்று சொல்லப்பட்டிருப்பதிலே, மேலும் எந்தக் காரணத்திற்காகவும் மேற்சொல்லப்பட்ட சட்டமுன்வடிவு, சட்டமன்றப் பேரவையில் அது அறிமுகப்படுத்தப்பட்ட தேதியிலிருந்து ஆறு மாதங்களுக்குள் சட்டமாக ஆக்கப்படாதவிடத்து, அந்த அறிக்கையானது மேற்சொன்ன ஆறு மாத கால அளவு முடிவடைந்ததின்பேரில் நடைமுறையில் இல்லாது போதல் வேண்டும் என்று இதிலே சொல்லப்பட்டிருக்கிறது. இந்த வரியை கணக்கில் எடுத்துக் கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவு எப்படியிருந்தாலும் இதை நிறைவேற்றினாலும் கூட ஆறு மாதத்திற்குள் இது சட்டமாக்கப்பட வேண்டும். அந்தக் கால அவகாசத்தினாலாவது எங்கள் கருத்துக்களைப் பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டு, இதை இவ்வாறே இந்த அடிப்படையிலே இந்த இரண்டாம் வரம்புரைக்குட்பட்டு சட்டமாக உருவாக்காமல் இருக்க வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கட்சி சார்பில் கேட்டுக்கொண்டு அமைகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.சி. கருணாகரன் அவர்களுக்கு entry tax பற்றி ஒரு சிறு விளக்கத்தை நான் சொல்ல விரும்புகிறேன். L&T நிறுவனம், கோவையிலே பாலத்தைக் கட்டி, அதன் மூலமாக வசூலிக்கின்ற வரியைப் போன்றது அல்ல இது. உதாரணத்திற்கு இரண்டே இரண்டு பொருட்கள். ஒன்று Air-Conditioner மற்றும் ஒன்று Refrigerator. தமிழகத்திலே உற்பத்தி ஆகாத பொருள்கள், விலை உயர்ந்த பொருட்கள், வசதி படைத்தவர்கள் பயன்படுத்துகிற பொருள்கள் அண்டை மாநிலங்களிலிருந்து இப்படி வருகிறபோது அதற்கு ஒரு வரியை நாம் விதிக்கின்றோம். இப்பொழுது மராட்டிய மாநிலத்திலே, குஜராத் மாநிலத்திலே எல்லாம், Octroi-ம் இருக்கிறது; Entry tax-ம் நடைமுறையிலே இருக்கிறது. இந்த entry-tax-லே உதாரணத்திற்கு நான் ஏற்கெனவே மாண்புமிகு திரு. புகழேந்தி அவர்கள் பேசுகின்றபோது, சொன்னேன். இந்த Air-conditioner-க்கு தமிழகத்திலே நாம் 10 சதவிகிதம் வரி என்று வைத்துக்கொண்டால், அண்டை மாநிலத்திலே இருந்து வருகின்றபோது நாம் அதற்கு entry-tax 12 சதவிகிதம், 13 சதவிகிதம் விதிக்கின்றபோது, அந்த வித்தியாசம் 3 சதவிகிதம், 13 சதவிகிதம் என்பது 10 சதவிகிதமாகிறது. அந்த 3 சதவிகித வரியை மட்டும் அவர்கள் கட்டினால் போதும். This is



2001 செப்டம்பர் 13][திரு. சி. பொன்னையன்]

an additional tax revenue to the State collected from the products that are being used by the rich. அரசு பணக்காரர்கள் பயன்படுத்தக்கூடிய சில பொருள்கள் மீதுதான் இதைக் கொண்டு வருகிறது.

பிற்பகல் 7-05

Octroi என்பது முற்றிலுமே வேறு. Octroi-லே பல இன்னல்கள் உண்டு. அனைத்துப் பொருட்களும் அதிலே வரும். ஒரு பாலத்தைக் கடக்கின்றபோது, அதிலே செல்லுகின்ற அனைத்துப் பொருட்கள் மீதும் Octroi வருகின்றபோது, மக்களுக்கும் வரிச்சுமை, மக்களுக்கும் பளு, வியாபாரிகளுக்கும் பளு, அதைத்தான் புரட்சித் தலைவர் அன்று வேண்டாம் என்று சொன்னார். அந்த முறையிலே புரட்சித் தலைவர் அவர்களின் கொள்கையை ஒட்டி, நாங்கள் Octroi-ஐக் கொண்டு வரவில்லை. நாங்கள் entry tax-ல் the difference of tax தமிழகத்திலே விதிக்கின்ற Sales tax வரியை விட அதிகமான வரிவிதிப்பு இருக்கின்றபோது அது கிட்டத்தட்ட 5 சதவீதம், 10 சதவீதம் சில நேரங்களிலே உயர்வாக இருக்கலாம். அது பணக்காரர்கள் பயன்படுத்துகின்ற பொருள்களுக்கு மட்டுமே என்ற நோக்கோடுதான் tax-ஆகத்தான் வருகின்றதே ஒழிய Octroi என்ற அளவிலே இல்லை.

**Thiru J. Hemachandran:** Eventhough, in the initial stages, you have put the tax only for refrigerators and air-conditioners, there is the danger that it can be implemented to the things which the common man is also using.

**Hon. Thiru C. Ponnaiyyan:** Hon. Deputy speaker, Sir, The Government headed by our Hon. Chief Minister is a Government for the poor.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டத் துறை அமைச்சர் அவர்கள் இங்கே சொன்ன விளக்கம்தான் இப்போது அச்சத்தையும், சந்தேகத்தையும் எழுப்பிக் கொண்டிருப்பதும், விவாதத்திற்குரியதுமாகவும் இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி நமது அரசு கொஞ்சம் ஆழ்ந்து பரிசீலிக்க வேண்டுமென்பது இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய கருத்து. இதன் மீது நான், காலத்தின் அருமை கருதி நீண்ட நேரம் உரையாற்ற விரும்பவில்லை.

இதைக்கூட வேறு வகையிலே பார்க்கிறபோது, இதே பொருட்களுக்கு வரிவிதிப்பு செய்யப்பட்டுத்தான் உள்ளே வருகிறது. மேலும், இன்னொரு

[திரு. வை. சிவபுண்ணியம்] [2001 செப்டம்பர் 13

வரி விதிப்பையும் செய்கிறபோது இரட்டை வரிவிதிப்பு போன்றதொரு தோற்றமும் ஏற்படுவதற்கான வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, இந்த இரண்டு பொருள்கள்தான் என்ற அளவில் உத்தரவாதம் சொல்லப்பட்டாலும்கூட, இதிலே இருக்கிற வாய்ப்பைப் பயன்படுத்தி மேலும் பல பொருட்களை இணைத்துகொள்வதற்கு உரிய வாய்ப்புகள் வரும். சாதாரண எளிய மக்கள் வாங்குகிற பொருட்களுக்கும் அந்த நிலை வந்துவிடுமோ என்ற அச்சம் இதிலே இருக்கிறது. ஆகவே, இதைப்பற்றி ஆழ்ந்து சிந்திப்பது என்பது நல்லது என்கிற காரணத்தினாலே அரசு இதை Select Committee-க்கு அனுப்ப வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலே கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களாலே கொண்டுவரப்பட்ட இந்த வரிவிதிப்பு என்பதை பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே ஆழ்ந்து பார்க்கிற நேரத்திலே இன்னும் பொதுவாகச் சொல்வோம் என்ற நாட்டிலே இருக்கக்கூடிய சட்டங்களைத் திருத்துவது என்பது காலத்தின் கட்டாயம்.

காலச் சூழலுக்கு ஏற்ப, மனிதனுடைய தேவைக்கு ஏற்ப, பொருளாதார முன்னேற்றத்திற்கு ஏற்ப, சமூக மேம்பாட்டுக்கு ஏற்ப சட்டத்தை திருத்துவதிலே தவறில்லை என்று சொன்னாலும்கூட, இந்தச் சட்டத் திருத்தத்தினாலே எவ்வளவு பாதிப்புகள் இருக்கின்றன என்பதை நாம் சிந்தித்துப் பார்க்கக் கூடிய நேரத்திலே இங்கே நுழைவு வரி என்பது தேவையா என்ற கேள்வி கேட்கக்கூடிய நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது.

ஒரு பொருளுக்கு உற்பத்தி வரி, விற்பனை வரி, இப்படி நுழைவு வரி என்று சொல்கின்ற நேரத்தில், அந்தப் பொருளை விற்பனை செய்வதற்கு தயக்கமும், கூடுதலான விற்பனை ஏற்பட முடியாத நிலையிலே வியாபாரிகளுக்கு ஒரு பக்கம் பாதிப்பு, அதேநேரத்திலே நுகர்வோர் இருக்கிறார்களே அவர்கள் விலைவாசி கூடிவிட்ட காரணத்தினாலே இந்தப் பொருள்களை வாங்க முடியாத நிலையிலே அவதியுறக்கூடிய நிலையும் ஏற்படும். ஆகவே, இப்படி விலைவாசி ஏற்றத்திற்கு இது நிச்சயமாக வழிவகுக்கும் என்[illegible] நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்.



2001 செப்டம்பர் 13] [திரு. ஜி.கே. மணி]

இங்கே சொல்லுகின்ற நேரத்திலேகூட, பண்டங்கள், பொருட்கள், உருப்படிகள், சரக்குகள் என்று சொல்லப்படுகிறது. அதேநேரத்திலே இப்படி வரி என்று சொல்வதற்கு அரசு தரப்பிலே சொல்லப்பட்டிருக்கிற காரணம் இன்றைக்கு இருக்கக்கூடிய நிதி நெருக்கடி; நிதியாதாரத்தைப் பெருக்குவது; மக்களுடைய அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்காக இந்த வரிவிதிப்பு என்று சட்டம் இருந்தாலும்கூட, சீர்தூக்கிப் பார்க்கின்ற நேரத்திலே இந்த வரிவிதிப்பு என்பது மிகுந்த பாதிப்பை உண்டாக்கும் என்று நான் இங்கே மிகுந்த, ஆழ்ந்த வருத்தத்தோடு சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

நம்முடைய முதலமைச்சர் அவர்கள் இங்கே ஒரு அறிவிப்பை வெளியிட்டார்கள். இன்று இருக்கக்கூடிய சூழ்நிலைக்கு ஏற்ப, சோதனைச் சாவடிகளையெல்லாம் நாம் அகற்றிக் கொண்டிருக்கிறோம். இப்படிச் சோதனைச் சாவடிகளை அகற்றிக் கொண்டிருக்கின்ற இந்தச் சூழ்நிலையிலே ஒரு பொருள், உள்ளாட்சி அமைப்பிலே வருகின்ற நேரத்திலே நுழைவு வரி என்று சொன்னால், அதனால் யார் பாதிக்கப்படுகின்றார்கள்? சாதாரண பெட்டிக் கடையிலேயிருந்து மிகப் பெரிய பேன்சி ஸ்டோரிலிருந்து பல்வேறு நிலைகளிலே இருக்கக்கூடிய எல்லா நிலைகளிலேயும் விற்கக்கூடிய பண்டங்களுக்கு, பொருள்களுக்கு, சரக்குகளுக்கு இது விலையைக் கூடுதலாக்கச் செய்யும். ஆகவே, இப்படி இருக்கின்ற சூழ்நிலையிலே இந்த வரி விதிப்பு என்பது பொருத்தம் உடையதாக இருக்காது என்பதை நான் மீண்டும் மீண்டும் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

பிற்பகல் 7-10

காலத்தினுடைய அருமை கருதி நான் அதிக நேரம் செலவழிக்க விரும்பாமல், எல்லா வகையிலும் சாதாரண மக்களுக்கு, ஏழை எளிய மக்களுக்கு, அடித்தட்டு மக்களுக்கு, உழைக்கக்கூடிய மக்களுக்கு, இந்த வரி விதிப்பு மிகுந்த பாதிப்பை உருவாக்கும் என்ற காரணத்தாலே, எடுத்த எடுப்பிலே அவசரக் கோலத்திலே இந்தச் சட்டத் திருத்தத்தை ஏற்றுக்கொள்வது, நடைமுறைப்படுத்த முயற்சிப்பது என்பது பொருத்தம் உடையதாக இருக்காது என்பதை நான் மிகுந்த வேதனையுடன் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, எப்படி இருந்தாலும்கூட, அவசரக்கோலத்திலே இந்தச் சட்டத் திருத்தத்தை நிறைவேற்றாமல் சற்று கால அவகாசம் கொடுத்து, ஆய்வு செய்து இதை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். ஆகவே, இதை ஆய்வு செய்யக்கூடிய வகையிலே Select Committee-க்கு

[திரு. ஜி.கே. மணி] [2001 செப்டம்பர் 13

அனுப்ப வேண்டும். அதேநேரத்தில் இன்று நிறைவேற்றாமல் இதை தற்காலிகமாக நிறுத்தி வைக்க வேண்டும் என்ற என்னுடைய வேண்டுகோளையும் வைத்து பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே இந்தச் சட்டத் திருத்தம் ஏற்புடையதாக இல்லை என்பதாலே இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அமைகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. அப்துல் லத்தீப்.

**திரு. ம. அப்துல் லத்தீப்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவுகள் குறித்து விரிவாக மாண்புமிகு உறுப்பினர்கள் தங்களுடைய கருத்துக்களைச் சொல்லி இருக்கிறார்கள். நான் அதிலே விரிவாகச் செல்ல விரும்பவில்லை.

My only request, submission to the Hon. Minister and the Government is that the implications arising from this new taxation move should be assessed in a very calm atmosphere. Another thing is the incidence of shiftability which is higher in the State. You cannot deny that the incidence of shiftability is very high. Another thing is that the incident of official harassment is also very high. In view of this it may earn some unpopularity to the Government which I do not want. Therefore, my request is—as has been already requested by the Hon. Members is it not necessary and appropriate that the Bill be referred to the Select Committee, to cull out the implications arising from the new move?. So my request is that kindly consider whether it can be referred to the Select Committee. With these words, I take my seat.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நுழைவு வரி என்பது நமது நாட்டுக்குப் புதியது அல்ல. இப்போதும் நமது அண்டை மாநிலங்களில் நுழைவு வரி விதிக்கப்பட்டு வருகின்றது. கர்நாடகாவில் சுமார் 130 பொருட்கள் மீது நுழைவு வரி விதிக்கப்படுகின்றது. கேரளாவில் சுமார் 24 பொருட்கள் மீது நுழைவு வரி விதிக்கப்படுகின்றது. ஆந்திராவில் 7 பொருட்கள் மீது நுழைவு வரி விதிக்கப்படுகின்றது. மகாராஷ்டிராவில் நுழைவு வரியுடன் சேர்த்து Octroi வரியும் விதிக்கப்பட்டு வருகின்றது.

இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தின் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த நுழைவு வரி விதிப்பை திராவிட முன்னேற்றக் கழகம் எதிர்க்கிறது என்று கூறினார்கள். ஆனால்,



2001 செப்டம்பர் 13] [திரு. சி.வி. சண்முகம்]

அவர்கள் ஆட்சிக் காலத்தில், 1990 ஆம் ஆண்டில் தமிழ்நாடு மோட்டார் வாகன நுழைவு வரிச் சட்டத்தை அவர்கள்தான் கொண்டுவந்தார்கள். அந்த மோட்டார் வாகனச் சட்டத்திற்கு அவர்கள் கூறிய காரணம், பணக்காரர்கள் வாங்குகிற பொருட்களுக்கு நாங்கள் நுழைவு வரி விதிக்கிறோம் என்று குறிப்பிட்டார்கள். இன்று 10 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கும், 5 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்குகிறவர்களுக்கும் Two Wheeler என்பது சாதாரண, அத்தியாவசியமான பொருளாக ஆகிவிட்டது. அவர்கள் கண்ணுக்கு இந்த 10 ஆயிரம், 5 ஆயிரம் சம்பளம் வாங்குகிறவர்கள் கோடீஸ்வரர்களாகத் தெரிகிறார்கள் போல் தெரிகிறது. அவர்கள் எடுத்துவந்தால் அது நல்ல சட்டம். அவர்கள் எடுத்து வந்த சட்டத்தை முன்மாதிரியாக வைத்துத்தான் நாங்கள் பணக்காரர்கள் உபயோகிக்கின்ற Air-conditioner-களுக்கு நுழைவு வரி விதித்துள்ளோம். Air-conditioner-களை குடிசை வீடுகளில் இருப்பவர்கள் பயன்படுத்துவதில்லை. Fridge-க்கும் இந்த நுழைவு வரியைக் கொண்டு வந்திருக்கிறோம். இதனுடைய நோக்கம் என்னவென்றால், சில மாநிலங்களிலேயும், யூனியன் பிரதேசங்களிலும் அளித்துள்ள வரிச் சலுகைகளினால் பல பொருட்களின் வரி விகிதத்தில் தமிழ்நாட்டுக்கும் அவற்றுக்கும் மிகுந்த வித்தியாசம் காணப்படுகிறது. பல வணிகர்கள் நுகர்வோருக்கு விற்பனை செய்வதற்காக வெளி மாநிலங்களிலிருந்து மற்றும் யூனியன் பிரதேசங்களிலிருந்து நுகர்வோர் பெயரிலேயே அந்தப் பொருட்களை நேரடிக் கொள்முதல் செய்து, தரகு வியாபாரம் செய்வதன் மூலம், நமது மாநிலத்திற்குக் கிடைக்க வேண்டிய வருவாய் கிடைக்காமல் இழப்பு ஏற்படுகிறது.

பிற்பகல் 7-15

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

இதைக் கருத்தில் கொண்டுதான், இந்த நுழைவு வரிச் சட்டத்தை இந்த அவையின் மூலமாகக் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, இந்த நுழைவு வரி மூலம் நமது மாநிலத்திற்கு ஏற்பட்டிருக்கின்ற வருவாய் இழப்பை ஈடு செய்து, மேலும் கூடுதல் வருவாயைப் பெற்று, அந்த நிதி ஆதாயத்தின் மூலம், வணிகம் பெருகத் தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் சாலை வசதிகளைச் செய்வதற்கு இந்த நிதியாதாரம் பயன்படும் என்பதைக் கூறிக்கொண்டு, இந்தச் சட்டமுன்வடிவை மாண்புமிகு சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் நிறைவேற்றித் தருமாறுக் கேட்டுக் கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப் பெறுகிறது.

பிரிவுகள் 2 முதல் 15 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 15 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டுமென்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் அறிவிப்பை வெளியிட அனுமதி கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** கிராமப் பகுதிகளிலே வாழ்கின்ற சாதாரண விவசாயக் குடும்பங்களைச் சேர்ந்த தாய்மார்கள் வீட்டிலேயே தயாரித்து, அருகிலே உள்ள கிராமச் சந்தைகளிலே விற்பனை செய்து வரும், வணிகச் சின்னமிடாத வெண்ணெய்க்கு வரவு-செலவுத் திட்டத்தில் 8 விழுக்காடு வரி விதிப்பு செய்யப்பட்டது. இந்த வெண்ணெய் பெரும்பாலும் நெய் உற்பத்திக்காக அனுப்பப்படுகிறது. இந்த வரியினால் வெண்ணெய் மீது 8 விழுக்காடு வரியும், நெய் மீது ஏற்கெனவே இருந்த 8 விழுக்காடு வரியும் சேருவதால், இத்தொழில் பாதிக்கப்படுவதாக கோரிக்கைகள் வந்துள்ளன.

குடிசைத் தொழிலான இந்தத் தொழிலை ஊக்குவிப்பதற்காக இந்த அரசு தற்போது நெய் உற்பத்திக்காக அனுப்பப்படுகின்ற வணிகச் சின்னமிடப்படாத கிராமப்புற ஏழை மற்றும் சிறு விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்த தாய்மார்கள் தயாரிக்கும் வெண்ணெயின்மீது விதிக்கப்பட்ட விற்பனை வரியை இரத்து செய்ய முடிவு செய்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) நெய் மீதான 8 விழுக்காடு வரி தொடர்ந்து இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களே, அந்தச் சட்டமுன்வடிவு இன்னும் முடியவில்லை. சட்டமுன்வடிவைச் சட்டமாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன் என்று சொல்லுங்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பரப்பிடங்களுக்குள் பொருள்கள் கொண்டு வருவதன் மீதான வரிச் சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 13/2001) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஏ) தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு 2001.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண். 14/2001), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண்.14/2001) * ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.@

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. நன்மாறன் (குறுக்கீடு) இல்லை, நீங்கள் உட்காருங்கள், இந்த இரண்டையும் சேர்த்து எடுத்து விடுவோம். கருத்துக் கூற விரும்புகிற உறுப்பினர்கள் இரண்டு சட்டமுன்வடிவுகள் மீதும் கூறலாம். திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், கொஞ்சம் சுருக்கமாகப் பேசுங்கள்.

*பிற்பகல் 7-20*

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூடுதல் விற்பனை வரி திருத்தச் சட்டமுன்வடிவை நாங்கள் ஆரம்ப நிலையிலேயே எதிர்க்கிறோம். இதற்குக் காரணம், இந்த அரசாங்கத்திற்கு அதிகப்படியான வரியை, விற்பனை வரி மூலமாகத்தான் நாம் வாங்கிக் கொண்டிருக்கிறோம். இந்த விற்பனை வரியை அதிகமாகக் கட்டுகிற இந்த வியாபாரிகளை, "ஏண்டா, அதிகமாகக் கட்டுகிறீர்கள்" என்று சொல்லி, அதிகப்படியான வரி போடுகின்ற

@ 12-9-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.





வேலையைத்தான் இந்த அரசாங்கம் செய்திருக்கிறது. விற்பனை வரியை அதிகமாகக் கட்டுகிற அந்த வியாபாரிகளைப் பாராட்டுவதை விட்டுவிட்டு, இன்றைக்கு இந்த அரசாங்கம் அவர்கள்மீது புதிதாகக் கூடுதல் வரியைப் போட்டிருக்கிறார்கள். இது சென்ற எங்களது ஆட்சிக் காலத்திலே 25 கோடி ரூபாய்க்கு அதிகமாக இருந்தால்தான் அதற்கு அந்த வரி போட்டிருந்தார்கள். ஆனால், இப்போது இந்த ஆட்சியிலே 10 கோடி ரூபாயிலிருந்து 25 கோடி ரூபாய் வரைக்கும் வியாபாரம் செய்கிறவர்கள் ஒரு சதவிகித வரியும், 25 கோடி ரூபாய்க்கு மேலே வியாபாரம் செய்கிறவர்கள் 1½ சதவிகித வரியும் கட்ட வேண்டுமென்று சொல்லி, இப்போது நீங்கள் இந்தச் சட்டத்தைப் புதிதாகக் கொண்டு வந்திருக்கிறீர்கள். அப்படிக் கட்டுகிற 1 சதவிகித, 1½ சதவிகித வரியானது, வியாபாரிகள் கையிலே இருந்துதான் கட்டவேண்டும். வியாபாரிகள் கையிலேயிருந்து கட்டுகிற நேரத்திலே, இந்தக் கணக்குகள் ஒழுங்காக வருமா என்பதை நீங்கள் எண்ணிப் பார்க்க வேண்டும்.

வரி விதிப்பை எளிதாக்கிய காரணத்தால்தான்; வரிவிதிப்பு எளிதாக இருக்கிற காரணத்தால், இப்போது வரிகள் மூலம் வருமானம் இந்த அரசாங்கத்திற்கு அதிகமாகக் கிடைத்துக் கொண்டிருக்கிறது. இப்போது வரி விதிப்பைக் கடுமையாக்குகின்ற நேரத்திலே நமக்கு வர வேண்டிய வரி நிச்சயமாகக் குறையும் என்பதை இந்த அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது மத்திய அரசாங்கத்தைப் பார்த்தோம் என்று சொன்னால், இன்றைக்கு இருக்கிற Income-Tax Schedule-ஐயெல்லாம் குறைத்துக் கொண்டு வருகிறார்கள். இப்போது—accounts—கணக்கு சரியாக வரவேண்டும். அந்தக் கணக்கின் மூலமாகச் சரியான முறையிலே வரி வர வேண்டும் என்ற எண்ணத்தோடு, மத்திய அரசாங்கம் Income-Tax Schedule-ஐயெல்லாம் இப்போது குறைத்துக் கொண்டு வருகின்ற நேரத்தில், நாம் அதிகமாக வருமானம் வருகிற அந்த விற்பனை வரியை ஏன் நீங்கள் அதிகமாகக் கட்டுகிறீர்கள் என்று சொல்லி, அவர்களுக்கு fine போடுகிற வேலையை இந்த அரசாங்கம் எடுத்திருக்கிறது. அது வேண்டாம் என்பதை இந்த நேரத்தில் அரசாங்கத்தினுடைய கவனத்திற்கு நான் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல், இந்த 1 சதவிகிதம், 1½ சதவிகிதம் வரியானது, வாங்குபவர்களிடமிருந்து வாங்குகிற வரி அல்ல. யார் வியாபாரம் செய்கிறார்களோ, அவர்களுடைய பணத்திலேயிருந்துதான் அந்த வரியைக்

[திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்] [2001 செப்டம்பர் 13

கட்ட வேண்டிய அந்தச் சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, வருகிற கணக்குகள் சரியாக வராமல் போகக்கூடிய சூழ்நிலையெல்லாம் தமிழகத்திலே இனிமேல் வரும். அதையெல்லாம் மனதிலே வைத்துக் கொண்டு, எங்களுடைய ஆட்சிக் காலத்திலே செய்ததைப்போல, நீங்கள் 25 கோடி ரூபாய்க்கு மேலே இருந்தால்தான் என்று சொல்லி, மறுபடியும் இந்தச் சட்டத்தை நீங்கள் திருத்திக் கொடுக்கவேண்டும் என்று, நான் இங்கே பணிவன்போடு சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இப்போது இந்த ஆட்சியிலே, இங்கே இருக்கிற நம்முடைய அவை முன்னவருக்கும், நம்முடைய வணிக வரித் துறை அமைச்சருக்கும் நான் பணிவன்போடு சொல்லிக் கொள்வது **

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள், இதையெல்லாம் கொஞ்சம் ஓய்வான நேரத்திலே, மற்ற நேரத்திலே பேசலாம். சட்டமுன்வடிவிலே மட்டும் சொல்லுங்கள். வரி என்ன என்பதை மட்டும் சொல்லுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே..... (கூச்சல்-குழப்பம்)**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் பேசுங்கள். (கூச்சல்-குழப்பம்)

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.....

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டமுன்வடிவிலே பேசுங்கள். சும்மா போட்டு, இதைப்போட்டு, எதற்கு? திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:** இதிலே என்ன controversy இருக்கிறது. வரியைக் குறைக்கச் சொன்னால்.....(கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சட்டமுன்வடிவின் மேலே ஏதாவது கருத்துச் சொல்லட்டும். ** அது முறையல்ல, வேண்டாம். திரு. ஞானசேகரன் பேசட்டும். (குறுக்கீடு) உட்காருங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றன.



2001 செப்டம்பர் 13]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு கொண்டு வந்திருக்கிற இந்த இரண்டு... (கூச்சல்-குழப்பம்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். அவர்கள், சட்டமுன்வடிவின்மேல் பேசியது மட்டும் அவைக் குறிப்பில் இருக்கும். அதற்குப் பிறகு ஆரம்பித்தவை அவைக் குறிப்பிலே இருக்காது.

பிற்பகல் 7-25

**திரு. இ. புகழேந்தி:** அவர் எதிர்ப்பைச் சொல்லி முடித்துவிடட்டும் ...

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த 1939 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கை வரிச் சட்டத்தை நிறைவேற்றுவதற்கான சட்டமுன்வடிவை தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மிகவும் பணக்காரர்கள் மட்டுமே உபயோகப்படுத்தக்கூடிய பில்லியர்ட்ஸ், ஸ்நூக்கர்ஸ், பவுலிங் போன்ற விளையாட்டுகளுக்கு 20 சதவிகித கேளிக்கை வரியை விதித்து நீங்கள் கொண்டு வந்திருக்கின்ற இந்தச் சட்டம் அரசுக்கு வருவாயைக் கொண்டுவரும் என்பதிலே ஐயமில்லை.

அதேநேரத்தில் அடுத்து, 1970 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரிச் சட்டத்தை மேலும் திருத்துவதற்கான சட்டமுன்வடிவை இப்போது நீங்கள் நிறைவேற்றாமல் அப்படியே விட்டு வைப்பதுதான் நலம். ஏற்கெனவே இருக்கக்கூடிய விதிமுறைகளின்படியே வியாபாரிகள் அதிலேயே கொஞ்சம் குளறுபடிகள் எல்லாம் செய்து, வரி கட்டாத சூழ்நிலை இருக்கின்றபோது, 10 கோடி, 25 கோடிக்கு அவர்கள் வருமானத்தை காட்டக்கூடிய நிலையெல்லாம் நீங்கள் ஏற்படுத்துவீர்கள் என்று சொன்னால் நிச்சயமாக அவர்கள் கணக்கைக் காட்டப் போவது இல்லை. தவறான கணக்கைக் காட்டி அந்த limit வராமலேயே அவர்கள் பார்த்துக் கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பும் இருக்கிறது. ஆகவே, இதை நீங்கள் கைவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் ஏற்கெனவே, இந்த அவையிலே முன்வைத்திருக்கிற கோரிக்கையான வெண்ணெய்க்கு இருந்த வரியைத் தள்ளுபடி செய்ததற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும் நம்முடைய அமைச்சர் பெருமக்களுக்கும் நான் என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினை இங்கே காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல சில கோரிக்கைகள். இந்தப் பிஸ்கெட்டிற்காகவும் ஒரு கோரிக்கையினை வைத்திருந்தேன். கிராமப்புற பெண் மணிகள் குடிசைத் தொழிலாகச் செய்து, பெட்டிக்கடை....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், எல்லாவற்றிலும் பேசியிருக்கின்றீர்களே, விடுங்கள், அதோடு விடுங்கள்.

**திரு. சி.ஞானசேகரன்:** அதேபோன்று அந்தப் பிஸ் கட்டிற்கு, ஓர் அறிவிப்பினையும், அதேபோல, tourism அதிலே ஏற்கெனவே இந்த விடுதிகளுக்கு நீங்கள் season-லே போடக்கூடிய அதே வரியை off season-லும் போட்டு, சுற்றுலாவையே இப்போது ஒழித்துக் கொண்டிருக்கக்கூடிய நிலையை மாற்றியமைப்பதற்கு, அதையும் நீங்கள் மாற்றி அமைத்து அதற்கும் அறிவிப்பினைச் செய்ய வேண்டுமென்று அமைச்சரைக் கேட்டு விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேளிக்கை வரி குறித்து, மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சரவர்கள் முன்மொழிந்து இருப்பதை என்னுடைய கட்சியின் சார்பிலே வரவேற்கிறேன்.

அதேசமயத்தில் கேபிள் டி.வி. என்பது ஒரு பெரிய தொழிலாக இன்றைக்கு மாறி வருகின்றது. அதனுடைய ஆப்பரேட்டர்களிடமிருந்தும், உரிமையாளர்களிடமிருந்தும், பெற வேண்டிய தொகையை அவர்களோடு பேசி ஒரு சாத்தியமான தொகையைப் பெற்று அவர்களுக்குக் கிடைக்க வேண்டிய நன்மைக்கும் இந்த அரசு வழிவகை காண வேண்டுமென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

வெண்ணெய்க்கு விதிக்கப்பட்டிருந்த வரிக்கு விலக்கு செய்து இருப்பதை மனப்பூர்வமாக ஈரோடு மக்களின் சார்பாக நான் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) இதோடு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்த இந்த வரி விதிப்பு என்பது வணிகர் பெருமக்களுக்கு மிகப் பெரிய சுமையை மேலும் கூடுதலாகக் கொடுக்க வாய்ப்பிருக்கிறது.





இன்னும் சொல்லவேண்டுமென்றால் ஏற்கெனவே, அதிலே வரி பாக்கி செலுத்தாதவர்கள் நிறைய பேர் இருக்கிறார்கள். அது மாத்திரமல்ல. அந்த வரிக் கணக்கை முறைப்படிக் காட்டாதவர்களும் நிறைய பேர் இருந்துகொண்டிருக்கிறார்கள். இந்த வரி விதிப்பினாலே வரக்கூடிய வருமானத்தை ஈடுகட்டுவோம் என்று சொன்னால் முறையாகக் கணக்குப் பார்த்தாலே இந்த வரி வசூலிலே செய்யக்கூடிய ஊழலைத் தடுப்போம் என்று சொன்னால், அதுவே இதைவிடக் கூடுதலாக வருமானம் கிடைப்பதற்கு வாய்ப்பாக இருக்கும்.

ஏற்கெனவே, வணிகர் சங்கக் கூட்டத்திற்கு எங்களையெல்லாம் அழைத்திருந்தார்கள். அப்போது நாங்களும் சென்றிருந்தோம். வணிகர் சங்கத்தின் சார்பிலே கேட்டுக்கொண்டது எல்லாம், எங்களுக்கு மேலும், மேலும் சுமையைக் கூடுதலாக்காமல் எங்களுடைய நிலைகளை உணர்ந்து, நீங்கள் சட்டமன்றத்திலே குரல் கொடுக்க வேண்டுமென்றெல்லாம் சொல்லி இருக்கிறார்கள். அந்தக் காரணத்தினாலே அந்த வரி விதிப்பு என்பதை நீங்கள் தயவு செய்து மறுபரிசீலனை செய்து பழைய நிலையையே தொடரவேண்டுமென்றும் அதற்கான வழிவகைகளை மேற்கொள்ள வேண்டுமென்றும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

கேளிக்கை வரி பற்றி சொல்லியிருக்கிறீர்கள். இது ஆடம்பரவாசிகளுக்காக மாநகரத்திலே இருக்கக்கூடிய மனமகிழ்வுக்காக இருக்கக்கூடிய, அவர்களுக்காக விதிக்கக்கூடிய வரி, ஆகவே, இதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே, பாட்டாளிகள் என்ற காரணத்தினாலே வரவேற்று, வெண்ணெய்க்கு நீங்கள் வரி விலக்களித்திருக்கிறீர்கள் அதையும் வரவேற்று, நன்றியோடு பாராட்டி, நம்முடைய திரு. ஞானசேகரன் அவர்கள் சொன்னது மாதிரி அந்த பிஸ்கெட் பிரச்சினையை நீங்கள் நிச்சயமாகத் தீர்க்க வேண்டும் என்பதையும் பாட்டாளி மக்கள் கட்சி சார்பிலே கோரிக்கையாக வைத்து அமருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித்துறை அமைச்சர் அவர்கள்.

*பிற்பகல் 7-30*

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே பேசிய மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்களும், மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. என். நன்மாறன் அவர்களும், மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. ஜி.கே. மணி அவர்களும்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஒரு நாளைக்கு அவரையும் இங்கே உட்கார வைப்போம். (சிரிப்பு)

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மன்னிக்கவும். மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்களும் வைத்த வேண்டுகோளை, இதயதெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பரிசீலனை செய்து, பட்டிதொட்டிகளிலே வாழும் ஏழையெளிய மக்கள் வாங்கி உண்ணும் சாதாரண பிஸ்கெட்டுகள், இரண்டாயிரத்திற்கு மேற்பட்ட பெண்களால், உசிலம்பட்டி பகுதியிலே தயாரிக்கப்பட்டு வருகின்றன. இந்தத் தொழில், குடிசைத் தொழிலாகவும், சிறு குறு தொழிலாகவும் நடைபெற்று வருகிறது. இந்த பிஸ்கெட்டுகள், பெரும்பாலும் பட்டி தொட்டிகளிலே உள்ள பெட்டிக் கடைகளிலே விற்பனையாகி வருகின்றன. இந்தச் சிறு குறு தொழிலைப் பாதுகாக்கும் வகையில் வணிகச் சின்னம் இடப்பட்டு, ஆனால் பதிவு செய்யப்படாத இந்தப் பிஸ்கெட்டுகளின் மீதான விற்பனை வரியை 12 விழுக்காட்டிலிருந்து, 8 விழுக்காடாகக் குறைக்க, அரசு முடிவெடுத்துள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி) வணிகச் சின்னம் இடப்படாத பிஸ்கெட்டுகளின் மீதான வரி 4 விழுக்காடாகத் தொடர்ந்து இருக்கும். வணிகச் சின்னம் இடப்பட்ட, ஆனால் பதிவு செய்யப்படாத இறக்குமதி செய்யப்படும் பிஸ்கெட்டுகளின் மீதான வரி, தொடர்ந்து 12 விழுக்காடாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோன்று மாண்புமிகு பேரவை உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன் அவர்கள் கூறியதைப் போலவும், மாண்புமிகு பேரவையினுடைய உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் கூறியதைப் போலவும், தமிழகத்தில் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையை அதிகரிக்கவும், அதன்மூலம் தமிழகத்திற்கு அதிக வருவாயை ஈட்டித் தருவதன் பொருட்டும், தற்போது நடைமுறையில் உள்ள ஆடம்பரப் பொருட்களின் மீதான வரி விதிப்பு published tariff என்ற முறையை மாற்றி அறிவிக்கப்பட்ட கட்டணத்தின் அடிப்படையில் வரி விதிப்புக்குப் பதிலாக actual tariff எனப்படும் வசூலிக்கப்படுகிற கட்டணத்தின் அடிப்படையிலே வரி விதிக்க வேண்டுமென்று அவையில் தெரிவிக்கப்பட்டது. இந்தக் கோரிக்கையை ஏற்று, 10 நபர்களுக்கு மேல் குழுவாக ஓட்டல்களில் முன்பதிவு செய்பவர்களுக்கு, ஓட்டல்களில் அறிவிக்கப்பட்ட கட்டணம் published tariff நாள் ஒன்றுக்கு ரூபாய் ஆயிரத்திற்கு மேல் இருந்தால், வசூலிக்கப்படும் கட்டணத்தின் மீது actual tariff வரி விதிக்கப்படும் என்பதை இங்கே தெரிவித்துக்கொள்கிறேன்.





இங்கே பேசிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்தவர்கள், கூடுதல் வரியினால், அதிக வரியை நாங்கள் ஈட்டினோம் என்று கூறினார்கள். அவர்கள் 10 இலட்சத்தில் இருந்து, இந்தக் கூடுதல் மொத்த வரியை, ரூ.100 கோடியாக உயர்த்தி, பிறகு அதை ரூ.25 கோடியாகக் குறைத்தார்கள். எதற்காக ரூ.10 இலட்சத்திலிருந்து ரூ.100 கோடியாக உயர்த்தி, பிறகு அதை ரூ.25 கோடியாகக் குறைத்தார்கள் என்பதை அவர்கள்தான் தெரிவிக்க வேண்டும். அதனால் யார் என்ன இலாபம் அடைந்தார்களோ அவர்கள்தான் தெரிவிக்க வேண்டும். நாங்கள் அதிக வரியை ஈட்டித் தந்ததாகக் கூறுகிறார்கள். ஆனால், அவர்கள் அந்தக் காலகட்டத்தில் போட்டதால் ஏற்பட்ட வரி இழப்பு, 10 இலட்சத்திலிருந்து 100 கோடியாக உயர்த்தி அதனால் தமிழகத்திற்கு ஏற்பட்ட வரி இழப்பு, 130 கோடி ரூபாய் என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

எனவே, இந்தச் சட்டமுன்வடிவுகளை ஏற்று, அதைச் சட்டமாக்கித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறுகிறது.

பிரிவுகள் 2 முதல் 7 வரை திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 7 வரை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

[பேரவைத் தலைவர்] [2001 செப்டம்பர் 13

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கேளிக்கைகள் வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 14/2001) நிறைவேற்றப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

*பிற்பகல் 7-35*

## (ஏ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2001), மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.



2001 செப்டம்பர் 13]

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2001) @ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகிறது.

பிரிவு 2, திருத்தங்கள் இல்லை.

பிரிவு 2, சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

---

@ 12-9-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

*"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/2001) நிறைவேற்றப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

## (ஐ) தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2001

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2001), மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,





*"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 6/2001)@ ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"*

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சி. ஞானசேகரன், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமுன்வடிவைத் தமிழ் மாநில காங்கிரஸ் சார்பாக வரவேற்கிற நான் சில திருத்தங்களை இதிலே கொடுக்க விழைகிறேன். ஏற்கெனவே, இந்த அவையில் விரிவாக நான் இதுகுறித்து என்னுடைய கருத்துகளை எடுத்து வைத்திருக்கிறேன். நம்முடைய அரசினுடைய கணக்குப்படியே விதிமுறைகளை மீறி சென்னை சுற்றுப்புறப் பகுதிகளிலே கட்டப்பட்டிருக்கிற வீடுகள் சுமார் 3 இலட்சம் என்று கொடுக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் ஏற்கெனவே அரசு அறிவித்த திட்டத்தின்கீழ் இந்த வரைமுறைப்படுத்துகிற திட்டத்தைப் பயன்படுத்தி தங்களுடைய வீடுகளை regularise செய்துகொள்வதற்காக வந்திருக்கிற மனுக்களோ 10,832 தான். இந்த 10,832 மனுக்கள் மூலம் நம்முடைய அரசுக்குக் கிடைத்திருக்கிற வருவாய் சுமார் 100 கோடியாக இருக்கும். உண்மையில் இந்த 3 இலட்சத்திற்கும் நீங்கள் கணக்குப் போட்டீர்கள் என்று சொன்னால் சுமார் 3,000 கோடி ரூபாய்க்கு மேலே நிச்சயமாக இதிலே வருவாய் நமக்கு வந்தாக வேண்டும். ஆனால் எல்லோருமே இதற்கு மனு போடாவிட்டாலும்கூட ஒரு பாதி பேர் கொடுத்தாலும்கூட நிச்சயமாக ஒரு பெருந்தொகை இதிலே வர வேண்டும். ஆனால் நம்முடைய அரசு ஏற்கெனவே அறிவித்திருப்பது 10%— இருக்கக்கூடிய வரி விதிப்பிலிருந்து இப்போது நீங்கள் போட்டிருக்கக்கூடிய இந்தக் கட்டணத்திலிருந்து 10%-ஐக் குறைப்பதாக இப்போது அறிவித்திருக்கிறீர்கள்.

ஆந்திராவிலே இருக்கக்கூடிய மாடலை எடுத்துச் சொல்லி அதன்படி நீங்கள் Sq.ft-க்கு இவ்வளவு, 50 ரூபாய் என்றெல்லாம் நீங்கள் விதித்தீர்கள் என்று சொன்னால் மிகச் சுலபமாக விதிகளை மீறி கட்டடத்தைக் கட்டியிருக்கிறவர்கள் மனுச் செய்து தங்களுடைய வீடுகளை வரைமுறைப்படுத்திக்கொள்ளலாம் என்று முன்வருவார்கள். வெறும் 10%-ஐ நீங்கள் குறைத்தீர்கள் என்று சொன்னால் இருக்கிற 3 இலட்சத்திற்கு

---

@ 8-9-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

[திரு. சி. ஞானசேகரன்] [2001 செப்டம்பர் 13

நமக்கு வந்திருக்கிற மனுக்களே 10,832. 10%-ஐ குறைத்தால் இன்னும் ஒரு 10,000 மனுக்கள் வரும் உங்களுக்கு. அவ்வளவுதான். 3 இலட்சம் பேரும் நிச்சயமாக மனுச் செய்து தங்களுடைய வீடுகளை வரைமுறை செய்து கொள்வதற்காக வரவே மாட்டார்கள். ஏனென்று சொன்னால் நம்முடைய அரசே, அதாவது இந்தச் சட்டம் கொண்டுவருவதற்கான நோக்க, காரண விளக்க உரையாற்றுகிறபோதே நாம் வீடுகளை இடிக்கப்போவதில்லை. அது—இடிப்பது—அவர்களுக்குச் சங்கடத்தை உருவாக்கும் என்றெல்லாம் சொல்லியிருப்பதால் இனி இவர்கள் இடிக்கத்தான் போவதில்லை; எனவே நாம் நிச்சயமாக இதற்கு ஏன் கட்ட வேண்டும் என்று கூட அவர்கள் வாளா இருந்து விடுவார்கள். ஆகவே, இடிக்கப்போவது இல்லை என்று முடிவு எடுத்துவிட்ட நீங்கள் 50%-ஐ குறைத்தீர்கள் என்று சொன்னால் நிச்சயமாக எல்லோருமே இதற்கு மனு செய்து தங்களுடைய வீடுகளை வரைமுறை செய்துகொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கும். அந்த வாய்ப்பை எல்லோருக்கும் நீங்கள் கொடுக்க வேண்டும்.

இப்போது நீங்கள் கொடுத்திருக்கிற காலக்கெடுவைக் கொஞ்சம் நீட்டிக் கொடுத்து ஒரு ceiling வையுங்கள். ஒரு cut-off date வையுங்கள். இனி யாராவது விதிமுறைகளை மீறிக் கட்டடம் கட்டினால் நிச்சயமாக நாங்கள் கடுமையான தண்டனை கொடுப்போம்; நாங்கள் உயர்ந்த கட்டணத்தை வசூல் செய்வோம் என்றெல்லாம் நீங்கள் கண்டிப்போடு சொல்லிவிடலாம். ஒரு cut-off date-ஐ கொடுத்துவிட்டு அதற்குள் இருக்கிறவர்கள் யாரெல்லாம் விதிமுறையை மீறிக் கட்டியிருக்கிறார்களோ அவர்களுக்கு 50% ஆகக் குறைக்க அரசு ஆவன செய்ய வேண்டும். அப்பொழுதுதான் அரசு எதிர்பார்க்கிற நிதி இந்தத் திட்டத்திலே கிடைக்கும்.

பட்டா இல்லாமல் North Madras முழுவதும் இருக்கக்கூடியவர்கள் எல்லாம் இதிலே மனுச் செய்ய முடியாமல் இருக்கிறார்கள். நத்தம் புறம்போக்கில் வீடு கட்டியவர்கள்தான் ஏராளம் அந்தப் பகுதியிலே. அவர்களுடைய வீடுகளையும் வரைமுறை செய்வது— ஏனென்றால் பட்டா இல்லாத காரணத்தினாலே அவர்கள் அந்த விதிமுறைப்படி மனுச் செய்ய முடியாது. ஆகவே அவர்களும் எப்படியாவது மனு செய்து அவர்களுடைய வீடுகளை வரைமுறை செய்துகொள்வதற்கு North Madras-ல் இருக்கக்கூடியவர்களுக்கும் ஒரு திட்டத்தைத் தீட்டிக் கொடுத்து அவர்களுடைய வீடுகளையும் வரைமுறை செய்வதற்கு நீங்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டு அமர்கிறேன்.



2001 செப்டம்பர் 13]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *திரு கே. ஆறுமுகம்.*

**திரு. கே. ஆறுமுகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் சட்டமுன்வடிவை நிறைவேற்றுவதற்காக இந்த அவையில் நடைபெற்றுக்கொண்டிருக்கிற இந்த விவாதத்திலே என்னைப் பேச அனுமதித்ததற்கு முதலிலே நன்றி தெரிவித்துக்கொள்கிறேன்.*

ஊரமைப்புச் சட்டத்தின்கீழே வந்திருக்கிற நகரமைப்புச் சட்டத்திலே நடைமுறையை அமல்படுத்தாமல், அனுமதி வழங்காமல் சென்னை மாநகரம் போன்ற நகரங்களிலே இன்றைக்கு 4 இலட்சத்திற்கும் மேலான கட்டடங்கள் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அரசுக் குறிப்பேட்டிலே 3 இலட்சம் என்று குறிப்பிட்டிருந்தாலும் 4 லட்சத்திற்கும் மேலான கட்டடங்கள் இருந்துகொண்டிருக்கின்றன. அதிலே காலக்கெடு இப்போது 3 மாதத்திற்கு மட்டும் கொடுத்திருக்கிறார்கள். கொடுத்திருக்கிற அந்தக் காலக்கெடுவை இன்னும் குறைந்தது 6 மாதமாவது நீட்டிக்க வேண்டும். ஏனென்று சொன்னால், இந்தக் காலக்கெடுவை நீட்டித்தால்தான் அதிகமான மனுக்களை இப்போது அந்தப் பகுதியிலே இருக்கிற மக்கள் போடுவதற்கு வாய்ப்பு இருக்கும்.

பிற்பகல் 7-40

அதேபோன்று, இப்போது கட்டணம் மிக அதிகமாக இருக்கிறது என்று பல தரப்பிலேயிருந்து கருத்துகள் நிலவுகின்றன. சாதாரணமாகவே, ஆடி மாதத்திலே சேலை வியாபாரிகளும் மற்ற வியாபாரிகளும் ஆடிக் கழிவு என்றும், ஜனவரி மாதத்திலே பல்வேறு பொருட்களுக்குக் கழிவு உண்டு என்றும் சொல்லுகிற சமயத்திலே நாம் குறைந்தது 50 சதவீதத்திற்கு மேலாகவே இதற்கு அந்த வரி விகிதத்தைக் குறைக்க வேண்டும்.

நம்முடைய அரசாங்கம் இப்போது 10 சதவீதம் மட்டுமே குறைப்பதாக அறிவித்து இருக்கிறது. அது போதாது. இதைத் தளர்த்தினால் கண்டிப்பாக நம்முடைய அரசுக்கு ஆயிரக்கணக்கான கோடி ரூபாய்கள் வருவதற்கு வாய்ப்பு இருக்கிறது என்பதைக் கூறி, மக்கள் கட்டியிருக்கின்ற கட்டடங்களை இடிக்காமல் இருப்பதற்கான ஒரு வாய்ப்பை நீங்கள் கொடுத்து இருக்கிறீர்கள். அதை, எங்கள் பாட்டாளி மக்கள் கட்சியின்

சார்பிலே வரவேற்கிறோம். அதேசமயத்திலே, கட்டணத்தைக் குறைக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை வைத்து எங்களுடைய கட்சியின் சார்பிலே இதற்கு மீண்டும் ஒருமுறை வரவேற்பு கொடுத்து, இதுபோன்ற கட்டடங்களை அதிக அளவிலே, பல மாடிக் கட்டடங்களைக் கட்டுவதற்கு நீங்கள் வாய்ப்புக் கொடுத்தால், நிலப்பரப்பைக் குறைக்க முடியும். கட்டடங்களை அதிகப்படுத்த முடியும்.

அதேபோன்று, பிளாட் சிஸ்டத்திலே கட்டப்படுகின்ற வீடுகள் விலை குறைய வாய்ப்பு இருக்கிறது. அதேபோன்று, கட்டடங்கள் அதிகமானால் நமக்கு நகராட்சியிலே வரி மூலம் அதிகமான வருமானம் கிடைக்க வாய்ப்பு இருக்கிறது. இதையெல்லாம் கண்ணுற்று, கொடுக்கப்பட்டு இருக்கிற அந்தத் தளர்வுகளை அதிகமாக நீட்டித்து அதிகக் கட்டடங்களைக் கட்டுவதற்கு அனுமதிப்பதற்கு வாய்ப்புக் கொடுக்க வேண்டுமென்று கூறி, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. மகேந்திரன். சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் முன்மொழியப்பட்டு இருக்கக்கூடிய சட்டமுன்வடிவை மார்க்சிஸ்ட் கட்சியின் சார்பாக வரவேற்பதோடு இந்தச் சட்டமுன்வடிவிலே சில திருத்தங்களைக் கொண்டு வரவேண்டுமென்று முன்பு பேசிய மாண்புமிகு உறுப்பினர்கள் கூறிய கருத்துகளை நான் வலியுறுத்த விரும்புகிறேன். ஏற்கெனவே, விதிமுறைகளை மீறி கட்டப்பட்டிருக்கக்கூடிய கட்டடங்களுக்கு சில மாறுதல்களைச் செய்வதற்காக கடந்த முறை 3 லட்சம் மனுக்கள் வரும் என்று எதிர்பார்க்கப்பட்டு, 10,832 மனுக்கள்தான் வந்திருக்கின்றன என்று இந்த விளக்கக் குறிப்பிலே சுட்டிக்காட்டி இருக்கிறார்கள். ஆனால், இப்பொழுதும் அந்தக் கட்டண விகிதம் கடந்த காலத்தில் இருப்பது போன்ற ஒரு விகிதம் என்பதுதான் இருக்கிறது. ஆகவே, அந்தக் கட்டண விகிதத்தைக் குறைப்பதற்கு நாம் முயற்சி எடுக்கும்போது, விதிமுறைகளை மீறி கட்டியிருக்கக்கூடிய கட்டடதாரர்கள், அதனுடைய உரிமையாளர்கள் நம்மிடம் அனுமதியைக் கோருவதற்கு கூடுதலான எண்ணிக்கையிலே வருவார்கள். கூடுதலான வருவாய் கிடைக்கும் என்பதைச் சொல்வதோடு விதிமுறைகளை மீறி கட்டியிருக்கக்கூடிய கட்டடங்களைப் பொறுத்தவரை





பழைய கட்டடங்களாக இருந்தால் அந்தக் கட்டடங்களைச் செப்பனிட்டு முறைப்படுத்துவதற்கான விதிமுறைகளையும் உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சர்.

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே விதிகளுக்குப் புறம்பாக அங்கீகாரமற்ற கட்டடங்களை இடிப்பதிலே உள்ள முறைகேடு, சிக்கல்களைப் பற்றியும் உணர்ந்து, வளர்ச்சி கட்டுப்பாடு விதிகளுக்குப் புறம்பாக கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கும்பொருட்டு, தமிழக அரசு சென்னைப் பெருநகர் பகுதிக்குள் விதிகளுக்குப் புறம்பாகக் கட்டப்பட்டுள்ள கட்டடங்களை, வரைமுறைக் கட்டணம் வசூலித்து முறைப்படுத்த ஒரு திட்டத்தை 1999 ஆம் ஆண்டு, அதற்குப் பின்னாலே 2000ஆம் ஆண்டு ஆகிய இருமுறை செயல்படுத்தி, இப்போது மூன்றாவது முறையாக இந்தச் சட்டத் திருத்தத்தை இங்கே நாம் முன் வைத்து இருக்கிறோம். அந்த இரண்டு முறையும் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞானசேகரன் அவர்கள் இங்கே இந்தச் சட்டத் திருத்தத்தை வரவேற்றுப் பேசி இருக்கிறார். அனைவருமே வரவேற்று இருக்கிறார்கள். ஆகவே, வரவேற்று இருக்கிற அத்துனை பேருக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 7-45

இங்கே 3 லட்சம் கட்டடங்கள் கட்டப்பட்டு இருக்கின்றன. அந்த 3 இலட்சம் கட்டடங்களுக்கு ஆந்திரா முறையிலே இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால் அரசுக்கு மிகக் கூடுதலான வருமானம் கிடைக்கும் என்ற விவரத்தை எல்லாம் இங்கே எடுத்துச்சொல்லி இருக்கிறார்கள்.

நான் என்னுடைய மானியக் கோரிக்கையிலே உரையாற்றுகிறபோது, ஆந்திர மாநிலத்திலே இருக்கிற திட்டத்தையும் நம்முடைய திட்டத்தையும் ஒப்பிட்டு மிக விரிவான முறையிலே எடுத்துக் கூறி இருக்கிறேன். சென்னை மாநகரத்திலே இருக்கிற இந்தச் சட்டம், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத்திற்கு மட்டும் பொருந்தும். ஆனால், ஆந்திர மாநிலத்திலே ஹைதராபாத் மற்றும் ஆந்திர மாநிலத்திலே இருக்கிற அனைத்து மாநகராட்சிப் பகுதிகளுக்கும் பொருந்தும். ஆக அங்கே இருக்கிற அந்த விதிமுறைக்கும், இங்கே இருக்கிற விதிமுறைக்கும் நிறைய வித்தியாசங்கள்

[திரு. ஏ.கே. செல்வராஜ்] [2001 செப்டம்பர் 13

இருக்கின்றன. அவற்றை எல்லாம் மிக விளக்கமாக நான் என்னுடைய மானியக் கோரிக்கையிலே எடுத்துக் கூறி இருக்கிறேன்.

இங்கே பேசிய உறுப்பினர்கள் அனைவருமே அந்த விவாதத்தின்மீது இதுகுறித்துக் கேட்டு இருக்கிறார்கள். ஆக, அந்த 3 இலட்சம் கட்டடங்களிலே பெரும்பாலான கட்டடங்கள் மிகக் குறைவான அளவிலே விதிகளை மீறி கட்டப்பட்டு இருக்கிற கட்டடங்கள். ஆக, அந்த விதிமீறல்களைச் செய்து மிகக் குறைவான அளவில் கட்டப்பட்டு இருக்கிற கட்டடங்கள் மூலம் அதிகமான அளவிலே எங்களுக்கு வருமானம் வராது; அரசுக்கு நிதி வராது. சுமார் 2 ஆயிரத்திலிருந்து 4 ஆயிரத்துக்குள்ளேதான் மிகப் பெரிய அளவிலே இருக்கிற கட்டடங்கள் இருக்கின்றன. ஆகையினாலே இந்த 2 ஆயிரம் கட்டடங்கள் 1999 ஆம் ஆண்டு இந்தத் திட்டம் அமல்படுத்தப்படுகிறபோது, பல அடுக்குமாடிக் கட்டடதாரர்கள் இந்தத் திட்டத்திலே வரவில்லை. ஆகையினாலே, இந்தக் காலக்கெடு இறுதியான காலக்கெடுவாகக் கொடுத்து இந்தத் திட்டத்தை நிறைவேற்றுகிறபோது அவர்களுக்கு ஓர் இறுதி எச்சரிக்கையாகக் கொடுத்து இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிறபோது இந்த ஆண்டு அவர்கள் வருவார்கள்; இந்த ஆண்டு கூடுதலாக நிச்சயமாக அவர்கள் வருவார்கள் என்பதைச் சொல்லி, கிட்டத்தட்ட இங்கே இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதிலே பல்வேறு நடைமுறைகளை எல்லாம் மேற்கொண்டு இருக்கிறோம்.

M.S.B. கட்டடத்தை ஆய்வு செய்வதற்காக நாம் 16 குழுக்களை நியமித்து இருக்கிறோம். ஒரு குழுவிற்கு 4 பேர் இருக்கிறார்கள். அதேபோல மற்றவற்றிற்கு 30 குழுக்கள் நியமிக்கப்பட்டு, கட்டடங்களைப் பார்ப்பதற்கு 30 குழுக்களாக நியமித்து இருக்கிறோம். ஆகவே, காலதாமதமாகாமல் பெறப்படுகிற அந்த விண்ணப்பத்தைக் கூடிய விரைவிலே பரிசீலித்து, சரியான முடிவை எடுக்க இந்த அரசு தயாராக இருக்கிறது என்பதை மட்டும் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கிறேன். ஆகையினாலே இந்தச் சட்டமுன்வடிவை நீங்கள் நிறைவேற்றித் தர வேண்டுமாய் உங்களிடத்திலே அன்போடு கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



2001 செப்டம்பர் 13] [பேரவைத் தலைவர்]

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்.)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படுகிறது.

பிரிவுகள் 2 மற்றும் 3 திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 மற்றும் 3 சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

**மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர்.**

**மாண்புமிகு திரு. ஏ.கே. செல்வராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[திரு. ஏ.கே. செல்வராஜ்] [2001 செப்டம்பர் 13

"2001 ஆம் ஆண்டு தமிழ்நாடு நகரமைப்பு மற்றும் ஊரமைப்புத் திட்டச் (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 6/2001) நிறைவேற்றப் பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வீட்டுவசதி மற்றும் நகர்ப்பகுதி வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (14-9-2001) காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 7-49 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

## 12. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

68. திருவாளர்கள் பாரத் சன்சார் நிகாம் லிமிடெட், மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் ஆகிய நிறுவனங்களுக்கு விற்கப்படும் தொலைத் தொடர்புக்கான கேபிள்களுக்கு 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் எந்தவொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியைப் பொறுத்தமட்டில் 12 விழுக்காட்டிலிருந்து 4 விழுக்காட்டாகக் குறைப்பது குறித்தும், வணிகவரிகள் துறையின் 1-4-1997, 31-1-2000, 7-4-1998, 15-7-1998, 27-3-1999, 30-5-2000, 5-3-1997 (3 அறிவிக்கைகள்) ஆகிய நாட்களில் தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள் ரத்து செய்தது குறித்தும் மற்றும்



2001 செப்டம்பர் 13]

வணிகவரிகள் துறையின் 5-3-1997 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட II (1)/வ.வ.அA/22(a-7)/97 ஆம் எண் அறிவிக்கையில் வேறுபாடு செய்தது குறித்தும் வணிகவரிகள் துறையின் 18-8-2001 ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது)

69. தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு இணையத்துடன் இணைக்கப்பட்ட பால் கூட்டுறவுச் சங்கங்கள், கன சதுர வடிவிலான பாக்கெட்டுகளில் விற்பனை செய்கின்ற பாலின் விற்பனைக்காகச் செலுத்த வேண்டிய விற்பனை வரிக்கு விலக்களிப்பது குறித்தும், 28-5-1999 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிகவரிகள் துறையின் II (1)/வணிகவரிகள்/66(a-3)/99 ஆம் எண் மற்றும் 11-1-2001 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் வெளியிடப்பட்ட வணிகவரித் துறையின் II (1)/வணிகவரிகள்/1(a)/2001 ஆம் எண் ஆகிய எண்களின் அறிவிக்கைகளை ரத்து செய்தது குறித்தும் வணிகவரிகள் துறையின் 28-8-2001 ஆம் நாளிட்ட 72 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். (1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

70. கோழித் தீவனத் துணைப் பொருட்கள், செறிவூட்டுப் பொருட்கள், உலர்த்தப்பட்ட பயறு அல்லது வறுக்கப்பட்ட பயறு ஆகியவற்றின் விற்பனை மீது, 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின்கீழ் யாதொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியை நான்கு சதவீதத்திலிருந்து இரண்டு சதவீதமாகக் குறைப்பது குறித்து வணிகவரிகள் துறையின் 31-8-2001 ஆம் நாளிட்ட 74 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (1959-ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.)

71. 1997-1998 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் வளர்ச்சி கழகத்தின் இருபத்து நான்காவது ஆண்டறிக்கை. (1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மையச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது.) (தமிழ், ஆங்கிலம்)

72. 1999-2000 ஆம் ஆண்டிற்கான திருவள்ளூர் மாவட்ட ஊராட்சியின் ஆண்டறிக்கை. (1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகளின் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 165 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது) (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

110. "C" படிவத்துடன் அல்லது "C" படிவம் இல்லாமல் திருவாளர்கள் பாரத் சன்சார் நிகாம் லிமிடெட் மற்றும் மகாநகர் டெலிபோன் நிகாம் லிமிடெட் நிறுவனங்களுக்கு விற்பனை செய்யப்படும் தொலைத் தொடர்புக்கான கேபிள்களைப் பொறுத்தமட்டில் 1956 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரிச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 74/1956) கீழ், எந்தவொரு வணிகரும் செலுத்தத்தக்க வரியை நான்கு விழுக்காடு என்ற சதவீதத்தில் குறைத்துக் கணக்கிடப்பட வேண்டும் என்று கட்டளையிடுவது குறித்து வணிகவரிகள் துறையின் 18-8-2001 ஆம் நாளிட்ட 68 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

111. மானியக் கோரிக்கை எண் 11 - மாவட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

112. மானியக் கோரிக்கை எண் 8 - பொதுத் தேர்தல்கள் குறித்த வரைவு உரை மற்றும் கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

113. மானியக் கோரிக்கை எண் 8 - உள்ளாட்சித் தேர்தல்கள் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

114. மானியக் கோரிக்கை எண் 41 - ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

115. மானியக் கோரிக்கை எண் 42 - பல்வகை குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

116. மானியக் கோரிக்கை எண் 60 - பல்வகை மூலதனச் செலவு குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)

117. மானியக் கோரிக்கை எண் 61 - மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002. (தமிழ், ஆங்கிலம்)





118. பொதுக் கணக்குக் குழுவின் நான்காவது அறிக்கை. (2001-2002)

119. பொதுக் கணக்குக் குழுவின் ஐந்தாவது அறிக்கை. (2001-2002)

120. பொதுக் கணக்குக் குழுவின் ஆறாவது அறிக்கை. (2001-2002)

121. பொதுக் கணக்குக் குழுவின் ஏழாவது அறிக்கை. (2001-2002)

122. பொதுக் கணக்குக் குழுவின் எட்டாவது அறிக்கை. (2001-2002)

# இணைப்பு I

*(54 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 11

## மாவட்ட நிர்வாகம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு 2001-2002

### 1. முன்னுரை

மாநில அரசு மக்கள் நலம் பேணும் அரசாகச் செயல்படும் கனவை நிறைவேற்றும் வண்ணம் வருவாய்த் துறையின் பணிகள் அமைந்துள்ளன. இத்தகைய பெரும் பொறுப்பு வாய்ந்த பணிகள், முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், முதன்மை ஆணையர் மற்றும் நிலச் சீர்திருத்த ஆணையர் மற்றும் சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர் ஆகியோரின் அலுவலகங்கள் மூலமாக வெற்றிகரமாகச் செயல்படுத்தப்படுகிறது. இத்தகைய முக்கிய அலுவலகங்கள், இந்த மாநில அரசின் மிகவும் மூத்த அதிகாரிகளால் கையாளப்பட்டு வருகின்றன. மாவட்ட நிர்வாகம், அரசின் பிரதிநிதியாக மாவட்ட அளவில் செயல்படுகிறது. மாவட்ட நிர்வாகத்தின் தலைமைப் பொறுப்பு வகிக்கும் மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்த் துறையின் முழுக் கட்டுப்பாட்டிலும், மேற்பார்வையிலும் செயல்படும் மேலே குறிப்பிட்ட மூன்று செயல் ஆணையர்களின் உதவி மற்றும் வழிகாட்டுதல் அடிப்படையில் செயல்படுகிறார்.

### 2. மாவட்ட வருவாய் நிர்வாகம்

2.1. நில ஒப்படை, வீட்டுமனை ஒப்படை, ஆக்கிரமிப்பை முறைப்படுத்துதல், பல்வேறு சான்றிதழ்கள் மற்றும் உரிமங்கள் வழங்குதல், கடன்கள் மற்றும் ஏனைய நிவாரணங்கள் பெறுதல் போன்ற தேவைகளுக்காக, பல்வேறுபட்ட நிலைகளில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்களை பொதுமக்கள் அணுகுகிறார்கள். பொதுமக்களின் தேவைகளை விரைவாகவும் குறிப்பிட்ட காலத்திற்குள்ளும் முடிப்பதை உறுதி செய்யவும், பல்வேறுபட்ட நிலைகளிலுள்ள வருவாய்த் துறை அலுவலர்களை நேரடியாகவும், மாவட்ட அளவிலான அலுவலர்களை குறிப்பிட்ட நாட்களில் சந்திக்கும் வாய்ப்பினை உருவாக்கவும் 'மனு நீதித்

திட்டம்' மற்றும் 'குறை தீர்க்கும் நாள்' ஆகிய இரு பெரும் திட்டங்களை அரசு நடத்தி வருகிறது. அனைத்து வருவாய்த் துறைப் பணிகளையும் கணினிமயமாக்குவதன் மூலம் பொதுமக்களுக்கும் வருவாய்த் துறை அதிகாரிகளுக்கும் இடையே பெருமளவில் நெருக்கம் அதிகரித்துள்ளது.

## 2.2 மனுநீதித் திட்டம்

(i) மக்கள் குறைகளைத் தீர்ப்பதற்காக மனு நீதித் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டம் மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் மாவட்ட வருவாய் அலுவலர்களால் செயல்படுத்தப்படுகிறது. இதர அரசுத் துறை மற்றும் வங்கி அலுவலர்கள் இதில் முனைப்புடன் பங்கேற்கின்றனர். நிர்வாகம், கிராமங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்து முடிந்தவரை அந்த இடத்திலேயே அவர்களுடைய குறைகளைக் களைய முயற்சிப்பதே இந்தத் திட்டத்தின் சிறப்பு அம்சமாகும்,

(ii) மனுநீதித் திட்டம் மாதம் ஒரு முறை இரண்டாவது புதன்கிழமை நடத்தப்படுகிறது. மூன்றாண்டு காலத்திற்குள் எல்லாக் கிராமங்களிலும் நடத்தப்படும் வண்ணம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

(iii) மாவட்ட ஆட்சித் தலைவர், மாவட்ட வருவாய் அலுவலர் மற்றும் அனைத்து அரசிதழ் பதிவு பெற்ற அலுவலர்களும் எந்தெந்தக் கிராமங்களில் எந்தெந்தத் தேதியில் இத்திட்டத்தை நடத்த வேண்டும் என்ற நிகழ்ச்சி நிரலை மாவட்ட ஆட்சியர் முன்னதாகவே தயாரிக்கிறார். மாதம் ஒரு முறை நடத்தப்படும் இம்மனுநீதித் திட்டத்தை எக்காரணத்தைக் கொண்டும் தள்ளி வைக்கவோ அல்லது கைவிடவோ கூடாது என மாவட்ட ஆட்சியர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

(iv) மனுநீதித் திட்டத்தின் வாயிலாகப் பெறப்படும் மனுக்கள் முன்னுரிமை அடிப்படையில் ஆய்வு செய்யப்பட்டு மக்களின் குறைகள் களையப்படுகின்றன.

(v) துறைத் தலைவர்கள் மாவட்டங்களில் சுற்றுப்பயணம் செய்யும் போது மனுநீதித் திட்ட மனுக்கள் பதிவேட்டை தணிக்கை செய்ய வேண்டும். இத்தகைய நடவடிக்கை, மனுக்களை விரைவாக முடிவு செய்ய வழிவகுக்கும். மனுநீதித் திட்டத்தினைத் தீவிரமாகக் கண்காணித்து ஆய்வு மேற்கொண்டு, அதுகுறித்த அறிக்கையை ஒவ்வொரு மாதமும் 25ம் தேதிக்கு முன்னர் வருவாய் நிர்வாக ஆணையருக்கு அனுப்ப வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார்கள். வருவாய் நிர்வாக ஆணையர், மாவட்ட ஆட்சியர்களிடமிருந்து பெறப்படும்



அறிக்கைகளை ஆய்வு செய்து இந்தத் திட்டத்தினைத் திறம்பட செயல்படுத்தத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டு, அரசுக்கு காலாண்டு அறிக்கை ஒன்றை அனுப்புவார்.

## 2.3. பொதுமக்கள் குறை தீர்க்கும் நாள்

(i) அனைத்து மாவட்டங்களிலும் ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மக்கள் குறை தீர்க்கும் நாள் பின்பற்றப்பட்டு வருகிறது. ஒவ்வொரு திங்கட்கிழமையன்றும் மாவட்ட ஆட்சித் தலைவர்கள்/வருவாய்க் கோட்ட அலுவலர்கள்/வட்டாட்சியர்கள் தங்கள் தலைமையிடங்களிலேயே இருந்து பொதுமக்களிடமிருந்து மனுக்களைப் பெற்று, பிற துறை அலுவலர்கள் மற்றும் சார்நிலை அலுவலர்களிடமிருந்து அறிக்கைகள் பெற்று, குறிப்பிட்ட நாளில் மனுதாரர்களுக்கு உரிய பதில் அளிக்கிறார்கள்.

(ii) ஒவ்வொரு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலும் மக்கள் குறை தீர்க்கும் பிரிவு தொடங்கப்பட்டு அது ஒரு தனித் துணை ஆட்சியர் (மக்கள் குறை தீர்க்கும் பிரிவு) கட்டுப்பாட்டிலும், மாவட்ட ஆட்சியரின் மேற்பார்வையிலும் இயங்கி வருகிறது. தனித் துணை ஆட்சியருக்கு தனியாக வாகனம் வழங்கப்பட்டுள்ளது. இவர் மாவட்டம் முழுவதும் சுற்றுப்பயணம் செய்தும் "நிக்நெட்" கணிப்பொறி மூலம் கிடைக்கும் விவரங்களைக் கொண்டும், மக்கள் குறை தீர்க்கும் நாளன்று பெறப்படும் மனுக்களின் மீது மாவட்டத்தின் அனைத்து அலுவலகங்களிலும் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்கிறார்.

## 2.4. சாதிச் சான்றிதழ்கள் முதலியன வழங்குவதில் புதிய முறை

(i) பள்ளிப்படிப்பை முடித்தபின், மேற்படிப்புக்காகவும், வேலை வாய்ப்புக்காகவும் சாதிச் சான்றிதழ், வருமானச் சான்றிதழ் மற்றும் இருப்பிடச் சான்றிதழ் ஆகியவை மாணவர்களுக்குத் தேவைப்படுகின்றன.

(ii) வட்டாட்சியர் அலுவலகங்களில் இத்தகைய சான்றிதழ்களைப் பெறுவதற்காக மாணவர்கள் காத்திருப்பதைத் தவிர்க்கும்பொருட்டு பள்ளிகள் மூலமாகச் சான்றிதழ்கள் வழங்கும் புதிய முறை அறிமுகப் படுத்தப்பட்டுள்ளது. இந்த முறையின்படி 10 அல்லது 12 ஆம் வகுப்பில் படிக்கும்பொழுதே இந்தச் சான்றிதழ் கோரி பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் தலைமை ஆசிரியர்களால் மாணவர்களிடமிருந்து பெறப்பட்டு தலைமை ஆசிரியரின் சான்றொப்பத்துடன் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களுக்கு அனுப்பப்படும். வருவாய்த் துறை அலுவலர்களின் விசாரணைக்குப் பின் சான்றிதழ்கள் தயாரிக்கப்பட்டு, பள்ளிகள

அனுப்பப்படும், பள்ளிப்படிப்பு முடிந்தவுடன், அந்தச் சான்றிதழ்கள், மாறுதல் சான்றிதழுடன் (Transfer Certificate) பள்ளி நிர்வாகத்தால் ஒரு சிறப்பு நிகழ்ச்சியில் மாணவர்களுக்கு வழங்கப்படும்.

**3. வருவாய் அலுவலர்களுக்குப் பயிற்சி**

(i) விரைவாகவும், சிறப்பாகவும், கடமையாற்ற உதவும் வகையில், நிர்வாகம் குறித்த அனைத்து வகை விவரங்களைக் குறிப்பிட்ட கால இடைவெளியில் அறிந்துகொள்வதற்காகவும், பொதுமக்களின் தேவைகளை நன்கு உணர்ந்து துடிப்புடனும், வேகத்துடனும் தங்களது கடமைகளை நிறைவேற்றவும், மாவட்ட வருவாய் அலகில் கிராம நிர்வாக அலுவலர் முதல் துணை வட்டாட்சியர், வட்டாட்சியர் மற்றும் துணை ஆட்சியர் வரை உள்ள அனைத்து அலுவலர்களுக்கும் தொடர் பயிற்சி கொடுக்க அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது.

(ii) சென்னையிலுள்ள அண்ணா மேலாண்மைப் பயிற்சி நிறுவனத்தில் பயிற்சியாளர்களுக்கான பயிற்சித் திட்டத்தின்கீழ் 75 வட்டாட்சியர் மற்றும் அதற்கு மேற்பட்ட நிலையில் உள்ள வருவாய்த் துறை அலுவலர்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இதில் பயிற்சி பெற்ற அலுவலர்கள் மாவட்டங்களில் உள்ள மற்ற அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கிறார்கள். இதுவரை 14,467 வருவாய்த் துறை அலுவலர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| கிராம நிர்வாக அலுவலர்கள் | .. | 7,675 |
| இளநிலை உதவியாளர்கள்/உதவியாளர்கள் | .. | 4,598 |
| துணை வட்டாட்சியர்கள்/வட்டாட்சியர்கள் | .. | 2,057 |
| துணை ஆட்சியர்கள் | .. | 137 |
| மொத்தம் | .. | **14,467** |

(iii) புதிதாகப் பணி நியமனம் செய்யப்படும் வருவாய்த் துறை அலுவலர்கள் பவானி சாகரில் பயிற்சி முடித்தவுடன் அவர்களுக்கு நில ஒப்படை, நில உரிமை மாற்றம், நில மாற்றம் மற்றும் நில எடுப்பு போன்ற பொருள்கள் குறித்து தஞ்சாவூர் மாவட்டம், ஓரத்தநாட்டில் உள்ள நில அளவைப் பயிற்சிப் பள்ளியில் 10 நாட்களுக்கு தனிப்பயிற்சி அளிக்க அரசு ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



**4. கிராம நிர்வாகம்**

4.1. (i) மாவட்ட வருவாய் நிர்வாகத்தின் அடிப்படை அலகு 'கிராம நிர்வாகம் ஆகும். பகுதி நேர கிராம அலுவலர் பதவிகள் 14-11-1980 முதல் நீக்கப்பட்ட பிறகு, வருவாய்க் கிராமங்களில் முழுநேர கிராம நிர்வாக அலுவலர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளனர்.

(ii) தமிழ்நாடு நிர்வாகத் தீர்ப்பாயத்தின் தீர்ப்பிற்கிணங்க 14-11-1980 அன்று பதவியில் இருந்த தகுதியுடைய முன்னாள் கிராம அலுவலர்கள்/ 14-11-1980 அன்று பதவியில் இருந்து, 1982க்குப் பின்னர் கல்வித் தகுதி (S.S.L.C. Passed) பெற்ற முன்னாள் பகுதி நேர கிராம அலுவலர்கள்/ 14-11-1980-ல் பணியில் இல்லாத ஆனால், 14-11-1980க்கு முன்னர் சிறிது காலம் பணியாற்றிய முன்னாள் பகுதி நேர கிராம அலுவலர்கள் மற்ற நிலையில் முழுத் தகுதி பெற்றிருப்பின் அவர்களை கிராம நிர்வாக அலுவலர்களாக நியமனம் செய்ய அரசால் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

**4.2. முன்னாள் கிராம அலுவலர்களுக்கு ஓய்வூதியம் வழங்குதல்**

14-11-1980-ல் அவசரச் சட்டத்தினால் பணியிழந்த முன்னாள் கிராம அலுவலர்களுக்கு சிறப்பு ஓய்வூதியம் வழங்க அரசாணை (நிலை) எண் 828, வருவாய், நாள் 23-8-1996-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி,

(i) முன்னாள் கிராம அதிகாரிகளுக்கு ஒவ்வொரு மாதமும் ரூ. 175/- மற்றும் அதற்குரிய படிகளுடன் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதியத்தை, அரசாணை (நிலை) எண் 629, வருவாய், நாள் 22-7-1998-ல் ரூ. 250/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது. இன்றைய தேதியில் மாதமொன்றுக்கு சுமார் ரூ. 800/- அளவில் சிறப்பு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது).

(ii) 14-11-1980 அன்று பணியிலிருந்து பின்னர் உயிரிழந்த முன்னாள் கிராம அதிகாரிகள் குடும்பத்திற்கு மாதம் ரூ. 100/- குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்ததை, அரசாணை (நிலை) எண் 629, வருவாய், நாள் 22-7-1998-ல் ரூ. 150/- ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டுள்ளது.

(iii) 14-11-1980 அன்று தற்காலிக பணிநீக்கம்/விடுப்பில் இருந்த கிராம அலுவலர்களுக்கும் அரசாணை (நிலை) எண் 753, வருவாய், நாள் 9-9-1998-ன் மூலம் இச் சிறப்பு ஓய்வூதியத்தை அரசு நீட்டித்துள்ளது.

(iv) 14-11-1980 அன்று பணி இழந்து, பின்னர் குறைந்தபட்ச கல்வித் தகுதி பெற்று கிராம நிர்வாக அலுவலராக நியமனம் செய்யப்பட்ட

முன்னாள் கிராம அலுவலர்களில் 10 ஆண்டு குறைந்தபட்ச தகுதி பணி முடிக்காமல் ஓய்வு பெற்றவர்களுக்கும், முன்னாள் கிராம அலுவலர்களுக்கான சிறப்பு ஓய்வூதியத்தை நீட்டித்து வழங்க அரசாணை (பல்வகை) எண் 121, வருவாய் (பணி 7-1) துறை, நாள் 13-3-2001-ல் ஆணையிடப்பட்டுள்ளது.

**4.3. கிராம உதவியாளர்கள்**

(i) அரசு தனது ஆணை (நிலை) எண் 625, வருவாய், நாள் 6-7-1995-ல் மாநிலம் முழுவதுமுள்ள 28,000 பகுதி நேர கிராம உதவியாளர்களை ரூ. 600-10-750 என்ற புதிய ஊதிய விகிதத்தில் முழு நேர அரசு ஊழியர்களாக்கி உத்தரவு பிறப்பித்துள்ளது. இந்த உத்திரவு 1-6-1995 முதல் அமல்படுத்தப்பட்டு வருகிறது. மேலும் 6-வது ஊதியக் குழு பரிந்துரையின்படி இவர்களது ஊதிய விகிதம் ரூ. 1800-20-2040 என மாற்றியமைக்கப்பட்டது. முழுநேர கிராம உதவியாளர்களின் பணி விதிகள், அரசாணை (நிலை) எண் 521, வருவாய், நாள் 17-6-1998-ல் வெளியிடப்பட்டுள்ளது. பணி வரன்முறை செய்யப்பட்ட, 1-6-1995க்குப் பிறகு பணியிலிருக்கும்போது இறந்த கிராம உதவியாளர்களது வாரிசுகளுக்கு நடைமுறையிலுள்ள விதிகளுக்குட்பட்டு கருணை அடிப்படையில் அரசுப் பணி வழங்க அரசாணை (நிலை) எண் 362, வருவாய்,நாள் 7-7-1999ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

(ii) கிராம உதவியாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவது தொடர்பாக, அவர்கள் பணி செய்த மொத்த காலத்தினைக் கணக்கில் கொண்டு, ஒவ்வொரு வருடப் பணி முடித்தமைக்கும் அரை மாத ஊதியத்தைக் கணக்கில் எடுத்து வழங்க வேண்டும் என்று, அரசானண (நிலை) எண் 1495, வருவாய், நாள் 1-9-1984-இல் ஆணைகள் பிறப்பிக்கப்பட்டன. இது, 31-5-1995 வரை நடைமுறையில் இருந்தது. 1-6-1995 முதல் கிராம உதவியாளர்கள் முழுநேர அரசுப் பணியாளர்களாக ஆக்கப்பட்டுள்ளனர். அரசு கடித (நிலை) எண் 469, வருவாய், நாள் 6-9-2000-இல் 5 வருடங்கள் பணி முடித்த கிராம உதவியாளர்களுக்கு, அரசு ஓய்வூதிய விதிகளின்படி ஏனைய அரசுப் பணியாளர்களுக்கு பணிக்கொடை வழங்குவது போல் இவர்களுக்கும் வழங்க வேண்டும் என்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

**5. ஆட்சி எல்லைகள் சீரமைத்தல்**

தற்போதுள்ள மாவட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள், வட்டங்கள் முதலியவற்றின் எண்ணிக்கை பின்வருமாறு:-





| | | |
|---|---|---|
| மாவட்டங்கள் | - | 30 |
| கோட்டங்கள் | - | 73 |
| வட்டங்கள் | - | 206 |
| உள்வட்டங்கள் | - | 1,120 |
| கிராமங்கள் | - | 17,274 |

2. மாவட்ட நிர்வாகம் மேலும் பயனுள்ளதாகவும், பொது மக்களுடைய தேவைகளுக்குப் பரிவுள்ளதாக இருப்பதற்காகவும், பின்தங்கிய பகுதிகளை மேம்படுத்தவும், சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகள் மற்றும் இயற்கை இடர்பாடு ஏற்படும் காலங்களில் உதவவும், மக்கள் நலப் பணிகள் தாமதமின்றி நடைபெறவும், அவசியம் ஏற்படும் போது பெரிய மாவட்டங்கள் சீரமைக்கப்பட்டு, புதிய மாவட்டங்கள் படிப்படியாக உருவாக்கப்படுகின்றன.

3. தருமபுரி மாவட்டம், தமிழ்நாட்டிலுள்ள மிகவும் பின்தங்கிய மாவட்டங்களுள் ஒன்றாகும். அதன் பரந்தகன்ற பரப்பெல்லையைப் கருத்திற்கொண்டு, நிருவாகம் மக்களுக்கு அணுக்கமாக அமையும் வகையில், அம்மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்கவேண்டுமென தொடர்ந்து கோரிக்கைகள் வைக்கப்பட்டு வருகின்றன. எனவே, தற்போதைய தருமபுரி மாவட்டத்தை இரண்டாகப் பிரிக்க அரசு முடிவு செய்துள்ளது. புதியதாக ஏற்படுத்தப்படும் இந்த மாவட்டம் கிருஷ்ணகிரியைத் தலைமையிடமாகக் கொண்டு செயல்படும். இதற்கென முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரைத் தலைவராகக் கொண்ட ஒரு நபர் குழு ஒன்று அரசு ஆணை (நிலை) எண் 267, வருவாய், நாள் 21-8-2001ல் அமைக்கப்பட்டுள்ளது. இக்குழு தனது அறிக்கையை மூன்று மாதத்திற்குள் அரசுக்கு அளிக்கும்.

**6. உள் கட்டமைப்பு வசதிகள்**

6.1 வருவாய் அலுவலர்களுக்கு அலுவலகக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்ட வேண்டிய அவசியத்தை உணர்ந்து மாவட்ட ஆட்சியர் முதல் கிராம நிர்வாக அலுவலர்கள் வரை அரசு அலுவலகக் கட்டடங்கள், அலுவலகங்களுடன்கூடிய குடியிருப்புக் கட்டடங்கள் மற்றும் குடியிருப்புகள் கட்டுவதற்கு ஒவ்வோர் ஆண்டும் அரசு நிதி ஒதுக்கீடு செய்து முக்கியத்துவம் அளித்து வருகிறது.

[2001 செப்டம்பர் 13

**6.2. அலுவலகக் கட்டடங்கள்**

**(i) பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடங்கள்**

அண்மையில் புதிதாக உருவாக்கப்பட்ட அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள் தவிர, தமிழ்நாட்டில் தற்போதுள்ள அனைத்து மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் விரிந்த பரப்பில் நன்கு வடிவமைக்கப்பட்டு கட்டப்பட்ட அரசுக் கட்டடங்களில் அமைந்துள்ளன. இவை ,மாவட்டப் பெருந்திட்ட வளாகங்கள் என அழைக்கப்படுகின்றன. இவற்றுள் அனைத்து முக்கிய மாவட்ட அலுவலகங்களும் அமைந்துள்ளன. இந்தக் கட்டடங்கள் அப்பகுதியில் மிக முக்கிய இடமாகவும் அனைவரையும் கவரக்கூடிய வகையிலும் அமைந்துள்ளன.

அரியலூர் மற்றும் பெரம்பலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் கட்டுவதற்கான இடங்கள் தேர்வு செய்யும் பணி நடைபெற்று வருகின்றது.

**(ii) வருவாய்க் கோட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்**

73 வருவாய்க் கோட்ட அலுவலகங்களில் 71 வருவாய்க் கோட்ட அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. பொன்னேரி வருவாய்க் கோட்ட அலுவலகம் கட்டும் பணி முடிவுறும் தருவாயில் உள்ளது. மீதமுள்ள ஆத்தூர் வருவாய்க் கோட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டும் பணி இந்த ஆண்டு மேற்கொள்ளப்படவுள்ளது.

**(iii) வட்டாட்சியர் அலுவலகக் கட்டடங்கள்**

மொத்தமுள்ள 206 வட்டாட்சியர் அலுவலகங்களில் 182 வட்டாட்சியர் அலுவலகங்கள் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. மீதமுள்ள 24 வட்டாட்சியர் அலுவலகங்களுக்கும் அலுவலகக் கட்டடங்கள் கட்டும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**6.3. குடியிருப்புக் கட்டடங்கள்**

**(i) மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 30 மாவட்ட ஆட்சியர்களில் 20 மாவட்ட ஆட்சியர்களுக்கு அரசுக் குடியிருப்பு வசதி ஏற்கெனவே உள்ளது. ஏனைய மாவட்டங்களைப் பொறுத்தவரை பெருந்திட்ட வளாகங்களுக்குள் மாவட்ட ஆட்சியர் முகாம் அலுவலகம் மற்றும் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும்.



2001 செப்டம்பர் 13]

**(ii) மாவட்ட வருவாய் அலுவலர் குடியிருப்புகள்**

சென்னையைத் தவிர ஏனைய 29 மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர் பணியிடங்கள் உள்ளன. இதில் 19 மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள மாவட்டங்களில் மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் கட்டும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**(iii) வருவாய்க் கோட்ட அலுவலர் குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 73 வருவாய்க் கோட்டாட்சியர்களில் 58 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் உள்ளன. மீதமுள்ள 15 வருவாய்க் கோட்ட அலுவலர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் கட்டும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**(iv) வட்டாட்சியர் குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 206 வட்டாட்சியர்களில், 169 வட்டாட்சியர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் உள்ளன. சென்னையில் உள்ள 5 வட்டாட்சியர்கள் தவிர, ஏனைய வட்டாட்சியர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் கட்டும் பணி படிப்படியாக மேற்கொள்ளப்படும்.

**(v) வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள்**

மொத்தமுள்ள 1,120 வருவாய் ஆய்வாளர்களில் 1,080 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய அரசுக் குடியிருப்புகள் ஏற்கெனவே கட்டப்பட்டுள்ளன. சென்னையில் உள்ள 20 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகளுக்கான தேவை இல்லை. ஏனைய 20 வருவாய் ஆய்வாளர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள் படிப்படியாகக் கட்டப்படும்.

**(vi) கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன்கூடிய குடியிருப்புகள்**

இம்மாநிலத்தில் மொத்தம் 12,506 கிராம நிர்வாக அலுவலர்கள் உள்ளனர். இவர்கள் அனைவருக்கும் அலுவலகத்துடன்கூடிய குடியிருப்பு வசதிகள் செய்து தர கொள்கை அளவில் அரசு முடிவு செய்துள்ளது. முதலில் தருமபுரி, சேலம் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் மலைப்பாங்கான இடங்களில் உள்ள 60 கிராம நிர்வாக அலுவலர்களுக்கு அலுவலகத்துடன் கூடிய குடியிருப்புகள் கட்டுவதற்காக எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

### 6.4. மோட்டார் வாகனங்கள்

வருவாய் அலுவலர்களுக்கு வாகனங்கள் வழங்குவது அத்தியாவசியத் தேவை என்பதைக் கருத்தில் கொண்டு, அரசு தேவைக்கேற்ப சீருந்துகளும், ஈப்புகளும் வழங்குகின்றது. கழிவு செய்த வாகனங்களுக்குப் பதிலாக, புதிய வாகனங்கள் வாங்குவதற்கும் துறைத் தலைவர்களுக்கு அரசால் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

### 6.5. இருவழி தகவல் தொடர்புச் சாதனம்

இயற்கை இடர்பாடுகள் மற்றும் சட்டம் ஒழுங்குப் பிரச்சினைகளால் ஏற்படும் நெருக்கடிகளின்போது உடனுக்குடன் எளிதில் தொடர்பு கொள்வதற்கு வசதியாக, அரசு இருவழித் தகவல் தொடர்புத் திட்டத்தை வருவாய் அலுவலகங்களில் அறிமுகப்படுத்த உத்தேசித்து முதற்கட்டமாக கடலோர மாவட்டங்களில் உள்ள சில வட்டாட்சியர் அலுவலகங்கள் மற்றும் கோட்டாட்சியர் அலுவலகங்களும் மற்றும் முதன்மை ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அலுவலகமும் இருவழி தகவல் தொடர்புச் சாதனம் அமைக்க தேர்வு செய்யப்பட்டுள்ளன. இதற்கென தொடராச் செலவினமாக ரூ. 99.25 இலட்சமும், தொடர் செலவினமாக ரூ. 11.50 இலட்சமும் அரசாணை (நிலை) எண் 200, வருவாய், நாள் 6-6-2001-ல் ஒப்பளிப்பு வழங்கப்பட்டுள்ளது.

### 6.6. மின்னணு தொலைபேசியகமாக மாற்றுதல்

தொலைபேசித் தொடர்புத் திட்டத்தை மேம்படுத்தவும், பணிகளை விரைவாகவும் சிறப்பாகவும் ஆற்றுவதற்கு வசதியாகவும் நாமக்கல், சிவகங்கை, அரியலூர், திருவண்ணாமலை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள் தவிர மற்ற அனைத்து மாவட்டங்களில் உள்ள மாவட்ட ஆட்சியர் அலுவலகங்களில் உள்ள சாதாரண தொலைபேசியினை மின்னணு தொலைபேசியாக மாற்றி அமைக்க அரசு அனுமதி அளித்துள்ளது.

### 6.7. 11-வது நிதிக் குழு

1993-க்கு பிறகு உருவாக்கப்பட்ட விழுப்புரம், கரூர், பெரம்பலூர், நாமக்கல், திருவள்ளூர், தேனி, திருவாரூர் மற்றும் அரியலூர் ஆகிய மாவட்டங்களில் உள்கட்டமைப்பு வசதிகளைப் பெருக்கும்பொருட்டு 11-வது நிதிக் குழு தமிழ்நாட்டுக்கு ரூ. 44.00 கோடி ஒதுக்கியுள்ளது. இதற்கு இணையான தொகை தமிழ்நாட்டின் பங்காக இப்பணிக்காக அளிக்கப்படும்.





## இணைப்பு-II

***(55 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)***

## கோரிக்கை எண் 8—தேர்தல்கள்

## 2001-2002 கொள்கை விளக்கக் குறிப்பு

### வரைவு உரை

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மானியக் கோரிக்கை எண் 8 - "தேர்தல்கள்" என்பதன்கீழ் 2001-2002 ஆம் நிதியாண்டின் செலவுகளுக்காக ரூ.87,84,50,000 (ரூபாய் எண்பத்தேழு கோடியே எண்பத்து நான்கு இலட்சத்து ஐம்பதாயிரம் மட்டும்) அரசுக்கு வழங்கவேண்டுமென்று நான் முன்மொழிகிறேன். இம்மானியக் கோரிக்கையின்கீழ் ஒதுக்கப்படும் நிதியில் ரூ.46,57,52,000 (ரூபாய் நாற்பத்தாறு கோடியே ஐம்பத்தேழு இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரம் மட்டும்) பெரும்பாலும் 10-5-2001 அன்று நடைபெற்ற தமிழக சட்டமன்றப் பொதுத் தேர்தல் செலவினம். அண்மையில் இந்தியத் தேர்தல் ஆணையம் அறிவித்துள்ள கால அட்டவணைப்படி வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்புத் திருத்தம் மேற்கொள்வதற்கும் மற்றும் தமிழ்நாட்டிலுள்ள விடுபட்ட வாக்காளர் மற்றும் புதியதாகச் சேர்க்கப்படும் வாக்காளர்கள் ஆகியோருக்கு வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரித்து வழங்குவதற்கும் தேர்தல் நிர்வாகத்தில் உள்ள அலுவலர் மற்றும் பணியாளர்களின் ஊதியம் மற்றும் பயணப்படி போன்ற பிற செலவினங்களுக்கும் தேவைப்படுகிறது. மீதமுள்ள ரூ.41,26,98,000 (ரூபாய் நாற்பத்தோரு கோடியே இருபத்தாறு இலட்சத்து தொண்ணூற்று எட்டாயிரம் மட்டும்) ஊராட்சிகள் மற்றும் உள்ளாட்சித் தேர்தல் செலவினங்களுக்கும், மாநிலத் தேர்தல் ஆணையத்தின் ஏனைய நிர்வாகப் பணிகளுக்கும் தேவைப்படுகிறது.

தமிழகச் சட்டமன்றப் பேரவைக்கு 10-5-2001 அன்று பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. 12-வது தமிழகச் சட்டமன்றம் 14-5-2001 அன்று அமைக்கப்பட்டது. மாநிலச் சட்டமன்றப் பேரவையில் சைதாப்பேட்டை சட்டமன்றத் தொகுதி உறுப்பினர், திரு. வி. பெருமாள் காலமானதால் ஒரு காலியிடம் தற்போது ஏற்பட்டுள்ளது. இந்தியத் தேர்தல் ஆணையத்திற்கு இதுபற்றித் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்திய மக்கள் பிரதிநிதித்துவச் சட்டம், 1951, பிரிவு 151-A-ன்படி இந்தக் காலியிடத்தை நிரப்புவதற்கு ஆறு மாதங்களுக்குள் தேர்தல் நடத்தப்பட வேண்டும். இதுகுறித்து இந்தியத் தேர்தல் ஆணையம் முடிவெடுக்க வேண்டும்.

[2001 செப்டம்பர் 13

மக்களவைக்கு 1999ஆம் ஆண்டு பொதுத் தேர்தல்கள் நடைபெற்றன. தற்போதைய மக்களவையின் பதவிக்காலம் 2004-ல் முடிவடைகிறது. தமிழகத்திலிருந்து மக்களவைக்கு உறுப்பினர் இடம் ஏதும் தற்போது காலியில்லை.

மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தருமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**மானியக் கோரிக்கை எண் 8**

தேர்தல்கள் என்பதன்கீழ் 2001-2002 ஆம் ஆண்டிற்குக் கீழே குறிப்பிடப்பட்டுள்ள இனங்களுக்குச் செலவிடத் தேவைப்படும் தொகை ரூ.87,84,50,000 (அனுமதிக்கப்பட வேண்டியது) ஆகும்.

***2015.* தேர்தல்கள் (I. திட்டத்தில் சேராதது)**

***102.* தேர்தல் அதிகாரிகள்**

எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள் — ரூ.4,43,21,000

***103.* வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

எஎ. சட்டப் பேரவைத் தொகுதிகள் — ரூ.9,38,77,000

***104.* நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநில சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள் — ரூ.24,95,000

***105.* நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. இடைத் தேர்தல்கள் — ரூ.19.000 (அடையாள ஒதுக்கீடு)

எபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல் — ரூ.24,000 (அடையாள ஒதுக்கீடு)



2001 செப்டம்பர் 13]

***106.* மாநிலச் சட்ட மன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

எஎ. மாநிலச் சட்டப் பேரவை — ரூ.26,25,40.000

***108.* வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குதல்**

எஎ. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கும் திட்டம் — ரூ.6,24,76,000

***109.* ஊராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்** — **ரூ.40,19,95,000**

***2070.* ஏனைய நிர்வாகப் பணிகள்**

எபி. மாநிலத் தேர்தல் ஆணையம் — ரூ.95,86,000

கூட்டுக: திருப்பி வசூலிப்பவை — ரூ.11,17,000

**மொத்தம் — ரூ.87,84,50,000**

2. மேற்சொன்ன இனங்களுக்கான மதிப்பீடுகள், கீழே விளக்கமாகக் கூறப்பட்டுள்ள பல்வேறு இனங்களுக்குச் செலவு செய்யப்படுவதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ளது.

**102. தேர்தல் அதிகாரிகள்**

எஎ. சட்டப் பேரவை மற்றும் நாடாளுமன்றத் தொகுதிகள்
மதிப்பீடு ரூ.4,43,21,000/-

தலைமைச் செயலகத்தில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு அலுவலகப் பணியில் உதவி புரிய இணைச் செயலாளர் தரத்தில் மூன்று இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரிகள் மற்றும் இரண்டு சார்புச் செயலாளர்கள் உள்ளனர். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைப்படி வாக்காளர் பட்டியல்களைக் கணினிமயமாக்குதல் மற்றும் வாக்காளர் புகைப்பட அட்டைத் திட்டத்தின் அடுத்தகட்டப் பணிகளை மேற்கொள்ளவும் 1997 ஆம் ஆண்டு ஓர் இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி (கணினி) பதவி ஏற்படுத்தப்பட்டது. தேர்தல் பணிகள் இந்தியத் தேர்தல்

[2001 செப்டம்பர் 13

ஆணையத்தால் கணினிமயமாக்கப்பட்டதன் அடிப்படையில் ஏற்கெனவே உள்ள இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி பணியிடத்திற்குக் கூடுதலாக மற்றுமொரு இணைத் தலைமைத் தேர்தல் அதிகாரி பணியிடம் தோற்றுவிக்கப்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டது. பொதுத் (தேர்தல்) துறையில் ஆறு நிரந்தரப் பிரிவுகளும், ஒரு தற்காலிகப் பிரிவும் உள்ளன. பொதுத் தேர்தல்களின் போது, தேர்தல் பணிகளைக் கவனிக்க, அரசுச் சார்புச் செயலாளர் பதவித் தரத்தில் 2 அலுவலர்களும், 4 பிரிவுகளும் கூடுதலாக ஏற்படுத்தப்பட்டன. இந்தக் கூடுதல் பணியிடங்களின் காலம் 14-5-2001 அன்று முடிவுற்றது.

மாவட்டங்களில் மாவட்ட தேர்தல் அதிகாரிகள் (மாவட்ட ஆட்சித் தலைவர்கள்) தேர்தல் சம்பந்தமான பணிகளில் தலைமைத் தேர்தல் அதிகாரிக்கு உதவி புரிகிறார்கள். ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர், வருவாய்க் கோட்ட அலுவலர், வட்டாட்சியர் அலுவலகங்களிலும் ஒரு நிரந்தர உதவியாளர் பணியிடம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. வருவாய்க் கோட்ட அலுவலர்கள் மற்றும் மதுரை, திருச்சிராப்பள்ளி, கோயம்புத்தூர், திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சி ஆணையாளர்கள் வாக்குப் பதிவு அலுவலர்களாகவும், வட்டாட்சியர்கள் மற்றும் நகராட்சி ஆணையாளர்கள், உதவி வாக்குப்பதிவு அலுவலர்களாகவும் அறிவிக்கப்பட்டுள்ளனர். இதுதவிர, தேர்தல் பணிகளைக் கவனிக்க மதுரை, கோயம்புத்தூர், சேலம், திருச்சிராப்பள்ளி மற்றும் திருநெல்வேலி ஆகிய மாநகராட்சி ஆணையர்களின் அலுவலகங்களில் ஒரு உதவியாளர் பணியிடமும் ஏற்படுத்தப்பட்டுள்ளது. சென்னை மாநகரைப் பொறுத்தமட்டில், சென்னை மாநகர ஆணையர் அலுவலகத்தில் ஒரு மாவட்ட வருவாய் அதிகாரி (தேர்தல்கள்) என்ற பதவி தற்காலிகமாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரு வட்டாட்சியர், மூன்று உதவியாளர்கள், ஒரு இளநிலை உதவியாளர்-தட்டச்சர், ஒரு பதிவேடு எழுத்தர் மற்றும் ஒரு அலுவலக உதவியாளர் ஆகிய நிரந்தரப் பணியிடங்கள் உள்ளன. சென்னை மாவட்ட ஆட்சியரை மாவட்ட தேர்தல் அதிகாரியாக அறிவித்ததையடுத்து, ஒரு உதவியாளர் பணியிடம் மற்றும் ஒரு இளநிலை உதவியாளர்-தட்டச்சர் பணியிடமும் சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்ட அலுவலர்களின் ஊதியச் செலவுகள், பயணச் செலவுகள், அலுவலகச் செலவினம், இதரச் செலவினம், தபால்தந்தி, தொலைபேசிக், கட்டணங்கள், தேர்தல் சம்பந்தப்பட்ட சிறப்புப்



2001 செப்டம்பர் 13]

பணிகளுக்காக வழங்கப்படும் ஊதியங்கள் போன்றவை இக்கணக்குத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகிறது.

இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக் கொள்கிறது.

**103. வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுதல்**

எஎ-சட்டமன்றப் பேரவைத் தொகுதிகள் மதிப்பீடு ரூ.9,38,77,000/-

இம்மாநிலத்திலுள்ள சட்டமன்றப் பேரவைத் தொகுதிகளில் வாக்காளர் பட்டியல்களைத் தயாரித்து அச்சிடுவதற்கான எல்லாவிதமான செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் கணக்கிடப்படும். இப்பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்கள், பணியாளர்களின் ஊதியம், எழுதுபொருள் அச்சிடும் செலவுகள் போன்றவையும் இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

வாக்காளர் பட்டியல்கள் திருத்தப் பணிக்காக தற்காலிகமாக நியமிக்கப்படும் அலுவலர்களின் செலவினங்களுக்கும், சென்னை ஆவணக் காப்பகத்தின் வாக்காளர் பட்டியல்களைப் பராமரிப்பதற்கான நிரந்தரப் பணியிடங்களான ஒரு உதவியாளர், ஒரு பதிவேடு எழுத்தர் ஆகியோரின் செலவினங்களுக்கும் இத்தலைப்பின்கீழ் ஒதுக்கீடு தேவைப்படுகிறது.

1950 ஆம் ஆண்டின் மக்கள் பிரதிநிதித்துவச் சட்டத்தின் 21-வது பிரிவின்படி மக்களவை அல்லது மாநில சட்டமன்றத்திற்கு நடைபெறும் ஒவ்வொரு பொதுத் தேர்தலுக்கு முன்னரும் மற்றும் இடைத்தேர்தலுக்கு முன்னரும் வாக்காளர் பட்டியல்கள் இந்தியத் தேர்தல் ஆணையத்தின் விதிகளுக்குட்பட்டு திருத்தி அமைக்கப்பட வேண்டும். இந்தியத் தேர்தல் ஆணையம் தகுதியேற்படுத்தும் நாளை அறிவித்து திருத்தம் மேற்கொள்ள வேண்டுமென ஆண்டின் எந்தக்காலத்தில் அறிவுறுத்தினாலும், திருத்தம் மேற்கொள்ளப்படும். இந்தியத் தேர்தல் ஆணையத்தின் அறிவுரைகளின்படி எந்த ஒரு தொகுதியின் வாக்காளர் பட்டியலையும் சிறப்புத் திருத்தம் செய்யும் பணி மேற்கொள்ளப்படலாம். வாக்காளர் பட்டியல்கள் வாக்காளர் பதிவு அதிகாரிகளால் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட உதவி வாக்குப்பதிவு அதிகாரிகளின் உதவியுடன் தயாரித்து வெளியிடப்படுகின்றன. தலைமைத் தேர்தல் அதிகாரியின் மேற்பார்வை, அறிவுரைகள் மற்றும் கட்டுப்பாட்டின்கீழ் மாவட்ட ஆட்சித் தலைவர்களும், சென்னை மாநகரில் மாநகராட்சி ஆணையாளரும்

வாக்காளர் பட்டியல் தயாரித்தல் மற்றும் திருத்துதல் பணிகளை ஒருங்கிணைத்து கண்காணித்து வருகின்றனர்.

பொதுவாக வாக்காளர் பட்டியல்கள் ஐந்தாண்டுகளுக்கு ஒருமுறை தீவிரத்திருத்த முறையில் திருத்தம் செய்யப்படுகின்றன.

1-1-1995-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக்கொண்டு தமிழ்நாட்டில் கடைசி முறையாக வாக்காளர் பட்டியல் தீவிரத் திருத்தம் நடைபெற்றது. அதற்கடுத்து 1996 மற்றும் 1998 ஆகிய ஆண்டுகளில் வாக்காளர் பட்டியல் சுருக்கமுறைத் திருத்தங்கள் மட்டுமே நடைபெற்றன. 1999-ல் மக்களவைப் பொதுத் தேர்தலுக்கு முன்பாக, இந்தியத் தேர்தல் ஆணையம் வாக்காளர் பட்டியல்களை சிறப்பு முறையில் திருத்துமாறு பணித்தது. அவ்வமயம் 1995-ம் ஆண்டின் மூல வாக்காளர் பட்டியல் 1996 மற்றும் 1998-ம் ஆண்டுகளின் சுருக்கத் திருத்த துணைப்பட்டியல்கள் மற்றும் . 1999-ம் ஆண்டின் சிறப்புத் திருத்த துணைப்பட்டியல்கள் ஆகியன ஒருமுகப்படுத்தப்பட்டன. மீண்டும் 1999-ம ஆண்டு நவம்பர் திங்களில். 1-1-2000-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக்கொண்டு சுருக்கமுறைத் திருத்தத்திற்கு இந்தியத் தேர்தல் ஆணையம் உத்திரவிட்டது.

2001ஆம் ஆண்டில் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை தேர்தல்களைக் கருத்தில்கொண்டு 1-1-2001-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக்கொண்டு வாக்காளர் பட்டியல்களைச் சிறப்பு முறையில் திருத்தம் செய்யுமாறு இந்தியத் தேர்தல் ஆணையம் பணித்தது. சில தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில் வீடு வீடாகச் சென்று வாக்காளர் பட்டியலிலுள்ள பதிவுகளை 100 சதவீத ஒப்பாய்வு செய்யுமாறும் இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிட்டது.

தற்போது 1-1-2002-ஐ தகுதியேற்படுத்தும் நாளாகக்கொண்டு வாக்காளர் பட்டியல்களை தீவிரமுறையில் சிறப்புத் திருத்தம் மேற்கொள்ளுமாறு இந்தியத் தேர்தல் ஆணையம் இப்போது பணித்துள்ளது. இதற்கான விரிவான கால அட்டவணையைத் தேர்தல் ஆணையம் வகுத்துள்ளது. படிவங்களை அச்சிடுதல், கணக்கெடுப்பாளர் மற்றும் மேற்பார்வையாளர் பணிகளுக்கு அமர்த்தப்படவிருக்கும் அலுவலர்களைத் தெரிந்தெடுத்தல் முதலான முதற்கட்ட ஆயத்தப் பணிகள் எல்லா மாவட்டங்களிலும் 13-8-2001 முதல் தொடங்கப்பட்டுள்ளன. வீடுவீடாகச் சென்று தற்போதைய வாக்காளர் பட்டியலிலுள்ள பதிவுகளைச் சரிபார்த்தல், வாக்காளர் பட்டியலில் தகுதியேற்படுத்தும் நாளை அடிப்படையாகக்கொண்டு தகுதிபெற்றுள்ள வாக்காளர்களை முதலமுறையாகப் பட்டியலில் சேர்த்தல், பட்டியலில் இடம்பெறாத தகுதியுள்ள குடிமக்களையும் பட்டியலில்





சேர்த்தல், வாக்காளர் பட்டியலில் இடம்பெற்றுள்ள இறந்தோர்/ இடம்பெயர்ந்தோர் பட்டியல் மற்றும் திருத்தங்களுக்கான பட்டியல் தயாரித்தல் ஆகியன இந்தியத் தேர்தல் ஆணையம் வகுத்துள்ள மேற்கொள்ள வேண்டிய பிற நடவடிக்கைகளாகும். வீடுவீடாகச் சென்று கணக்கெடுக்கும் பணி 5-11-2001 முதல் 4-12-2001 வரை நடைபெறும். இப்பணிகள் அனைத்தும் முடிவுற்றபின் இறுதிப் பட்டியல்கள் 25-3-2002 அன்று வெளியிடப்படும். மேற்சொன்ன கால அட்டவணையின்படி வாக்காளர் பட்டியல்கள் ஒருமுகப்படுத்தப்பட்டு மூன்று நிலைகளில் அச்சிடப்பட வேண்டியுள்ளது. அதாவது—

(i) வீடுவீடாகச் சென்று கணக்கெடுத்தலுக்கு முன்பும்

(ii) வரைவுப் பட்டியல் வெளியீட்டிற்கு முன்பும்

(iii) இறுதிப் பட்டியல் வெளியீட்டிற்கு முன்பும்

கணினியிலிருந்து லேசர் அச்சுப் பிரதி எடுப்பதற்கான தாளின் கொள்முதல் செலவினம். வாக்காளர் பட்டியல்கள் அச்சிடல், வெள்ளை/ பழுப்பு காகிதம் கொள்முதல் செய்தல், வீடுவீடாகச் சென்று வாக்காளர் பட்டியலிலுள்ள பதிவுகளைச் சரிபார்க்கும் பணியில் ஈடுபடும் கணக்கெடுப்பாளர்களுக்கும், மேற்பார்வையாளர்களுக்கும் ஊதியம் வழங்குதல், இந்த தீவிர சிறப்புத் திருத்தத்திற்கென மாவட்டங்களில் நியமிக்கப்படும் சிறப்புப் பணியாளர்களுக்கான ஊதியம் வழங்குதல் முதலானவை இந்த தீவிரமுறை சிறப்புத் திருத்தத்தின் போது ஏற்படவுள்ள செலவினங்களில் சிலவாகும்.

இந்த துணைக் கணக்குத் தலைப்பின்கீழ் வாக்காளர் பட்டியல் அச்சிடுதல், கணினியில் விவரங்களைப் பதித்தல், பணியாளர் ஊதியம், பயணப்படிகள் முதலியவற்றிற்கான செலவினங்களை மேற்கொள்ள நிதி ஒதுக்கீடு தேவைப்படுகின்றது. இதற்கென 2001-2002-ம் ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தில் ரூ.9,38,77,000 ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. செலவினத்தின் 50 விழுக்காட்டினை இந்திய அரசு பகிர்ந்துகொள்ளும்.

**104. நாடாளுமன்ற மக்களவைக்கும், மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே சமயத்தில் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

| | |
|---|---|
| எஎ. நாடாளுமன்ற மக்களவைக்கும் மாநிலச் சட்டப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் நடைபெறும் தேர்தல்கள் மதிப்பீடு .. .. | ரூ.24,95,000 |

[2001 செப்டம்பர் 13

மக்களவைக்கும், சட்டமன்றப் பேரவைக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடைபெறும்போது ஏற்படும் செலவினங்கள் அனைத்தும் இதன்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. திருச்சிராப்பள்ளி மக்களவைத் தொகுதிக்கான இடைத்தேர்தலும் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல்களும் 10-5-2001 அன்று ஒரே நேரத்தில் நடைபெற்றன. தொடர் செலவினமான தேர்தல் பொருட்களை வைப்பதற்கான இடங்களின் வாடகை, வாக்குப்பெட்டிகளைப் பராமரிக்கும் செலவுகள், வாகன எரிபொருள் செலவினங்கள் மற்றும் தேர்தல் துறையின் வாகனங்களின் பராமரிப்புச் செலவினங்கள் ஆகியவைகளும் இதன்கீழ் அடங்கும். வாக்குப் பெட்டிகள் மற்றும் தேர்தல் பொருட்கள் நாமக்கல், கோயம்புத்தூர், திருநெல்வேலி, தூத்துக்குடி மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் தனியார் வாடகைக் கிடங்குகளில் வைக்கப்பட்டிருக்கின்றன. தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் மற்றும் தனியார் கிடங்குகளின் வாடகை செலவினம் மற்றும் இதர தேர்தல் சம்பந்தமான பொருட்களின் செலவினங்கள் இத்துணைத் தலைப்பின்கீழ் அடங்கும். இச்செலவினங்களில் 50 விழுக்காட்டினை மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. இடைத் தேர்தல்கள்**

*மதிப்பீடு ரூ.19,000 (அடையாள ஒதுக்கீடு)*

மக்களவைத் தொகுதிகளில் இடைத் தேர்தல்கள் நடைபெற்றால் அதற்காகும் அனைத்து செலவினங்களும் இத்தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படும். நாடாளுமன்றத்தில் தமிழகத்தில் உள்ள தொகுதிகளில் காலியிடம் ஏதும் இல்லாததால் இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டுமே செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசே ஏற்றுக்கொள்கிறது.

**105. நாடாளுமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**ஏபி. நாடாளுமன்ற மக்களவைக்குத் தேர்தல்**

*மதிப்பீடு ரூ.24,000 (அடையாள ஒதுக்கீடு)*

மக்களவைக்கு மட்டும் பொதுத் தேர்தல்கள் நடைபெறும்போது அதற்கான செலவினங்கள் எல்லாம் முதலில் இத்தலைப்பின்கீழ் பதியப் பெற்று, பின்னர் மைய அரசிடமிருந்து பெறப்படும்.



2001 செப்டம்பர் 13]

1999-ஆம் ஆண்டு செப்டம்பர் திங்களில் 13-வது மக்களவைக்கு பொதுத் தேர்தல் நடைபெற்றது. இதன் காலம் 2004 ஆம் ஆண்டு முடிவுறும். எனவே இத்தலைப்பின்கீழ் வெறும் அடையாள நிதி ஒதுக்கீடு மட்டும் செய்யப்பட்டுள்ளது. இச்செலவினங்கள் அனைத்தையும் மைய அரசு ஏற்றுக்கொள்கிறது.

**106. மாநிலச் சட்டமன்றத் தேர்தல் நடத்துவதற்கான செலவுகள்**

**எஎ. மாநிலச் சட்டப் பேரவை**

*மதிப்பீடு ரூ.26,25,40,000*

12-வது தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கான பொதுத் தேர்தல்கள் 10-5-2001 அன்று நடைபெற்றன. புதிய சட்டமன்றம் 14-5-2001 அன்று அமைக்கப்பட்டது. மாநிலச் சட்டமன்றப் பேரவைக்கு மட்டும் பொதுத் தேர்தலோ அல்லது இடைத் தேர்தலோ நடைபெற்றால் அதன் தொடர்பான செலவினங்கள் இதன்கீழ் மேற்கொள்ளப்படும். வாக்குப் பதிவு மற்றும் வாக்கு எண்ணுகைப் பணியாளர்கள், அரசு வாகன ஓட்டுநர்கள், தேர்தல் பணிக்காக தலைமைத் தேர்தல் அதிகாரியின் அலுவலகத்தில் பணியில் அமர்த்தப்படும் சிறப்புப் பணியாளர்கள், மாவட்டத் தலைமை இடங்களில் அமர்த்தப்படும் பணியாளர்கள், தேர்தல் பார்வையாளர்கள் ஆகியோரின் சம்பளம் மற்றும் ஊதியம். வாக்கு எண்ணுகை இடங்களில் அமைக்கப்படும் தடை அரண்கள், மற்றும் இதர சில்லரைச் செலவினங்கள் ஆகியவை இத்தலைப்பின்கீழ் அடங்கும்.

2001-ல் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தல்கள் சம்பந்தமான பணிகளைக் கவனிக்க ஒவ்வொரு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திலும் ஒரு நேர்முக உதவியாளர் (தேர்தல்கள்) பணியிடமும், இதர பணி இடங்களும் தோற்றுவிக்கப்பட்டன. மேற்கண்ட பணியிடங்களின் காலம் 31-5-2001 அன்றுடன் முடிவுற்றது.

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு நடைபெற்ற பொதுத் தேர்தல்கள் மற்றும் திருச்சிராப்பள்ளி மக்களவைத் தொகுதிக்கு நடைபெற்ற இடைத் தேர்தலின்போது இந்தியத் தேர்தல் ஆணையத்தின்படி 66,900 மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்கள் 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் பயன்படுத்தப்பட்டன. இந்த மின்னணு வாக்குப்பதிவு இயந்திரங்களில் பயன்படுத்துவதற்காக 85,700 ஆல்கலின் மின்கலங்கள் ரூ.88,75,901 செலவில் வாங்கப்பட்டன. அனைத்து மின்னணு வாக்குப் பதிவு இயந்திரங்களும் சம்பந்தப்பட்ட மாவட்டக் கருவூலங்களிலும் மற்றும் கா

விருத்தாசலம் ஆகிய இடங்களில் உள்ள தமிழ்நாடு சேமிப்பு நிறுவனக் கிடங்குகளிலும் வைக்கப்பட்டுள்ளன.

சைதாப்பேட்டை சட்டமன்ற தொகுதியின் உறுப்பினர் திரு. வை. பெருமாள் இயற்கை எய்தியதால், தற்சமயம் தமிழ்நாடு சட்டபேரவையில் ஒரு இடம் காலியாக உள்ளது.

**பொதுத் தேர்தல்கள் துறையில் மின் தட்டச்சுகள்**

2 போட்டோ நகல் எடுக்கும் கருவிகள், ஒரு மின் படிபெருக்கி மற்றும் 2 தொலை அச்சு இயந்திரங்கள் ஆகியவை உள்ளன. இவற்றின் பராமரிப்பு மற்றும் இதர செலவினங்களுக்காக இத்துணைத் தலைப்பின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதற்கான செலவினங்கள் அனைத்தையும் மாநில அரசு மேற்கொள்கிறது.

**108. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்குதல்**

**எஎ. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் திட்டம்**

மதிப்பீடு : ரூ.6,24,76,000

இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையத்தின் அறிவுறுத்தலுக்கிணங்க தமிழ்நாட்டில் வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் தயாரித்து வழங்கும் பணி 1996 ஆம் வருடம் மார்ச் மாதம் தொடங்கப்பட்டது. முதல் கட்டத்தில், தமிழ்நாடு மின்னணு நிறுவனம் புகைப்படம் எடுக்கும் பணியை மூன்று சுற்றுக்களில் மேற்கொண்டது. இந்த மூன்று சுற்றுக்களிலும், சுமார் 3,07,77,496 வாக்காளர்களின் புகைப்படங்கள் எடுக்கப்பட்டு, 2.64 கோடி வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டைகள் தயாரித்து வழங்கியதற்கான முதல் கட்டப் பணிக்கு தமிழ்நாடு மின்னணு நிறுவனம் பணம் கோரியதில், இதுவரை அந்நிறுவனத்திற்கு ரூபாய் நாற்பது கோடி வழங்கப்பட்டுள்ளது.

1999-ம் ஆண்டு மக்களவைக்குப் பொதுத் தேர்தல்கள் நடைபெற்ற பிறகு. வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்கான அடுத்த கட்ட பணிகள் குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, இதற்கான திறந்தவெளி ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. வாக்காளர் பட்டியல், சுருக்க முறை திருத்தத்தின் அடிப்படையில் இறுதிப்பட்டியல் 7-1-2000 நாளன்று வெளியிடப்பட்டபோது மொத்த வாக்காளர்களின்



எண்ணிக்கை 4,79,78,404 என இருந்தது. 7-1-2000 அன்று நிலவரப்படி வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்கப்பட வேண்டிய மீதமுள்ள வாக்காளர்களின் எண்ணிக்கை 1.72 கோடியாக இருந்தது. முதலில் மேற்கொண்ட செயல்முறையில் ஏற்பட்ட நடைமுறை சிக்கல்களினால் இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் 2000ஆம் ஆண்டு மே மாதம் வழங்கிய திருத்திய வழிமுறைகளின்படி விடுபட்ட வாக்காளர்களுக்குப் புகைப்பட அடையாள அட்டை வழங்கும் பணியை டிஜிட்டல் முறைப் புகைப்படக் கருவிகளைக்கொண்டு உடனடி வழங்கு முறை அல்லது பின்வழங்கு முறையில் மேற்கொள்ளலாம் என முடிவெடுக்கப்பட்டது.

2000 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் வாக்காளர் பட்டியல்கள் திருத்தம் மேற்கொள்ள வேண்டியிருந்ததால் மாநிலம் தழுவிய அனைத்து சட்டமன்றத் தொகுதிகளிலும் ஒரே நேரத்தில் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்குத் தீவிர நடவடிக்கை எடுக்கும்படி இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம் 2000 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் அறிவுறுத்தியது.

தமிழகத்திலுள்ள 234 சட்டமன்றத் தொகுதிகளிலும் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைகள் வழங்குவதற்கான இரண்டாம் கட்ட பணிகளைச் செயல்படுத்துவதற்கு திறந்தவெளி ஒப்பந்தப் புள்ளிகள்/விலைப்புள்ளிகள் கோரப்பட்டு அதன் அடிப்படையில் மூன்று நிறுவனங்கள் இப்பணியைச் செய்து முடிக்க நியமனம் செய்யப்பட்டன. இவ்வாறு 2000 ஆம் ஆண்டு ஜூலை மாதம் ஆரம்பிக்கப்பட்ட இரண்டாம் கட்டப் பணி 2001 ஆம் ஆண்டு மார்ச் திங்களில் முடிவுற்றது. இதன் முடிவில் சுமார் 52 இலட்சம் வாக்காளர்களுக்கு புகைப்பட அடையாள அட்டைகள் வழங்கப்பட்டன. மேற்கண்ட நிறுவனங்கள் செய்த பணிக்கான நிலுவைத் தொகை தற்போது வழங்கப்பட்டு வருகிறது.

இந்தியத் தலைமைத் தேர்தல் ஆணையம், தீவிர சிறப்பு முறையில் வாக்காளர் பட்டியல்களைத் திருத்தம் செய்யும்படி தற்போது உத்திரவிட்டுள்ளது. இந்தத் திருத்த நடவடிக்கைகள் முடிவுற்று 25-3-2002 அன்று வாக்காளர் பட்டியல் இறுதியாக வெளியிடப்படும். தற்போதைய தீவிர திருத்தமுறை வாக்காளர் பட்டியல் இறுதியாக வெளியிடப்பட்டபின் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை வழங்குவதற்கான அடுத்த கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இப்பணியில் ஈடுபட்ட தமிழ்நாடு மின்னணு நிறுவனத்திற்கும் மற்ற மூன்று நிறுவனங்களுக்கும் புகைப்பட அடையாள அட்டை தயாரித்து வழங்கியமைக்காக, பட்டுவாடா

[2001 செப்டம்பர் 13

செய்யப்படவேண்டிய செலவினங்களுக்காக ரூ.6.25 கோடி இந்தத் துணைத் தலைப்பின்கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

வாக்காளர் பட்டியல் கணினிமயமாக்கப்பட்டதைத் தொடர்ந்து, தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்திலும் மற்றும் மாவட்டத் தேர்தல் அலுவலகங்களிலும் தேவையான நிலையான அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தும் வகையில் மாவட்டத் தலைமை அலுவலகங்களுக்குத் தலா ஐந்து கணினிகளும் மற்றும் ஒரு பகிர்வானும் மற்றும் தலைமைத் தேர்தல் அதிகாரி அலுவலகத்தில் 10 கணினிகளும், ஒரு பகிர்வானும் நிறுவப்பட்டுள்ளன. இந்த வசதிகள் புதியதாகத் தோற்றுவிக்கப்பட்டுள்ள அரியலூர் மாவட்டத்திலும் கூடிய விரைவில் ஏற்படுத்தப்படவுள்ளன.

வாக்காளர் பட்டியல் சம்பந்தப்பட்ட கணினி வேலைகள் மற்றும் ஒவ்வொரு வாக்காளர் பட்டியல் திருத்த முறையைத் தொடர்ந்து அடிப்படை விவரங்களைக் கணினியில் உள்ளீடு செய்வதற்கும் நிர்வகிப்பதற்கும், மேற்கண்ட எல்லா அலுவலகங்களிலும், கணினி வல்லுநர்கள் ஒப்பந்த அடைப்படையில் 24-3-1999 முதல் நியமனம் செய்யப்பட்டுள்ளனர். இந்தத் தேர்தல் முறை நிர்வாகத்தையும், வாக்காளர் புகைப்பட அடையாள அட்டைத் திட்டம் மற்றும் இதர திட்டத்தினை மேலாண்மை செய்வதற்காகவும், மத்திய அரசு நிறுவனமாகிய சி.எம்.சி. லிமிடெட் (CMC Limited) என்ற நிறுவனம் தலைமைத் தேர்தல் ஆணையத்தின் நெறிமுறைகளின்படி நியமிக்கப்பட்டுள்ளது. இவர்களுக்கு மாதந்தோறும் முதலில் சேவைக் கட்டணம் மட்டும் வழங்கப்பட்டது. பின்னர் வாக்காளர் புகைப்பட அடையாள அட்டை தயாரித்து வழங்கும் திட்டம் மேலாண்மைக்காக சி.எம்.சி. லிமிடெட் நிறுவனம் ஒரு துணைத் திட்ட மேலாளரையும், 4 திட்ட ஒருங்கிணைப்பாளர்களையும் நியமித்துள்ளது. மேற்படி கணினிகளின் பராமரிப்பிற்கும், அதை நிர்வகிக்கும் அலுவலர்களுக்கான ஊதியத்திற்கும் மற்றும் மாநில முகவர் நிறுவனத்திற்கும் (State Level Agency) அளிக்க வேண்டிய மாதாந்திர செலவினங்கள் இந்தத் துணைத் தலைப்பின்கீழ் மேற்கொள்ளப்படுகின்றன. இதில் சரிபாதி செலவினத்தை மத்திய அரசு ஏற்றுக்கொள்ளும்.

**109. ஊராட்சிகள், உள்ளாட்சி மன்றங்களுக்குத் தேர்தல்: நடத்துவதற்கான செலவுகள்**

மதிப்பீடு *ரூ.40,19,95,000*

ஊராட்சி மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தேர்தல் நடத்துவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 13]

**2070. ஏனைய நிர்வாகப் பணிகள்**

**எபி. மாநில தேர்தல் ஆணையம்**

மதிப்பீடு *ரூ.95,86,000*

மாநில தேர்தல் ஆணையத்தின் நிர்வாகப் பணிகளுக்கு இத்தலைப்பின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

கூட்டுக: திருப்பி வசூலிப்பவை *ரூ.11,17,000*

இத்துறையில் பணிபுரியும் அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் பண்டிகை முன்பணம் போன்ற இனங்களிலிருந்து திரும்பப் பெறப்படும் தொகையைத் திருப்பி வசூலித்தல் என்ற தலைப்பின் கீழ் ரூ.11,17,000/- ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2001 செப்டம்பர் 13

# இணைப்பு - II

## உள்ளாட்சித் தேர்தல்கள்

இந்திய அரசமைப்பின் 73-வது மற்றும் 74-வது சட்டத் திருத்தங்கள் மக்களாட்சி முறையில் உள்ளாட்சி அமைப்புகள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அதன் வாயிலாகப் பரவலாக்கப்பட்ட வலுவான உள்ளாட்சி நிர்வாகத்திற்கும், பொருளாதார வளர்ச்சிக்கும், சமூக நீதிக்கும் உறுதியளிக்கிறது. மேற்கூறிய 73-வது சட்டத் திருத்தம் ஊராட்சிகளில் அடித்தள அளவில் பரவலாக்கப்பட்ட ஜனநாயக அமைப்பிற்கு வழிவகுக்கிறது.

2. அரசமைப்புச் சட்டத்தில் பின்வரும் சில சிறப்பம்சங்களை உள்ளடக்கிய வகையில் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் தற்போதைய அரசால் முந்தைய பதவிக் காலத்தில் இயற்றப்பட்டது. (1) சிற்றூராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் மாவட்ட ஊராட்சி என்னும் மூன்றடுக்கு ஆட்சி முறையை உருவாக்கி ஆளுதல் (2) தங்களது வளர்ச்சிப் பணியில் மக்களும் பங்கெடுத்துக்கொள்ளும் பொருட்டு கிராம சபைகளை உருவாக்குதல் (3) உள்ளாட்சி அமைப்புகளுக்கென மாவட்டத் திட்டக் குழுக்களை உருவாக்குதல் (4) உள்ளாட்சி அமைப்புகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய பணிகள் குறித்தான பட்டியல் உறுதியாக்கம் செய்தல் (5) மூன்றடுக்கு அமைப்பில் உள்ள அனைத்து பதவியிடங்களுக்கும் ஆதிதிராவிடர், பழங்குடியினருக்கென அந்தந்த உள்ளாட்சி அமைப்பு பகுதியில் உள்ள மக்கள் தொகை விகிதாச்சாரத்திற்கேற்ப சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்தல் (6) உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு பிரிவினைகள் செய்ய வழிவகுத்தல் (7) உள்ளாட்சி அமைப்புகளுக்கு குறித்த காலத்தில் முறையாகவும், சுதந்திரமாகவும், நியாயமாகவும் தேர்தல் நடைபெறுவதை உறுதி செய்தல் (8) சட்டமன்ற உறுப்பினர்களும், நாடாளுமன்ற உறுப்பினர்களும் மாவட்ட ஊராட்சி நடவடிக்கைகளில் வாக்களிக்கும் உரிமை இன்றி, பதவி வழி உறுப்பினர்களாகப் பங்குபெற வகை செய்தல் மற்றும் (9) கிராமப்புற உள்ளாட்சி அமைப்பின் ஆட்சி எல்லையிலிருந்து பேரூராட்சிகளை நீக்குதல்.

3. நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் கீழ் மட்டத்திலிருந்து ஜனநாயக முறைப்படி பரவலாக்கப்பட்ட அமைப்பினை உருவாக்குவதே மேற்கூறிய



2001 செப்டம்பர் 13]

74-வது அரசியல் சட்டத் திருத்தத்தின் நோக்கமாகும். தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920, சென்னை நகர மாநகராட்சி சட்டம் 1919, மதுரை நகர மாநகராட்சி சட்டம் 1971 மற்றும் கோயம்புத்தூர் நகர மாநகராட்சி சட்டம் 1981 ஆகியன கீழ்வரும் நோக்கங்களுக்கு ஏற்றவாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளன:

(1) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் வார்டு பிரிவினைக்கு வரையறை செய்தல் (2) அனைத்து பதவிகளிலும் பெண்களுக்கு மூன்றில் ஒரு பங்கை சுழற்சி முறையில் ஒதுக்கீடு செய்தல் (3) அனைத்து பதவிகளிலும் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான அந்தந்த நகர்ப்புற பகுதிகளில் உள்ள அவ்வின மக்கள் தொகையின் விகிதாச்சாரத்திற்கேற்ப சுழற்சி முறையில் இட ஒதுக்கீடு செய்தல் (4) நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளுக்குத் தொடர்ச்சியாக குறித்த காலங்களில் சுதந்திரமாகவும் நியாயமாகவும் தேர்தல்கள் நடத்துதல் (5) ஒவ்வொரு நகர்ப்புற அமைப்பும் மக்கள் பிரதிநிதிகளைக்கொண்டு நிலையாகத் தொடர்ந்து செயல்பட வழிவகை செய்தல் (6) சட்டமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்ற உறுப்பினர்களும் பேரூராட்சிகள் நகராட்சிகள் மற்றும் மாநகராட்சிகளின் நடவடிக்கைகளில் வாக்களிக்கும் உரிமை இன்றி பதவி வழி உறுப்பினர்களாக பங்குபெற வழிவகை செய்தல் (7) கிராமப்புற உள்ளாட்சி அமைப்பின் ஆட்சி எல்லையிலிருந்து பேரூராட்சிகளை நீக்கி நகர்ப்புற உள்ளாட்சி அமைப்பின்கீழ் கொணர்தல்.

கோயம்புத்தூர் மாநகராட்சி சட்டம், புதிதாக உருவாக்கப்பட்டுள்ள திருச்சிராப்பள்ளி, திருநெல்வேலி மற்றும் சேலம் மாநகராட்சிகளுக்கும் பொருந்தும். நகராட்சி மற்றும் மாநகராட்சிகள் சம்பந்தப்பட்ட அனைத்து சட்டங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு தமிழ்நாடு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகள் சட்டம் 1998 (தமிழ்நாடு சட்டம் 9/1999) இயற்றப்பட்டு வெளியிடப்பட்டுள்ளது.

### உள்ளாட்சிகளுக்குத் தேர்தல் நடத்துதல்

4. சாதாரண தேர்தல்கள் என்ற சொற்றொடர், ஒரு உறுப்பினருக்கென நிர்ணயிக்கப்பட்ட காலம் முடிவுறும்போது அதனை நிரப்ப நடத்தப்படும் தேர்தலைக் குறிக்கும். அதாவது, ஐந்து ஆண்டுகளுக்கு ஒரு முறை

[2001 செப்டம்பர் 13

நடத்தப்படும் பொதுத் தேர்தல்களை இது குறிக்கும். தற்செயல் தேர்தல்கள் என்பது கீழ்க்கண்ட காரணங்களின் விளைவாக நடத்தப்படும் இடைத் தேர்தல்களைக் குறிக்கும்:

(1) உறுப்பினரின் மரணம்

(2) உறுப்பினர் தனது பதவியை ராஜினாமா செய்தல்

(3) தேர்தல் மனுவினால் உறுப்பினர் பதவியை இழத்தல்

(4) சட்டத்தில் குறிப்பிட்டுள்ள தகுதியின்மைகளுக்கு ஆளாகி, பதவியை இழத்தல்

**தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்**

5. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையமானது, இந்திய அரசமைப்புச் சட்டம் பிரிவு 243K மற்றும் 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டம் பிரிவு 239-ன்படியும் உள்ளாட்சி அமைப்புகளின் அனைத்து தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியலைத் தயாரிப்பதற்கும், தேர்தல் நடத்துவதற்கான கண்காணிப்பு, நெறிப்படுத்துகை, கட்டுப்பாட்டினை உறுதிப்படுத்துவதற்காக தோற்றுவிக்கப்பட்ட ஒரு சட்ட ரீதியான அமைப்பாகும். அனைத்து உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல்களையும் நடத்தும் பொறுப்பு, தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையாளரின் தலைமையில் இயங்கும் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. 1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின்கீழ் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர், இரண்டு ஆண்டுகளுக்குப் பதவி வகிக்கலாம். மொத்தத்தில் ஆறு ஆண்டுகளுக்கு மிகைப்படாமல் தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையர் மேற்கொண்டு இருமுறை தொடர்ந்து மறு நியமனம் செய்யப்படலாம். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையராக நியமிக்கப்பட்டவர் தனது பதவிக் காலத்தில் 62 வயதை நிறைவு செய்தால் பதவியிலிருந்து ஓய்வு பெறுவார்.

6. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தின் முதல் ஆணையாளர் அரசால் நியமனம் செய்யப்பட்டு 15-7-1994 அன்று பொறுப்பேற்றுக் கொண்டார். இரண்டாவது மாநிலத் தேர்தல் ஆணையாளரின்



2001 செப்டம்பர் 13]

பதவிக்காலம் 15-7-1998 முதல் 10-2-2000 வரையாகும். தற்பொழுதுள்ள மூன்றாவது மாநிலத் தேர்தல் ஆணையாளர் 14-2-2000 அன்று பொறுப்பேற்றுள்ளார். தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையாளருக்கு உதவியாக ஒரு முதுநிலை இந்திய ஆட்சிப் பணி அதிகாரி செயலாளராகவும் மற்றும் தலைமைச் செயலகத்தின் நிதி, சட்டத் துறைகளிலிருந்தும் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நகராட்சி நிர்வாகம் முதலிய துறைகளிலிருந்து நியமிக்கப்பட்ட மூத்த அதிகாரிகளும், இதர பணியாளர்களும் செயல்புரிகின்றனர். தேவையான உள் அமைப்புகளுடனும், போதிய வசதிகளுடனும் மாநிலத் தேர்தல் ஆணைய அலுவலகம் நிறுவப்பட்டு வடபழனி, சென்னை-26 என்னும் இடத்தில் தனியார் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது.

**உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல் 1996**

7. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம், உள்ளாட்சித் தேர்தல்களை 1996ஆம் ஆண்டு அக்டோபர் திங்களில் நடத்துவதற்கு அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டது. இது சிக்கலான பொறுப்பு நிறைந்த பணியாகும். தேர்தல் நடத்துவதற்கான சட்டம், விதிகள், அறிவுரைகள், நடைமுறைகள் புதிதாக உருவாக்கப்பட்டன. அனைத்து உள்ளாட்சி அமைப்புகளுக்கும் ஒரே நேரத்தில் தேர்தல் நடத்துவதென்பது இந்தியாவில் எந்த மாநிலமும் அனுபவித்திராத ஒரு கூடுதல் சுமையாகும். தேர்தல் பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு எடுக்கப்படும் பெரிய நடவடிக்கைகள் மட்டுமல்லாது, மிக அதிக அளவிலான வாக்குச் சாவடிகள், வாக்குச் சீட்டுகளின் எண்ணிக்கையிலான வாக்குச் சாவடிகள், பணியமர்த்தப்படும் தேர்தல் பணியாளர்கள் மற்றும் காவல் எண்ணிக்கை, பணியமர்த்தப்படும் தேர்தல் பணியாளர்கள் மற்றும் காவல் துறையினரின் எண்ணிக்கை, வாக்களிப்போரின் எண்ணிக்கை, போட்டியின் தீவிரம் ஆகிய காரணங்களால் சட்டமன்ற மற்றும் நாடாளுமன்றப் பொதுத் தேர்தல்களை ஒப்பிடுகையில் உள்ளாட்சித் தேர்தல்கள் அளவிலும் தரத்திலும் மிகப் பிரம்மாண்டமானதும், கடுமையானதும் ஆகும். சட்டமன்றத்திற்கும் நாடாளுமன்றத்திற்கும் 273 (234+39=273) மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பதவி இடங்கள் ஆனால் ஊரக உள்ளாட்சி அமைப்புகளுக்கு மட்டுமே தேர்ந்தெடுக்கப்பட

[2001 செப்டம்பர் 13

வேண்டிய பதவி இடங்கள் 1,17,284 ஆகும். உள்ளாட்சி அமைப்புத் தேர்தல்களுக்கு மொத்தம் 22,301 வகையான வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டன. ஆனால் சட்டமன்றம் மற்றும் நாடாளுமன்றத்திற்கு மொத்தம் 273 வகையான வாக்குச் சீட்டுகள் மட்டுமே அச்சடிக்கப்பட்டன.

8. தற்போது தமிழ்நாட்டில் 12,618 சிற்றூராட்சிகளும், 385 ஊராட்சி ஒன்றியங்களும், 29 மாவட்ட ஊராட்சிகளும் உள்ளன. இந்த மூன்று வகையான அமைப்புகளில் உள்ள வார்டுகள் மற்றும் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பதவியிடங்கள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**அட்டவணை - 1**

| நாட்டுப்புற உள்ளாட்சி அமைப்பு | மொத்த வார்டுகள் எண்ணிக்கை | மொத்தப் பணியிடங்கள் | |
|---|---|---|---|
| | | உறுப்பினர்கள் | தலைவர்கள் |
| சிற்றூராட்சி | 41,155 | 97,512 | 12,618 |
| ஊராட்சி ஒன்றியம் | 6,505 | 6,505 | .. |
| மாவட்ட ஊராட்சி | 649 | 649 | .. |
| **மொத்தம்** | **48,309** | **1,04,666** | **12,618** |

9. மூன்றடுக்கு நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள 6 மாநகராட்சிகள், 102 நகராட்சிகள் மற்றும் 611 பேரூராட்சிகளுக்கு நேரடித் தேர்தல்கள் மூலம் தேர்ந்தெடுக்கப்பட வேண்டிய பதவியிடங்கள் பின்வருமாறு:—



2001 செப்டம்பர் 13]

**அட்டவணை - 2**

**நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் உள்ள வார்டுகள் மற்றும் பதவியிடங்களின் விவரம்**

| நகர்ப்புற உள்ளாட்சி | எண்ணிக்கை | மொத்த வார்டுகள் | மொத்த உறுப்பினர்கள் | மொத்த மேயர்/ தலைவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| மாநகராட்சிகள் | 6 | 474 | 474 | 6 |
| நகராட்சிகள் | 102 | 3,392 | 3,392 | 102 |
| பேரூராட்சிகள் | 611 | 9,794 | 9,794 | 611 |
| மொத்தம் | **719** | **13,660** | **13,660** | **719** |

மொத்தம் உள்ள 636 பேரூராட்சிகளில், 25 பேரூராட்சிகள் சிற்றூராட்சிகளாக மாற்றப்பட்டுள்ளன. எனினும், அப்பகுதிகளில் தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர்கள் தொடர்ந்து பதவியாற்ற அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

**சாதாரணத் தேர்தல்கள்**

10. தமிழ்நாட்டில் உள்ளாட்சிகளுக்கான சாதாரணத் தேர்தல்கள் இரு கட்டமாக முறையே 9-10-1996 மற்றும் 12-10-1996 ஆகிய நாட்களில் நடைபெற்றது. நேரடித் தேர்தல்கள் யாவும் 17-10-1996 அன்றுடன் முடிக்கப்பட்டது. குற்றாலம் மற்றும் பவானிசாகர் பேரூராட்சிகளுக்கான சாதாரணத் தேர்தல்கள் ஜூன் 1998-ல் நடத்தப்பட்டன. புதிதாக ஏற்படுத்தப்பட்ட ஏற்காடு ஊராட்சி ஒன்றியத்திற்கும் மற்றும் அதில் அடங்கியுள்ள 9 சிற்றூராட்சிகளுக்கும் பிப்ரவரி 2000-ல் தேர்தல்கள் நடத்தப்பட்டன. நேரடித் தேர்தல்கள் முடிவுற்றதும் மாநிலத் தேர்தல் ஆணையம் மாவட்ட ஊராட்சி, ஊராட்சி ஒன்றியங்களுக்கு தலைவர், துணைத் தலைவர் பதவியிடங்களுக்கு மறைமுகத் தேர்தல்களையும் நடத்தியது. இதைத் தவிர மாநகராட்சிகளுக்குத் துணை மேயர் பதவிக்கும் மற்ற நகர்ப்புற அமைப்புகளுக்குத் துணைத் தலைவர் பதவிக்கும் தேர்தல்களையும் நடத்தியது. இந்த தேர்தல்கள் 25-10-1996 அன்று நடைபெற்றன.

[2001 செப்டம்பர் 13

11. மேற்படி மறைமுகத் தேர்தல்கள் மட்டுமல்லாது, மாநகராட்சிகளில் வார்டு குழுத் தலைவர் மற்றும் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் சட்டக் குழுக்கள் மற்றும் நிலைக் குழுக்களின் உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க மாநிலத் தேர்தல் ஆணையத்தால் தேர்தல்கள் நடத்தப்பட்டன. மொத்தத்தில் உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தல்கள் அனைத்து சாராரும் பாராட்டும் வகையில் சுதந்திரமாகவும், நேர்மையாகவும் நடத்தப்பட்டன.

**இடைத் தேர்தல்கள்**

12. உள்ளாட்சி அமைப்புகளில் ஏற்படும் காலி இடங்களின் அடிப்படையில் மாநிலத் தேர்தல் ஆணையர் ஒவ்வொரு ஆண்டும் இருமுறை இடைத் தேர்தல்களை நடத்திட வேண்டியுள்ளது. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையம் தற்செயல் காலியிடங்களை நிரப்பிட இதுவரை டிசம்பர் 1996, ஜூன் 1997, நவம்பர் 1997, ஜூன் 1998, டிசம்பர் 1998,மே 1999, ஜனவரி 2000, ஜூலை 2000 மற்றும் அக்டோபர் 2000 ஆகிய 9 இடைத் தேர்தல்கள் நடத்தியுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

**அட்டவணை - 3**

**ஊராட்சி அமைப்புகளில் ஏற்பட்ட காலி பதவியிடங்களுக்கு இடைத் தேர்தல்கள் நடத்தப்பட்ட விவரங்கள்**

| இடைத் தேர்தல் நடத்தப்பட்ட மாதமும், வருடமும் | சிற்றூராட்சி வார்டு உறுப்பினர் | சிற்றூராட்சித் தலைவர் | ஊராட்சி ஒன்றிய வார்டு உறுப்பினர் | மாவட்ட ஊராட்சி வார்டு உறுப்பினர் | மொத்தம் |
|---|---|---|---|---|---|
| டிசம்பர் 1996 | 1,800 | 22 | 7 | .. | 1,829 |
| ஜூன் 1997 | 242 | 35 | 13 | 1 | 291 |
| நவம்பர் 1997 | 289 | 24 | 9 | 2 | 324 |
| ஜூன் 1998 | 271 | 24 | 9 | 2 | 306 |
| டிசம்பர் 1998 | 859 | 65 | 33 | .. | 957 |
| மே 1999 | 477 | 52 | 16 | 4 | 549 |
| ஜனவரி 2000 | 734 | 63 | 26 | 4 | 827 |
| ஜூலை 2000 | 560 | 81 | 18 | 4 | 663 |
| அக்டோபர் 2000 | 388 | 81 | 16 | 1 | 486 |
| மொத்தம் | **5620** | **447** | **147** | **18** | **6232** |



2001 செப்டம்பர் 13]

**அட்டவணை - 4**

**நகராட்சி அமைப்புகளில் ஏற்பட்ட காலி பதவியிடங்களுக்கு இடைத் தேர்தல்கள் நடத்தப்பட்ட விவரங்கள்**

| இடைத் தேர்தல்கள் நடத்தப்பட்ட மாதம்/ வருடம் | மாநகராட்சி | | நகராட்சி | | பேரூராட்சி | | |
|---|---|---|---|---|---|---|---|
| | உறுப்பினர் | மேயர் | உறுப்பினர் | தலைவர் | உறுப்பினர் | தலைவர் | மொத்தம் |
| (1) | (2) | (3) | (4) | (5) | (6) | (7) | (8) |
| டிசம்பர் 1996 | .. | .. | 2 | .. | 22 | .. | 24 |
| ஜூன் 1997 | 3 | .. | 8 | 1 | 25 | .. | 37 |
| நவம்பர் 1997 | .. | .. | 13 | .. | 30 | 1 | 44 |
| ஜூன் 1998 | 2 | .. | 7 | .. | 45 | 3 | 57 |
| டிசம்பர் 1998 | 3 | .. | 11 | .. | 74 | 5 | 93 |
| மே 1999 | 4 | .. | 7 | .. | 36 | 2 | 49 |
| ஜனவரி 2000 | 1 | .. | 12 | .. | 65 | 1 | 79 |
| ஜூலை 2000 | 4 | .. | 11 | .. | 73 | 3 | 91 |
| அக்டோபர் 2000 | 1 | .. | 10 | .. | 41 | 2 | 54 |
| மொத்தம் | 18 | .. | 81 | 1 | 411 | 17 | 528 |

**சாதாரணத் தேர்தல்கள் 2001**

13. 1996 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கு நடத்தப்பெற்ற சாதாரணத் தேர்தல்களுக்குப் பிறகு, அக்டோபர் திங்கள் 2001 ஆம் ஆண்டில் சாதாரணத் தேர்தல்கள் நடத்தப்பெற வேண்டும். இத்தேர்தல்களுக்கான வாக்காளர் பட்டியல் தயாரித்தல், வாக்குச் சாவடிகள் அமைத்தல், அறிவுரைக் கையேடுகள் தயாரித்தல் போன்ற முதற்கட்டப் பணிகள் மாநிலத் தேர்தல் ஆணையத்தால் ஏற்கெனவே தொடங்கப்பட்டுவிட்டன. ஊராட்சி சாதாரணத் தேர்தல் இலகுவாகவும், சுதந்திரமாகவும் நடைபெற இவ்வரசால் கீழ்க்கண்ட முடிவுகள்

[2001 செப்டம்பர் 13

எடுக்கப்பட்டு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன:

1. தற்பொழுது உள்ள உள்ளாட்சி அமைப்பு வார்டுகளின் எல்லைகள் மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் எல்லைகளிலும் மாற்றம் இராது.
2. தாழ்த்தப்பட்டோர், பழங்குடியினர் மற்றும் பெண்களுக்கான இட ஒதுக்கீட்டைப் பொறுத்தமட்டில் 1996 ஆம் ஆண்டு உள்ளாட்சி அமைப்புகளுக்கான தேர்தலில் பின்பற்றப்பட்ட முறை தற்பொழுதும் தொடரும். பின்தங்கிய வகுப்பினருக்கு இட ஒதுக்கீடு இராது.
3. 1991 ஆம் ஆண்டு மக்கள் தொகை கணக்கீட்டு அடிப்படையில் 2001 ஆம் ஆண்டில் வழக்கமாக நடைபெறவுள்ள தேர்தல்களுக்கும் பின்பற்றப்படும்.
4. தமிழ்நாடு மாநிலத் தேர்தல் ஆணையத்தால் குறிப்பிடப்படும் அடையாளம் காட்டும் ஆவணங்களை ஒவ்வொரு வாக்காளரும் கட்டாயமாக அளிக்க வேண்டும்.
5. 1996 ஆம் ஆண்டு தேர்தல்களுக்குத் தோற்றுவிக்கப்பட்ட கூடுதல் பணியிடங்கள் போலவே, 2001 ஆம் ஆண்டு உள்ளாட்சி தேர்தல்களுக்கும் தோற்றுவிக்கப்பட்டுள்ளன.
6. வார்டுகள் மற்றும் தலைவர்களுக்கான இட ஒதுக்கீடு 1996 தேர்தல்களில் கடைப்பிடிக்கப்பட்டவாறே, 2001 உள்ளாட்சித் தேர்தல்களுக்கும் கடைப்பிடிக்க வேண்டுமென முடிவு செய்யப்பட்டது. 10 ஆண்டுகளுக்குப் (இரண்டு பதவிக்காலம்) பின் சுழற்சி முறையைக் கடைப்பிடிக்க விதிகளில் தகுந்த வழிவகைகள் செய்யப்பட்டுள்ளன.

2001 ஆம் ஆண்டு மே திங்களில் நடைபெற்ற சட்டமன்ற தேர்தலின்போது தயாரிக்கப்பட்ட வாக்காளர் பட்டியலில் ஏராளமான வாக்காளர்களின் பெயர்கள் விடுபட்டுள்ளன என்றும், அதனை சீராய்வு செய்ய வேண்டுமென்றும் பெரும்பான்மையான அரசியல் கட்சி உறுப்பினர்கள் கருத்து தெரிவித்துள்ளதன் அடிப்படையில் உள்ளாட்சித் தேர்தலுக்கு முன்பாக வாக்காளர் பட்டியலைச் சீராய்வு செய்ய பரிசீலிக்கும்படி இந்தியத் தேர்தல் ஆணையம் கேட்டுக்கொள்ளப்பட்டது. ஆனால், இந்தியத் தேர்தல் ஆணையம் 1-1-2002-ஐத் தகுதி நாளாக வைத்து வாக்காளர் பட்டியலை திருத்தும் பணியை ஏற்கெனவே



2001 செப்டம்பர் 13]

நிர்ணயித்துவிட்டதால் மிகக் குறுகிய காலத்தில், வாக்காளர் பட்டியலைத் திருத்துவது என்பது இயலாது என்று தெரிவித்துள்ளது.

**வரவு செலவு ஒதுக்கீடு**

14. ஊராட்சி அமைப்புகளுக்கு சாதாரண மற்றும் இடைத் தேர்தல்கள் நடத்திடுவதற்கான நிதியை அரசு வழங்குகிறது. நகராட்சி அமைப்புகளுக்கான சாதாரணத் தேர்தல் மற்றும் இடைத் தேர்தல்கள் நடத்துவதற்கான செலவினங்களை நகராட்சி அமைப்புகள் தங்கள் நிதியிலிருந்தே மேற்கொள்கின்றன. இதற்கு முந்தைய ஆண்டுகளில் சாதாரண மற்றும் இடைத் தேர்தல் நடத்தியதற்கு செய்யப்பட்ட உள்ளபடியான செலவினம் மற்றும் 2001-2002 ஆம் ஆண்டிற்கான சாதாரணத் தேர்தல் வரவு செலவுத் திட்ட மதிப்பீடு விவரங்கள் பின்வருமாறு:

| வ. எண் | கணக்குத் தலைப்பு | 1996-97 உள்ள படியான செலவு | 1997-98 உள்ள படியான செலவு | 1998-99 உள்ள படியான செலவு | 1999-2000 உள்ள படியான செலவு | 2000-2001 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு | 2000-2001 திருத்திய மதிப்பீடு | 2001-2002 வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | | |
| 1. | 2070-00- ஏனைய நிர்வாக பணிகள் 00Ll.ஏபி மாநிலத் தேர்தல் ஆணையம் | 72.19 | 67.41 | 73.39 | 76.49 | 90.47 | 78.58 | 95.86 |
| 2. | 2015-00-109- செலவுகள்- ஊராட்சி உள்ளாட்சி அமைப்பு தேர்தல் நடத்துதல் 1.ஏஏ. ஊராட்சி ஒன்றியத் தேர்தல்கள் | 3033.28 | 16.66 | 17.31 | 65.44 | 33.11 | 27.44 | 3879.95 |
| 3. | 2015-00-109.1. ஏடி. நகர்ப்புற உள்ளாட்சித் தேர்தல் நடத்துதல் | 746.11 | - | - | - | 0.03 | - | 140.00 |

[2001 செப்டம்பர் 13

# இணைப்பு - III

*(55ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 41

## ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும் குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு-2001-2002

1. இக்கோரிக்கையில் கீழ்க்காணும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன:

| | | (ரூபாய்) |
|---|---|---|
| 2071 | ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுகால நன்மைகளும் | 30,14,31,67,000 |
| 2235 | சமூக பாதுகாப்பும் நலனும்— | |
| 60 | ஏனைய சமூகப் பாதுகாப்பு, நலத் திட்டங்கள் | 14,85,70,000 |
| | மொத்தம் | **30,29,17,37,000** |

2. இந்த மானியத்தின்கீழ் முதலாவது முக்கிய செலவினம், அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பானதாகும். இந்த மானியக் கோரிக்கையில் விடுதலை போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப்படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும்.

### I. அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள்:

3. ஓய்வுகால நன்மைகளைப் பொறுத்தமட்டில் மத்திய அரசு, அதன் பணியாளர்களுக்குப் பின்பற்றும் அதே நடைமுறைகளையே மாநில அரசும் பின்பற்றுகிறது. ஓய்வூதியம், ஆற்றிய பணிக்கான பணிக்கொடை, இறப்பு பணிக்கொடை ஆகியவற்றின் கணக்கிடும் நடைமுறை மற்றும் பணிக்கொடைக்கான உச்சவரம்பை உயர்த்துதல் போன்ற பல்வேறு ஓய்வுகால நன்மைகளை மாநில அரசு மத்திய அரசைப் பின்பற்றி



2001 செப்டம்பர் 13]

திருத்தியமைத்துள்ளது. இம்மாநிலத்தில் உள்ள ஓய்வூதியம் பெறுபவர்கள், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் குறித்த விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் | 2,10,087 |
| 2. | ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் | 57,856 |
| 3. | அரசுப் பணியாளர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 1,01,670 |
| 4. | ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 27,983 |
| 5. | ஏனைய வகையில் ஓய்வூதியம் பெறுபவர்கள் | 43,041 |
| | மொத்தம் | **4,40,637** |

### 4. ஓய்வூதியம்:

அரசுப் பணியாளர் ஒருவர், குறைந்தது 10 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்திருந்தால், அவர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர். ஓய்வுபெறும்பொழுது கடைசியாகப் பெற்ற மாத ஊதியத்தில் 50 விழுக்காடு அல்லது ஓய்வுபெற்ற நாளுக்கு முன்னர் கடைசி 10 மாத காலஅளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 விழுக்காடு. இதில் எது அதிகமோ அந்தத் தொகையே ஓய்வூதியமாக நிர்ணயிக்கப்படுகிறது. உயரளவாக 30 ஆண்டுகள் தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு முழு ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. 30 ஆண்டுகளுக்குக் குறைவான தகுதிப் பணி உள்ளவர்களுக்கு விகிதாச்சார அடிப்படையில் ஓய்வூதியம் வழங்கப்படும். மத்திய அரசு ஓய்வூதியர்களுக்கு/குடும்ப ஓய்வூதியர்களுக்கு வழங்கியதற்கு இணையாக மாநில அரசு 1-1-1996 முதல் ஓய்வூதியத்தை/குடும்ப ஓய்வூதியத்தை மாற்றி ஆணையிட்டுள்ளது. குறைந்த அளவு ஓய்வூதியத்தை மாதமொன்றிற்கு ரூபாய் 375-லிருந்து ரூபாய் 1275-ஆக 1-1-1996 முதல் உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது.

### 5. பணிக்கொடை:

#### (i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை:

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு, ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. (முடிவு ...

[2001 செப்டம்பர் 13

ஒவ்வொரு ஆறுமாதப் பணிக்கும் ½ மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது ஆற்றிய பணிக்கான ஒரே நேரத்தில் வழங்குகிற ஒட்டுமொத்தத் தொகையாகும். அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் கூடுதலாக இத்தொகை ஆற்றிய பணிக்காக வழங்கப்படுகிறது.

**(ii) இறப்புப் பணிக்கொடை:**

பணியில் இருக்கும்போது மரணமடைவோர் நேர்வில் பின்வரும் வீதங்களில் இறப்புப் பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:

| | பணிக்காலம் | பணிக்கொடையின் அளவு |
|---|---|---|
| 1. | ஓராண்டுக்குக் குறைவாக | இரு மடங்கு மாத ஊதியம் |
| 2. | ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | ஆறு மடங்கு மாத ஊதியம் |
| 3. | ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | பன்னிரண்டு மடங்கு மாத ஊதியம் |
| 4. | இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சம் 33 மடங்கு மாத ஊதியம் என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறுமாதத் தகுதிப் பணிக்கும் அரை மாதச் சம்பளம். அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக்கொடை எந்த இனத்திலும் ரூ. 3.50 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது. |

**(iii) ஓய்வுகாலப் பணிக்கொடை:**

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் ஓய்வூதியத் தகுதிபெறும் பணியை முடித்திருந்தால் அவர் ஓய்வு பெறும்போது அதிகபட்சம் 16½ மடங்கு மாத ஊதியம் என்ற அளவிற்கு உட்பட்டு, அவர் பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும் மாத ஊதியத்தில் நான்கில் ஒரு



2001 செப்டம்பர் 13]

பங்குத் தொகை ஓய்வுகாலப் பணிக்கொடையாக வழங்கப்படுகிறது. ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பை ரூபாய் 2.50 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.50 இலட்சமாக 1-1-1996 முதல் உயர்த்தி, அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், 1-4-1998 அன்று அல்லது அதற்குப்பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்களுக்கு பணிக்கொடையைக் கணக்கிடும்பொழுது அவர்கள் கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும் அகவிலைப்படியைச் சேர்த்து கணக்கிடப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது.

**6. குடும்ப ஓய்வூதியம்:**

அரசுப் பணியாளர் ஒருவர் பணியாற்றும்போதோ, ஓய்வுபெற்ற பின்னரோ இறந்துவிட்டால் அவரது குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது இறந்தால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதிபெற அவருடைய பணிக்காலத்தில் ஓய்வூதியம் பெறத் தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றி இருக்க வேண்டும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும்போது இறந்துவிடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது பதவியில் நியமனம் செய்யப்படுவதற்குமுன், அவரை மருத்துவ அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர் தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும். ஓய்வுபெற்ற பின்னர் இறந்துவிட்டால் அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் இறக்கும்போது ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும், 10 ஆண்டிற்குக் குறைவாகப் பணியாற்றியிருந்து ஓய்வூதியம் பெறத் தகுதியற்றவர்களாக இருப்பவர்களைப் பொறுத்தவரை, அவர்கள் ஓய்வுபெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவர்கள் குடும்பங்களுக்கு ஒரே வீதத்தில் அதாவது அவ்வப்போது அனுமதிக்கப்படும் குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது.

குறைந்தபட்ச குடும்ப ஓய்வூதியத்தை மாதமொன்றுக்கு ரூ.375-லிருந்து ரூ.1275-ஆக 1-1-1996 முதல் உயர்த்தி, அரசு ஆணையிட்டுள்ளது. உயர்ந்தபட்ச குடும்ப ஓய்வூதியம் உயர்ந்தபட்ச சம்பள விகிதத்தின் உயரளவில் 30 விழுக்காடாக இருக்கும்.

குடும்ப ஓய்வூதியம் விதவைக்கு/மனைவியை இழந்த கணவனுக்கு அவர்கள் மறுமணம் செய்துகொள்ளும்வரை அல்லது இறக்கும்வரை இதில்

எது முந்தியதோ அதுவரை வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு இந்தக் குடும்ப ஓய்வூதியம் அவர்களுடைய குழந்தைகளுக்கு 25 வயதுவரை அளிக்கப்படுகிறது. ஆனால் அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலக் குறைவு அல்லது மனநலமின்மையுடையவராக இருந்தாலோ, உடல் ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும்.

## 7. கருணைத் தொகை வழங்குதல்:

1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்று/பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட, உதவித் தொகைபெறும் வருங்கால வைப்பு நிதிக்குத் தொகை செலுத்திய/ஓய்வூதியம் இல்லாத பணியாளரமைப்பைச் சேர்ந்த மாநில அரசுப் பணியாளர்கள் மற்றும் முன்னாள் மாவட்ட கழகப் பணியாளர்களின் குடும்பங்களுக்கு (இவர்கள் குடும்ப ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் அல்லர்) வழங்கப்படும் கருணைத் தொகையை மாதம் ரூ.150-லிருந்து ரூ.605 எனவும் அகவிலைப்படி ரூ.31 எனவும் 1-11-1997 முதல் உயர்த்தி, அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இவர்கள் 1-1-1998 அன்றும் மற்றும் அதன்பிறகும் வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வையும் பெறத் தகுதியுடையவர்கள்.

## 8. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தத் தொகையாக அளித்தல்:

ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை ஒட்டுமொத்தமாகப் பெற ஓய்வூதியம் பெறுபவர்கள் தகுதியுடையவர் ஆவர். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் விண்ணப்பிக்கப்படுமாயின், மருத்துவ பரிசோதனை இல்லாமல் ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வுபெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வுபெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக்கொண்ட நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வுபெற்றவர் அவர் ஓய்வுபெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் அல்லது ஓய்வுபெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு முழுப் பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற





நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகும் ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் வழங்கிட அரசு அனுமதியளித்துள்ளது. 1-4-1998 அன்று அல்லது அதற்குப் பிறகு ஓய்வுபெறும் அரசு ஊழியர்கள் ஓய்வூதியத்தில் மூன்றில் ஒரு பகுதி என்பதற்குப் பதிலாக 40 விழுக்காடுவரை மொத்தமாக்கிப் பெறுவதற்கு அனுமதி அளித்து அரசு ஆணையிட்டுள்ளது.

## 9. ஏனைய ஓய்வுகால நன்மைகள்:

(i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பிற்குப் பதிலாக அதிகபட்சமாக 240 நாட்கள் ஈட்டிய விடுப்பை ஒப்படைப்பு செய்து விடுப்புக் கால சம்பளம் அனுமதிக்கப்படுகிறது.

(ii) அரைச் சம்பளத்துடன்கூடிய விடுப்பில் (Half pay Leave on private Affairs) 90 நாட்களுக்கு மிகைப்படாமல், 50 விழுக்காடு விடுப்பினை ஒப்படைப்பு செய்து விடுப்புக் கால சம்பளம் பெறவும் அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவிற்கும் அரைச் சம்பள விடுப்புக்கும் முழு விடுப்புக் கால சம்பளம் வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வுபெறும் பணியாளருக்கு ஓய்வுபெற்ற பின்னர் தங்களுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விழையும் ஊருக்குச் செல்வதற்கான பணிமாற்ற பயணப்படி வழங்கப்படுகிறது.

## 10. ஓய்வூதியர்களுக்கு இதர பயன்கள்:

### (அ) அகவிலைப்படி:

(i) மத்திய அரசு பின்பற்றும் நடைமுறைக்கேற்ப ஆண்டிற்கு இரு முறை அதாவது ஜனவரி 1, ஜூலை 1 ஆகிய நாட்களிலிருந்து அகவிலைப்படி வழங்கப்படுகிறது. பணிபுரியும் பணியாளர்கள் பெறுவது போலவே, ஓய்வூதியம் பெறுபவர்களும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி தவணைத் தொகை பெறுகிறார்கள்.

(ii) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகை மீதான அகவிலைப்படியுடன் மாநில அரசின் அகவிலைப்படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**(ஆ) மருத்துவப்படி:**

ஓய்வூதியம் பெறுவோருக்கு/குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு திங்களொன்றுக்கு ரூ. 50/- மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

**(இ) பண்டிகை முன்பணம்:**

அனைத்து ஓய்வூதியம் பெறுபவர்களும் ஒரு திங்களுக்கான ஓய்வூதியத் தொகை அல்லது ரூ. 500/- இவற்றுள் எது குறைவானதோ அத்தொகையை பண்டிகை முன்பணமாகப் பெறத் தகுதியுடையவராவர்.

**(ஈ) பொங்கல் பரிசு:**

அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள், ஏனைய ஓய்வூதியம் பெறுபவர்கள்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அனைவருக்கும் பொங்கல் பண்டிகையை முன்னிட்டு பொங்கல் பரிசாக ரூ. 150 வழங்கப்பட்டுள்ளது.

**11. தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களும் அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.**

**12. திருத்திய ஓய்வூதியம்:**

1-1-1996-க்கு முன்பு ஓய்வுபெற்ற ஓய்வூதியர்களுக்கு ஓய்வூதியம்/குடும்ப ஓய்வூதியத்தை மாற்றி அமைத்து மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. எந்த நேர்விலும், முழு ஓய்வூதியம், ஊழியர் ஓய்வு பெற்றபோது வகித்த பதவிக்கான 1-1-1996 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள திருத்தப்பட்ட சம்பள விகிதத்தில் குறைந்தபட்ச சம்பளத்தில் 50 விழுக்காட்டிற்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்றும், அதேபோல, திருத்தப்பட்ட குடும்ப ஓய்வூதியம், ஓய்வூதியர்/இறந்த அரசு ஊழியர் வகித்த பதவிக்கான 1-1-1996 முதல் அமல்படுத்தப்பட்டுள்ள திருத்தப்பட்ட சம்பள விகிதத்தில் குறைந்தபட்ச சம்பளத்தில் 30 விழுக்காட்டிற்குக் குறையாமல் இருக்க வேண்டும் என்றும் மத்திய அரசு ஆணையிட்டுள்ளது. மாநில அரசும், மேற்கண்ட மத்திய அரசின் ஆணையினை மாநில அரசு ஓய்வூதியர்களுக்கும்/குடும்ப ஓய்வூதியர்களுக்கும் 1-4-1999 முதல் நீட்டித்து ஆணையிட்டுள்ளது. மத்திய அரசின் ஆணைகளைப் பின்பற்றி, 1-1-1996 முதல் 30-6-1996 வரை ஓய்வு பெற்றவர்களுக்கு, ஓய்வூதியம் கணக்கிட பழைய ஊதிய விகிதம் கணக்கிடப்படும் காலங்களில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய ஊதியத்துடன் அகவிலைப்படி, இரண்டு இடைக்கால நிவாரண தவணைகள் மற்றும் ஊதியத்தில் 40 விழுக்காடு சேர்த்து கணக்கிடலாம் என்று மாநில அரசு ஆணையிட்டுள்ளது.



**13. ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்று ஒரு நிதியை ஏற்படுத்தி அதன் மூலம், சிறப்பு மருத்துவச் சிகிச்சை/அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக ஓய்வூதியம் பெறுவோருக்கு நிதியுதவி அளிக்கும்பொருட்டு, 1-7-1995 முதல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது.

**14. ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டத்தை 1-1-1997 முதல் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம் வரை அவர் தம் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் ஒரே சீராக ரூ. 40 வீதம் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்குப் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்த நிதி 1-1-1998-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு ஓர் ஆண்டு தொகை செலுத்திய பிறகு இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூ. 25,000/- வழங்கப்படும்.

**15. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்:**

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்குக் கிடைப்பது போன்ற ஓய்வு காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.

**16. ஓய்வூதியம் பெறுவோரின் குறை தீர்ப்புப் பிரிவு:**

ஓய்வூதியம் பெறுவோரின் குறை தீர்ப்புப் பிரிவு ஒன்று நிதித் துறையில் செயல்பட்டு வருகிறது.

**17. ஓய்வூதிய இயக்ககம்:**

ஓய்வூதியம் பெறுவோரின் நலனைக் கவனிக்க, ஓய்வூதிய இயக்ககம் என்னும் துறை 1-9-1994 முதல் செயல்பட்டு வருகிறது. இந்த இயக்ககம் செயற்படுத்தும் தமிழ்நாடு தொழிலாளர்கள் பங்குத் தொகை பொது வரு ங்கால வைப்புநிதித் திட்டத்தின்கீழ் வரும் நேர்வுகளை விரைவாகத் தீர்வு செய்வதற்கு இந்தத் திட்டம் கணினிமயமாக்கப்பட்டு நடைபெற்று

வருகிறது. இவ்வரசு தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்களுக்குரிய பல்வேறு பயன்கள் குறித்த தகவல் அடங்கிய வழிகாட்டி இணைய தளத்தினை 19-7-2001 அன்று தொடங்கி வைத்துள்ளது. இந்த இணைய தளத்தை www.tn.gov.in/dop. என்ற குறியீட்டின் மூலம் பார்வையிடலாம்.

***18.*** மேற்படி செலவுகளுக்காக 2001-2002ஆம் ஆண்டில் ரூ.3014,31,92,000 நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**II. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் உரிய ஓய்வூதியங்களும் ஏனைய சலுகைகளும்:**

(1) நமது நாடு விடுதலை பெறுவதற்காக, விடுதலைப் போராட்டத்தில் எண்ணற்ற இன்னல்களை அனுபவித்த சுதந்திரப் போராட்ட வீரர்களுக்குத் தமிழ்நாடு அரசு மிகுந்த கருணையும், அக்கறையும் காட்டி வருகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுகள் நலனிலும் இவ்வரசு மிகுந்த ஆர்வம் காட்டி வருகிறது. அரசியல் ஓய்வூதியம், மருத்துவ வசதிகள், இலவச பேருந்து வசதி, வாரிசுகளுக்குக் கல்வி நிலையங்களில் இட ஒதுக்கீடு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை அளித்தல் ஆகிய பல திட்டங்களைத் தீட்டி அரசு செயல்படுத்தி வருகின்றது.

(2) பொது (பொது-இ)த் துறையின் 28-9-1966 நாளிட்ட அரசு ஆணை (நிலை) எண்2064-ல் தமிழ்நாடு அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டம் 01-10-1966 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

(3) தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு கொண்டதற்காக மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில் அடைக்கப்பட்டவர்களும் அல்லது காவல் கைதியாக இருந்தவர்களும், தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டபோது மரணமடைந்தவர்களும், துப்பாக்கிச் சூட்டிலும், காவலர் தடியடியிலும், கை, கால் இழந்து நிரந்தரமாக இயலாமை உற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற தகுதியுடையவர்களாவர். பிறகு இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு கொண்டவர்களும், மதுரை சதித் திட்ட வழக்கில் சிறைத் தண்டனை பெற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர் என அறிவிக்கப்பட்டது. மேலும், சுதந்திரப் போராட்டத்தின் காரணமாக தலைமறைவாக சுதந்திரப் போராட்டத்தில்





பங்கு கொண்டவர்களும், சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற, அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் எனவும் அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெற நிர்ணயிக்கப்பட்ட சிறைத் தண்டனைக் கால அளவான மூன்று மாதம் என்பது, 01-04-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இவ்வோய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட வருமான வரம்பு 11-03-1983 முதல் நீக்கப்பட்டது.

(4) விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெற விரும்பும் விண்ணப்பதாரர்கள் தாங்கள் சிறைத் துன்பம் அடைந்ததற்கு ஆதாரமாக நீதிமன்ற ஆணையின் அல்லது சிறைத் துறை ஆவணத்தின் பகுதி நகல் ஒன்றைச் சமர்ப்பிக்க வேண்டும். இவை இல்லாத நிலையில் 1980 ஆம் ஆண்டில் செயல்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது அதற்கு முன் செயல்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கும் சக கைதி சான்றிதழ்கள் சிறைத் தண்டனை பெற்றதற்கான ஆதாரமாக 1-4-1980 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால் இம்முறையில் சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால் சக கைதி சான்று வழங்கும் முறை திருத்தியமைக்கப்பட்டது. இதன்படி பொது (அரசியல் ஓய்வூதியம்)த் துறையின் 16-11-1988 நாளிட்ட அரசு (நிலை) ஆணை எண் 2015-ன்படி விண்ணப்பதாரர் சிறைச் சான்று நீதிமன்ற ஆணை நகல்கள் இல்லாத நிலையில் மாநிலம் முழுவதற்கும் அரசால் அங்கீகரிக்கப்பட்ட 15 சான்றாளர்களுள் எவரேனும் இருவரிடமிருந்து சக கைதி சான்று பெற்று விண்ணப்பிக்கலாம். பின்பு மேற்குறிப்பிட்ட 15 சான்றாளர்களில் பலர் சென்னையில் வசித்தாலும், கைது செய்யப்பட்ட அனைவரும் ஒரே சிறையில் வைக்கப்பட்டதாலும் இரண்டு சக கைதி சான்றிதழ்கள் பெறுவதில் சிரமங்கள் உள்ளன என அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டது. எனவே, 7-2-1996ஆம் நாளிட்ட பொது (அரசியல் ஓய்வூதியம்-2)த் துறையின் அரசு ஆணை எண் 30-ல் இம்முறை மாற்றியமைக்கப்பட்டது. மாற்றியமைக்கப்பட்ட முறையின்படி ஒவ்வொரு மாவட்டத்திலும் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட வருவாய் அதிகாரியை துணைத் தலைவராகவும், மூன்று பிரபல தியாகிகளை உறுப்பினர்களாகவும், இரண்டு பிரபல தியாகிகளைச் சான்றளிப்பவராகவும் கொண்டு மாவட்ட அளவிலான சீராய்வுக் குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இக்குழுவின் உறுப்பினர்களும், சான்றளிப்பவர்களும் மாநில விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் சக கைதிச் சான்றின் அடிப்படையில் இல்லாமல் மூல

அரசு ஆவணங்களின் அடிப்படையில் பெற்றவராக இருத்தல் வேண்டும். மேற்படி குழு செயல்படுவதைக் குறித்து வழிகாட்டி நெறிமுறைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி விடுதலைப் போராட்ட வீரர் தன்னுடைய சிறைத்தண்டனை அனுபவித்த சகசைதி, சிறையில் அடைபட்டிருந்த கால அளவைக் குறிப்பிட்டு, அந்த மாவட்டத்தில் உள்ள சான்றளிக்க அதிகாரம் பெற்ற இருவரில் ஒருவரிடமிருந்து சகசைதி சான்றி தழ் பெற வேண்டும். விடுதலைப் போராட்ட வீரர் சிறைத் தண்டனை அடைந்த காலத்தில் 18 வயது நிரம்பியவராக இருத்தல் வேண்டும். வரை யறுக்கப்பட்ட படிவத்தில் அமைந்த விண்ணப்பம் சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட வேண்டும். அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மாவட்ட சீராய்வுக் குழுவினால் பரிசீலிக்கப்பட்டு பரிந்துரை செய்யப்படும் விண்ணப்பதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்க பரிசீலிக்கப்படும்.

(5) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு திங்கள்தோறும் வழங்கப்படும் ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விபரம் இணைப்பு ஒன்றில் கொடுக்கப்பட்டுள்ளது. இதனைத் தவிர, மத்திய அரசு ஓய்வூதியம் பெறுவோருக்கு மாநில அரசு ஓய்வூதியம் வழங்கப்படுகின்றது. இதன் விவரம் இணைப்பு இரண்டில் கொடுக்கப்பட்டுள்ளது.

(6) அரசியல் ஓய்வூதியதாரர், தமது மரணத்திற்குப் பின் தனது மனைவியை/கணவனைத் தொடர்ந்து ஓய்வூதியம் பெற வாரிசாக நிய மனம் செய்யலாம். மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுத லைப் போராட்ட வீரர்கள் இறந்தால் இந்த ஓய்வூதியத் தொகையானது அவரது மனைவிக்கு/கணவருக்கு/உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்கும் நேர்வில் அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இவ்வோய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு மூன்றில் கொடுக்கப்பட்டுள்ளது.

(7) நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் பணியாற்றிய மேலோரின் பணியைப் பாராட்டி, அவர்களுக்கு அல்லது அவர்களது வாரிசுகளுக்குச் சிறப்பு ஒட்டுமொத்த மானியங்களும், ஓய்வூதியங்களும், அரசினால் வழங்கப்படுகின்றன. 29-08-1996 வரை சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின்





வாரிசுதாரர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ.150/- வீதம், மற்றும் வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுதாரர்களுக்கு மாதம் ரூ.300/- வீதம், மேற்படி ஓய்வூதியம் வழங்கப்பட்டு வந்தது. இந்த ஓய்வூதியம் 30-08-1996 முதல் சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்களுககும், வீரபாண்டிய கட்டபொம்மனின் வாரிசுதாரர்களுக்கும் மாதம் ஒன்றுக்கு ரூ.500/- ஆக உயர்த்தி வழங்கப்படுகிறது. 31-03-2001 அன்று நிலவரப்படி சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்கள் 178 பேரும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான மற்றும் முதுநிலை வாரிசுதாரர்கள் 8 பேரும் மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்றனர்.

(8) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**(அ) மருத்துவ வசதிகள்:**

மத்திய அரசு அல்லது மாநில அரசு அல்லது இவ்விரு அரசின் ஓய்வூதியங்களையும் பெற்று வருகின்ற அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/விதவைகளுக்கும்/உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் 01-08-1990ஆம் நாளிலிருந்து மாதம் ஒன்றிற்கு ரூ.15/- வீதம் மருத்துவப்படி வழங்கப்படுகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்கள் அரசு மருத்துவமனைகளில் 'அ' வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.

**(ஆ) கல்விச் சலுகை:**

பள்ளிகள், கல்லூரிகள், தொழில் மற்றும் தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்கள் ஆகியவற்றில் பயின்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன் பேத்திகளுக்கு கல்விக் கட்டணச் சலுகையும் படிப்பு உதவித் தொகைகளும் வழங்கப்படுகின்றன.

மேலும், விடுதலைப் போராட்ட வீரர்களின் குழந்தைகளுக்கு/பேரன் பேத்திகளுக்கு தொழில்/தொழில் நுட்பக் கல்வி நிறுவனங்களில் இட ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. அவற்றின் விவரம் பின்வருமாறு:—

1. பொறியியல் கல்லூரிகளில் 10 இடங்கள்
2. பின்வருமாறு முன்னுரிமை அடிப்படையில் மருத்துவக் கல்லூரிகளில் மூன்று இடங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன.

(அ) விடுதலைப் போராட்டவீரர்களின் குழந்தைகள்.

[2001 செப்டம்பர் 13

(ஆ) விடுதலைப் போராட்ட வீரர்களின் பேரன்/பேத்திகள்

3. சித்த மருத்துவ இளங்கலைப் பட்டப்படிப்பில் ஓரிடம், ஓமியோபதி மருத்துவ இளங்கலைப் பட்டப்படிப்பில் ஓரிடம்.

4. பல்தொழில் நுட்ப பயிலகத்திலும் (பாலிடெக்னிக்) சிறப்பு கல்வி நிறுவனங்களில் ஓரிடம்.

**(இ) வீட்டு வசதிகள்:**

தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்த வீடுகளில்/மனைகளில்/அடுக்கு மாடி வீடுகளில் ஆதிதிராவிடர்/பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலும், சலவையாளர்/நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலும், மற்றும் பொது மக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலும் ஒவ்வொரு சதவிகிதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு ஒதுக்கப்பட்டுள்ளது.

**(ஈ) போக்குவரத்து வசதிகள்:**

மத்திய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்கள், விடுதலைப் போராட்ட வீரர்களின் விதவைகளுக்கும் மற்றும் அவருடைய சட்டப்படியான வாரிசுகளுக்கும், அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**(உ) ஈமச்சடங்குச் செலவுகள்:**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்து போவதையடுத்து ஈமச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின் மனைவிக்கு அல்லது அவருடைய சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு ரூ.2000/- உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. மாநில அரசின்/மத்திய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்டு ஓய்வூதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்கள் அனைவருக்கும் இது பொருந்தத்தக்கதாகும். இத்தொகை ரொக்கமாக வழங்கப்படுகிறது. இறந்துபோன விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையில் வட்டாட்சியரால் அல்லது அப்பதவித்தரத்திற்குக் குறையாத அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.



2001 செப்டம்பர் 13]

**(ஊ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை:**

அரசு நிலை ஆணை எண்.59. தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 4-5-1999இல் வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து அரசுத்துறைகளிலும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களிலும் வேலைவாய்ப்புக்காகப் பெயர்கள் அனுப்பப்படும்பொழுது விடுதலைப் போராட்டத் தியாகிகள்/மொழிக்காவலர்கள் ஆகியோரின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளித்து ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**III. மத்திய அரசின் ஓய்வூதியத் திட்டம்:**

(1) மத்திய அரசு செயல்படுத்தும் இத்திட்டம் 15-8-1972 முதல் செயலில் உள்ளது. 01-08-1980 முதல் "சுதந்திரதா சைனிக் சம்மன் பென்சன் திட்டம்" என்று இத்திட்டம் மறு பெயரிட்டு பின்வரும் சலுகைகளுடன் இத்திட்டத்தை மத்திய அரசு மாற்றி அமைத்தது.

(அ) ஓய்வூதியதாரர்களின் ஆண்டு உச்ச வருமான வரம்பு ரூ.5,000/- என்பது 01-08-1980 முதல் நீக்கப்பட்டது.

(ஆ) ஆதிதிராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்தமட்டில் ஓய்வூதியம் அனுமதிக்கப்படுவதற்குச் சிறைத் தண்டனை அனுபவித்த காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டது.

(இ) விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் சிறைத்துன்பம் அனுபவித்தவர்கள் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவராகிறார்கள். அவர்கள் தங்களது சிறைத்துன்பத்திற்கு ஆதாரமாக சிறைச் சான்று சமர்ப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள சிறைச் சான்று இல்லாத பட்சத்தில், சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெறப்பட்ட "ஆவணங்கள் இல்லை" என்பதற்குரிய சான்றும், தான் சிறையிலிருந்து அதே காலத்தில் தன்னுடன் குறைந்தபட்சம் ஓராண்டு காலம் சிறைத்துன்பம் அனுபவித்தவரும் மைய அரசு ஓய்வூதியம் பெறுபவருமாகிய இருவரிடமிருந்து நிர்ணயிக்கப்பட்டுள்ள சக கைதி சான்றிதழ் படிவத்தில் பெறப்பட்ட இரு சககைதி சான்றிதழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும் (அல்லது) தற்போதுள்ள அல்லது முன்னாள் சட்டமன்ற

[2001 செப்டம்பர் 13

நாடாளுமன்ற உறுப்பினர் எவரேனும் ஒருவரிடமிருந்து சான்றாளரின் சிறைத்துன்ப காலத்தையும், மனுதாரரின் சிறைத்துன்ப காலத்தையும் தெளிவாகக் குறிப்பிட்டு சக கைதிச் சான்றிதழ் குறிப்பிட்ட படிவத்தில் பெற வேண்டும்.

(ஈ) ஆறு மாதம் அல்லது அதற்கு மேலாக தலைமறைவாக இருந்தவர்கள், ஆனால் அரசு ஆவணங்கள் கிடைக்கப்பெறாதவர்கள், இரண்டாண்டுகள் அதற்கும் மேலாக சிறைத்தண்டனை அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர் எவரேனும் ஒருவரிடமிருந்து குறிப்பிட்ட படிவத்தில் சான்றிதழ் பெற்று தக்க ஆதாரமாக சமர்ப்பிக்கலாம். மேலும், மேற்படி அரசு ஆவணங்கள் கிடைக்கவில்லை என்பதற்கான சான்றிதழ் சம்பந்தப்பட்ட அலுவலகத்திலிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும். சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

(உ) 10 சவுக்கடிகள்/கசையடி அல்லது பிரம்படி பட்டு ஒருவர் துன்பப்பட்டிருந்தால் அது ஆறு மாதத்திற்குக் குறையாமல் சிறைத் தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.

(ஊ) மேலும், இந்தியாவிற்கு வெளியே நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு குறைந்த பட்சம் ஆறு மாதங்களோ அல்லது அதற்கு மேலோ சிறைத்துன்பம்/காவல் துன்பம் அனுபவித்த முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களும் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்கு தகுதியுடையவர்களாகிறார்கள்.

(எ) விண்ணப்பதாரர்கள் ஐந்து ரூபாய்க்கான முத்திரைத் தாளில் பிரமாண வாக்குமூலம் அளிக்க வேண்டும். இவ்வாக்குமூலம் முதன்மை நீதிபதியின் முன்னிலையில் அளிக்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

(ஏ) விடுதலைப் போராட்ட வீரர்களுக்கான மத்திய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் வழங்கத்தக்க மாதாந்திர ஓய்வூதியம் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இது விவரம் இணைப்பு 4-ல் கொடுக்கப்பட்டுள்ளது.



2001 செப்டம்பர் 13]

(ஐ) மத்திய விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவர் இறக்க நேரின் அவர் பெற்று வந்த மத்திய அரசு மாதாந்திர ஓய்வூதியத் தொகையான ரூபாய் 3000-த்துடன் மாநில அரசின் பங்கான ரூபாய் 500-ம் அவரது சட்டப்படியான வாரிசுதாரர்களுக்கு தொடர் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது.

(ஒ) மைய அரசு ஓய்வூதியதாரர்களுக்கு 01-08-1999 முதல் 20 சதவீதம் அகவிலைப்படி வழங்கப்பட்டு வருகிறது.

(2) 31-03-2001 அன்றைய நிலவரப்படி மாநில மத்திய அரசுகளின் ஓய்வூதியங்களைப் பெறும் தமிழ்நாட்டிலுள்ள விடுதலைப் போராட்ட வீரர்கள் குறித்த விவரம் வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | விடுதலைப் போராட்ட வீரர் மாநில ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை (ரூ. 3,000+15 மருத்துவப்படி) | 1770 |
| 2. | விடுதலைப் போராட்ட வீரர் மாநில தொடர் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதார்ரர்களின் எண்ணிக்கை (ரூ.1,500+15 மருத்துவப்படி) | 2167 |
| 3. | விடுதலைப் போராட்ட வீரர் மைய அரசு ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை (ரூ.3,000+15 மருத்துவப்படி) | 712 |
| 4. | மைய அரசின் தொடர் ஓய்வூதியம் பெறுவோரின் எண்ணிக்கை (ரூ.3,000+15 மருத்துவப்படி) | 1056 |
| 5. | வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (ரூ.500/- மாதம் ஒன்றுக்கு) | 8 |
| 6. | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (ரூ.500 மாதம் ஒன்றுக்கு) | 178 |

(3) இத்திட்டங்களுக்கான 2001-2002ஆம் ஆண்டில் ரூ.14,54,90,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

53-339—22

[2001 செப்டம்பர் 13

## இணைப்பு-1

### மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்

| வ.எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50 |
| 2. | 15-08-1972 முதல் | 75 |
| 3. | 01-04-1979 முதல் | 100 |
| 4. | 25-01-1981 முதல் | 150 |
| 5. | 10-06-1986 முதல் | 250 |
| 6. | 01-08-1989 முதல் | 350 |
| 7. | 01-01-1991 முதல் | 400 |
| 8. | 01-08-1992 முதல் | 1,000 |
| 9. | 01-09-1995 முதல் | 1,500 |
| 10. | 15-08-1997 முதல் | 3,000 |

## இணைப்பு-2

### மத்திய அரசு ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு மாநில அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்

| வ.எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 15-08-1972 முதல் | 75 |
| 2. | 25-01-1981 முதல் | 100 |
| 3. | 01-08-1992 முதல் | 250 |
| 4. | 01-04-1997 முதல் | 500 |



2001 செப்டம்பர் 13]

## இணைப்பு-3

### மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்

| வ.எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50 |
| 2. | 15-08-1972 முதல் | 75 |
| 3. | 01-04-1979 முதல் | 100 |
| 4. | 25-01-1981 முதல் | 150 |
| 5. | 10-06-1986 முதல் | 250 |
| 6. | 01-08-1989 முதல் | 350 |
| 7. | 01-01-1991 முதல் | 400 |
| 8. | 01-08-1992 முதல் | 500 |
| 9. | 01-09-1995 முதல் | 750 |
| 10. | 15-08-1997 முதல் | 1,500 |

## இணைப்பு-4

### விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மத்திய அரசால் வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்

| வ.எண். | கால அளவு | ஓய்வூதியத் தொகை ரூபாய் |
|---|---|---|
| 1. | 15-08-1972 முதல் | 200 |
| 2. | 01-08-1980 முதல் | 300 |
| 3. | 01-06-1985 முதல் | 500 |
| 4. | 14-11-1988 முதல் | 750 |
| 5. | 12-08-1992 முதல் | 1,000 |
| 6. | 02-10-1994 முதல் | 1,500 |
| 7. | 15-08-1997 முதல் | 3,000 |

[2001 செப்டம்பர் 13

# இணைப்பு-IV

*(55ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 42. பல்வகை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2001-2002

இந்த மானியக் கோரிக்கை பல்வகை செலவுகளை உள்ளடக்கியதாகும். இந்த மானியக் கோரிக்கையில், உள்ளாட்சி மன்றங்களுக்கு அளிக்கப்படும் நிதியுதவி தொடர்பான செலவு, இலங்கையிலிருந்து திருப்பியனுப்பப்பட்டோருக்குப் புது வாழ்வு அளிப்பதற்கான செலவு, தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம், சிறு சேமிப்புத் திட்டம் தொடர்பான செலவு ஆகியவை அடங்கும். ஏனைய பல்வகை இனங்களும் இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள், பெரு தலைப்பு வாரியாக வருமாறு:—

| கணக்குத் தலைப்புகள் | | 2000-2001 திருத்த மதிப்பீடு | 2000-2001 இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2001-2002 திருத்த-வரவு செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | | | (ரூபாய் இலட்சத்தில்) | |
| 2047. | ஏனைய வரி விதிப்புப் பணிகள் | 3206 | 3421 | 3413 |
| 2070. | ஏனைய நிருவாகப் பணிகள் | 286 | 242 | 241 |
| 2075 | பல்வகைப் பொதுவான பணிகள் | 11068 | 11379 | 11380 |
| 2235. | சமூகப் பாதுகாப்பும் நலனும் | 12281 | 12302 | 12339 |
| 2250. | ஏனைய சமூகப் பணிகள் | 24 | 24 | 24 |
| 2402. | மண்வள, நீர்வளப் பாதுகாப்பு | 500 | 500 | 2500 |
| 2801. | மின் சக்தி | 71 | 75 | 3352 |
| 3604. | உள்ளாட்சி மன்றங்களுக்கும் ஊராட்சி நிறுவனங்களுக்கும் இழப்பீடுகளும் ஒதுக்கீடுகளும் | 3800 | 2000 | 3373 |



2001 செப்டம்பர் 13]

இந்த மானியக் கோரிக்கையில் சேர்க்கப்பட்டுள்ள சில முக்கியத் திட்டங்கள் பற்றிய விவரங்கள் பின்வருமாறு:—

**சிறுசேமிப்பு**

சிறுசேமிப்புத் துறை மத்திய அரசால் உருவாக்கப்படும் பல்வேறு சிறுசேமிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

சிறுசேமிப்பு மாநில அரசின் மிக முக்கியமான வருவாய் ஆதாரமாகும். நிகர வசூலில் 80 சதவீதத்தை மாநில அரசு, குறைந்த வட்டிக்கு நீண்ட கால தவணைக் கடனாக வாங்குகிறது. 25 ஆண்டுகளில் திருப்பிச் செலுத்தத்தக்க இக்கடனுக்கு 5 ஆண்டு கால தவணை நீட்டிப்பும் உள்ளது. இக்கடன்களுக்கான வட்டிவீதம் 11 சதவீதம் ஆகும்.

2001-02 ஆம் ஆண்டுக்கு சிறுசேமிப்பு வசூல் நிகர இலக்கு ரூபாய் 2000 கோடி என்று அரசு நிர்ணயித்துள்ளது.

**சிறுசேமிப்புச் திட்டங்கள்**

அனைத்து வகையைச் சேர்ந்த மக்களுக்கு ஏற்ற பல்வேறு வகை சிறுசேமிப்புத் திட்டங்கள் செயலிலுள்ளன.

**(I) உயர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்:**

கிஸான் விகாஸ் பத்திரம்

**(II) வரிச் சலுகை அளிக்கும் திட்டங்கள்:**

1. 1992 ஆம் ஆண்டு தேசிய சேமிப்பு திட்டம்
2. தேசிய சேமிப்பு பத்திரம் (8ஆவது வெளியீடு)
3. பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்.

**(III) தொடர் வருவாய் அளிக்கும் திட்டங்கள்:**

1. மாதாந்திர வருமானத் திட்டங்கள்
2. ஓய்வு பெறும் அரசுப் பணியாளர்களுக்கான வைப்பீட்டுத் திட்டம்
3. ஓய்வுபெறும் பொதுத் துறை நிறுவன பணியாளர்களுக்கான வைப்பீட்டுத் திட்டம்

**(IV) பிற திட்டங்கள்:**

1. அஞ்சலக தொடர் வைப்பீட்டுத் திட்டம்
2. அஞ்சலக குறித்தகால வைப்பீட்டுத் திட்டம்

**சிறுசேமிப்பு முகவரமைப்பு.**

முகவர்கள் சிறுசேமிப்பு வசூலில் முக்கிய பங்காற்றுகின்றனர். சிறு சேமிப்பு முகவரமைப்பின்கீழ் மூன்று வகையான முகவர்கள் உள்ளனர்.

1. நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பு
2. அதிகாரமளிக்கப்பட்ட முகவர்கள்/பொது வருங்கால வைப்பு நிதி முகவரமைப்பு
3. மகளிர் முகவரமைப்பு

முகவரமைப்பின் விவரங்கள் வருமாறு:—

| தொடர் எண் | முகவரமைப்பு | செயல் படுத்தப்படும் திட்டங்கள் | மத்திய அரசு வழங்கும் ஊக்கத் தொகை | தமிழ்நாடு அரசு வழங்கும் ஊக்கத் தொகை | கால அளவு | முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பு | கிஸான் விகாஸ் பத்திரம், தேசிய சேமிப்புத் திட்டம், தேசிய சேமிப்புப் பத்திரம், மாதாந்திர வருமானத் திட்டம், குறித்தகால வைப்பீட்டுத் திட்டம் | 0.5% முதல் 1% | 0.5% முதல் 1% | மாதந் தோறும் | 10238 |
| 2. | பொது வருங்கால வைப்பு நிதி | பொது வருங்கால வைப்பு நிதி | 1% | 1% | மாதந் தோறும் | 1703 |
| 3. | மகளிர் முகவரமைப்பு | அஞ்சலக தொடர் வைப்பீட்டுத் திட்டம், நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்பு, பொது வருங்கால வைப்பு நிதி | 4% | 2% | மாதந் தோறும் | 15808 |



**வருங்கால திட்ட அணுகுமுறை**

மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சிறுசேமிப்புக் கட்டமைப்பைக் கணினிமயமாக்க அரசு தேவையான நடவடிக்கை எடுத்துள்ளது.

முகவர்கள் ஓய்வுபெறும் பணியாளர்கள், வருமான வரி செலுத்துபவர்கள் தொடர்பான தகவல் விவர அடிப்படையை ஏற்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. 2001-02 ஆம் ஆண்டிற்கு நிர்ணயிக்கப்பட்ட இலக்கை எய்துவதற்காக, அதிக எண்ணிக்கையில் முகவர்களைக் குறிப்பாக, இல்லத்தரசிகளை நியமித்தல், முகவர்களுக்குப் பயிற்சிகளும் வெகுமதிகளும் அளித்தல், முகவர்கள் ஊக்கத் தொகைகளை விரைவில் வழங்கல் மாவட்டங்களில் கணினியுடன் இணைந்த தகவல் பரிமாற்ற சாதனத்தை நிறுவுதல் போன்ற சில நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. நடப்பாண்டில் அதிக அளவில் சிறுசேமிப்பைத் திரட்ட உதவி புரிந்தவர்களுக்கு கவர்ச்சிகரமான திட்டங்கள், பரிசுகள், ஊக்கத் தொகைகள் ஆகியவற்றை அறிமுகப்படுத்தவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

**பரிசுச்சீட்டு**

தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டம் மறைந்த முதலமைச்சர் பேரறிஞர் அண்ணா அவர்களால் 15-8-1968-ல் முதன்முதலாக அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1975 செப்டம்பரிலிருந்து 1976 ஆகஸ்ட் வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டு பின்னர் மீண்டும் செயற்படுத்தப்பட்டது. ஆதிதிராவிடர்களுக்கு வீட்டுமனை வழங்குதல், கிராமப் பகுதிகளுக்குக் குடிநீர் வழங்குதல், சுகாதார வசதிகள் செய்து கொடுத்தல் போன்ற பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்காக நிதி ஆதாரங்களைத் திரட்டுவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். பரிசுச் சீட்டுகள் விற்பனையின்மூலம் கிடைக்கும் நிகர ஆதாயத் தொகையில் 75 விழுக்காடு நலத் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வோராண்டும் டிசம்பர் திங்களில் நடைபெறும் முதல் குலுக்கலின்மூலம் கிடைக்கும் நிகர ஆதாயத் தொகை, முன்னாள் இராணுவ வீரர்கள் நலத்திற்கென ஒதுக்கப்படுகிறது.

**பரிசுச் சீட்டு சட்டம்**

1998 ஆம் ஆண்டு பரிசுச் சீட்டுகள் முறைப்படுத்தல் சட்டம், 7-7-1998 முதல் செயலில் இருந்து வருகிறது. இச்சட்டம் ஒற்றை எண் மற்றும் உடனடிப் பரிசுச் சீட்டினை தடை செய்கிறது.

ஏனைய மாநில பரிசுச் சீட்டுகளைப் பொறுத்தவரையில், உச்ச நீதி மன்றம் 7-5-1999 ஆம் நாளிட்ட தன்னுடைய தீர்ப்பில், ஒரு மாநிலம் தான் பரிசுச் சீட்டு நடத்துவதைத் தடை செய்தால்தான், அம்மாநிலத்திற்குள் பிற மாநில பரிசுச் சீட்டுகளின் விற்பனையையும் தடை செய்ய இயலும் எனத் தீர்ப்பளித்துள்ளது. தமிழக அரசு, பரிசுச் சீட்டுத் திட்டத்தை நடத்தி வருவதால், ஏனைய மாநில பரிசுச் சீட்டுகளும் தமிழ்நாட்டில் விற்பனை செய்யப்படுகின்றன. ஏனைய மாநில பரிசுச் சீட்டுகளுடன் போட்டியிடவும் தமிழ்நாடு பரிசுச் சீட்டுத் திட்டத்தின் வருவாயை அதிகரிக்கவும், பல்வேறு புதிய திட்டங்களை அரசு பரிசீலித்து வருகிறது.

**மறுவாழ்வு**

**1. அகதிகள்**

இலங்கையில் 1983 ஆம் ஆண்டில் தொடர்ந்து ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக இலங்கைத் தமிழர்கள் புகலிடம் தேடி இந்தியாவிற்கு வந்தனர். இலங்கை அகதிகள் தொடர்ந்து வருவது அதிகரித்துக் கொண்டே இருந்தது. இருப்பினும், 1987-91, 1992-95 ஆகிய இரு காலக் கட்டங்களில் பல இலங்கை அகதிகள் இலங்கைக்குத் திருப்பி அனுப்பப்பட்டனர். 31-3-2001 ஆம் நாள் நிலவரப்படி, தமிழ்நாடு முழுவதிலுமுள்ள 116 அகதிகள் முகாம்களில் 64,413 அகதிகள் அடங்கிய 17,386 குடும்பங்கள் தங்க வைக்கப்பட்டுள்ளனர்; இவர்களுக்கு மத்திய அரசால் நிர்ணயிக்கப்பட்டபடி, பல்வேறு நிவாரண உதவிகள் வழங்கப்படுகின்றன. அகதிகள், போராளிகள் மற்றும் சந்தேகத்திற்குரியவர்கள் என்று கருதப்படுபவர்கள் செங்கல்பட்டு, வேலூர் மற்றும் மேலூரிலுள்ள சிறப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர். அகதிகள் குறித்து ஏற்படும் செலவு முழுவதும் முதலில் மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு, பின்னர் மத்திய அரசால் ஈடுசெய்யப்படுகிறது.

அகதிகளுக்கு அளிக்கப்படும் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு உதவிகள்

**1. ரொக்கப் பணம்**

தமிழ்நாட்டிலுள்ள பல்வேறு அகதிகள் முகாம்களில் தங்கியுள்ள அகதிகளுக்கு மத்திய அரசு நிர்ணயித்துள்ளவாறு பின்வரும் வீதங்களில் ரொக்கப் பணம் அளிக்கப்படுகிறது.





| | |
|---|---|
| 1. குடும்பத் தலைவர் | மாதமொன்றுக்கு ரூபாய் 200 |
| 2. 12 வயதும் அதற்கு மேலுமுள்ள ஒவ்வொரு கூடுதல் நபருக்கும் | மாதமொன்றுக்கு ரூபாய் 144 |
| 3. முதல் குழந்தை (12 வயதுக்குக் குறைவான) | மாதமொன்றுக்கு ரூபாய் 90 |
| 4. அதற்குப் பின்னர் பிறந்த ஒவ்வொரு குழந்தைக்கும் | மாதமொன்றுக்கு ரூபாய் 45 |

ஒவ்வொரு மாதமும் சுமார் ரூபாய் ஒரு கோடி ரொக்கப் பணமாக முகாம் அகதிகளுக்கு அளிக்கப்படுகிறது.

**2. மலிவு விலையில் அரிசி**

அகதிகள் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகளுக்கு, மத்திய அரசு நிர்ணயித்த பின்வரும் வீதங்களில் மலிவு விலை அரிசி வழங்கப்படுகிறது.

| | |
|---|---|
| 1. பெரியவர்கள் | கிலோ கிராம் ஒன்றுக்கு ரூபாய் 0.57 என்ற விலையில் நாளொன்றுக்கு 400 கிராம் அரிசி |
| 2. குழந்தை | நாளொன்றுக்கு 200 கிராம் அரிசி (எட்டு வயதுக்குக் குறைவாக) |

தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழகம் நியாய விலைக் கடைகள் மூலமாக அகதிகளுக்கு அரிசி வழங்கி, இதற்கான விலை வேறுபாட்டுத் தொகையை அரசிடமிருந்து பெற்றுக்கொள்கிறது. மலிவு விலை அரிசி வழங்குவதற்காக ஒவ்வோராண்டும் சுமார் ரூபாய் 5 கோடி செலவாகிறது.

**3. துணிமணிகள்**

மத்திய அரசு வரையறுத்த அளவில் இலங்கை அகதிகளுக்கு துணிகள், பாய்கள் முதலியன ஆண்டுதோறும் இலவசமாக வழங்கப்படுகின்றன. மேலும், முகாம் அகதிகளுக்கு போர்வைகள் இலவசமாக இரண்டாண்டுகளுக்கு ஒருமுறை வழங்கப்படுகின்றன. முகாம் அகதிகளுக்கு துணிகள் வழங்கப்படுவதற்காக, ஒவ்வோராண்டும் சுமார் ரூபாய் 2 கோடி செலவிடப்பட்டு வருகிறது.

[2001 செப்டம்பர் 13

தமிழ்நாடு அரசு, இது தவிர, தமிழ்நாட்டில் உள்ள அகதிகள் முகாம்களில் தங்கியிருக்கும் உரிய வயது வந்த இலங்கை அகதிகளுக்கு இலவச வேட்டிகள், சேலைகள் ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையின்போது வழங்கி வருகிறது. அகதிகளுக்கு இலவச வேட்டிகள்/ சேலைகள் வழங்கும் திட்டத்திற்கு, ஆண்டுதோறும் சுமார் ரூ.25 இலட்சம் செலவிடப்படுகிறது.

**4. பாத்திரங்கள்**

முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ள அகதிகள் குடும்பம் அனைத்திற்கும் இரண்டு ஆண்டுகளுக்கு ஒரு முறை 5 வகையான 8 பாத்திரங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அகதிகளுக்கு பாத்திரங்கள் வழங்குவது தொடர்பாக, இரண்டு ஆண்டுகளுக்கு ஒருமுறை ரூ.15 இலட்சம் செலவிடப்படுகிறது.

**5. விட்டுவசதி**

**A. தற்போது சேதமடைந்துள்ள குடிசைகளைச் சீரமைத்தல்**

அகதிகளைத் தங்க வைப்பதற்காக 1990-91-ல் ஏற்படுத்தப்பட்ட தற்காலிகக் குடிசைகள், கடுமையான தட்பவெப்ப நிலை காரணமாகவும் கால ஓட்டத்தின் விளைவாகவும் சேதமடைந்துள்ளன. தற்போதுள்ள குடிசைகள் அனைத்தையும் மாற்றிவிட்டு, புதிய குடிசைகள் அமைக்கவேண்டும். முதற்கட்டமாக, 7,500 குடிசைகளைக் கட்ட மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அதற்கிணங்க, 1997-98, 1998-99 ஆம் ஆண்டுகளில் 7,500 குடிசைகள் கட்டவும், அக்குடிசைகளுக்கு அடிப்படை வசதிகளைச் செய்து தரவும் (மொத்தம் ரூ.5,72,41,700/-) தமிழ்நாடு அரசு அனுமதி அளித்துள்ளது. பல்வேறு மாவட்டங்களில் 7,500 குடிசைகள் கட்ட உத்தேசிக்கப்பட்டிருக்க தற்போது 6,967 குடிசைகள் கட்டும் பணி நிறைவடைந்துள்ளது. எஞ்சியுள்ள 533 குடிசைகளைப் பொறுத்தவரையில், மாவட்ட ஆட்சியர்கள் சிலரிடமிருந்து பணி நிறைவடைந்ததற்கான அறிக்கைகள் வரவேண்டியுள்ளன. பணியை விரைந்து முடிக்க ஏற்பாடு செய்யுமாறும், இது குறித்து தங்களது அறிக்கையை விரைந்து அனுப்பிவைக்குமாறும் மாவட்ட ஆட்சியர்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

**B. புதிதாகக் குடிசைகள் கட்டுதல்**

1999-2000-ல் குடிசை ஒன்றுக்கு ரூ.9,400/- வீதத்தில் புதிதாக 3,000 குடிசைகள் கட்டுவதற்கு மத்திய அரசு இசைவளித்துள்ளது. 3,000 புதிய



2001 செப்டம்பர் 13]

குடிசைகளில், 2,081 குடிசைகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சிய 919 குடிசைகளுக்கு அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவர்களிடமிருந்து பணிநிறைவு அறிக்கைகள் வரவேண்டியுள்ளன.

தமிழ்நாட்டிலுள்ள அகதிகள் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள அகதிகளுக்கு மின்சாரம், குடிநீர் மற்றும் துப்புரவு வசதிகள் இலவசமாக அளிக்கப்படுகின்றன.

**6. மருத்துவ வசதி**

அகதிகளுக்கு அவர்கள் தங்கியுள்ள முகாம்களின் அருகே உள்ள அரசினர் மருத்துவமனைகளிலும், தொடக்கச் சுகாதார நிலையங்களிலும் இலவச மருத்துவ வசதி அளிக்கப்படுகிறது.

**7. கல்வி கற்கும் வாய்ப்பு**

தமிழ்நாடு அரசு, பெருந்தன்மையுடன் அகதிகள் குழந்தைகளுக்கு கல்வி கற்கும் வாய்ப்பு அளித்துள்ளது. அகதிகளின் குழந்தைகள் இலங்கையில் படித்ததற்கான பள்ளிச் சான்றிதழ்கள் இல்லாமலேயே தமிழ்நாட்டில் உள்ள பள்ளிகளில் சேர்த்துக்கொள்ளப்படுவதுடன், கல்லூரி வரை கல்வியைத் தொடரவும் அனுமதிக்கப்படுகின்றனர். இவர்களுக்கு, தமிழக அரசின் மருத்துவம், பொறியியல் மற்றும் வேளாண்மைக் கல்லூரிகளிலும், தொழில் நுட்பப் பயிலகங்களிலும் இட ஒதுக்கீடு செய்யப்படுகிறது. பள்ளி செல்லும் குழந்தைகளுக்கு, சீருடைகள், மதிய உணவு, பயணச் சீட்டு, பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றன. அகதிகளின் குழந்தைகள் தமிழ்நாட்டில் எங்கு வேண்டுமானாலும் தங்கள் கல்வியைத் தொடர அனுமதிக்கப்படுகின்றனர். முகாம்களுக்கு வெளியே தங்கிப் படிக்கும் மாணவர்களுக்கு அனுமதிக்கப்படும் ரொக்கப் பணம் மற்றும் இதர உதவிகள், முகாமிலுள்ள மாணவர்களின் பெற்றோர்களிடம் வழங்கப்படுகின்றன.

**8. அகதிகளை அவர்களின் தாயகத்திற்கு மீள அனுப்புதல்**

சொந்த செலவில், தங்களது தாய்நாட்டிற்கு அல்லது வேறு வெளிநாடுகளுக்குச் செல்ல விரும்பும் அகதிகளுக்கு சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர்கள் மற்றும் காவல் துறை கண்காணிப்பாளர்கள் மூலம் இந்தியாவை விட்டு வெளியேற அனுமதி வழங்கப்படுகிறது. இவ்வாறு வெளியேற விரும்பும் அகதிகள் குடும்பங்களுக்கு நிதி உதவி வழங்க ஐக்கிய நாடுகள் அகதிகள் உயர் ஆணையர் அலுவலகத்திற்கும் அனும

[2001 செப்டம்பர் 13

வழங்கப்பட்டுள்ளது. இலங்கையில் தொடர்ந்து வரும் அமைதியின்மை காரணமாக அகதிகளைத் திருப்பி அனுப்புவதற்காக மத்திய அரசு மேற்கொள்ளும் ஏற்பாடுகள் மிகக் குறைந்த வரவேற்பையே பெற்றுள்ளன.

**II. தாயகம் திரும்பியோர்**

பர்மா, இலங்கை மற்றும் வியட்நாம் ஆகிய நாடுகளில் வசித்து வந்த இந்திய வம்சாவழியினர், அந்த நாடுகளில் ஏற்பட்ட தேசிய அரசியல் கொள்கை மாற்றங்களின் காரணமாக இந்தியாவிற்குத் திரும்பி வரத் தொடங்கினர். 31-3-2001 வரை பர்மாவிலிருந்து 1,44,445 நபர்களும், இலங்கையிலிருந்து 4,61,608 நபர்களும், வியட்நாமிலிருந்து 2,055 நபர்களும் இந்தியாவிற்குத் திரும்பியுள்ளனர். இவ்வாறு தாயகம் திரும்புகிற இந்தியர்கள், இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள மண்டபம் மற்றும் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் உள்ள கொட்டப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் தங்கவைக்கப்படுகின்றனர். பின்னர் தோட்டத் தொழில், வேளாண்மை, வீட்டு வசதி, வியாபாரம், தாயகம் திரும்பியோர் கூட்டுறவு நிதி மற்றும் வளர்ச்சி வங்கித் திட்டங்கள், சுய வேலைவாய்ப்புத் திட்டம் முதலிய பல்வேறு திட்டங்களில் ஏதாவது ஒரு திட்டத்தின்கீழ் இவர்களுக்கு மறுவாழ்வு உதவிகள் அளிக்கப்படுகின்றன. இலங்கையில் ஏற்பட்ட இனக் கலவரத்தின் காரணமாக 1983 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் முதல் இந்தியர்களைத் தாயகத்திற்குத் திருப்பியனுப்பும் ஏற்பாடுகள் நிறுத்தப்பட்டு உள்ளன.

**தொழிலாளர் நலன் - வேலைவாய்ப்பு**

தொழிலாளர்களுக்கான சமூகப் பாதுகாப்புத் திட்ட நிதிக்குப் பங்குத் தொகை அளிப்பதற்காக 2001-02 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.30 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**மண்வள, நீர் வளப் பாதுகாப்பு**

அரசின் புதிய "தரிசு நில மேம்பாட்டுத் திட்டத்தின்" கீழ் 2001-02 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ.25 கோடி நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது.

**எரிசக்தி**

2001-02 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.33.52 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் விரைவுபடுத்தப்பட்ட எரிசக்தி



2001 செப்டம்பர் 13]

மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு மின்வாரியத்திற்கு உதவி அளிப்பதற்காக ஒதுக்கப்பட்ட ரூ.32.77 கோடியும் இதில் அடங்கும்.

**உள்ளாட்சி மன்றங்கள்**

சிறுசேமிப்பு வசூலை அதிகரிப்பதற்காக உள்ளாட்சி மன்றங்களுக்கு ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின்கீழ், உள்ளாட்சி மன்றங்களுக்கு ஊக்கத் தொகையாக 2001-02 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூ.33.73 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஏனைய நிருவாகப் பணிகளும் பொதுவான பணிகளும்**

நிருவாகப் பணிகள் குறித்த செலவில் பயிற்சி, சிவில் பாதுகாப்பு, போக்குவரத்து வாகனங்கள் வாங்குதல் மற்றும் பராமரித்தல் ஆகியவை அடங்கும். பொதுப்பணிகள் குறித்த செலவில், இந்திய குடியரசுத் தலைவர், இந்திய குடியரசுத் துணைத் தலைவர், இந்திய பிரதம அமைச்சர், மத்திய அமைச்சர்கள், பிற மாநிலங்களின் ஆளுநர்கள், முதலமைச்சர்கள், வெளிநாட்டு பிரதிநிதிகள் ஆகியோர் வருகை தரும்போது அவர்களுடைய உணவு மற்றும் தங்கும் வசதிகள், போக்குவரத்து வசதிகள், பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்த செலவும், ஆளுநர் மற்றும் அமைச்சர்களின் பதவியேற்பின்போது செய்யப்படும் ஏற்பாடுகள் குறித்த செலவும் அடங்கும்.

**சமூகப் பாதுகாப்பும் நலனும்**

2001-2002 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் ரூ.123.39 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

2001-2002 ஆம் ஆண்டு திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடுகளில் செய்யப்பட்டுள்ள நிதி ஒதுக்கீடுகள் தொடர்பான முக்கியச் செலவினங்கள் வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 1. | இலங்கையிலிருந்து தாயகம் திரும்பியோர் துயர் தணிப்பு நடவடிக்கைகள் | 3.94 |
| 2. | அகதிகளுக்குரிய நிவாரண நடவடிக்கைக்கான நிதியுதவி | 23,09.69 |
| 3. | தொகுதி ஈட்டுறுதித் திட்டத்தின்கீழ் இந்திய ஆயுள் ஈட்டுறுதிக் கழகத்திற்கு பிரிமியம் செலுத்துதல் | 26,65.32 |

[2001 செப்டம்பர் 13

| | | |
|---|---|---|
| 4. | முன்னாள் படைவீரர் நல இயக்குநர் | 85.26 |
| 5. | மாவட்ட முப்படை வீரர்கள் அதாவது, படைவீரர்கள், மாலுமிகள், விமானிகள் நலவாரியம் | 3,37.04 |
| 6. | முன்னாள் படைவீரர்கள் குறித்த பரிந்துரைகள் மற்றும் மறுவாழ்வு தொடர்பாக, தமிழ்நாடு சிறப்பு நிதிக்குத் தொகை வழங்குதல் | 6.32 |
| 7. | போர்க்களத்தில் பெரும் வீரதீரச் செயல்கள் புரிந்த வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு மானியம் | 17.49 |
| 8. | முன்னாள் படைவீரர்கள் நலநிதி | 1.00 |
| 9. | இறந்துபோன அரசுப் பணியாளர்களின் குடும்பத்திற்கு கருணைத்தொகை வழங்குதல் | 37,00.00 |
| 10. | காவல் துறையினரால் துன்புறுத்தப்பட்டு, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கத்தக்க இழப்பீடு | 30.00 |
| 11. | தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் சிறப்பு வருங்கால வைப்புநிதி - பணிக்கொடைத் திட்டம் | 20,00.00 |
| 12. | அரசு மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கான சிறப்பு வருங்கால வைப்புநிதி பணிக்கொடை | 60.00 |
| 13. | கிராம அலுவலர்கள் சிறப்பு வருங்கால வைப்புநிதி | 3.60 |
| 14. | கொத்தடிமைத் தொழிலாளர் மறுவாழ்வு | 4,20.00 |
| 15. | குறிப்பிட்ட அபாயகரமான சில தொழில்களில் ஈடுபட்டுள்ள ஏழைத் தொழிலாளர்களுக்கு விபத்து நிவாரணத் திட்டம் | 1,41.32 |
| 16. | தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் நல நிதி | 40.00 |
| 17. | மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கான (கல்லூரிக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் வருபவை) சிறப்பு வருங்கால வைப்புநிதித் திட்டம் | 14.00 |
| 18. | மானிய உதவி பெறும் கல்வி நிறுவனங்களுக்கான (தொடக்கக் கல்வி இயக்குநர் கட்டுப்பாட்டில் வருபவை) சிறப்பு வருங்கால வைப்பு நிதித் திட்டம் | 1,17.50 |



2001 செப்டம்பர் 13]

(ரூபாய் இலட்சத்தில்)

| | | |
|---|---|---|
| 19. | விபத்தில் பலியானவர்களுக்கு நிதியுதவி | 1,25.00 |
| 20. | வகுப்பு/சாதி மோதல்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கத்தக்க இழப்பீடு | 2,00.00 |
| 21. | இலங்கை அகதிகளுக்கு இலவச வேட்டிகள்/சேலைகள் வழங்குதல் | 25.00 |
| 22. | வசூலிக்க இயலாதக் கடன்களை கணக்குகளிலிருந்து தள்ளுபடி செய்தலும் மற்றும் இழப்புகளும் | 35.00 |

# இணைப்பு-V

*(55 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 60

## பல்வகை மூலதனச் செலவு

## கொள்கை விளக்கக் குறிப்பு 2001-2002

இந்த மானியக் கோரிக்கையில், காவல் துறை, எழுது பொருள்-அச்சுத் துறை, மருத்துவம்-பொதுச் சுகாதாரம், மக்கள் நல்வாழ்வு, குடிநீர் வழங்கல், துப்புரவு, வீட்டுவசதி, நகர்ப்பகுதி வளர்ச்சி, செய்தி, ஆதிதிராவிடர்/பழங்குடியினர், ஏனைய பிற்படுத்தப்பட்டோர் நலன், சத்துணவு, சமூகப் பணிகள், மீனளம், உணவு தானியங்கள் சேமிப்பு மற்றும் கிடங்கு வசதி, கூட்டுறவு, ஊரக வளர்ச்சித் திட்டங்கள், மலைப் பகுதி மேம்பாடு, வெள்ளக் கட்டுப்பாட்டுத் திட்டங்கள், மின்சக்தித் திட்டங்கள் மற்றும் சுற்றுலா ஆகிய துறைகள் குறித்த மூலதனச் செலவு இடம் பெறுகிறது.

இந்த மானியக் கோரிக்கையில் இடம்பெற்றுள்ள முக்கியமான நிதி ஒதுக்கங்களில் சிலவற்றை இக்குறிப்பு புலப்படுத்துகிறது.

முக்கியமான பெருந்தலைப்புவாரியான நிதியொதுக்கங்களின் விவரம் வருமாறு:

(ரூபாய் இலட்சத்தில்)

| | கணக்குத் தலைப்பு | 2000-2001 திருத்த மதிப்பீடு | 2001-2002 இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2001-2002 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 4055. | காவல் துறை குறித்த மூலதனச் செலவு | 7344.67 | 16863.01 | 9798.43 |
| 4215. | குடிநீர் வழங்கல், துப்புரவு குறித்த மூலதனச் செலவு | 48986.78 | 44205.00 | 53491.02 |
| 4216. | வீட்டுவசதி குறித்த மூலதனச் செலவு | 3363.98 | 2408.45 | 3982.45 |
| 4217. | நகர்ப்பகுதி வளர்ச்சி குறித்த மூலதனச் செலவு | 4015.07 | 6909.39 | 6909.39 |
| 4225. | ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலன் குறித்த மூலதனச் செலவு | 2373.12 | 2001.21 | 4715.94 |
| 4425. | கூட்டுறவு குறித்த மூலதனச் செலவு | (-)394.89 | 87.26 | 107.26 |
| 4515. | ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 21633.60 | 5625.01 | 5625.01 |
| 4551. | மலைப்பகுதிகள் குறித்த மூலதனச் செலவு | 287.27 | 0.02 | 224.48 |
| 4711. | வெள்ளக் கட்டுப்பாடுத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | 804.95 | 2674.05 | 2957.05 |
| 4801. | மின்சக்தித் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு | (-)21943.00 | 10000.00 | 10000.00 |





### காவல் துறை

தமிழ்நாடு காவலர் வீட்டுவசதிக் கழகம், பல்வேறு நிதியுதவி நிறுவனங்களின் கடன் உதவியைக் கொண்டு காவல் துறை பணியாளர்களுக்குக் குடியிருப்புகளைக் கட்டும் பணியை மேற்கொண்டு வருகிறது. கடனைத் திருப்பிச் செலுத்துவதற்காக ரூபாய் 80.81 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் படையை நவீனப்படுத்துவதற்கான மத்திய அரசு திட்டத்தின்கீழ் ரூபாய் 10 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. காவல் துறை நிருவாகத்தின் தரத்தை உயர்த்துவதற்காக, பதினோராம் நிதிக்குழு மானியமாக ரூபாய் 7.07 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### குடிநீர் வழங்கல் - துப்புரவு

குறைந்தளவு தேவைகள் திட்டத்தின்கீழ் (Minimum Needs Programme) குடிநீர் வழங்கு திட்டத்திற்கு ரூபாய் 411 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. வெளிநாட்டு நிதியுதவியைக் கொண்டு ஒகேனக்கல் மற்றும்

[2001 செப்டம்பர் 13

இராமநாதபுரத்தில் குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக ரூபாய் 10 கோடி அடையாள நிதி ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளது. குடிநீர் வழங்கல் திட்டங்களுக்காக, நகர்ப் பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கு மூலதன மானியமாக ரூபாய் 71.50 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. நகர்ப் பகுதிகளில் மகளிருக்குக் கழிப்பிடத் தொகுதிகள் கட்டும் புதிய திட்டத்திற்கு ரூபாய் 42.41 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**வீட்டு வசதி**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியம், நிதியுதவி நிறுவனங்களிடமிருந்து கடனுதவி பெற்று, அரசுப் பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்டிவருகிறது. இக்கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக, ரூபாய் 27.18 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஹட்கோ நிறுவனத்தின் உதவி பெறும் சென்னை வெள்ள நிவாரணத் திட்டத்தின் கீழ், குடிசைப் பகுதி மக்களுக்கு மறுவாழ்வு அளிப்பதற்காக ரூபாய் 11.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**நகர்ப்பகுதி வளர்ச்சி**

தமிழ்நாடு நகர்ப் பகுதி வளர்ச்சி நிதியுதவி நிறுவனம் செயற்படுத்தும் 'மகா நகர்' திட்டத்திற்கு ரூபாய் 17 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அமெரிக்கப் பன்னாட்டுக் குழு அடிப்படை வசதி குத்தகை மற்றும் நிதியுதவிப் பணிகள் நிறுவனத்துடன் (ILFSL) சேர்ந்து ஏற்படுத்தியுள்ள "இந்திய செக்டோரல் பங்கு நிறுவனத்தில்'' பங்குத் தொகைக்காக ரூபாய் 2 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் ஹட்கோ நிறுவனத்தின் நிதியுதவியுடன் சென்னையில் ஆரச் சாலைகள் அமைக்கும் திட்டத்தைச் செயற்படுத்தி வருகிறது. இதே போன்று, 'ஹட்கோ' மற்றும் தமிழ்நாடு நகர்ப்புற அடிப்படை வசதிகள் வளர்ச்சி நிதியுதவி நிறுவனத்தின் உதவியுடன் பரங்கிமலை-பூவிருந்தவல்லி சாலையை மேம்படுத்தும் பணியையும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம் செயற்படுத்தி வருகிறது. இக்கடன்களைத் திருப்பிச் செலுத்துவதற்காக ரூபாய் 42.09 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஆதிதிராவிடர்/பழங்குடியினர் நலன்**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், மாணவர் இல்லங்கள் மற்றும் பழங்குடியினர் உறைவிடப் பள்ளிகள் கட்ட ரூபாய் 1.08 கோடியும், ஆதிதிராவிடர் நலப் பள்ளிக்கு கட்டடங்கள் கட்ட ரூபாய் 2.15 கோடியும், ஆதிதிராவிடர் / பழங்குடியினர் மாணவர் இல்லக் கட்டடங்களுக்காக ரூபாய் 26.75 கோடியும், தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டுவசதி மேம்பாட்டு



2001 செப்டம்பர் 13]

நிறுவனத்திற்கு பங்கு மூலதனவகையில் ரூபாய் 3.32 கோடியும் ஒதுக்கப்பட்டுள்ளது.

**மீனளம்**

மீன்களைக் கரை இறக்குவதற்கான வசதிகளை மேம்படுத்துவதற்காக ரூபாய் 4.5 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**கூட்டுறவு**

ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ், கடன் வழங்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு ரூபாய் 2.42 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**ஊரக வளர்ச்சித் திட்டங்கள்**

ஊரக அடிப்படை வசதி மேம்பாட்டு நிதித் திட்டத்தின்கீழ், ஊரக உள்ளாட்சி மன்றங்களுக்கு மானியமாக ரூபாய் 56.25 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**மலைப்பகுதிகள்**

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ், உள்ளாட்சி மன்றங்களை மேம்படுத்தவும், குடிநீர் வழங்கல், வடிகால் மற்றும் சாலைகளை மேம்படுத்தவும் ரூபாய் 1.97 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**வெள்ளக் கட்டுப்பாடு**

வடசென்னையில் கடற்கரை நெடுக கூழாங்கற்களைக் கொண்டு தடுப்புச் சுவர் கட்டுவதற்காக 2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட மதிப்பீட்டில் ரூபாய் 5.43 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. ஹட்கோ நிறுவன உதவி பெறும் சென்னை வெள்ள நிவாரணப் பணித் திட்டத்தின் கீழ் வெள்ளக் கட்டுப்பாட்டுப் பணிகளுக்காக ரூபாய் 23.44 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**மின் சக்தி**

தமிழ்நாடு மின் வாரியத்திற்கு பங்கு மூலதன உதவித் தொகையாக ரூபாய் 100 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

# இணைப்பு VI

*(55 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## கோரிக்கை எண் 61

## மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்

## கொள்கை விளக்கக் குறிப்பு 2001-2002

இந்த மானியக் கோரிக்கையில், மாநில அரசு, பல்வேறு பொதுத்துறை நிறுவனங்கள் மற்றும் ஏனைய நிறுவனங்கள் / உள்ளாட்சி மன்றங்கள்/ மாநகராட்சிகள் முதலியவற்றுக்கும் அரசுப் பணியாளர்களுக்கும் வழங்கும் கடன்கள்-முன்பணங்களுக்கான நிதியொதுக்கங்கள் இடம்பெற்றுள்ளன. இந்த மானியக் கோரிக்கையில் அனுமதிக்கப்பட்டுள்ள முக்கியமான நிதியொதுக்கங்கள் சிலவற்றை இக்குறிப்பு புலப்படுத்துகிறது.

துறைவாரியான விவரம் வருமாறு:-

(ரூபாய் இலட்சத்தில்)

| | துறை | 2000-2001 திருத்த மதிப்பீடு | 2001-2002 இடைக்கால வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு | 2001-2002 திருத்த வரவு-செலவுத் திட்ட மதிப்பீடு |
|---|---|---|---|---|
| | (1) | (2) | (3) | (4) |
| 1. | குடிநீர் வழங்கல் - துப்பரவு | 1,26,54.40 | 1,90,46.77 | 1,65,46.78 |
| 2. | வீட்டு வசதி | 17,51.26 | 8,75.63 | 28,75.63 |
| 3. | நகர்ப்பகுதி வளர்ச்சி | 85,86.32 | 1,70,00.02 | 1,82,50.01 |
| 4. | ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலன் | 4,87.08 | 4,87.08 | 4,87.08 |
| 5. | கால்நடை வளர்ப்பு, வேளாண் நிதியுதவி நிறுவனங்கள், கூட்டுறவு, ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள், மின்சக்தித் திட்டம், நுகர்வோர் தொழில்கள், ஏனைய தொழில்கள், சுரங்கங்கள், மற்றும் பல்வகை | 26,55.85 | 20,60.55 | 1,04,55.47 |
| 6. | அரசுப் பணியாளர்கள் முதலானோர் | 1,57,99.73 | 1,56,97.73 | 1,56,97.73 |





### குடிநீர் வழங்கல் மற்றும் துப்புரவு

உலக வங்கியின் உதவி பெறும் இரண்டாவது சென்னைக் குடிநீா வழங்கல் திட்டத்தின்கீழ், சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல்-கழிவு நீரகற்று வாரியத்திற்குக் கடனாக ரூபாய் 102.9 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியம், ஹட்கோ மற்றும் இந்திய ஆயுள் காப்பீட்டுக் கழகத்திடமிருந்து கடனுதவி பெற்று, நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்காகக் குடிநீர் வழங்கு திட்டங்களைச் செயற்படுத்தி வருகிறது. கடனுதவி அளித்த நிறுவனங்களுக்கு உரிய நேரத்தில் கடன்கள் திருப்பிச் செலுத்தப்படுவதை உறுதி செய்யும் பொருட்டு, தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்திற்கு, அரசு நிதியுதவி அனுமதிக்கிறது. இது சம்பந்தப்பட்ட நகர்ப்பகுதி உள்ளாட்சி மன்றங்களுக்கான கடனாகக் கருதப்படுகிறது. இதற்காக, ரூபாய் 62.04 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### வீட்டுவசதி

உடனடிப் பொறுப்புகளைச் சமாளிப்பதற்காகத் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்திற்கு வழிவகை முன்பணமாக ரூபாய் 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. தமிழ்நாடு கூட்டுறவு வீட்டுவசதி இணையம் ஹட்கோவிடமிருந்து மறுநிதியுதவி பெற்று கூட்டுறவு வீட்டுவசதி சங்கங்களுக்கு கடனுதவி அளிக்கிறது. குறித்த காலத்தில் கடனைத் திருப்பிச் செலுத்த ஏதுவாக அரசு கூட்டுறவு வீட்டுவசதி இணையத்திற்கு கடன் உதவி அளிக்கிறது. இதற்காக ரூபாய் 8.76 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

### நகர்ப் பகுதி வளர்ச்சி

அடிப்படைக் கட்டமைப்பு மேம்பாட்டுப் பணிகளுக்காக ஏனைய மாநகராட்சிகளுக்கு (சென்னை மாநகராட்சி நீங்கலாக) ரூபாய் 12.50 கோடி

நிதியொதுக்கப்பட்டுள்ளது. உலக வங்கியின் உதவிபெறும் தமிழ்நாடு நகர்ப்பகுதி வளர்ச்சித் திட்டத்திற்காக (திட்டம்-II), ரூபாய் 170 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**பால் பண்ணை வளர்ச்சி**

தமிழ்நாடு கூட்டுறவு பால் உற்பத்தியாளர்கள் இணையத்திற்கு வழிவகை முன்பணமாக ரூபாய் 20 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது.

**அரசுப்பணியாளர்கள் மற்றும் ஏனையோர்**

அரசுப் பணியாளர்களுக்குப் பல்வேறு வகை முன்பணங்கள் வழங்குவதற்காக, 2001-2002 ஆம் ஆண்டு வரவு-செலவுத் திட்ட திருத்த மதிப்பீட்டில் ரூ.156.98 கோடி நிதியொதுக்கப்பட்டுள்ளது. அரசுப் பணியாளர்களுக்கு வீடுகள் கட்டுவதற்கான கடனுக்காக ரூபாய் 100.20 கோடி, மோட்டார் வண்டிகள் வாங்குவதற்கான கடனுக்காக ரூபாய் 29.40 கோடி, கைத்தறி மற்றும் கதர்த் துணிகள் வாங்குவதற்காக ரூபாய் 16.00 கோடி கல்லூரிகளிலும், பல்தொழில் பயிற்சிப் பயிலகங்களிலும் உயர்கல்வி பயில்வதற்கு ரூபாய் 2.50 கோடி, திருமண முன்பணம் வழங்க ரூபாய் 4.50 கோடி, "கடன்" அடிப்படையில், "டான்சி" நிறுவனத்திடமிருந்து பொருள்களை வாங்க ரூபாய் 60 இலட்சம், ஆகியவை முக்கியமான நிதியொதுக்கங்களாகும். கணினிகள் வாங்குவதற்காக அரசுப் பணியாளர்களுக்கு முன்பணம் வழங்கவும் ரூபாய் 70 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

2001-2002 ஆம் ஆண்டிற்கான வரவு-செலவுத் திட்ட திருத்த மதிப்பீட்டில் செய்யப்பட்டுள்ள ஏனைய முக்கிய நிதியொதுக்கங்கள் பற்றிய விவரம் வருமாறு:-

| திட்டத்தின் விவரம் | 2001-2002 திருத்த வரவு- செலவுத் திட்ட மதிப்பீடு (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|
| **I. ஆதி திராவிடர், பழங்குடியினர் நலனுக்கான கடன்கள்** | |
| 1. ஆதிதிராவிடர், பழங்குடியின மாணவ, மாணவியர் தொழிற்கல்வி, பட்டமேற்படிப்பு மற்றும் பட்டப் படிப்பு பயிலக் கடன்கள் | 450.00 |
| 2. கிறித்துவர்களாக மதம் மாறிய ஆதிதிராவிட மாணவ, மாணவியர், தொழிற்கல்வி பட்ட மேற்படிப்பு மற்றும் பட்டப் படிப்புப் பயிலக் கடன்கள் | 10.00 |
| **II. வேளாண்மை நிதியுதவி நிறுவனங்களுக்குக் கடன்கள்** | |
| 1. தமிழ்நாடு கூட்டுறவு மத்திய நிலவள வங்கி | 10.00 |
| **III. கூட்டுறவு குறித்த கடன்கள்** | |
| 1. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்கீழ் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கடன்கள் | 109.50 |
| **IV. ஏனைய ஊரக வளர்ச்சித் திட்டங்கள் குறித்த கடன்கள்** | |
| 1. ஊரக வளர்ச்சித் துறை இயக்குநரின் கட்டுப்பாட்டின் கீழ் வரும் ஊரக அடிப்படை வசதிகள் மேம்பாடு நிதியின் கீழ் (V), கிராமச் சாலைகள், பாலங்கள் மற்றும் வடிகால் கட்டமைப்புகளை மேம்படுத்த ஊராட்சி ஒன்றியங்களுக்குக் கடன்கள் | 1875.00 |
| **V. மின் உற்பத்தித் திட்டத்திற்கான கடன்கள்** | |
| 1. விரைவுபடுத்தப்பட்ட மின்சக்தி மேம்பாட்டுத் திட்டத்திற்காக தமிழ்நாடு மின்வாரியத்திற்குக் கடன்கள் | 3277.00 |
| **VI. நுகர்வோர் தொழில்களுக்கான கடன்கள்** | |
| 1. கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளுக்குக் கடன்கள் | 2928.92 |
| **VII. ஏனைய தொழில்களுக்கான கடன்கள்** | |
| 1. சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட்டிற்கு வழிவகை முன்பணம் | 189.00 |



சென்னை-600 002
223754.
D 11/3/01